உ

கணபதித்துணை.

திருவாலவாயுடையார்

திருவிளையாடற்புராணம்.

செல்லிநகர்ப்

பெரும்பற்றப்புலியூர்நம்பி

இயற்றியது.

இது,

பாலவனத்தம் ஜமீன்தாரும்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து அக்கிராஸனாதிபதியுமாகிய

இராமநாதபுரம்

ம-ரா-ரா-ஸ்ரீ

பொ. பாண்டித்துரைஸாமித்தேவ

ரவர்கள் விருப்பத்தின்படி

சென்னைப் பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்,

பல கையெழுத்துப்பிரதிகளைக்கொண்டு

ஆராய்ந்து

நூதனமாக எழுதிய குறிப்புரைமுதலியவற்றுடன்

சென்னை:

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா—2-8-0

பராபவ ஆவணி மீ

1906.

Copyright registered.

இப்புத்தகத்தில் அடங்கியவை.

		பக்கம்.
க.	முகவுரை	1 - 8.
உ.	இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள்முதலிய வற்றின் முதற்குறிப்பு அகராதி	9 - 10.
ங.	இந்நூலாசிரியராகிய பெரும்பற்றப்புலியூர்நம்பியின் வரலாறு	11 - 16.
ச.	நூலாராய்ச்சி	16 - 28.
	[இதில், நூலிலுள்ள முக்கியமான சிலகுறிப்புக்கள், தலவகைகள், நூலாசிரியர்கூற்றுக்கள், பொருளணிகள், மடக்கணிகள், ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளின் அருமைத் திருநாமங்கள், இந்நூலால்தெரிந்த ஊர்களின்பெயர்கள், குலங்கள், சங்கப்புலவர்கள், சாதிகள், பழைய வழக்கங்கள், தனிப்பாடல்கள், தாண்டவம், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பதிகங்கள், அவரது திருநாமங்கள், திருவிளையாடல்சம்பந்தமான சிலபழமொழிகள்முதலியன, தீர்த்தங்கள், நாடுகள், நியாயம், நூல்கள், மடங்கள், சுந்திரங்கள், மலைகள், மரபு, வித்தைகள், சில அரியமொழிகள் ஆகிய இவற்றை முறையே அறிந்துகொள்ளலாம்.]	
ஞ.	இந்நூலில்வந்துள்ள பழைய தமிழ்நூற்பிரயோகங்கள் ...	28 - 33.
ட.	இதிற்காணப்படும் விசேட வேறுபாடுகள்...	33 - 37.
ண.	திருவிளையாடற்கதைகள்வந்துள்ள தேவாரமுதலியஇடங்கள்	38 - 49.
த.	அரும்பதஅகராதிமுதலியன	49 - 63.
ந.	திருவிளையாடல்முதலியவற்றாலும் கேள்வியாலும் அறிந்தவை	63 - 66.
ன.	ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகள், திருநாவுக்கரசுநாயனாருக்குக் காலத்தால்முந்தியவரென்பது	67.
ஙங.	பிழையும்திருத்தமும்	68.
ஙஉ.	திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்	ங-உசு.
ஙஙு.	சில கையெழுத்துப்பிரதிகளிற்கண்ட கடவுள்வாழ்த்துச் செய்யுட்கள்	உஅ.
ஙச.	நூற்சிறப்புப்பாயிரம்	உஉ அ.
ஙஞ.	பாடபேதம்	...உஉங-உஉச அ.
ஙசு.	திருவாலவாயுடையார் திருவிளையாடற்பயரமாலை	...உசங-உஞஅ.
ஙட.	கடம்பவனபுராணம், ஙஐ - இலீலாசங்கிரக அதிகாரியாயம்	உஞங-உஙசு.
ஙண.	திருவுசாத்தான நான்மணிமாலை, உஅ - ம் செய்யுள்	...உஅ0 - உஎங.
ஙங.	திருவிளையாடற்கருணைத்திருவிருத்தம், ஙங - ம் பாடல்...	உஎங.
உ0.	திருவிளையாடற்புராணக்குறிப்புரை	... உஎஉ-ஙகஅ.
உங.	திருவிளையாடற்புராணச்செய்யுளகராதி ...	..ஙகஙு-ஙஙசு.
உஉ.	சுரீபத்திரம்	...ஙசுஞ-ஙஙசு.

கணபதிதுணை.

முகவுரை.

தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேதியா வேத கீதா விண்ணவ ரண்ணு வென்றென்
றோதியே மலர்க ளேவி யோருங்கினின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடே
மாதியே யால வாயி லப்பனே யருள்செய் யாயே.

திருவாலவாயென்பது, பாண்டிவளநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற பதினன்கு ஸ்தலங்களில் முதலாயது;

பதினன்குஸ்தலங்களாவன :

'கூடல் புனவாயில் குற்றூல மாப்பனூர்
நீடகெல் வேலி யிராமேச - மாடானே
தென்பாங்குன் றஞ்சுழிய றென்றிருப்புத் தூர்கானே
வன்கொங்குன் றம்பூ வணம்.'' என்பன.

இத்தலம், கருணைக்கடலாகிய ஸ்ரீசோமசுந்தரக்கடவுள் ஆண்மாக்களை உய்வித்தருள வெண்ணி, சுசை - திருவிளையாடல்கள் செய்தருளிய ஒப்புயர்வற்ற பெருமையவாய்த்தது. இதற்குரிய தேவாரப் பதிகங்களாவன :

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

நீலமாமிடற்று	...	...	...	குறிஞ்சி.
மந்திரமாவது...	...	...	...	காந்தாரம்.
மானினேர்விழி	...	...	...	கொல்லி.
காட்டுமாவது	...	...	.	கௌசிகம்.
செய்யனே ...	...	...	...	,,
வீடலாலவாயிலாய்	...	...	...	திருவிராகம்.
வேதவேள்வியை	...	...	...	நாலாமேல்வைப்பு.
ஆலநீழல் ...	...	...	...	திருவியமகம்.
மங்கையர்க்கரசி	...	...	...	புறநீர்மை.

திருநாவுக்கரசுநாயனார்.

வேதியா ...	...	...	...	திருநேரிசை.
மூனேத்தானே ...	...	...	...	திருத்தாண்டகம்.

இத்தலத்திற்குரிய பழையவரலாறுகளைப் புலப்படுத்தும் தனித்தமிழ்நூல்களும் தனிப்பாடல்களும் பல உள்ளனவென்பது யாவருக்கும்தெரிந்ததே. வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யப்பெற்றனவாய் மூர்த்திவிசேடமுதலியவற்றை விளங்கத் தெரிவிக்கும்நூல்களில்லை. அவை: திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், கடம்பவனபுராணம், சுந்தரபாண்டியம், திருவிளையாடற்புராணமென்பனவாம்; அவற்றுள்:—

க. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணமென்னும் இந்நூல், * உத்தரமகாபுராணமென்னும் வடநூலின் ஒருபகுதியாகிய சாரசமுச்சயமென்பதிலிருந்து மொழிபெயர்த்து, செல்லிநகர்ப்பெரும் பற்றப்புலியூர்நம்பியென்பவரால், செய்யுள்நடையாக இயற்றப்பெற்றது. இஃது, "ஓதிய" என்னுஞ்செய்யுளாலும், "அம்பதமத்தார்" என்னுஞ் செய்யுள்முதலியவற்றாலும் விளங்குகின்றது. இந்நூலின் செய்யுட்டொகை, களுங. இது, பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல், திருவிளையாடலெனவும் வழங்காகிற்கும். இதனுடைய மற்றவிசேடங்கள், பின்னர் அவ்வவ்விடத்து எடுத்துக்காட்டப்படும்.

உ. கடம்பவனபுராணமென்பது, தொண்டைகாட்டிலுள்ள இலம்பூரிலிருந்த வீமஸாதபண்டிதரென்பவரால் நீபாரண்யமாஹாத்மியம் அல்லது கதம்பவனபுராணமென்னும் வடநூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யுள்நடையாக இயற்றப்பெற்றது. இதன் செய்யுட்டொகை, கoகூo. இதில் இலீலாசங்கிரக அத்தியாயத்தின் முதலிலுள்ள, சூச - செய்யுட்களாற் கூறப்பெற்ற, சூச - திருவிளையாடல்களும் மேற்கூறிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலுள்ளமுறைப்படியே அமைந்துள்ளன. இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

ங. † சுந்தரபாண்டியமென்பது, தொண்டைநாட்டிலுள்ள வாயற்பதியிலிருந்த அனதாரியென்னும் புலவர்பெருமானால் சுந்தரபாண்டியமென்னும் வடநூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யுள்நடையாக இயற்றப்பெற்றுள்ளது; "மிண்டனை வெல்லும் வளைசிங்க ராயன் வீலைகொடுப்பத், தண்டமிழ்மேக மூரத்தூரில் வேதியன் ருனும்விற்பக், கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ் கொண்டபிரான், வீண்டமிழ்க் கும்பனனதாரி யுந்தொண்டை மண்டலமே." என்னுந் தோண்டைமண்டலசதகத்தாலும், "கம்பனென்

* உத்தரமகாபுராணமென்னும் வடநூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

† இந்நூல், மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையிற் கிடைத்தது.

றுக் தாதனென்றுங் காளியொட்டக் கூத்தனென்றுங், கும்பமுனி யென்றும்பேர் கொள்வரோ - அம்புவியின், மன்னு வலர்புகழும் வாயலன தாரியப்ப, னங்காளி லேயிருந்தக் கால்." என்னும் பழைய வெண்பாவாலும் பாராட்டப்பெற்றவர் இந்த அனதாரியென்றே தெரிகின்றது. இந்நூல் செய்யப்பெற்றகாலம், சாலி. கசஅசு; கி. பி. 1563. இஃது இன்னும் அச்சிடப்படவில்லை.

ச. திருவிளையாடற்புராணமென்பது, பரஞ்சோதிமுனிவரென் பவரால், ஸ்ரீ ஹாலாஸ்யமாகாத்மியமென்னும் வடநூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யுள்நடையாக இயற்றப்பெற்றது. இதன் செய்யுட்டொகை, கூகூசூ. இக்காலத்து எல்லாராலும் மிகுதி யாகப் பாராட்டிப் படிக்கப்பெற்றுவருவது இந்நூலே. இஃது அச் சிடப்பட்டுள்ளது.

இந்தநூல்கள் நான்கனுள், முதலாவதும் நான்காவதுமாகிய நூல்கள் ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளுடைய அற்புதத்திருவிளையாடல் கள் அறுபத்துநான்கையும் மிகச்செவ்வையாக விரித்துப் பாராட் டித் தெரிவிப்பனவாம். இவ்விரண்டனுள், ஒன்றனேடுமற்றொன் றற்குள்ள வேறுபாடுகள் பல.

இந்நூலிலுள்ள, (நுக) மூர்த்தியார்க்கரசளித்த திருவிளையாடல் முதலிய * மூன்றுகதைகளும் அந்நூலிற்காணப்படவில்லை; அதி லுள்ள வருணன்விட்ட கடலேவற்றச்செய்த திருவிளையாடற்கதை, இதிலுள்ள (கூ) நான்மாடக்கூடலான திருவிளையாடலிலும், அதி லுள்ள நாகமெய்த்திருவிளையாடல், மாயப்பசுவைவதைத்த திரு விளையாடற்கதைகள் இதிலுள்ள, (கூசு) மதுரையான திருவிளை யாடலிலும் அதிலுள்ள திருநகரங்கண்ட திருவிளையாடற்கதை இதி லுள்ள, (நுக) புலிமுலைபுல்வாய்க்கருத்திய திருவிளையாடலிலும் அமைந்துள்ளன. திருவிளையாடல்கள் இதிலமைந்துள்ள முறை வேறு; அதிலமைந்துள்ள முறைவேறு. அது கதையை விரித் தக்கூறுவது; இது சுருக்கமாகக்கூறுவது. அன்றியும், சங்கச் செய்யுட்களமுதலிய பண்டைத்தமிழ்நூல்களிலுள்ள, இக்கருவரா லாறுகளே விடாமல் தழுவிச்செல்வது இஃது; அஃது அன்னதன்று.

சிலநூற்றண்டுகளுக்குமுன் இந்நூலே எல்லாராலும் படிக்கப் பெற்றுவந்ததன்றி, இந்நூலிலுள்ள, திருவிளையாடல்களின் முறை யையும் இதன் சொன்னடை பொருணடைகளையுமேதழுவிப் பலர் இத்தலசம்பந்தமானநூல்களைச் செய்துவந்தார்களென்று தெரிகின் றது. இது, * திருவிளையாடற்பயகரமாலை, கடம்பவனபுராணத்

* இந்நூலாசிரியர்பெயர் தெரியவில்லை; பயகரனென்பது பயஹரனென் னும் வடமொழிச்சிதைவு; பயத்தைப்போக்குபவனென்பதுபொருள்.

கள்ள இலீலாசங்கிரக அத்தியாயம், * திருவுசாத்தான நான்மணி மாலையின், உள - ம் செய்யுள் முதலியவற்றுல் நன்குவிளங்கும்.

இதுவே திருவிளையாடலென்று முற்காலத்திற் பாராட்டப் பட்டுவந்ததென்பதையும் இதன்செய்யுட்கள் பழைய உரைகளில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுவந்தனவென்பதையும் கோலமறுத்தற்குத் திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளேமுதியவுரை நன்கு விளக்குகின்றது; ஷை நூல் எ, கக - ம் செய்யுட்களின் உரையைப் பார்க்க.

மேற்கூறிய உண்மை யாவருக்கும் விளங்கும்பொருட்டே, பழையவுரையுடன் மிதிலைப்பட்டியிற்கிடைத்ததான ஷை திருவிளையாடற்பயகரமாலைமூலத்தையும் ஏனையவற்றையும் வேறுசில பழைய பிரதிகளோடு ஒப்பிட்டு ஆராய்ச்சிசெய்து பதிப்பித்து இப்புத்தகத்தின்பின்னர்ச் சேர்த்திருக்கிறேன்.

பயகரமாலையென்னும்பெயரைப் பயங்கரமாலையெனத் திருத்திவிட்டதல்லாமல், இத்திருவிளையாடலையே மேற்கோளாகக்கொண்டு அது செய்யப்பெற்றதென்பதையறியாமற் சிலபாடல்களைமாற்றியும் சிலபாடல்களைக்குறைத்தும் சிலபாடல்களை நூதனமாக இயற்றிச் சேர்த்தும் சற்றேறக்குறைய ஈ0 - வருடங்களுக்குமுன் யாரோ ஒருவர் அதைப் பதிப்பித்துவிட்டனர்.

இப்புத்தகத்தில், எக, அசு, கூக, கஙக, கசு0-ம் பக்கங்களின் கீழே 'இது வெள்ளிபாட்டு' என்றும், 'சிலபிரதிகளிற் காணப்படவில்லை' என்றும் குறிப்பிட்ட செய்யுட்களாவும் வெள்ளிபாடல்களென்றே ஓர் ஏட்டுப்பிரதியில் வாயப்பட்டிருந்தன; [வெள்ளி - வெள்ளியம்பலவாணமுனிவர்.]

இதுகாறும்கூறியவாற்றுல், வெள்ளியம்பலவாணமுனிவர், திருப்போரூர்ச் சிதம்பரஸ்வாமிகள், திருவிளையாடற் பயகரமாலைநூலாசிரியர், இலம்பூர் வீமராதபண்டிதர், கொச்சியூர்ப் பழனியப்பஞ் சேர்வைகாரர் ஆகிய இவர்களுடையகாலத்திற்கு இந்நூலாசிரியருடையகாலம் மூற்பட்டதென்பது வெளியாகின்றது.

---

* இந்நூலை இயற்றியவர், கொச்சியூர்ப் பழனியப்பஞ்சேர்வைகாரர்; இவரும் திருவுசாத்தானத்தின் பழைய தமிழ்ப்புராணமியற்றிய அம்பலவாணமுனிவரென்பவரும் ஒரேகாலத்தினர். ஷை முனிவருடையகாலம், இற்றைக்கு ஈ0க - வருடங்களுக்கு முற்பட்டதென்றும் இதனை, அம்முனிவர் தமது கரத்தால் எழுதிய சதாசிவவியாக்கியானமென்னும் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள சகாத்தம் தெரிவிக்கின்றதென்றும் ஆண்டுள்ளார் சொல்லுகின்றனரென்றுஞ்சொல்லி, ஷை நான்மணிமாலையை எனக்குவாங்கித்தந்தவர், பின்னத்தூர், ம-ரா-ரா-ஸ்ரீ அ. நாராயணஸ்வாமி ஓயரவர்கள்.

இந்நூலால், சங்கநூல்கள் சம்பந்தமான சிற்சில பழையசெய்திகளும், சிலநாடுகள், சிலமலைகள், சிலஊர்கள், சில புண்ணியதீர்த்தங்களும், சில சிவஸ்தலவிசேடங்களும், திருவிளையாடல்சம்பந்தமான சில பழமொழிகளும், சில திருவிளையாடல்கள் முதலியன சுருக்கமைக்கு அறிகுறியான இடப்பெயர்முதலியனவும், சிலபுலவர்களுடையசரித்திரங்களும், அவர்களுள் இன்னாரின்னார் இன்ன இன்ன அமயத்து இன்ன இன்ன பாடல்கள் இன்ன இன்ன நூல்கள் செய்தனர்களென்பதும், சில நூற்பெயர்களும், திருவாசகத்துள்ள பதிக்கங்களுள் இன்ன இன்ன பதிகங்கள் இன்ன இன்ன அமயத்துப் பாடப்பட்டனவென்பதும், சில அரசபரம்பரைகளும், பற்பல பழைய வழக்கங்களும், இந்நாளிற் பெரும்பாலும்வழங்காத சிற்சில அரிய சொற்களும் வாக்கியங்களும், இக்காலத்துப் புலப்படாதனவாகிய இசை,குதிரை,நவமணிமுதலியவற்றின் இலக்கணங்களும்,ஒருவகையான யுத்தபரிபாஷைகளும், சில சாதிவகையும், சில குலவகையும், இன்னும் எத்தனையோ அரியவிஷயங்களும் அறியலாகும்.

ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் இந்நூலுள்ளே பெரும்பாலும் சொக்கனென்றே வழங்கப்பெறுவர். 'சொக்கன்' என்பதற்கு அழகன் என்பதுபொருள் ; சொக்கு - அழகு ; பேரழகென்றும் பொருள் கூறுவதுண்டு. இதனை, இந்நூல் இந்திரன்பழிதீர்த்ததிருவிளையாடல், ஊசுமம் செய்யுளாலுணர்க. பண்டைக்காலத்து இப்பெயரே பெரும்பாலும் வழங்கப்பெற்றுவந்தமையின், இந்நூலாசிரியரால் இத்திருநாமம் மிக எடுத்தாளப்பட்டதென்று தெரிகின்றது. அங்ஙனம்வழங்கிவந்தமையை, சொக்கலிங்கம், சொக்கர்தீபாராதனை, சொக்கத்தாண்டவம், சொக்குப்பாட்டி, சொக்கரப்பம், சொக்கர் தலைக்கீடு (=சொக்கர்லேஞ்சு); பழைய சொக்கநாதர்கோயிலென்னும் உலகவழக்காலும், தேவாரம், கடம்பவனபுராணம், சுந்தரபாண்டியம், மதுரை மும்மணிக்கோவை, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி, மதுரைத் திருப்பணிமாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், திருவாதவூரர்புராணம், பழைய திருப்பெருந்துறைப்புராணம் முதலிய நூல்களாலுமுணர்க. அன்றி, வடமொழிப்பெயராகிய 'சுந்தரர்' என்பதை எடுத்தாளுதலிலும் தென்மொழிப்பெயராகிய 'சொக்கர்' என்பதைத் தமிழ்நூலில் எடுத்தாளுதல் அழகென்று இவர் எண்ணியிருக்கலாமென்றும் தோற்றுகிறது ; சுந்தரரென்றதிருநாமம் இதிற் சிறுபான்மையாகவழங்கும்.

மிகப் பழமையானதும் பற்பலசிறப்புக்கள் வாய்ந்ததுமான மாணிக்கம்போன்ற இந்நூல் பலவருடங்களாக ஒளிமழுங்கிப்போனமைக்குக் காரணம் இன்னதென்றுவிளங்கவில்லை. இஃது எல்லா ஆச்சரியத்திலும் பெரியதோர் ஆச்சரியத்திற்கு இடமாக இருக்கின்றது.

தாமியற்றிய திருவிளையாடற்புராணச் செய்யுட்களைப் படித்துக்காட்டினேன்; ஒருநாள், அத்திப்பொழுதில் வேம்பத்தூர்க்கு வந்த பரஞ்சோதிமுனிவரை அவ்வூர்க்கவிஞர்களுள்ளே தண்டிகை பெற்றுவிளங்கியபுலவர் அறுபத்தாறுகால்வர் மறுநாட்காலையில் வரச் சொல்லிவிட்டு, இன்ன இன்னபகுதியை இன்னார் இன்னார் இயற்றுதற்குரியரென்று அன்றிரவில்யோசித்துத் தமக்குள்நிச்சயித்துக்கொண்டு ஒவ்வொருவர் ஒவ்வொன்றாக அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் விடியற்காலத்துள் தனித்தனியே செய்துமுடித்து அவற்றை ஒருங்குசேர்த்துவைத்துக்கொண்டிருந்து, காலையில்வந்த பரஞ்சோதிமுனிவரைநோக்கி, இதைக்கேளுமென்று தாமியற்றியநூலைப் படித்துக்காட்டி, திருவிளையாடற்புராணம் தமிழில் முன்னமேயிருக்கையில் நீர்செய்ததனதன்பொருட்டென்றுவினவ, அம்முனிவர்மனங்கொந்து சபித்துவிட்டுப்போயினர்; அதனால், இந்நூல் வழங்காதுபோயிற்றென்று கூறுவாரும், வடநூல் *ஆதாரமில்லாமையால் இந்நூலை ஒருவரும் அங்கீகரிக்கவில்லையென்று சொல்லுவாரும், சோமசுந்தரக்கடவுளை அருமையாகச்சொல்லாமற் பத்தியின்றி, 'சொக்கன் சொக்கன்' என்று பலவிடத்துங்கூறியிருத்தலால் இதை ஒருவரும் கையால் தொடவில்லையென்பாரும், பரஞ்சோதிமுனிவரியற்றிய திருவிளையாடல் வழங்கத்தொடங்கியபின்பு இது வழங்குதலற்றதென்பாரும், இன்னும் தத்தமக்குத்தோற்றியவண்ணம் பற்பலகூறுவாருமாக அங்கங்கே பற்பலர் உளராயினர்; இவைகளியாவும் கதானுகதிகந்கியாயமென்பது இந்நூலை ஆராய்ந்துபார்ப்பவர்களுக்கு இனிதுவிளங்கும்.

இப்புத்தக ஆராய்ச்சிக்குக் கருவிகளாகஇருந்த தமிழ்நூல்கள்: அட்டமிப்பிரதக்ஷிணமான்மியம், அருணகிரிபுராணம், இரகுவம்மிசம், கடம்பவனபுராணம், கல்லாடமும் திருநெல்வேலி மயிலேறும் பெருமாள்பிள்ளையுரையும், காளியார்கோயிற்புராணம், கெடிவசனம், கூடலழகர் புராணவசனம், சிதம்பரபுராணம், சுந்தரபாண்டியம், தக்கயாகப்பரணி, திருக்காளத்திப்புராணம், திருக்கானப்பேர்ப்புராணம், திருப்பரங்கிரிப்புராணம், திருப்பூவணப்புராணம், திருப்பெருந்துறைப்புராணங்கள் (பழையது, புதியது), திருவாசகம், திருவாதவூரர்புராணம், திருவிளையாடற்பயகரமாலையும் அதனுரையும், திருவிளையாடற்புராணம் (பரஞ்சோதிமுனிவர்செய்தது) திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, திருவுத்தரகோசமங்கைப்புராணம், திருவேடகப்புராணம், தேவாரம், பரிபாடல், புறநானூறு, பெரியபுராணம், மதுரைச்சொக்கநாதர் மும்மணிக்கோவை, மதுரை

இந்நூல் வடநூலாதாரங்கொண்டே இயற்றப்பெற்றதென்பதை, குறைவற''; ''அவைநடு''; ''ஓதரிய''; ''வியாதன்வான்மீகி'' என்னுமுதற் குறிப்பையுடைய இந்நூற்செய்யுட்களாலுணர்க.

கைத்திருப்பணிமாலை, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி, மருதவனப் புராணமென்பன ; வடநூல்கள் : ஸ்ரீ வாதபுரமாஹாத்மியமுதலியன.

பயகரமாலைமுதலியவைகளும் மேற்கோள்களாக இப்புத்தகத்தில் அங்கங்கே எடுத்தக்காட்டப்பட்டுள்ளபாடல்களும் சிலசில விடத்து அச்சுப்புத்தகப்பாடங்களுக்கு வேறுபட்டுத்தோன்றும் ; அங்ஙனம் தோன்றுபவைகள் ஏட்டுப்பிரதிகளிற்காணப்பட்டவை யென்று கொள்க.

முதனூல்கள் அகப்படாமையின், இதிலுள்ள குதிரையிலக்கணமுதலிய பகுதிகளுட் சிலவற்றிற்குப் பொருள் விளங்கவில்லை ; இதன் குறிப்புரையில் மேற்கோள்களாக எடுத்தக்காட்டிய இசை மரபுச்செய்யுள்முதலியன, பழைய உரைகளிற்கண்டவை.

படிப்போரும் தேடுவோருமற்று மூலையிற்கிடந்த இந்நூற் கையெழுத்துப்பிரதிகளிலிருந்த பாடவேறுபாடுகளும் பிழைகளும் அளவுபடுவனவல்ல. ஆதலால், இதைப்பதிப்பித்தகாலத்தில்நேர்ந்த உழைப்பிலும் பொருட்செலவிலும் இதனை ஆராய்ச்சிசெய்தகாலத்தேநேர்ந்த உழைப்பும் பொருட்செலவும் மிக அதிகம்.

இந்நூலைப் பின்னும் சிலமுறை ஆராய்ச்சிசெய்யவேண்டுமென்கிற விருப்பமிருந்தும் இதனை விரைவிற்பதிப்பித்து வெளிப்படுத்தவென்று, மதுரைத் தமிழ்ச்சங்கஸ்தாபகரும் பாலவனத்தம் ஜமீன்தாருமாகிய, இராமநாதபுரம், ம-ரா-ரா-ஸ்ரீ பொ. பாண்டித்துரை ஸ்வாமித்தேவரவர்கள் வற்புறுத்திச் சொன்னமையால், அவர்கள் சொல்லை மறுத்தற்கஞ்சி விரைந்து பதிப்பிக்கத்துணிந்தேன்.

இதனை ஆராய்ச்சிசெய்து பதிப்பிக்குங்காலத்து உடனிருந்து உதவிபுரிந்தவந்த பழைய அன்பர்களுள், திருமயிலை, பி. சுப்பிரமணியம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய ம-ரா-ரா-ஸ்ரீ இ வை. அனந்தராமையர், சலிப்பின்றி இரவும்பகலும் உடனிருந்துசெய்தவந்த அரிய உதவி மிகச்சிறந்தது ; மறக்கற்பாலதன்று.

கிடைத்த இந்நூற் கையெழுத்துப்பிரதிகள்.

திருக்கைலாயபரம்பரைத்
தீநுவாவடுதுறையாதீனத்துப் ... ... பிரதி. க.

சென்னை
இராசாங்கத்துக்கையெழுத்துப்புத்தகசாலை ... ,, க.

மதுரைத்
தமிழ்ச்சங்கத்து ... ... ,, க.

களக்காடு
ம-ரா-ஸ்ரீ சாமிநாததேசிகரவர்கள்வீட்டு ... ... பிரதி. க.

திருநெல்வேலி மேலரதவீதி
,, கவிராசகெல்லையப்பப்பிள்ளையவர்கள்வீட்டு ... ,, க.

வேம்பத்தூர்ப்
,, பிச்சுவையரவர்கள்வீட்டு ... ... ,, க.

டை ஊர்
,, சரமாவையரென்கின்ற ஆண்டி ஐயரவர்கள்வீட்டு
[சாலி. கசுஎசு. கி. பி. 1753] } ,, க.

தும்பகோணம்
டவுன்ஹைஸ்கூல் முதல் தமிழ்ப்பண்டிதர்
,, அ. நாராயணசாமி ஐயரவர்கள்தந்த ... ... ,, க.

மதுரை
விவேகபானுபத்திராதிபர்
,, மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள்தந்த ... ,, க.

தும்பகோணம்
மகாதளம்பேட்டை
,, இராமலிங்கதேசிகர்வீட்டு... ... ... ,, க.

பட்டுக்கோட்டையைச்சார்ந்த சிதம்பரவிடுதி
,, கோவிந்த ஐயர்வீட்டு ... ... ,, க.

இந்நூலாராய்ச்சிக்காக ஸ்ரீ வாதபுரமாஹாத்மியமாகிய வடநூலைவருவித் துதவியவர், மதுரை ஹைகோர்ட்வக்கீல் ம-ரா-ரா-ஸ்ரீ மு. வேங்கடசாம ஐயரவர்கள் குமாரர் சிரஞ்சீவி முத்துராமலிங்க ஐயர்.

இந்நூலுள்ளே அங்கங்குள்ள அரியவிஷயங்களைப் பலவகை யாகத் தெரிவிக்கவேண்டுமென்கிற அவா எனக்கு மிகுதியாக இருந் தும் உள்ள அவகாசக்குறைவால் அங்ஙனம்செய்யக்கூடவில்லை.

இப்பதிப்பிற்காணப்படுங்குற்றங்கள் என்னுடையனவென்றெ ண்ணிப் பொறுக்கும்படி பெரியோர்களை மிக வேண்டுகின்றேன்.

இந்நூலைப்போலவே, இனிப்பதிப்பிக்கக்கருதிய நூல்கள் ஒவ் வொன்றையும் கருதியவண்ணம் பதிப்பித்து நிறைவேற்றுதற்கொ ரூட்டும் பிரதியுதவி பொருளுதவி ஒப்புநோக்குதல்முதலிய உதவி களை அன்புடன்செய்தவர்கள் பெருவாழ்வடைந்து மகிழ்வெய்தும் பொருட்டும் திருவருள் சுரக்கும்படி சங்கப்புலவர்களிடில், மதுரைப் பேராலவாயாரென்னும் திருநாமம்பூண்டு வீற்றிருந்து அவர்களுடன் தமிழாராய்ந்தருளிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசருடைய திருவடித்தாம ரைகளைச் சிந்திக்கின்றனன்.

சென்னை,
12 - 7 - 06.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்புக்கள்.

அச்ச - அச்சப்பத்து.
அம்புலி - அம்புலிப்பருவம்.
அயிந்த - அயிந்தவர்கதை.
அழகர்கல - அழகர்கலம்பகம்.
அன்னை - அன்னைப்பத்து.
ஆனந்த - ஆனந்தலகரி.
இடைக்காடன்-இடைக்காடன்பிணக் குத்தீர்த்தபடலம்.
இந்திரன்-இந்திரன்பழிதீர்த்தபடலம்.
இரகு - இரகுவம்மிசம்.
இராச - இராசசூயச்சருக்கம்.
இராசபா - இராசபாரம்பரியம்.
இல. கொ - இலக்கணக்கொத்து.
இலீலா-இலீலாசங்கிரக அத்தியாயம்.
உத்தர - உத்தரகாண்டம்.
உலா - உலாவியற்படலம்.
ஊர்காண் - ஊர்காண்காதை.
ஊர்தேடி - ஊர்தேடுபடலம்.
எல்லாம் - எல்லாம்வல்லசித்தர் திருவிளையாடற்படலம்.
ஒழி - ஒழிபியல்.
கட - கடவுள்வாழ்த்து.
கடம்ப - கடம்பவனபுராணம்.
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
கல் - கல்லாடம்.
கல - கலம்பகம்.
கலி - கலித்தொகை.
கலிங்க - கலிங்கத்துப்பரணி.
கா - காதை.
கீர்த்தி - கீர்த்தித்திருவகவல்.
குண - குணமாலையார்லம்பகம்.
குதிரை - குதிரையிட்டசருக்கம்.
குலா - குலாப்பத்து.
கோயின்மூத்த - கோயின்மூத்த திருப்பதிகம்.
சில - சிலப்பதிகாரம்.
சிற்றி - சிற்றிற்பருவம்.
சீதைவணம் - சீதைவணப்புபடலம்.
சீய - சீயவதைச்சருக்கம்.
சீவக - சீவகசிந்தாமணி.
சுந்தர - சுந்தரகாண்டம்.
சுர - சுரமஞ்சரியாரிலம்பகம்.
சூடா - சூடாமணிநிகண்டு.
சூதுபோர் - சூதுபோர்ச்சருக்கம்.
சூர்ப்ப - சூர்ப்பநகைப்படலம்.
சூளா - சூளாமணி.
ஞான - ஞானவாசிட்டம்.
தக்க - தக்கயாகப்பரணி.
தத்துவ - தத்துவராயர் பிரபந்தங்கள்.
தலவி - தலவிசேடப்படலம்.
திருக்காளத்தி - திருக்காளத்திப் புராணம்.
திருக்கோ - திருக்கோத்தும்பி.
திருச்சத - திருச்சதகம்.
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்.
திருஞா-திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அல்லது ஷே புராணம்.
திருநக - திருநகரச் சிறப்பு.
திருநா - திருநாவுக்கரசுநாயனார் அல்லது அவர் புராணம்.
திருநாட்டு - திருநாட்டுச்சிறப்பு.
திருப்படை - திருப்படையாட்சி.
திருமயிலை - திருமயிலைத் திரிபந்தாதி.
திருவம் - திருவம்மானை.
திருவவ - திருவவதாரப்படலம்.
திருவா - திருவாசகம்.
திருவாத - திருவாதவூரர் புராணம்.
திருவாரூர் - திருவாரூர்ச்சிறப்பு.
திருவிளை - திருவிளையாடல், திருவிளையாட்டுப்படலம்.
திருவெம் - திருவெம்பாவை.
தீர்த்த - தீர்த்தவிசேடப்படலம்.
தே - தேவாரம்.
தொல். பா. விருத் - தொல்காப்பியப் பாயிர விருத்தி.
நக - நகரச்சிறப்பியம்.

கரிபரி - கரிபரியாக்கியபடலம்.
காகொண் - காகொண்காதை.
கீத்தல் - கீத்தல் விண்ணப்பம்.
பதி - பதிகம்.
பதிற் - பதிற்றுப்பத்து.
பரத்து - பரத்துவாசதரிசனை யத்தியா யம்.
பரிபா - பரிபாடல்.
பா - பாயிரம்.
பார்ப்பதி - பார்ப்பதிப்படலம்.
பார - பாரதம்.
பால - பாலகாண்டம்.
பிரபு - பிரபுலிங்கலீலை.
பிள்ளை - பிள்ளைத்திருநாமம்.
புணர்ச்சி - புணர்ச்சிப்பத்து.
புறஞ்சேரி - புறஞ்சேரியிறுத்தகாதை.
புறநா - புறநானூறு.
பெரிய - பெரியபுராணம்.
போற்றி - போற்றித்திருவகவல்.
மண்சுமந்த - மண்சுமந்தசருக்கம்.
மணி - மணிமேகலை.
மது - மதுரைக்காஞ்சி.
மதுரைக்கல - மதுரைக்கலம்பகம்.
மதுரைப்பதிற் - மதுரைப் பதிற்றுப்ப த்தந்தாதி.
மாணிக்கம் - மாணிக்கம்விற்றபடலம்.
மாலை - மாலையீட்டுப்படலம்.
மிதிலை - மிதிலைக்காட்சிப்படலம்.
மீனுட்சி - மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்.
முனிவர் - முனிவர்சதி.
யானை - யானையெய்தபடலம்.
வாரணை - வாரணவதச்சருக்கம்.
விடை - விடையிலச்சினையிட்டபட லம்.
விருத்த - விருத்தகுமார பாலரானப டலம்.
வேத்திர - வேத்திரசெய்சருக்கம்.

இந்நூலாசிரியராகிய
பெரும்பற்றப்புலியூர்நம்பியின் வரலாறு.

இந்நூலாசிரியராகிய பெரும்பற்றப்புலியூர்நம்பி யென்பவர், பாண்டிவளநாட்டுள்ள செல்லிநகரிற் பிராமணவருணத்தில் ஸ்மார்த்தர்களாகிய வேம்பத்தூர்ச்சோழியர்வகுப்பிற் *கௌணியகோத்திரத்திற் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்தநடராசருடைய திருவடிக்கண் மிகுந்த பத்திச்செல்வம்வாய்ந்த குடும்பத்திற் சனித்தவர். இவர்க்குப் பெரும்பற்றப்புலியூர்நம்பி யெனவும், இவர்பரம்பரையிற்பிறந்தவரும் மதுரைத் திருப்பணிமாலையிற் கூறப்பெற்ற வருமாகிய ஒருவருக்கு ஆனந்ததாண்டவநம்பி யெனவும் பெயர்கள் அமைந்திருத்தலையும் இந்நூற் கடவுள்வாழ்த்திற் பெரும்பற்றப்புலியூர்த்துதிமுதலியன அமைந்திருத்தலையும் உற்றுநோக்குகையில், இவர் குடும்பத்தார்கள் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்தநடராசர் திருவடிக்கண் மிக்க அன்புடையவர்களென்பது வெளியாகின்றது.

இவர்பெயர், தில்லைநம்பி யெனவும் வழங்கும்; வேம்பத்தூர்ச்சோழியர்களில் அநேகருடைய இயற்பெயர்களின்பின் நம்பியென்பது சார்த்தப்பட்டுப் பண்டைக்காலத்தில் வழங்கிவந்ததென்பதை அவர்கள் வீட்டிலுள்ள பழைய ஓலைச்சாதனங்களில் இன்றும் காணலாகும். செல்லிநகரென்பது, செல்லிநாடென்றும் பரசுராம சதுர்வேதிமங்கலமென்றும் செய்யுட்களில் வழங்கப்பெறும்; அக்கிரகாரத்தைச் சதுர்வேதிமங்கலம் அல்லது சதுர்வேதமங்கலமென்றல் மரபு; இது, பழைய சிலாசாதனமுதலியவற்றாலும் விளங்கும்; இங்ஙகர், இக்காலத்துப் பனையூரென்று வழங்கப்படுகின்றது. இது, சங்கரநயினார்கோயில் தாலூகா, கரிவலம்வந்த நல்லூர்க்குச்சமீபத்தில் உள்ளது; செல்லியாரம்மையென்ற பெயருள்ள துர்க்காதேவியைத் தனக்கு அதிதேவதையாக உடைமையின், இவ்வூர் செல்லிநகரென்று பெயர்பெற்றதென்று சொல்லுகின்றனர்.

[வேம்பத்தூர்.]

வேம்பத்தூரென்பது, பாண்டிவளநாட்டில் மதுரைக்கு வடகிழக்கில் இரண்டுகாதத்தில் வையைநதிக்குவடக்கே உள்ளது; இது நிம்பையென்றும் வழங்கும்; [நிம்பம் - வேம்பு]; பிரமோத்தரகாண்டத்தின் பாயிரத்தில், "தேசான" என்னும் செய்யுளில், "நிம்பை, யீசான மாழுனிவன்" என இப்

* கௌணிய கோத்திரம் - கௌண்டின்னிய கோத்திரம்.

பெயர் வந்திருத்தல் காண்க. பண்டைக்காலத்தில் இப்பெயர் வேம்பற்றூ ரென்றே வழக்கிவந்ததாகத் தெரிகின்றது. மணலூரிலிருந்த குலசேகரபாண் டியனுல், இவ்வகுப்பினர்க்கு முன்பு தானஞ்செய்யப் பெற்றதாதலின், இவ் ஊர், குலசேகரசதுர்வேதமங்கலமெனவும் பெயர்பெறும்; இவ்வூரைக் குல சேகரபாண்டியர் தானஞ்செய்தாரென்பதை,

"தனக்கொருபத் தேழு கலிக்கொருபத் தாறு
புனக்குமிக் கோமான் புதல்வன் - மனக்கினிய
தென்னிம்பை யூரதனைச் சீர்மறையோ ருக்களித்தான்
கன்னன் குலசே கரன்."

என்னும் பழைய வெண்பாவாலுணர்க.

குலசேக்ரபாண்டியனென்பவன், அகரமேற்றநினைந்து, காகேதபுரி யென்ற இடத்திலிருந்து பிராமணர் இரண்டாயிரத்தெண்மரை அழைப் பித்து, அவர்கள் நாமாவலியைப் பதிந்துகொண்டு, முறையே ஒவ்வொரு வருக்கும் மனையும் நிலமும் கொடுத்துக்கொண்டேவந்து, இறுதியில் எஞ்சிய கணபதியென்னும் பெயருள்ளவரை அழைத்தகாலையில், யாதுகாரணத்தா லோ அவர் வரவில்லை; அப்பொழுது, ஸ்ரீ மஹாகணபதி, ஒரு பிரமசாரி வடிவங்கொண்டுவந்து, 'யான் கணபதி' என்று கூறி, அவற்றை ஏற்றுக் கொண்டு மறைந்தருளினர். உடனே அரசன்வியந்து பரவசமுற்று அவருக் கென்று கொடுத்த மனையிற் கோயில்கட்டுவித்து, அதில் அவருடைய திரு வுருவத்தைப் பிரதிஷ்டைசெய்து நிலத்தையும் தேவதானமாகவிட்டனனென் றும் அவ்வூரே இதுவென்றும் ஒரு பழையசரிதம் பாண்டிநாட்டில் கர்ண பரம்பரையில் வழங்கிவருகின்றது. வேம்பத்தூரில் அக்கிரகாரத்திற்குமேற் கே கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹாகணபதிக்கு அமைக் துள்ள இரண்டாயிரத்தெண்விநாயகரென்னும் திருநாமமும் இந்தப் பழைய சரிதத்தை வலியுறுத்தும்.

வானவீரமதனையிலிருந்த குலசேகரபாண்டியனென்ற ஓரரசன், இர ண்டாயிரத்தெட்டுக் குடும்பத்தார்க்குப் பாண்டிநாட்டில் வேம்பத்தூர்முத லிய ஒ00அ - ஊர்களைக் கொடுத்தானென்று சொல்லுவதுமுண்டு; இதனை, மதுரைத்தலமணிமாலையென்னும் புத்தகம் ஒருவகையாகத்தெரிவிக் கின்றது.

வேம்பற்றூரென்பதும் குலசேகரசதுர்வேதமங்கல மென்பதும் இவ்வூர்க் குப் பெயர்களென்பதை இவ்வூர்ப் பெருமாள்கோயிற் கருப்பக்கிருகச்சுவரின் வெளியேயுள்ள சிலாசாஸனத்தால் அறியலாகும்; அகநானூறு, கடுசு - ம் செய்யுளுக்கும், புறநானூறு, கூகள - ம் செய்யுளுக்குமுரிய ஆசிரியரின் பெய ராகிய வேம்பற்றூர்க்குமரனு ரென்பதிலுள்ள வேம்பற்றூரென்பது இவ்வூ ராகவே கருதப்படுகின்றது. இவ்வூர்ப்பிராமணச்சிறுவர்கள் தமிழ்க்கவிசெய் தலில் வல்லுநராயிருந்தனரென்பதைத் தமிழ்நாவலரிகரிதையும் புலப்படுத் தும். இவ்வரிசைப் பாக்களில் ஆசிரிய வேறுபாடுகள் சிலவுள்ளன. இவற்றுள் ஒரு

கள் கல்விமிகுதியையும் வருத்தமின்றிச் செய்யுட்களியற்றும்வன்மையையும் கண்குழுலப்படுத்திப் பண்டைக்காலத்திருந்த அரசர்முதலியோர்களால் கண்கு மதிக்கப்பெற்று முற்றூட்டாக அவர்கள்கொடுத்த ஊர்களிலே தமக்கிருப்பிட மாகக்கொண்டு தமிழ்நூலாராய்ச்சி செய்துகொண்டிருந்தார்கள்; ஆனாலும், இவர்கள் வேம்பத்தூராரென்றே எல்லாராலும் அழைக்கப்படுவார்கள். இவர் கள் அங்ஙனமிருந்த ஊர்களுள் இப்பொழுதறிந்தவை: வீரசோழன், அல்லது வீரை, தென்காசி, கீழைப்பாஞ்ர், வல்லநாடு (இது திருநெல்வேலிக் குக்கிழக்கே ஒருகாதத்திலுள்ளது) இருப்பையூருணி (இது கோயிற்பட்டிக்குக் கிழக்கேயுள்ளது), திருநெல்வேலி, கரிவலம்வந்த நல்லூர், கற்குளம் (இது வல்லநாட்டைச்சார்ந்தது) பனையூர், குறுங்காவனம் அல்லது குறுங்களாவனம் (இது கீழைப்பாஞ்ருக்குச் சமீபமானது) என்பன. இக்குழாத்தினரெல்லோ ரும் ஒரேவிதமான சமயக்கொள்கையை உடையவர்களல்லர்; தங்கள்தங்கள் முன்னோர்கள் தழுவிவந்ததும் வைதிகமாயதுமானகொள்கை எதுவோ அத னையே மேற்கொண்டவர்கள். இஃது அவரவர்கள் இயற்றியநூல்களாலும் தனிப்பாடல்களாலும் விளங்கும்,

பாடுதுறைமுதலிய பற்பலநூல்களியற்றிய தத்துவராயரும், வரதுங்க ராமபாண்டியருடைய ஆசிரியராகிய ஈசானமுனிவரும், ஆனந்தலகரி, சௌ நீதரியலகரிமுதலிய நூல்களியற்றிய வீரைக்கவிராசபண்டிதரும், ஞான வாசிட்ட நூலாசிரியரான ஆளவந்தார் அல்லது ஆளவந்தான் மாதவபட்ட ரென்பவரும், **பகவத்கீதையியற்றிய** ஸ்ரீ **பட்டரும், பராபரமாலைபாடிய அம் பிகாபதியும், நெல்லைவருக்கக்கோவைபாடிய திருநெல்வேலிப்பெருமா** ளையரும், ஐயாயிரம்பாடலுள்ள **பாகவதமியற்றிய சேவ்வைக்கூடலாரும், அழகர்கலம்பகமியற்றிய கவிகுஞ்சரமையரும், பிரபந்ததீபிகையியற்றிய முத்துவேங்கடசுப்பையரும்** இந்தவேம்பத்தூர்ச் சோழிய வகுப்பினரே.

இக்குழாத்தினர்க்கு வேம்பத்தூர்க்கங்காதரென்றும் ஒருபெயர் பண் டைக்காலந்தொடங்கி வழங்கிவருகின்றதுண்டு; இஃது அழகர்கலம்பகமுத லியவற்றுரல் விளங்கும்.

முற்காலத்தில் எதேனும் நூலியற்றியதமிழ்ப்புலவர்கள் அந்நூலைக்கொண ர்ந்து இவ்வூர்ப்புலவர்களுக்குக்காட்டிச் செவ்வைசெய்வித்து, இவர்களுடைய உடன்பாடுபெற்றபின்பே அந்நூலைவெளிப்படுத்துதல் பெரும்பான்மையான வழக்கமாக இருந்ததென்று பலர்சொல்லக் கேள்வியுண்டு.

கம்பர் தாமியற்றிய இராமாயணத்தை இவ்வூரில்வந்துபடித்துக்காட்டி இவர்களால்கௌரவிக்கப்பெற்றனரென்பதும், காளமேகப்புலவர் இங்கே வந்து இவ்வூராரில் ஒருவர் * சமத்தியாசக்கொடித்த, "கண்டங்கத் தரிக் கொத்துக் காய்" என்பதை இறுதியடியாக அமைத்து, கொடித்தவர் எண்ணிய

* ஸமஸ்யாவென்னும் வடமொழி இங்ஙனம் சிலசமயங்குறிக்கின்றதென் பர்.

வண்ணமே ஒருசெய்யுளும் ஆங்கிருந்த வேறுசிலர் விரும்பியவண்ணம் அருமையான சில சிலேடைவெண்பாக்களும் வருத்தமின்றிக் குறித்தகாலத்துட் பாடிமுடிக்க, இவர்கள் நன்குமதித்து இவ்வூருக்குத்தெற்கேயுள்ளதும், "காள மேகநீதாறு" என்று இக்காலத்தில்வழங்கப்படுவதுமாகிய கூ - மா அளவுள்ள நன்செய்நிலத்தை அவருக்கு முற்றூட்டாகக்கொடுத்தனரென்பதும் கன்ன பரம்பரைச்செய்திகள்.

திரிசிரபுரம் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் முதலியோர்களாற் சிறந்தகவிஞரென்று பாராட்டப்பெற்றவரும் சிலவருடங்களுக்குமுன்பு இராமநாதபுரத்தில், பலதமிழ்ப்புலவர்கள் தனித்தனியே கொடுத்தவிஷயங்களே யமைத்து, அவர்கள்குறித்த இரண்டாமாதிகைக்குள், கூ - சிலேடைவெண்பாக்களே எளிதிற்பாடி, சிலேடைப்புலியென்னும் பட்டப்பெயரையும் உயர்ந்த சிலபரிசில்களையும் ஸ்ரீ பாஸ்கரசேதுபதியவர்களாற் பெற்றவரும் தனஞ்சயகோத்திரத்தினரும் மேற்கூறிய வீராக்கவிராசபண்டிதருடைய வழித்தோன்றலுமாகிய பிரஹ்மஸ்ரீ பிச்சுவையரென்பவரும் இன்னும் சிலவித்துவான்களும் இப்பொழுது வேம்பத்தூரிலுள்ளார்கள்.

இவர்கள் சரித்திரங்களாகக் கன்னபரம்பரையில்வழங்குவனவும் செய்யுள்மூகமாக உள்ளனவும் இன்னும் எவ்வளவோபல; அவை விரிவஞ்சி நிறுத்தப்பெற்றன.

கடைச்சங்கப்புலவர்காலந்தொடங்கி இன்றுவரை, தமிழ்மணங்கமழப் பெற்றுப் பற்பலவித்துவான்கள், தமிழ்நூல்களையே ஆராய்ச்சிசெய்துகொண்டும் பாடஞ்சொல்லிக்கொண்டும் நூதனமாக நூல்களியற்றிக்கொண்டும் தமிழ்ச்சுவையைப் பிறருக்குப்புலப்படுத்திவீற்றிருத்தற்கு இடமாகிவிளங்கும் இந்த வேம்பத்தூரின்பெருமை என்போலியரால் எங்ஙனம்சொல்லற்பாலது; * "பாட்டுக்குருகுந் தமிழ்ச்சொக்கநாத"ரே அறிந்தருளுவார்.

சற்றேறக்குறைய மூப்பத்தைந்துவருடங்களுக்குமுன்னே இவ்வூருக்கு வந்து இவர்களுடைய தமிழ்ப்பயிற்சியையும் செய்யுள்செய்யும்வன்மையையும் குணவிசேஷங்களையுமறிந்தமகிழ்ந்த பழனி மாம்பழக்கவிச்சிங்கநாவலர் மிக்க அன்புடன் இவ்வூரார்விஷயமாகப்பாடிய வெண்பாக்கள் வருமாறு:—

க. "வேதநூல் வாழிதவ வேள்வித் துறைவாழி
நீதிநூல் வாழி நெறிவாழி - ஓதுதமிழ்
வல்லோராய் நிம்பை வளம்பதிவாழ் மாசனங்கள்
எல்லாரும் வாழி யினிது."

உ. "பொங்குகடல் வாழி புயல்வாழி சீர்வாழி
தங்குநூல் வாழி தமிழ்வாழி - துங்கமிகுந்
தேசமெங்கும் போற்றத் திறல்படைத்த வேம்பத்தூர்
மாசனங்கள் வாழி மகிழ்ந்து."

இந்நூலாசிரியருடைய சரித்திரத்திற்கு அங்கமாக வேம்பத்தூரின் வரலாறு இதுவரையிற் கூறப்பட்டது.

---

* மதுரைக்கலம்பகம், எக.

[நூல் இயற்றிய இடம்.]

இந்நூலாசிரியருடையஊர் செல்லிநகராக இருந்தாலும், இதனைப் பாடுங் காலத்தில் வெளிருந்தஇடம், கார்வளங்கொண்மண்டலத்திற் கப்பிஞ்சிநாடென்னும் பெயரையுடைய சிறநாடென்றுதெரிகின்றது; இதனை, "கார்வளங் கொண் மண்டலத்துக் கப்பிஞ்சி நாட்டைத்தோன்" [பக்கம் - உஉஅ] என்னும் நூற்சிறப்புப்பாயிராத்தாலுணர்க; கார்வளங்கொண்மண்டலமென்றதை மதுரைக்குக்கிழக்கேயுள்ளதான மழைக்குப்புனைகோடுத்தமங்கல நாடென்று சொல்லுகின்றனர்.

[பெற்றபரிசில்.]

இந்நூலை ஆக்குவித்தோனுகிய * பாண்டியனொருவன் மிக்கசிறப்புடன் இதனை அரங்கேற்றுவித்துப் பல்லக்குமுதலிய விருதுகளையும் பல இரத்தினுபரணங்களையும் கொடுத்தளித்தானென்றும், அப்பொழுது இந்நூலாசிரியர் மகிழ்ந்து, "பல்லக்கு மேலேறி †" (பக்கம், உஉஅ) என்னும் வெண்பாவைப் பாடினரென்றும், பின்னர் அவன்மகிழ்ந்து இவருடையசனனபூமியாகிய செல்லிநகரையும் அதனைச்சார்ந்த ஊர்களையும் இவரும் இவர் பரம்பரையோரும் அனுபவிக்கும்படி மூற்றூட்டாகக்கொடுத்தானென்றும், அதுபற்றிச், செல்லியூரும் ‡அதனைச்சார்ந்த ஊர்களும் செல்லிநாடென்று வழங்கப்பெற்ற வந்தனவென்றும், இவர் பரம்பரையோர் மிகுந்த செல்வமுடையவர்களாகிப் பலதருமங்களைச்செய்து வினங்கினர்களென்றும் சொல்லுகின்றனர். இதனை,

"கன்னலுஞ் செந்நெலுஞ் சூழ்செல்லி நாடன் கவுணியர்கோன்
நன்னர்க ளெண்ணிய வானந்த தாண்டவ நம்பிகற்பாள்‡,
தென்னவர் போற்றிய வங்கயற் கண்ணமை செல்லிதிருச்
சன்னிதிக் கோபுரங் கட்டின டன்மற் றழைக்கவென்றே."

என்னும் மதுரைத்திருப்பணிமாலைச்செய்யுளும் வலியுறுத்துகின்றது.

[காலம்]

மேற்கூறிய செய்யுளிற் கூறப்பட்டுள்ள ஆனந்தநாண்டவநம்பி அம்பிகையின் சந்நிதிக்கோபுரம் கட்டுவித்தகாலம், சாலிவாகனசகாப்தம், ககஙற [இ. பி. கஉஎ - கஉஉஅ; கொல்லம் சஙஉ - சஙஞ] என்று மதுரைக் கோயிலொழுகு தெரிவிக்கின்றமையால், ஆனந்தநாண்டவநம்பியென்பவர், இற்

* இப்பாண்டியனைக் கரிவலம்வந்தநல்லூரில் அரசுபுரிந்த வரதுங்கராம பாண்டியனென்று சிலர் கூறுகின்றனர்.

† இவ்வெண்பாவிலுள்ள, 'பல்லக்குமேலிட்டோம்' என்பதற்குப் பல இரத்தினுபரணங்களே மேலே அணிந்தோமென்று பொருள்கொள்க.

‡ ஆம்பாள் - பத்தினியார்; மனைவியார். ஆனந்தநாண்டவநம்பியே கோபுரம்கட்டியதாக மதுரைக் கோயிலொழுகு தெரிவிக்கின்றது; அஃதி எழுதினரால் நேர்ந்தபிழையோ வேறுயாதோ உண்மைவிளங்கவில்லை.

றைக்கு, சுமை - வருடங்களுக்கு முன்தியிருந்தாரென்றுமட்டும் ஒருவாறு தெரிகின்றது; அதற்குமுன், இந்நூலுடையார்காலம் இவ்வளவினதென்று தெரியவில்லை.

[ஞானசிரியர்.]

சிதம்பரம் மாளிகைமடத்திலிருந்த வேண்காடருடைய சிஷ்யராகிய விநாயகரென்பவர், இவருடைய ஞானசிரியர்; இதனை இந்நூற் கடவுள் வாழ்த்து, உரை - ம் செய்யுளாலுணர்க. இங்கேகூறிய மாளிகைமடத்துத் தலைவரொருவர், வேதாரணியபுராணப் பாயிரத்திலும் திருக்கானப்பேர்ப் புராணப் பாயிரத்திலும் துதிக்கப்பெற்றுள்ளார்.

[குணவிசேடங்கள்.]

இந்நூலாராய்ச்சியால்விளங்கிய ஆசிரியர் குணவிசேடங்கள் பல; அவை, வேதாகமங்களில் மிக்க பிரீதிபுடைமை, வடமொழிப்பயிற்சி, தமிழ்ப்பாஷையில் மிக்க அன்பு, தமிழில் ஐந்திலக்கணவுணர்ச்சி, சங்கத்தமிழ்நூல் முதலியவற்றிலும் பழையவுரைகளிலும் தேவராதிகளிலும் திவ்யப்பிரபந்தங்களிலும் மிக்கபயிற்சி, நடுவுநிலைமை, எல்லாவருணத்தாரிடத்தும் எல்லாச் சாதியாரிடத்தும் அன்புடைமை, சிவபக்தி, அடியார்பக்தி, சிவசின்னங்களில் அன்புடைமை, தம்முடையகருத்தைப் பிறர் எளிதில் அறிந்துகொள்ளுவண்ணம் செய்யுள்செய்யும் வன்மை, அங்ஙனம்செய்யும் செய்யுட்கள் படிப்பவர் களுடைய மனங்கனிக்கவரும்படி இடத்துக்கேற்ற சந்தங்களில் அவற்றை அமைத்தல், பலவகைத் துதிசெய்யுமழகு, வடநூற்கருத்துக்களே அங்கங்கே யமைத்தல், பிறரை நல்வழிப்படுத்தினேதத்தல், சரிதங்கூறுகையில், பரமகருணாநிதியாகிய சிவபெருமானுடைய திருவருளின்பெருமையை நினைந்துநினைந்து மனமுருகி இடையிடையே செயலற்றிருத்தல் என்னும் இவையும் பிறவுமாம். இங்கே எடுத்துக்கூறியவையெல்லாம் இந்நூல் அரும்பதவகராதிமுதலியவற்றைப் பார்ப்பவர்களுக்கு இனிதுவிளங்கும்.

நூலாராய்ச்சி.

[நூலிலுள்ள முக்கியமான சிலதுறிப்புக்கள்.]

பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலுக்கும் இதற்குமுள்ள வேறுபாடுகள் பலவற்றுள், ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் வையைநதியை அடைத்தற்குக் கூலியாளாகவந்து வேலைசெய்யாமல் உழப்பியபொழுது, பாண்டியனுடைய ஏவலாளர்கள்கினந்து அவர்முதுகில் அடித்தாரென்று ஆசிரியர் கூறியிருப்பதொன்று, * (கூ0) கூட - ம் செய்யுளைப்பார்க்க; பலநூல்கள் பாண்டியனே அடித்

* இங்கேகாட்டிய எண்களுள், ( ) இவ்வடையாளத்திற்குட்பட்டது திருவிளையாடலையும் வேயுறு பாடலையும் புலப்படுத்துவன; பின்வருவனவற்றையும் இப்படிமேற்கொள்க.

தானென்று கூறியிருக்கவும் இவர் இங்ஙனம் கூறியதற்குக்காரணம் இன்னதென்றுபுலப்படவில்லை; இந்நூலைச்செய்வித்த அரசனுடையவேண்டுகோளாக இருத்தல்கூடுமென்பது சிலருடையகருத்து; "அந்தகாள் பிட்டுக் காக மண் சுமந்த வரலாறுமன் னவன்றன தாளா, மைந்தரி லொருவ னடித்தந்தாத் துணிந்தோர் வண்டமிழ்க் கவிஞனே தினனே" என்பது, புலவர்புராணம், திருவாதவூரர், பு.அ.

பழையநூலாசிரியர்களும் பழைய உரையாசிரியர்களும் பாண்டியர்களிற் சிலரைத் தெய்வப்பாண்டியரென்றுகூறுதல் மரபு. இந்நூலாசிரியர் அதனைத் தழுவி, சுந்தரமாறரை, "தெய்வப்பாண்டியன்" (கட. ககு) என்றும், "தெய்வவான்வழுதி" என்றும் கூறியிருக்கின்றனர்; (சு) ச.

ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயில், இத்தலத்துள்ளகோயில்களிலவற்றிற்கும் காலத்தால்முந்தியதும் பெரியதுமாதலின், அதனைவிளக்கவேண்டி, இந்நூலாசிரியர், அதனைத் தொல்லியாலயமென்றும் பெரியகோயிலென்றும் அங்கங்கேவழங்குவர்; இத்தலத்திற் கோயில்கள் பலவுள்ளனவென்பதை, "நந்தல்விழுநாட்டத் திறையோன் கோயிலு, மூவணச்சேவ லுயர்த்தோனியமமு, மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமுங், கோழிச்சேவற் கோழ்யோன் கோட்டமும்" (சிலை. ஊர்காண். எ - கம) எனவும், "வடதிரு வால வாய்திரு நடுவூர், வெள்ளி யம்பல நள்ளா றிந்திரை, பஞ்சவ னீச்சர மஞ்செழுத் தமைத்த, சென்னி மாபுரஞ் சேரன் றிருத்தளி, கன்னிசெங் கோட்டங் கரியோன் றிருவுறை, ... ஒருபரங் குன்றஞ், சூழ்கொள விருந்த கூடலெம் பெருமான்" (ஆலி. "நெடுவளைப் பொங்கர்" - சுக) எனவும் வருவனவற்றாலுணர்க.

இந்நூலாசிரியர், இலமறைகாய்போற் பழையநூல்களில் அங்கங்கே மறைந்துகிடந்த அரியசெய்திகளை இதனுள் உரிய இடங்களில் அமைத்து விளக்கிச்செல்லுகின்றனர். இதனால், நெடுநாளாகஇருந்த ஐயங்கள் ஒருவாறு தீர்வனவாயின. அவற்றுள், சில வருமாறு:—

க. 'நான்குமாடங்கள் கூடுதலின் நான்மாடக்கூடலென்றுமியற்று. அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்; இனி, கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்றுமாம்' என்பது, கலித்தொகை, கூஉ-ம் பாடல், நச்சினார்க்கினியம். இத்தவுரையில் முன்னுள்ள திருவாலவாய்மூதலியநான்கும் இன்னவையென்று இந்நூல், சஎ - ம் திருவிளையாடலாலும் பின்னுள்ள கன்னிமூதலியநான்கும் இன்னவையென்று இந்நூல் திருநகரச் சிறப்பிலுள்ள, கஉ - ம் பாடல்முதலிய நான்களாலும் ஒருவாறு விளங்குதல் காண்க.

உ. 'நீலமணியின்குற்றம்வந்தவழிக்கண்டுகொள்க'. என்பது, சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, கஉ0 - ம் அடி, அடியார்க்குநல்லாரும்; நீலத்

தின்சூற்றம் பன்னிரண்டென்றும் அவற்றின்பெயர்கள் இவையென்றும் இந் நூல், உடு-ம் திருவிளையாடலிலுள்ள ககூ-ம் செய்யுளால் விளங்குகின்றது. இதனால், அடியார்க்குநல்லாரிலும் இந்நூலாசிரியர் தமிழ்நூலாராய்ச்சியில் மிக்கவரென்பது வெளியாகின்றது.

துதிவகைகள்:

கடவுள்வாழ்த்திலன்றி நூலுள்ளே அங்கங்கேவந்துள்ள விநாயகர்துதி முதலியன, யாவரும்படித்தறிந்து இன்புறுதற்பாலன; அவை வருமாறு:—

விநாயகர்துதி: (உஏ) உசை. †

சிவஸ்துதி: (உள) சுசூ, எஅ, (ரூகூ) கo, ஙக, கஉ;—இவைமுற்றும் துதியாகவுள்ளகவிகள். (உ) சை, (ஏ) உ, (கள) உ, (உசை) ரூ, (உள) உஏ, சுடு, (உஅ) அ, கூ, (ரூடு) உகூ, ரூo, (ரூகூ) கஉ, (சக) ஏ, (சரூ) உசை, (சசூ) டு, (டுசை) கஎ, (டுஏ) கஅ, (சுஉ) உரூ;—இவை சிலஅடிகள் துதியாகவுள்ளகவிகள்.

அம்பிகைதுதி: (உஎ) உசூ.

திருஞானசம்பந்தர்துதி: (ரூஎ) ரூo.

நாவுக்கரசர்துதி: (டுக) கடு.

நூலாசிரியர் கூற்றுக்கள்:

நூலாசிரியர்கூற்றுக்களாக இந்நூலுள் அங்கங்கே காண்ப்படுங்கவிகள் பல உள்ளன. அவை ஒருபகுதிப்பட்டனவல்ல; அவை வருமாறு:—

க. உலகத்தாரைநோக்கிச் சிவபெருமானுடைய திருவருளின்பெருமையை இவர் கூறுதல்போலவும் பிறர்கூறுதல்போலவும் உள்ளன: (திருநாட்டுச் சிறப்பு.) கசை, (உஎ) க, (ரூக) உஉ, (ரூஉ) உடு, (ரூசை) ஙகூ, (ரூஅ) ஙக, (சசை) டுஅ, (சடு) கஅ, (சசூ) ஙக, (டுசை) டுo, (சுரூ) உக.

உ. திருவிளையாடல்களைச் சொல்லிக்கொண்டுபோகையில் அன்பின் மிகுதியால் இடையிடையே இவருடையமனம் உருகியதென்பதைப் புலப்படுத்துவன: (ரூo) ரூகூ, (சஅ) ரூள.

ங. ஒவ்வொருபகுதியின் இறுதியிலே சரித்திரத்தின் அருமையைநினைந்து மனமுருகிச்செய்துள்ள சிவஸ்துதியாகவுள்ளன: (டு) ஏ, (எ) கக, (ரூo) டுசூ, (ரூஉ) உடு, (சஅ) சக, (டுo) கஅ.

ச. படிப்பவர்களும் கேட்பவர்களும் அடையும்பயனைப் புலப்படுத்துவனவாய்ச் சிலபகுதிகளின் இறுதியிலுள்ளன. (ரூஅ) எ2, (டுசை) ஙக.

---

* துதிவகைகளிலும் இவற்றின்பின்னுள்ளவைகளிலும் விரிவஞ்சிச் சுருக்கமாக இங்ஙனம் எடுத்துக்காட்டும்படி நேர்ந்தது.

†[( ) இவ்விடையாளத்திற்குட்பட்ட எண்கள் திருவிளையாடல்களையும், ஏனையவை பாடல்களையும் புலப்படுத்துவன.]

இ. பாவத்தால் ஒருவர்வருந்துவதைக்குறித்து வருந்துதலையும், புண்ணியத்தால் ஒருவர் மகிழ்தலைக்குறித்து மகிழ்தலையும் புலப்படுத்துவன: (ஈச) உ, ச, (ஈஅ) இக, (ஈக) உஈ.

ஈ. திருவிளையாடற் சம்பந்தத்தாற் பெருமையடைந்த சிலசாதியாரின் விசேடத்தைக்கூறுவன: (உஈ) உஇ, (இஈ) கஅ.

இங்ஙனம் வருவன இன்னும்பல.

பொருளணிகள்:

இவருடையவாக்கிற் பலவகைப்பொருளணிகள் அங்கங்கேவந்துள்ளன வெனினும் மிகுதியாகக்காணப்படுவன, கருத்துடையடையணியும் கருத்துடையடைகொளியணியுமே; அவைவந்துள்ளவற்றுட் சிலஇடங்கள்வருமாறு: (எ) உ, (கந) க, (சசு) அ, (ஈசு) எ, (ஈக) கஉ, (சஉ) அ, (சச) அ, கஈ, (சசு) கக, (சஎ) கூ, (இசு) கo, (கூஉ) கஈ, கஎ, ஈச, ஈக.

செல்லணி:

சொல்லணியைச்சார்ந்த மடக்கணிகளே இந்நூலிற் பரக்கக்காணலாம்; அவை வருமாறு:

[எண்கள் பக்க எண்கள்.]

அத்தியிலத்தி சொரிந்ததால்-யானே யானது இலத்தியைச்சொரிந்தது.சுசு.

அருகரருகராக்கண்டேம் - சைனர் பாண்டியனைச் சமீபித்தவராகப் பார்த்தேம். கஉஅ.

ஆவிசேர் தண்ணீர் வேட்டங் காவி சோர்ந்து: ஆவி-தடாகம், உயிர். கடுஇ.

இடையிடையும்படி: இடையும் படி - வருந்தும்படி. ககஉ.

உக்கிரமாய் ஈனிவரக்கண் டெக்கிர வேல் விறற்செழியன். ஙஉ.

உடல்வலிய சத்திவிடச் சத்திவிட்ட காவலன்: சத்தி - வலி, வேல். ஙஈ.

கரிகரியாக - யானை கரியாக. சுசு.

கனகசோ கனகவாவி - பொற்சுமை வாவி. கஅ.

கூடமதாகக் கற்பித்தருளினன் கூடமில்லான்: கூடம் - மாளிகைவிசேடம், வஞ்சனை. ஈஇ.

கைதவகேள் கைதவமாகாது - பாண்டியனே கேட்பாயாக;உனக்கு வஞ்சனையாகாது. உoச.

கைதவமோவில்லை கைதவ. ஙசு.

கோதைதன் பரிசனத்தால்...பரிசளங்களோடும். ககக.

கோலக்கோலம் - பன்றித்திருவுருவம். உகo.

சந்திர மாவளித்தான் சந்திர மாகுலத்தான்: சந்திரமா - பொற்குதிரை. உகசு.

சம்புமா சமாதியாலே சம்புமாத்தாழ்க்க: சம்புமா - சிவபெருமானுடைய பெரிய, நரிகளாகிய குதிரைகள். அஉ.

சரங்கொடுஞ் சரம்போற் றைப்பச் சரங்கொண்டாள் சமிலாதாள்.உoசு.

செட்டியாஞ்செட்டி - வைசியர்குலத்திற் பிறந்த உருத்திரசன்மாகிய முருகக்கடவுள். ஙo.

செட்டியுஞ் செட்டியா யுதித்தான் ஙச.

தாணு தாணுவே யெனவிருந்தான்: தாணு - சிவபெருமான், குற்றி. அடி.

துதிக்கையின்றித் துதிக்கையால் வணக்கத்தெடுத்து: துதிக்கை - துதிசெய்தல், தும்பிக்கை. ஙஈ.

நரிகாணரியாது. அசு.

[எண்கள் பக்க எண்கள்.]

நாமளித்த வேலையற நாமளித்த வே லையெறி: நாமளித்த வேலை - அச்சத் தையுண்டுபண்ணிய கடல், யாம்கொ டித்த வேற்படையை. இ2.

பத்திரங்கொடித்தொதுங்கிப் பத்திர ன் பணிந்து நின்றூன்: பத்திரம்-திரு மூகம்; பத்திரன்-பாணபத்திரர். ககஎ.

பயங்கொண்டு வந்ததெவரும் பயங் கொள்ள: பயம் - நீர், அச்சம். கச.

புயலகத்துப் பெரும்புயல்: புயல் - மேகம், நீர். கூ.

பைங்கண் வேழத்தை...செங்கண் கேழம்: வேழம்-கரும்பு, யானை. கூ.

மாலையங்குழல்சேர் பாணர் மாலையர் மாலையெய்தி: பாணர்மாலையர்-பாணர் மகளிர்;விறலியர். மாலை-மயக்கத்தை. ககஉ.

மாலையைக் கழுத்திலிட்டோர்மாலை கின்றுளாவ. உ0சு.

மாறன்மாறி: மாறன் - பாண்டியன். உ0கூ.

மாறனுழுதயர் கெட மாறியாடினூர்: க0டு.

மாரூன்மாறனென்றுங்கரும்பெயர் பெற்றோன். கூக.

வனையினுல் வனைத்தனன். இஎ

வாசியை வாசியாக - குதிரையை விசேடமாக. அடு.

விடை விடைகொண்டு - இடபம் விடுத்தல்கொண்டு. கஉ0; "சொல் விடைகேட்டுச் சென்விடை வெஃகுபு" என்பது மதுரைமும்மணிக்கோவை, உ அ.

வேடனிடு சூடினிய கேடறசை நா டபவ, வேடனுடல் வீடவடுவோர். கூ.

வேலையை யேவ வேலை வேலைநல் வேலை யென்று: வேலை-கடல், காலம், தொழில். கூச.

இந்நூலில், வேறுபொருளின்றி வினாவழுதலியகாரணங்களால், கோற்கள் அடுக்கிவருதலும் காணப்படும்; அவை வருமாறு:

அஞ்சேனஞ்சேன்: ககo.
அரகர. கஎ.
இடந்தருமிடந்தரும்: சo.
உதவுமுதவுவம். கஎக.
என்கையில் வனைநெரிந்த தென்கை யில் வனைநெரிந்தது: இஎ.
என்னைவிடென்னைவிடு: இஎ.
எனக்கெனக்கு: இஎ.
ஒக்குமொக்கும்: சஎ.
காத்தருள் காத்தருள்: கஎக.
சிவசங்கர சிவசங்கர: ககஉ.
தருமநெறி தருமநெறி: கக.
திருச்சிற்றம்பலந்திருச்சிற்றம்பலம்: உ.
திருவம்பலந்திருவம்பலம்: உ.
தூயிலுணர்தி தூயிலுணர்தி: இஉ.
நல்ல நல்ல: இஎ.
நில்லும் நில்லும்: இஎ.
நிறைந்தன நிறைந்த: கஎஎ.
பொன்னம்பலம் பொன்னம்பலம்: உ.
போனது போனது: கo கூ.
வணங்குமினீர் வணங்குமினீர்: சக.
வந்துபோம் வந்துபோம்: இஅ.
வரும் வரும்: அஉ.
வளர்ந்திட வளர்ந்திட: சo.
வனைத்திடும் வனைத்திடும்: அo.
வனையல்கொள்ளும் வனையல்கொள்ளு விடு விடு: கூக. [ம்: இஎ.
விடும் விடும்: சக, எஅ.

இதில் அவ்வவ்விடத்துவந்துள்ள

ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளின் அருமைத்திருநாமங்கள்:

அடிமைக்கு நல்லவர். உஉஇ.
அடியவர்க்கெளிய சுந்தரன். கசக.
அடியவர்க்கெளிய சொக்கன். கo சு.
அடியவர்க்கெளியவர். இந, சுஎ.
அடியவர்க்கெளிய வெம்பெரு மான். சஅ.

[எண்கள் பக்க எண்கள்.]

அடியவர்திறத்து நல்லவன். கடுஎ.
அடியவர் நன்மைதின்மை அறிபவன். ககஅ.
அடியார்க்கு இனியன கொடுக்குஞ் சொக்கன். ஙக. [ககசு.
அடியார்க்கு நல்லான். க00, ககஅ,
அடியார்குறைதீர்ப்பான்: ஙஅ.
அடியார்தங்கட் கெளியவன், ககஅ.
அணுக்கட்கு நல்லவர். ககச.
அதிரவீசியாடுவான். க0எ. "அதிரவீசியாடுவாய்"-(திருஞா. தே).
அந்தநாயகன். கசு; (அந்தம்-ஆழகு).
அபிடேகச்சொக்கன். ஙச. [அபிடேகம் - ஸ்நீடம்]; "அபிடேகச்சொக்கர்" (மதுரைக்கல. சச, ஙசு).
அருடேங்குநாதன். எ0.
அருந்தவன். ககசு, உகஉ; "தாழ்சடைப் பொலிந்த வருந்தவத்தோற்கே" (புறநா. கட).
அருவீமெய்யினன். ஙசு.
அருளாகரன். ககசு.
அழகன். க்கஅ, ககசு, கசுஅ, உஉஅ; "அழகனீபுயங்களி", "மூப்புமுஞ் செற்ற வழக" (திருஞா. தே.), "அழகனே யாலவாயி லப்பனே" (திருநா. தே.)
அழகார்மெய்யன். ஙச.
அழகியசொக்கன் ஙஅ; (மதுரைக்கல. சு, ஙசு, ஙசு); "அழகிய சொக்கர்க்கு" (மீனாட்சி. காப்பு. சு).
அழகிய பெருமான். கசுஎ.
அற்றவர்க்கற்றசிவன். கஎக; "அற்றவர்க் கறற சிவனுறை கின்ற வால வாயாவது மிதுவே"(திருஞா. தே); "அற்றவர்க்கற்றோன்கூறும்" (திருவானேக்காப்புராணம்,மைமிச.உக.)
அற்றவர்க்கற்றசெல்வன். கசக.
அற்றவர்க்குற்றசெல்வன். கஎக.
அற்றவர்க்குற்றசெல்வன். கசக.
அன்பர்க்கன்பன். ககஅ, ககக.
அன்பர்சுமை பூண்டுகொண்டான். எஎ.
அன்பர்தம்பிழை பொறுப்பவன்.சகஙு.
அன்னையொப்ப அணுக்கட்கு நல்லவர். ககச.
ஆதி. ஙஅ; "ஆலவாயிலுறையுமெம் மாதியே" (திருஞா, தே. க-க0).
ஆதிநாதன். ஙஎ, கஎஅ.
ஆதிநாயகன், சஙு.
ஆதிமூனி, ஙஅ.
ஆலவாய்த் திருமூர்த்தி. கஙூ, ஙக.
ஆலவாய் மெய்யன். ஙச, கஉ.உ, கஉஅ, கஎஅ.
ஆலவாயமுதமன். கஉ,
ஆலவாயமுதவாக்கன். சக்ஷ.
ஆலவாயமுதவாயான். சுஅ.
ஆலவாயமுது. ஙo.
இசைக்குரல்லான். உoக.
இசைச்சொக்கன். ககo.
இயற்சொக்கன். ஙசு.
உற்றவர்கட்குற்றவன். க0உ.
எளியசொக்கன். கசஙு. [உoச.
எளியவர்க்கெளிய சொக்கநாதன்.
ஒப்பிலழகன். கஅ.
கருணைமெய்யன். ககஉ.
கருணைமேனிப் புண்ணியன். கஙுச.
காரணமுதல்வன். உஙு.
காரணவான். எஉ.
குஞ்சரர்தாங்குகோயிற்குழகன்.ககக.
குஞ்சரர்தாங்குகோயிற்கூத்தன்.கஙசு.
குழகன். ககக; "குழகனே" (திருஞா, தே. எ).
கூடமில்லான். சஙு.
கூத்தன். கசஙு; "கூத்தனே" (திருநா. தே. எ).
சாலநல்லவன். கதுஎ.
செந்தமிழ்க்கினிய சொக்கன்- கஅஙு.
செந்தமிழ் பயிலுஞ் சுந்தரன். கஉசு.
செழியர் நாதர். கச.
சேட்டநாதர். கஙூ.
சொக்கமூர்த்தி. கஅஙு.
சொக்கவேள்தி. கஅஙு.
சொக்கன் (சொக்கர்) உ, ஙு, உஎ, ஙசு, உoசு; "ஆலவாய்ச், சொக்கன்", "ஆலவாய்ச், சொக்கனே"(திருஞா. தே). (மதுரைக்கல. ஙு, க0, சுஙு, சுசு, அக; மீனாட்சி இரட்டைமணிமாலை, உ, க0)
சொக்கு. கஎ, கஙுஙு, கசச.
தனக்கு நல்லவர்க்கு நல்லோன். ஙுஅ.

[எண்கள் பக்க எண்கள்.]

தெய்வப்பாண்டியன், ச.
தெய்வவான் வழுதி. உஅ.
தென்னவர் இறைக்கு நல்லசெல்வன், கஎக.
தொழுபவர்க்கெளியான். கடுக.
நயந்தவை யாவையும் நல்க வல்ல வன். கூ0.
நல்லடியார்க்கு நல்லான். க00, ககசு.
நற்றமிழிறைவன், உ0சு.
நற்றவன், ச0. [உகங்.
நாயனூர் (நாயன்). எஅ, கசுசு, ககசு, நேசர்கட்கு நேசன். ககூக.
பண்ணிசைச்சொக்கன். உ0க.
பத்தர்கள்பத்தன். கூ, ககக, ககஎ, கஉக, கங்க, கசசு, கசக்கு, கஎ0, கஎஉ.
பத்தர் பத்தன். சஎ, சு0, கசடு, கசசு, கசக.
பத்தர் வாழ்வு. கூஎ.
பழிக்கஞ்சுசொக்கன். உ0ச.
பழியஞ்சுஞ் சொக்கன். ககக. "பாவமேபாவம் பழியஞ்சுஞ் சொக்கருக்கே" (மதுரைக்கல. உக)
பாண்டிநன்னுடன். ககக.
பாவறிந்த நாவலவன். சக.
புகழ்க்கினியான். கக2.
புகழ்க்கு நல்ல சொக்கன். கடுக, உ20.
புகழ்க்கு நல்லோன். உ00, உ2டு.
புகழ்கொண்டான். உகஉ.
புழுகு செய்ச்சொக்கர். ஙச; (மதுரைக்கல. டுஉ, டுங; மீனுட்சி. ஊசற். க-க0).
முனிவன். க.
மெய்யர்க்கு மெய்யன். கசுஎ.
மெய்யன். கக, ஙச.
யாவும்வல்லவன். சு0.
வணங்குவோரிணங்கன். அங.
வாசிவாரியப்பெருமான். கூங.

[இத்திருநாமங்கள், இத்தலத்தொடர்புள்ள நூல்களினும் பிறநூல்களினும் பயின்று வந்திருத்தலின், இங்கே எடுத்துக்காட்டப்பெற்றன. இவற்றுள், ஒன்றன் பரியாயங்களாக உள்ளவற்றையும் அடைமொழிகளால் வேறுபட்டுள்ளவற்றையும் ஆராய்ந்தறிந்து கொள்க.]

இந்நூலால்தெரிந்த ஊர்களின்பெயர்கள் முதலியன.

(க)—ஊர்கள்:

ஆலடையார்கோயில்-திருப்பெருந்துறை; சிவபெருமான் ஆசிரியவடிவங்கொண்டு திருவாதவூரடிகளை ஆட்கொண்டருளிய இடமாதலின், இஃது இப்பெயர்பெற்றது. இது துறையெனவும் வழங்கும். எஉ, எசு, அக.

இராமேச்சரம். கூ.

இருஞ்சிறை - பாண்டியராசன் மேகங்களைக்கட்டிச் சிறைப்படுத்திய இடம்; 'கட்டுநல்லூரிருஞ்சிறை' எனவழங்கும்; மானமதுரை (வானரமதுரை)க்குச் சமீபமானது; கசுஉ.

உத்தரகோசமங்கை. குடு, ஙசு, க00.

உப்பூர் - உருத்திரசன்மனுருடைய ஊர்; இதில் இராமராத்பூஜிக்கப்பட்ட விநாயகராலயமொன்றுண்டு; இவ்வூர் பாம்பக்குடிக்கு ஈசானத்திலுள்ளது. சகூ.

ஏழூர்கள் - மேகத்துக்குப்பூணைகொடுத்த உபகாரியினுடைய ஊர்கள்; இவை களவேள்விநாட்டிலுள்ளவைகள்; இவற்றுளொன்று நாமூரென்பது. கசுச.

கட்டுநல்லூர் - பாண்டியராசன் மேகங்களைப் பிடித்துக்கட்டிய இடம்; இஃது இருஞ்சிறைக்குச்சமீபமானது. கஅஉ.

கழுவர் படைவீடு - இது சமணர்கள் எறிய அ000- கழுமரங்களின் வரி

[எண்கள் பக்க எண்கள்.]

சைமூடிந்த கிழக்கோடியாகிய இடத்திலுள்ளது; திருப்பூவணத்தின் பக்கத்தது; இக்காலத்துக் கழுவேறுமடை, கழுவேறுகடையெனவழங்கும்; கழுக்களின்வரிசைமூடிந்த மேலைக்கோடியில், மேலைக்காலென ஒருருள்ளது. கஙஎ.

காசி. எ.

காவண நல்லூர். தாகம்தீரும்பொருட்டுக் குளமுதலியவற்றிலுள்ள ஜலத்தையுண்ட குண்டோதரன், மனிதர்களுடைய ஜலகஷ்டத்தைத் தீர்க்கும் பொருட்டுச் சிவபெருமான் கட்டளைப்படி உண்டாக்கிய தீர்த்தலிகளுள், பத்தர்சூழ்ந்த நீர்நிலையையுடையவூர்; காவணம் - பந்தர். ஈ0.

காவிரிப்பூம்பட்டினம். இது பட்டினமெனவே அக்காலத்து வழங்கிவந்தது. சுஉ, உகசு.

காளையார்கோயில். எஉ.

கோடீஸ்வரர் - கழறிற்றறிவார் நாயனருண்டி இராசதானி. ககள.

சிதம்பரம். உ, கoo.

சீகாழி. கஉஉ.

செல்லிநகர். இஃது இந்தூலாதிரியருடைய ஊர்; செல்லிநாடெனவும் பரசுராம சதுர்வேதிமங்கலமெனவும் கூறப்படும். உஉஅ.

தனிச்சயம்: இது பாண்டியன் இந்திரனைத்தனித்திருந்து சயித்த இடம்; மதுரைக்குமேற்கேயுள்ளது; திருப்புகழ்பெற்ற, மூருகக்கடவுளின் ஆலயத்தையுடையது; 'ஐயங்கோட்டைதனிச்சயம்' எனவழங்கும்; ககஙூ; "பச் சிமத்திசைக் குளுத்தமத் தனிசீசயத் திணிற்பிசைப் பெருமாளே" (திருப்புகழ், சுஉ0)

திருநெல்வேலி. கூ.

திருப்புத்தூர் கஉஙூ.

திருப்புறம்பயம். உகள.

திருப்பூவணம். கஙஎ, கசஙி.

திருமருகல். உஉக.

திருவாதவூர். சுஅ, அக.

திருவிடைமருதூர். இது, திருவிடைமருதெனவும் வழங்கும். கஎஙி.

திருவேடகம். கஙூ.

நரிக்குடி. இஃது ஆளுடை நாயகர் நரிகளைக் குதிரைகளாக்கிய இடம்; புதுக்கோட்டையைச்சார்ந்த மிழலைகாட்டிலுள்ளது. அக.

நாழனூர். மேகத்திற்குப் பூணைகொடுப்போர்யாரென்று பாண்டியன் கேட்டபொழுது, வந்த மற்றையோரைத் தள்ளிவிட்டு, 'நாம் மூன்' என்று சொல்லிக்கொண்டு பூணைகொடுத்தற்குவந்த உபகாரியினுடைய ஊர்; இது, களவேள்விகாட்டிலுள்ள ஏழூர்களுள் ஒன்று. கசுச.

பட்டமங்கலம். இது, சோமசுந்தரக்கடவுள் அட்டமாசித்தி அருளிய ஊர்; பட்டமங்கையெனவும் வழங்கும்; சிவகங்கையைச்சார்ந்தது; கஙூஉ.

பரசுராம சதுர்வேதிமங்கலம்-செல்லிநகர். உஉஅ.

பழமதுரை. இது கடல்கொள்ளவந்த மதுரை; இஃது இப்போதுள்ள மதுரைப்பதிக்குக் கிழக்கேயிருந்ததாகத் தெரிகின்றது; "தமிழொடுபிறந்து பழமதுரையில் வளர்ந்தகொடி"(மீஞட்சி. சப்பாணி. க - நி); பழமதுராபுரிமேடென்ற ஓரிடமும் பழமதுராமுனியென்ற ஒருமுனியின்கோயிலும் அங்கேயுண்டு. ஙூஉ.

பெருங்கிராமம். சோமசுந்தரக்கடவுள் விருத்தகுமார பாலராகியருளும்படி பத்திபுரிந்தொழுகிய மங்கை அவதரித்த ஊர். கoக,

மணலூர் - பாண்டியர்களின் பழைய இராசதானி; மணற்புரமெனவும் வழங்கும்; மதுரைக்குக் கிழக்கேயுள்ளது; பாரதசம்பு முதலியவற்றிற்கூறப்பெற்றது இதிலே; கஅஅ.

மாடக்குளக்கீழ்மதுரை. மாடக்குளமென்பது மதுரைக்கு மேற்கேயுள்ள தோரிடம்; இஃது ஒருதாலுகாவாகவும் இருந்தது; அவ்விடத்தில் ஒரு குளமுண்டு. 'மாடக்குளம் பெருஞலை மதுராபாழ்' என்ற ஒரு பழமொழி வழங்குகின்றது. ஙசு.

[எண்கள் பக்க எண்கள்.]

மானமங்கலம் - திருவாதவூருடைய முன்னோர்களிருந்தவூர்; இதனால், அவர்கள் மானமங்கலத்தாரென்று கூறப்படுவர்; இவ்வூர் மானபுரமெனவும் வழங்கும். சுக, அ0.

வடதிருவாலவாயி - இஃது, இடைக்காடருடைய பிணக்கைத் தீர்க்கும் பொருட்டுச் சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியிருந்த இடம்; இக்கோயில் இக்காலத்துப் பழையசொக்கநாதர் கோயிலென வழங்குகின்றது. இக.

வேதாரணியம். கஉ.

(உ)—குலங்கள்:

ஆதிமரபு. (சூரியகுலம்) உ, சுசு. ஆமாத்தியர்குலம். சுக.

உக்கிரகுலம். கஙி, உகசு.

கொந்தகக்குலம். மதுரைக்கு அக்னிமூலையில், சடநாழிகைவழித்தூரத்திற் கொந்தகையென்று ஒரூருண்டு; அதிற் கொந்தகவேளாளரென்று ஒரு வகுப்பினருளர். கசo.

சந்திரகுலம். உகசு.

சூத்திரகுலம். கஅக.

(ஊ)—சங்கப்புலவர்கள்:

இடைக்காடர். இவருடைய ஊர் மதுரைக்குத் தெற்கேயுள்ளதாகிய இடைக்காட்டூரென்று கூறுவதுண்டு. இo, இக.

இறையனார். இவர்பெயர் மதுரைப் பேராலவாயரெனவும் இந்நூலுள் வழங்கும். சக.

உருத்திரசன்மர். சகூ.

கபிலர். சுக, சo, இo, சுஅ.

நக்கீரர். இப்பெயர், 'கீரர்' எனவும் வழங்கும். சக.

பரணர். சுக, சo, இo.

மதுரைப்பேராலவாயார் - இறையனார். சக, சஅ.

[சங்கப்புலவர்கள்: ஆசிரியர், இயல்வாணர், கவிமன்னர், கவிவாணர், சான்றவர், தமிழ்வாணர், நன்புலோர், நாவலர், மாசிலாசிரியர், மூத்தமிழ்வாணரென இந்நூலுள்ளே பாராட்டிக் கூறப்படுகின்றனர்.]

(எ)—சங்கப்புலவர்களல்லாத தமிழ்ப்புலவர்கள்:

காரியார். கஅடி.

காரியார். கஅடி.

(ஏ)—சாதிகள்:

அதி - வலேச்சாதி; 'அதிபத்தர்' என் பதனுலுணர்க. இச, இடி.

பன்றிக்குறும்பர் பன்னிருவர். உகக.

வன்னியர். எ, கசo, உoஎ.

(ஐ)—சில பழையவழக்கங்கள்:

ஒருவர் ஒருசெய்தியைச் சொன்னவுடன் அதனைமறவாமலிருத்தற்கு ஆடையின்தலைப்பை முடிந்துகொள்ளுதல். கசுசு.

தும்மியவர்கள் சிவாயவென்றல். கஎக.

பரிகலசேடமுண்ணல். கஅக.

(எ)—தனிப்பாடல்கள்:

பாடல்கள்.			ஆக்கியோர்கள்.
"அங்கங்குலுங்க"	...	...	(சோமசுந்தரக்கடவுள்) சச.
"குன்றமெறிந்தாய்"	...	...	(நக்கீரர்) கசுக.
"கொங்குதேர்வாழ்க்கை"		...	(இறையனர் அல்லது மதுரைப்பேராலவாயார்) சகூ.
"சங்கறுப்பது"	...	...	(நக்கீரர்) சச.
"நெட்டிலையிருப்பை"	...	...	(கபிலர்) சுஅ.
"மதிமலிபுரிசை"	...	...	(சோமசுந்தரக்கடவுள்) கசுசு.

(அ)—தாண்டவம்:

சொக்கத்தாண்டவம். உஎ.

[எண்கள் பக்க எண்கள்.]

(க)—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பதிகங்கள் :

'சடையீர்' உஉக.
'செய்யனே' கஉசு.
'தளிரிளவளர்' கசுசு.
'தேனுறவண்ணி' கசுஅ.
'நீலமாமிடற்று' கஉஙி.
'பிரமனூர்' கஉஅ.
'போகமார்த்த' கசுசு.
'மங்கையர்க்கரசி' கஉஙி.
'மந்திரமாவது' கஉசு.
'மானினோர்விழி' கஉஅ.
'வாழ்கவந்தணர்' கசுஙி.
'வானிற்பொலி' கஉசு.
'வேதவேள்வியை' கசுஉ.
'வேயுறுதோளி' கஉசு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், அறங்காளைநாவினர், காழிநகர்ப்பெருமான், கொச்சைமுனி, கொச்சைப்பாலர், கௌணியர்கோன், சிரபுரப்பாலர், சோழியவைதிகச்சிறுவர் "வருவாளெருசோழியவைதிகனும்" (தக்க. கஅசு), ஞானபூரணர், ஞானமாமுனிவர், ஞானவேந்தர், நாஇகவிப்பெருமாள், பொய்யிலாயானை, மறைஞானி, வாதுசெய்தவாரணம், வைதிகவாரணம் என இந்நூலுட் பாராட்டிக் கூறப்படுகின்றனர்.

(கo)—திருவிளையாடற் சம்பந்தமான சில பழமொழிகள் முதலியன :

அடியார்க்குநல்லார்பத்திரம். கசஅ.

அழகியசொக்கனென்னும் தோலாக்கை. கசஅ.

ஆபத்துக்குத் தெய்வமேதுணை. (கருத்து) கசுஎ.

இலச்சினைவாயில். சுசு.

உடையவனறிந்திடாத சரக்கிலே. நிகு.

காமனுக்குக் கண்ணில்லே. கசுஙி.

கொல்லாளைப்படை எவர்க்கும் வெல்லாளைது. கஉo.

சடைகொடு வெருட்டல்வேண்டா. சஙி.

சொக்கன்றாசு. கo.

தன்னைக்கொல்லவந்ததாயினும் பசுவைக்கொல்லலாகாது. கஉo.

நெற்றிக்கண்காட்டினலும் குற்றம் குற்றமே. சஙி.

பட்டகுணம் சுட்டாலும்போகாது. கசஉ.

பாணர்தம்மடியார் பரதேசம்போனல் விறகையும் சுமந்துகொண்டுமீள வருவார். கசுஙி.

பார்ப்பான்முறையீடு பசுப்பாய்ச்சலோடுசரி அல்லது முட்டிப்பார்ப்பான் முறையீடு மொட்டைப்பசுவின் பாய்ச்சலொடு விட்டுப்போனது. கசக.

மன்னவனெப்படி மன்னுயிரப்படி. (கருத்து) உஙசு.

மின்னுமலிடிக்குமா. கஉஉ.

(கக)—தீர்த்தங்கள் :

எழுகடல்: ஒருதடாகம்; காஞ்சனமாலேக்காக வருவித்த ஏழுகடல்களும் தன்பால்வந்து அடங்கப்பெற்றமையின், இஃது இப்பெயர்பெற்றது; இதன் நிருதிமூலையில் மிகப் பழையதாகக் காஞ்சனமாலேகோயிலென்று இருக்கின்றது. சுக.

கங்கை. எ, கசஉ, கசஅ.

கம்பனை-ஒருநதி; இஃது இலங்கைத்தீவிற் சமனெளிமலேயிலிருந்து உண்டாவது; கஉ.

கல்லணை-ஒருநதி; இலங்கைத்தீவிற் சமனெளிமலேயிலிருந்து உண்டாவது; கஉ.

கன்னியாகுமரி. கசஉ. [கo.

காவணவாவி. சுo.

காவிரி. கஉசு.

கொண்டாழி - சேழனீன் உட்கொண்டி ஆழ்த்தியதோரோடை. எ, கஎo.

ளரசன் புயலே விலங்கிட்டோ னனலும் புனலு மியலறியும்
புரமூ ஈரை மானபுரம் புல்வாய் புலியின் மூலையுண்ணு
நரியும் பரியா நதியிதழி மணக்குங் கன்னி நன்னாடு. (ங)

வே று.

நலமுறு மொழிசேர் நல்ல பெருங்கினே யென்று நாடித்
தலமிசை யுயர்கு லத்துச் சார்ந்துகண் காண மிக்க
குலவனை யிடத்துத் தோன்றிக் குவலய முழுதும் பெற்ற
நிலவிய மரக தஞ்சேர் நித்திலம் பிறந்த நாடு. (ச)

தாரணி மவுலிக் கொற்றத் தசரதன் மகனர் வந்து
கூருகி ரெண்கு முன்னுக் குரக்கின வெள்ளங் கொண்டு
வாரிகீள் குலேப்ப டுத்தி வலியவா ளரக்கற் காய்ந்து
காரண வாணை யேத்தி யரும்பழி கழுவு நாடு. (ஞ)

பரிபடிந் துறைநெ ருங்குங் குடிபடும் பதிமென் றென்றல்
வரைபடுங் கரும்பு சாலி வயல்படு மணியும் பொன்னுந்
தரைபடுங் துங்கச் சங்கந் தமிழ்படுஞ் சார்ந்த செங்கட்
கரிபடுங் காடு வங்கக் கடல்படும் பவள முத்தம். (ட)

வே று.

நாளும் புதுநீர்த் தமிழ்நதிப்பா னாரந்த மஞ்ச ணெருங்கிஞ்சி
நீளுங் கருணை தாண்முரியக் கதலி புதைய நெடுங்கமுகின்
பாளை பலவின் கனிதெங்கம் பழம்பேபாய்ச் சாடி வீழ்த்தினையா
வாளை யாளை விழப்பாயும் வளவெண் டாள வயலெங்கும். (எ)

வேறு.

கஞ்சனையஞ் சனச்செங்கட் கருங்குழல்வெண் ணகைமடவார்
பஞ்சனையுஞ் சிறடியிற் பண்ணனூ புரமேங்க
வெஞ்சமரொற் பத்தனைகைச் சங்கனாகம் பலிநீடு
மஞ்சனையிஞ் சியையனையும் வண்டலைதண் டலையெங்கும். (அ)

வேறு.

அன்னந் திகழும் வயற்களத்து மலிநீர்ப் பொருனை நதிமுகத்தும்
பொன்னஞ் சங்கந் துகிர்முத்தம் படிவ தல்லாற் பொலிவோங்க
மின்னு நுசுப்புப் பாரவட மேரு மூலைமங் கையர்களத்துந்
துன்னுங் கரண மதிமுகத்தும் படுமொண் சங்கந் துகிர்முத்தம். (க)

வேறு.

வந்துதண் செழுநீர் வாவி யெழுந்தசெங் கழுநீர் விண்டு
வார்ந்தகண் ணீராற் சேறு படும்பழ னங்கண் மாதர்
சேந்தகுங் குமத்தின் விட்ட தெளிதரு பனிநீர் வெள்ளம்
பாய்ந்தசந் தனத்தாற் சேறு படுந்தன மலைத்த டங்கள். (கஎ)

மொழிதருங் குயில்கள் சாய நருமட மயில்கண் மொய்க்கும்
பொழிறருங் கரைக்கண் டெண்ணீர்ப் பொய்கையுண் மாலைப் போது
மூழுகுவான் செல்லு மாதர் முகத்தையுந் தனத்தை யுங்களி
டழகுதோய் பதும நாணி யலர்வுறு குவிவு றுவால். (கஅ)

வேறு.

கானெருங்கும் வளாவளங்க ளருமென்றுங் கடிக்குறிஞ்சி
யானெருங்கு மினியவளந் தருமென்று மணிமுல்லை
வானெருங்கும் பொழில்வளங்க ளருமென்றும் வயன்மருத
மீனெருங்குங் கடல்வளங்க ளருமென்றும் வியனெய்தல். (கஉ)

அடுகுறவர் திறம்பெருகு மலர்குறிஞ்சி யாளுயர்
குடிநெடுங்கும் படர்முல்லை கொழுமள்ளர் குழுத்துவன்றுங்
கடிமருதம் வினையளவர் கணநிறையுங் கழிநெய்தல்
படைமறவர் நிரம்புநெரி பரன்முரம்பு தரும்பாலை. (கஙு)

வேறு.

பண்டைநான் மறைக்கு மெட்டரப் பராபரன் மனிதர் போல
மண்டலத் திழிந்து வேந்தர் வல்லியை மணந்து கோலி
னெண்டரும் புவன மூன்று மிருந்தர சாளக் கண்டீர்
தண்டமிழ்ப் பாண்டி நாட்டின் றகவுண்டோ மற்றோர் நாடு. (கச)

திருநகரச்சிறப்பு.

மலரு மித்திரு நாட்டியல் வாணர்சொற் கோலா
லுலக னேத்தையு நிறுப்பமூன் வாடிடா தோங்கு
மலகில் வண்புக ழுடையது மதுரையாங் கதனே
யிலக யான்சிறி தறிந்தவா றியம்புவல் கேண்மின். (க)

ஊர்தொ றும்பெருங் கம்பலை யோங்கநீர் பரந்து
பார மீனுடு மீன்விழப் பாய்தரப் போதா
வாரம் வேங்கைகோங் ககிலெடுத் தினமணி கொழித்து
வாரி யெற்றிமுன் மதிட்படை பொருவது வைகை. (உ)

வேறு.

புகறற் கரிய வேதத்தின் பொருள்கட் கெல்லாம் பயனய
பகர்தற் கினிய வெந்தைபிரான் பஞ்சாக் கரம்போற் றினையொவ்வா
மகரீத் தமரப் பெருங்கடல்சூழ் வையத் தைந்து நிலத்தோங்கு
நகர்கட் கெல்லாம் பயனய நகர்பஞ் சவன்றன் மதுரைநகர். (ங)

நீள வளர்பொற் கோபுரம்வா னிலவும் வெள்ளி யொளிமன்ற
நாளு மமரர் வாழுமுயர் மேரு வனையை நலத்தோங்குங்
காள நிலவு மணிகண்டன் கயிலை மலையை நிகர்ப்பதலால்
வாள நிரையைப் புறக்கடலே நிகர்க்கு மெயிலும் வகுகிடங்கும். (ச)

சேமப் படுபொன் னகரென்னத் தெருவின் மடவார் விளையாடு
மேமச் சுண்ண நுண்கேளா லிலங்கு கலங்கொ ணிலமெங்குந்
தாமப் புயலே மாறுபடத் தருமச் சுருதிப் பெருவேள்வி
யோமப் புகையு மதிற்புகையு மொழியா வகல்வா னுழையெங்கும். (ஞ)

சுருதியோசை முழவோசை சுகங்கள் பூவைக் கரும்பொருள்கூ
ஞாசெ யோசை யியலிசைநீ டோசை யுழவ ருழவோசை
பொருவி லாலி பாயோசை பொழில்வா யலர்பாய் ஞிமிறோசை
வரிசை மாதர் சிலம்போசை வகுநீ சோசை தனின்மிகுமால். (ட)

வேறு.

தோரணவா யில்கள்விளங்குந் தொழுமன்ன ரிடுதிறைக
டோரணவீ நிகள்விளங்கும் திருமலிபல் விழாவளங்கள்
பூரணமா னிகைவிளங்கும் பொலன்கோடிதோய் மணிக்குடங்க
டோரணியோ தவைவிளங்குந் தருமநெறி தருமநெறி. (ண)

ஊர்மடக்கு. கடம்பவனம்.

வாவிமருப் பங்கயமா மறுகுமருப் பங்கயமாந்
தாவிவருங் கொண்டலெலியுந் தண்டலெலியுங் கொண்டலெலியும்
பூவையர்பொற் படமலெலியும் புணரிஞெஞர் படமலெலியும்
பாவறிமாக் கடம்பவனம் பழிபுகழ்மாக் கடம்பவனம். (அ)

கூடல். வேறு.

வயங்கொள்வார் சாலிச் சூடும் வளர்ந்துபோய் வானைச் சூடு
மியைந்தமீ ஞகத் தென்று மிலங்குமீ ஞகத் தென்றும்
பயங்கொளா காயச் செல்லும் பரந்துகா வேறச் செல்லும்
வியந்தநான் மேகக் கூடல் விளங்குநான் மாடக் கூடல். (க)

மதுரை. வேறு.

தும்பைமலர்த் தொடைமுடிக்குஞ் சூரன்வீனைப் பலகமுடிக்கும்
வம்பலர்மட் டனையவிழும் வண்டிறவுட் டனையவிழு
மம்புனற்கே கயமாடி மணிபொழிற்கே கயமாடி
மெம்பெருமக் கடமதுரை யிலங்குமலர்க் கடமதுரை. (கo)

ஆலவாய். வேறு.

பாக மங்கய ஞெக்கியார் பரிவு மங்கய ஞெக்கியார்
மோக நந்துற வன்பிஞன் முனிவர் நந்துற வன்பிஞன்
மாக மொன்றிய வாய்மையால் வந்தி லங்கிய வாய்மையா
லாக மும்பக ராலவா யமுத மன்றிரு வாலவாய். (கக)

கன்னி. வேறு.

ஈசனூர் மதிழ்ந்த தான மெனவினை யிருள்வா ராம
லாசினந் தாவி ளக்கிட் டந்தகன் றிசைகின் றேத்தித்
தேசுடைக் கருங்கண் முத்த வெண்ணகைச் செவ்வாய்ப் பச்சைக்
காய்சின மயிடற் காய்ந்த கன்னிமுன் காக்கு மூதூர். (கஉ)

கரியமால்.

நினையவெம் பழவ நீக்கும் பதியென நிலத்தி ழிந்தாங்
கினமலி யரக்கற் காய்ந்து சூடதிசை யேத்தி நின்று
மனமுடை வியாழத் தோடி மறைவழக் கன்று வென்ற
கனகவெண் சங்கச் செங்கைக் கரியமால் காக்கு மூதூர். (கங)

காளி.

காரிய வுலகுக் கெல்லாங் காரண நகரென் றெண்ணிப்
பேரியல் வடபா லெல்லைப் பிறங்கவந் திருந்து போற்றித்
தாருகற் காய்ந்த சீர்த்தித் தலம்புகழ் வெற்றிக் கொற்றச்
சூருடைக் காளி நாமச் செல்விமுன் காக்கு மூதூர். (கச)

ஆலவாய்.

தொன்னில மாம டந்தை தோன்றமு னெவர்க்கு முன்னந்
தன்னுறு நிசைக்கட் டோன்று மாலவாய்த் தரும மூர்த்தி
யெங்கிலத் தினுமு யர்ந்த திங்கில மென்று தோன்ற
மன்னுமைக் குணைத்து மற்றை மாநிரங் காக்கு மூதூர். (உடு)

வேறு.

பூழி யகழ்ந்த குழிநிரப்பும் புலவ ரமல னெடுமலேவோ
ராழி யேழு மொருதடத்தி லமரு மதுவோ வுலகேழுஞ்
சூழு மூன்று மூலையிருமை யொருபெண் பிறத்து சோதியுடன்
வாழு மதுரை வளங்கூற யாமார் மறந்து மாநிலத்தே. (உக)

வேறு.

முன்னெயெண் டிசைக்க யங்க டாங்கெடு முதுபே ரண்ட
மன்னுமிக் கிரனூர் சாத்தும் வானிழி விமான மாருந்
தென்னவன் சிவனே யாருஞ் சிவலோக மதுரை யாரு
முன்னரு மனிதர் மூற்றுங் கணங்களா மோருங் காலே. (உஎ)

வேறு.

ஈனமிலா விக்கதரி தன்னு ளெக்தை யிலங்குபுக முறுபத்து ஞான்குண் டோதின், மீனவர்கோன் குலஞ்செய்த தவத்தி னுனு மேதினிமான் முயன்ற வருந் தவத்தி னுனு, ஞானமுனி வர்கள்கேண்மி னுகமொன் றிற்கு ஞானுன்கு ஞானுன்கா நூன்ஞு கத்து, மானவலவ தமையுரைப்ப லகாதி மும்மை யகலாத வல்வினைக ளகல வென்றே. (உஅ)

ஆகத்திருவிருத்தம் - அஉ.

நூற்பயன்.

இனிமைசேர் பயன்வி ளம்பி னிவ்வவ னிக்கண் மிக்க
புனிதபங் கயமி ரண்டிற் புரிவுள மாந்த ருள்ளப்
பனிகொள்பங் கயத்தை மற்றைப் பங்கய மலர்த்து கின்ற
தினகரன் போல லர்த்துந் திருவிளை யாடற் பானு. (க)

வேறு.

தருமம் வாய்மை தவங்குலங் கல்விசேர்
பெருமை செல்வங் திறம்பிற வாநெறி
யரிய புத்தி யருள்சிவ பத்திமற்
றுரிய யாவையு மெய்துவ ருண்மையால். (உ)

கருது காதல ரெய்துவர் கன்னியர்
சுருதி மைந்தர்ப் பெறுவர்கள் சூலியர்
வருபி றப்பி னமங்கல மங்கைய
ரருள்ப டைத்த சுமங்கலி யாவர்கள். (ங)

காரி ருட்டிடி துந்நிமித் தங்கடல்
வாரி வெய்ய கனவழன் மாமருத்
தோரை நாட்டிநி வார முடற்குறை
சோரர் வஞ்சனை நஞ்சல கைச்சுழல். (ச)

உழுவை வேழ மரியுர காதிகள்
வழியின் வெவ்விடை யூறுமற் றென்செயுஞ்
செழியர் நாதர் திருவிளை யாடலே
யெழுதக் கேட்க நினைக்க வியம்பவே. (ஞ)

வாத பித்தங் கவமுதல் வல்வினை
வேத னைக்குள் விழார்நம ஞர்புகார்
நீத கற்றுந் திருவிளை யாடலே
யோதி யத்த முணர்ந்த பெருந்தவர். (ட)

ஊட்டி நாளிற் றொடங்கி யொழிவற
வீட்டும் வெய்ய வினைகளி யாவையுஞ்
சேட்ட நாதன் றிருவிளை யாடலைக்
கேட்ட காலையி னீங்கு மிளரவே. (ண)

தாங்க ருஞ்சம ரத்திர சத்திர
நீங்கு நீங்கருஞ் செல்வ நிரந்தர
மோங்கு மோங்கலின் வந்தல கின்றவள்
பாங்க ளர்விளை யாடல் பகரவே. (த)

பாத கங்க ளொழியும் பகையுகு
மேத கீங்கு மினிமை தரும்புகழ்
மாது சேருமற் றேதினி வேண்டுமென்
றோதி மாமுனி தோன்ற வுரைசெய்வான். (ந)

ஆகத்திருவிருத்தம் - கூக.

க.—இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடல்.

பொருந்திய வொழுக்கத் தானும் பொய்யிலா வாய்மை யானுந்
திருந்திய கல்வி யானுந் தீதறு புகழி னானும்
பெருந்திறல் வலியி னானும் பேரரு ளானு மிக்க
வருந்தவ முனிவர் கேட்ப வகத்திய னருளிச் செய்வான்.* (க)

---

* இச்செய்யுள் கையெழுத்துப் பிரதிகளிலெல்லாம் ஒவ்வொரு திருவிளையாடல்களின் முதலிலும் எழுதப்பெற்றுள்ளது.

ஆதிநான் மருப்பி யானை யமர்கோன் முன்னோர் கால
மேதகு வீர மிக்க விருத்திரா சுரனைக் கொன்ற
வோதரும் பழியா லஞ்சி யொழிக்குமா றெங்ங னென்றென்
றேதமின் முனிவர் வரனேர் குருவர னிடத்து சாத்தான். (உ).

மெய்ப்படத் தேர்ந்தி யாரும் விளம்பிய வாறு கேட்டு
வைப்புறு நான்கு கூரு வரைத்தெமக் களிமி னென்ற
வொப்பரு நீரின் மண்ணின் மரத்தினி லுவமை யில்லாச்
செப்பிளங் கொங்கை மாதர் திறத்தினி னீக்க வாங்கு (ரு)

நீரிடை நுகாய தாயு நிலத்திடை யுவர தாயும்
பாரிய மரங்க டம்முட் பாய்தரு பிசின தாயும்
வாரணி முலையார் தேத்து மலரெனுங் குருதி யாயும்
போ்பட நீங்கக் கண்டு பெருநல மவருக் கீந்தார். (ச)

மருவலீ் ததனூ நீர்க்குக் கழுவிய மலஞ்சா ராமை
லிரிதரு நிலத்திற் கங்க மேவிய வடுவுமெத்த
ஓரவமர் மரத்திற் கென்றுங் குறைத்திடக் கினைத்த லோங்குங்
கருவினு மடமா தர்க்குத் தணிவிலாக் காம வேட்கை. (இ)

சமீயமா முனிவர் போற்றத் தானவர் வழுத்த மாத
ரிமையவர் சுவலி,சித்தா மணிதொழ விருடி ருங்குங்
கமலமுஞ் சங்கும் வாழ்த்தக் கற்பகச் சோலை சூழ
லமர்கோ னிருந்தான் வந்தாங் கரிகொளா சனத்தி லங்க. (க)

கூறரும் பேர வைக்க ணரியபல் கோலங் கொண்டு
தேறுத லுடன யர்த்து தேவகன் னியர்கள் பாடிப்
பேறுடை நிருத்தஞ் செய்யச் சிலரைதப் பெரிதும் போற்றி
வேறிலை கூத்துப் போல மெய்யுளங் கவர்வ தென்னூர். (எ)

மன்றுறு மலையின் மற்று நின்றவர் வணங்கி வாழ்த்தி
யின்றிது போலொன் றில்லை யென்றுமுன் னவில்வ தென்னை
யொன்றிய மனமுங் கண்ணுங் களிதர வுவமை யில்லா
வென்றிகொ ணலம்ப யப்ப நிலங்குமா வேட்டை யென்னூர். (அ)

அங்கது கேட்டு வேட்ட வமரர்கோன் விரைவி னந்தப்
பாங்குடை வேட்டைக் கான காட்டினைப் பகரு மென்ன
வோங்கிய வலையின் மிக்க வுத்தமர் கற்ப கப்பூர்
தேங்கமழ் தொடையாய் மண்ணிற் சிறந்தபல் வனங்க டம்முள். (கூ)

நீண்டகன் னலங்க ணல்கு நீக்கரும் பாவ நீக்கு
மேண்டரூ மவனிக் கெல்லா முயர்புள தியானை கேழல்
காண்டகு மடங்க லெண்கு கலியுழை யுழுவை மற்று
மீண்டிய வனங்க டம்ப வனமலா லில்லை யென்னூர். (கூ)

வேறு.

ஆன செய்தி சொல்லு முன்ன நிர்ந்தெ ழுந்து வாசவ
னீன மின்றி வில்லெ டுத்தி லங்கு கச்ச ணிந்துவெஞ்
சேனை சூழ வாழி சூழ்ந்தி றந்த மண்ணி ழிந்துதா
வானெ ருங்கு நீள்க டம்ப மாவ னத்து வந்தனன். (கக)

காடி காவல் செய்து வாரொ முக்கி யெங்க ணுங்கலந்
தோடி நாய்வி டுத்த டிச்சு வட்டி னெற்றி யொல்லெ யெண்
மாடி கண்வ லெத்தொ டக்கி னுல்வ னெத்தொ லிப்பமுன்
கூடி வேறு வேறு நேர்கு றித்தெ ழுந்த கோடிமா. (கஉ)

ஏன மெய்தி யானெ யெய்தி ரும்பு லிக்கு ழாமெய்தொண்
கான மேதி யெய்து வெங்க லெக்க ணங்க ளெய்துமற்
றூன மாம டங்க லெய்த டர்ந்து மேலெ மூந்துபாய்
மானி னங்க ளெய்து வாச வன்ம னங்க ளித்தனன். (கங)

வேறு.

நெறிவசத் தானு முன்னெ நிறைதவத் தானும் வென்றிக்
கறைகெழு குலிச மன்னுங் கையிலா கவத்தி னோடுந்
திறமொடு வடபால் விட்டுத் தென்றிசை நோக்கிச் செல்ல,
மறுவற பரம ஞான மனத்தகத் துதித்த தன்றே. (கச)

இன்றிதற் கேது வேதோ விவ்வனத் தணையா முன்னங்
கொன்றிடக் கூடா துள்ளங் கொடியபல் விலங்கு கிற்ப
வென்றிகொள் வேட்டைக் காட்டில் விசேடமுண் டறிதல் வேண்டு
மொன்றிய செயல்வே றுன துரைசெயு மும்ப ரென்றான். (கடு)

அவ்வுரை கேட்ட தேவ ரறிகுவ மென்னப் போந்து
வெவ்வன மெங்குந் தேடி மேதினி தோன்று முன்னஞ்
செவ்வியின் முனைத்தெ ழுந்த திப்பிய விலிங்கங் கண்டு
மெய்விதிர்ப் போடுஞ் சென்று விளம்புவார் துளங்க வாங்கு. (கக)

கண்டனம் பெரிதா யாழ்ந்து தெளிபுன லுடைத்தாய்க் கான
வண்டினை பொழில்சூழ் வாவி யதன்வட குடதி ரத்து
முண்டக வயன்மால் காணு முனைத்தெழு சிவலிங் கத்தைப்
பண்டைமா தவத்தா லென்று பரிவொடும் பணிந்து சொன்னார் (கஎ)

இந்திரன் கேளா முன்ன ரினிமைகூர்ந் தவர்முன் னுக
வந்துசந் நாகம் வாங்கி வாவிகண் டதிச யித்துச்
சந்தமார் நன்னீ ராடிச் சடங்குகண் முடித்துப் பாங்க
ரந்தரா யகனைக் கண்டா னுலித்தான் மனமுற் றுடி. (கஅ)

அடைந்தவர் பாவ நீக்கு மையனே காணப் பெற்றேன்
மடங்கலெண் குழுவை கேழன் மாமத மாக்கண் மற்று
மிடைந்திடுங் கொடிய காட்டின் மெல்லிய லொடுந்த னித்தி
விடந்தனி லிருந்தா யென்ன புண்ணியஞ் செய்த தம்மண். (கக)

அன்புற விறைஞ்சி நின்னை யருச்சிப்பான் விரும்பா நின்றே
னன்புனற் கையந்த செவ்வி நறுமலர் காட்டு கென்றுய்ந்
தின்பமே தருங்கா னத்தி லெங்களு நேடிக் காணுன்
துன்பமுற் றரசே யானென் செய்குவ னெனச்சோ கித்தான். (உ0)

ஆகிலான் கண்டு நீண்ட வாவியெங் கணுமி லங்கப்
பேசரும் வேட்டை யாட்டிற் பெருவிருப் பொழிந்து நம்மைப்
பூசைசெய் வதற்கே நேர்ந்தா னென்றருள் புரிந்து சீத
வாசமா நீழக் கஞ்சம் வருவித்தா னலர்வித் தாங்கு. (உக)

காவலன் வியந்து பல்காற் கண்டகண் டகிச யித்துப்
பூவினை யடைவிற் கொய்து புளகித்த தோடுங் கண்ணீர்
மேவமெய் கம்பித் தன்பின் வெள்ளத்து மூழ்கி மிக்க
தேவதே வனைப்பூ சித்தான் விதிப்படி சிறந்த நல்கி. (உஉ)

தேசுடை மடவாள் கொங்கை தீண்டிடச் சிவக்கு மேனி
வீசிய காற்றுல் வெய்ய வெயிலினு னெவ தேயென்
றுசிலா வுயர்வி மானஞ் சாத்துவா னுசை கூர்ந்து
மாசிலான் வருந்தக் கண்டு வணங்கியே தெய்வத் தச்சன். (உங)

விருத்திரா சுரனைக் கொன்ற வெம்பழி தவிர்ப்பா னெண்ணித்
திருத்துபல் விமானந் தம்மூட் டெளிதரு சிற்ப கன்னூற்
பொருத்தமுற் றளவி றெய்வப் பொலிவொடுங் கூடி நீடி
யிருப்பதோர் விமான முண்டாண் டிறைவவென் றிலங்கச் சொன்னன். (உச)

மெய்ப்படு சிற்பம் வல்ல வுத்தம விளைந்து நீபோ
யொப்பில்காஞ் சனவி மான மும்பலிற் கொணர்தி யென்ன
வப்பொழு தவன்போ யாசை யானையிற் கொணர்ந்து காட்டத்
தப்பிலா விதியி னேங்கச் சாத்திஞன் குளிர்வி மானம். (உடு)

சிக்தைவாழ்ந் திறைஞ்சி யேத்திச் சிறந்தசெய் தியாரும் போற்ற
வந்தகீ டால யத்துக் கணியுற வியைந்தி ருந்த
சுந்தர வடிவங் கண்டே சொக்கெனு நாம மிக்க
வெக்தையே னினக்கல் லாதோர் தேவர்க்கு மியையா தென்றுன். (உசு)

என்றுமென் பதிக்கோர் குற்ற மெய்திடா வண்ணங் காத்தி
வென்றிகொள் வீர மிக்க விருத்திரா சுரனே யன்று
கொன்றவெம் பாவ நான்கு கூறுசெய் தொழித்தேன் சேட
னின்றன வுண்டே னீக்கி யருளுதி நிமல னென்ன. (உஎ)

இறையவன் முறுவல் கூரா வறிவுடை யிமையோர் கோவே
செறிதரு புவியின் மாந்தர் செய்ததீ வினைகள் காணு
றறியினுஞ் சிறிதே யாக வறைகுவ ரதிக கர்ந்தாய்
றிறனுடை யவனைக் கொன்ற பாவமார் தீர்க்க வல்லார். (உஅ)

ஆயினும் வேட்டை யாட்டி லினத்தலி னனு மாரா
நேயமூற் றஞ்சி ரும்மை நெறிப்படி வழுத்த லானுங்
காய்வெயிற் குயர்வி மானங் கற்பித்த லானுங் தீராத்
தீயவெம் பாவந் தீர்ந்த தூர்க்குமோர் தீங்கு மின்றே. (உக)

என்றருள் செய்யக் கேட்ட விந்திரன் வீழ்ந்தி றைஞ்சி
நின்றடி பல்காற் போற்றி நீக்கரும் பழியை நீக்கி
யொன்றிய தூய்மை பெற்றே னுய்ந்தன னென்றென் னூர்த்துச்
சென்றனன் றன்றே யத்துச் சேனையுந் தானும் வாழ்ந்து. (ஙo)

வேறு.

ஆழ்ந்தசெழுந் தடம்பொற்ரு மரைமலர வவனிமிசை
வாய்ந்தவுயர் பெயர்பொற்ரு மரையென்ன மருவியதாற்
சேர்ந்ததொரு வாரத்துச் சென்றெவரா யினுமின்றுந்
தோய்ந்துதிளைத் தாடுவர் பலஞ்சொல்லிற் றீரலிவின்றே. (ஙக)

வேறு.

கடம்பமா வனத்தி லங்குங் கனகமோ கனக வாவி
யடைந்தவர் யாவ ரேனு மாதரத் தகாத ரத்தித்
தடம்படு கங்கை நீரிற் புனிதமாந் தட்ப நீருந்
தொடுங்கையோர் பவந்தீ யென்னச் சுடுமெனச் சுருதி சொல்லும். (ஙஉ)

வேறு.

இப்பொழுது மமரேச னினிமையின்வந் தமரரொடுஞ்
செப்பருந்தன் மாதரொடுஞ் சித்திரைச்சித் திரைத்தினத்துத்
தப்பறவேண் டியவரங்க டருந்தடத்துக் குடைந்தாடி
யொப்பிலழ கனைப்பணிவ னெனவுரைப்ப ருயர்ந்தோர்கள். (ஙங)

வேறு.

காவமர் கற்பு கஞ்சேர் கடிமலர் மழைபொ ழிந்து
தாவிறுந் திபிக ளார்த்துத் தத்தமங் கையர்க ளோடு
மூவரும் விசும்பி லுள்ள மூப்பத்து மூன்று கோடி
தேவருந் துதித்தா ரீசன் றிருவிளை யாடல் கண்டு. (ஙச)

வேறு.

ஓதரிய வுத்தரமா புராணந் தன்னு ளுண்மைதரு சாரசமுச் சயத்து
முன்ன, மேதகுநன் கதைவிரிவிற் கண்டெ னக்கு வியாதவான் மீகியெச்சன்

---

* கையெழுத்துப்பிரதிகளிலெல்லாம், இந்த, "காவமர்" என்னும் செய்யுள்முதலியமூன்றும் ஒவ்வொருதிருவிளையாடலின் இறுதியிலும் எழுதப்பெற்றுள்ளன.

சொன்ன வெண்ணெண், டதில்விளை யாடல்களிற் பிறங்கு மிந்தத் திருவி ளையா டலின்பரப்பைச் சுருக்கி யின்று, போதமுற நமக்குரைத்தேன் யானுஞ் சொக்கன் புகழினையார் கரைகண்டு புகலு வாரே. (௬)

வே று.

தெறியுளீ ரென்னைக் கேட்ட முனிவர்க ணிறைவு கூர்ந்திங்
குறுமதி சயமுடைத்தா மூயர்கதை விளங்கக் கேட்டே
மறுவிலா வறிவான் மிக்க மலயமா முனிவ நீதி
யிறைவினை யாட நம்மு ளின்னுமொன் றுரைத்தி யென்றார். (௭)

ஆகத்திருவிருத்தம் - ௧௨௬.

உ.—வெள்ளானைக்குச் சாபந்தீர்த்த திருவிளையாடல்.

முன்னெருகா ழகனையிற் றிரன்றன் பாவ முழுதும்விட வருச்சித்த லிசேடஞ் சொல்ல, மன்னயிரா வதங்கேட்டுக காண்பான் வேட்டு மலர்க்க டம்ப வனத்தருளால் வந்து புக்குப், பொன்னிதழ்ச்செங் கமலமலர்த் தடத்தை யுற்றதன் பொருவிலருங் கிளைகளினுற் பரிக்கப்பட்ட, மின்னுயர்பே ராலயத்து விரும்பி வாழு மெய்யனையும் பொய்யறக்கண் டிறைஞ்சிற் றன்றே. (௧)

சூறுகுமுனந் தானவிசே டத்தா னெஞ்சிற் கொளுவுமுயர் ஞானங்கண் டதிச யித்து, நிறைவினொடு தன்சாப நீங்கு சொல்லு நீடியவெண் டிசை யுறமென் கினியி னுள்ளோ, ருறவுதர வருமுன்னைத் தவத்தி னுலே யுயர் புடைகின் றிருக்கோயி றன்னை நீங்கா, திறையவனே பரித்தருகு நிற்கப் பெற் றார் யான் பெறுமா றெவ்வாறென் றியம்பக் கேட்டி. (௨)

கொந்தவிழுந் தும்பையிபக் கடவு ளேகின் கோச்சீலம் போன்றிருந்த துன்றன் சில, மிந்திரனே நமக்குரிய பத்தன் புத்தி யினிமையுட னவன் றன்னை நீங்கா தென்றும், கந்தமுறப் பரிப்பதே நன்மை யெம்பாற் காமுற வேண் டியவரங்கள் வாங்கிக் கொள்ளென், றெந்தைபிரா னுரைப்பநனி விருப்ப மெய்தி யெள்ளலற வெள்ளையிப மியம்புமன்றே. (௩)

கேட்டருளாய் பசுபதியே தேவர் தேவே கிளரொளியே வளர்கருணைக் குன்றே யென்றன், மாட்டகலா திருப்பதொரு கதையி யம்ப வானவர்கோன் மனமகிழ்ந்து முன்ன மேமா, வேட்டையினு லவணிமிசை யிழிந்து மீண்டு மேலுலகிற் செலுங்காலை மிக்க வான், நாட்டவரு முனிவர்களும் போற்றி செய்து நயந்தினிய வுபகார நல்கி னார்கள். (௪)

வேறு.

மூந்துற வவற்றை யுற்ற மூறைமையின் வாங்கி யாங்கு
நிந்தியா தடைவிற் சூடக் கண்டுள நேசங் கூர்ந்து
சீர்த்தர வடிவ மிக்க துருவாச முனிவ ஞஞ்ஞ்
சிந்தைசெய் திறைஞ்சுந் தெய்வஞ் சூடிய சேட மென்று. (இ)

பங்கய நறும்பூ வொன்றும் பசுந்துள வத்தா ரொன்றுஞ்
செங்கையி னல்க வாங்கிச் செழும்பொழிற் கற்ப கப்பூந்
தொங்கல்சேர் முடியிற் சூடா திகழ்ந்துமுன் ரூன்றி நின்ற
மங்கலம் பொலியு மென்றன் மத்தக மீதி றிந்தான். (சு)

யானுமுன் செய்த பொல்லா விருங்கொடு வினையி ஞனு
மானவெம் மதத்தி ஞனு மடியினிற் றுகைத்தேன் வாங்கிப்.
பான்மைசேர் முனிவன் கண்டு பயத்தொடுங் கோபத் தோடுந்
தானவை கடிதெ டுத்துத் தன்றனி முடியிற் சூடி. (எ)

இன்றுமா முனிவர் வானே ரீந்திடு முபகா ரத்தை
நன்றென விரும்பி யான்மு னல்கிய வுபகா ரத்தை
யொன்றிய முடியிற் சூடா தொள்ளிய வல்ல வென்று
வென்றியி னெவருங் காண விலக்கிய வாற தென்னை. (அ)

ஆவியிற் சிறந்த வற்றை யவமதி செய்த தாலிப்
பூவல யத்துட் டோன்றும் பூழியன் நடக்கை தன்னின்
மேவிய வினையி ஞலே மேன்முடி பிளக்க மிக்க
தேவர்கோ னென்று ணென்று செப்பின னவற்குச் சாபம். (கூ)

பொன்னகர் மன்னி வாழும் புரந்தரன் றன்னைத் தாங்கு
கின்னுயர் பெருமை விட்டு நிலத்திழிந் தழல்வா யாக
தன்னிய வனங்க டோறுஞ் சுழன்றுகாட் டியானே யாகி
யுன்னவ மதியி ஞலென் றுரைத்தன னெனக்குச் சாபம். (கo)

இப்படிச் சபிக்கக் கண்ட விருடிக ளிமையோர் நொந்தாங்
கொப்பிலா முனியைப் போற்றி யுயர்தரு தேவர் கோமான்
செப்பருந் தெய்வ யானை செய்பிழை பொறுத்தின் றிட்ட
தப்பறு பெருஞ்சா பத்தைத் தணியெனத் தணிந்து சிற்றம். (கக)

மண்டனிற் சுந்த ரேசன் பத்தனு மாற ஞலே
யொண்டொடை மவுலி பேத மொருகாலத் துண்டாய் மீண்டு
விண்டலத் துயர்வு பெற்று மேலர சாடி யென்று
கொண்டல்வா கனனுக் கன்பிற் கொடுத்தனன் பிறிது சாபம். (கஉ)

பொருந்தவேர் க்ஷத் தோர்பாற் புவிமிற்காட் டியானே யாகி
வரந்தரும் பெருங்க டம்ப வனத்துறை யிறைவையக் கண்டவ்

வருந்தவ னருளி னுலே யலைவற நீயு முன்றன்
றரம்பெறக் கடவை யென்று தந்தனன் பிறிது சாபம். (கஈ)

வே று.

பேறுறவிந் நெறிசபித்துப் போய பின்னர்ப் பிழையாம லன்றிட்ட சா
பந் தன்ன, ஐறுமத விகாரத்தான் மயங்கி யானு மும்பர்கோ னேயுமுயர்ந்த
துறக்கத் தோங்குங், கூறருகற் பகப்பொழில்க டமையும்விட்டுக் குவலயத்தி
லிழிந்துதர நெருப்பா லெந்து, தூறுபடு காகெளு நாடுங் குன்றுஞ் சுழன்று
முன்று நிரிந்தனன்வெந் துயரங் கூர்ந்தே. (கச)

வே று.

வந்தனே வணங்கப் பெற்றேன் மண்மிசை யிழிந்த தாலென்
வெந்துயர்ச் சாபந் தன்னை விடுவித்து விடாது நாளு
மிந்திர விமானந் தாங்கு மியானைகண் மீது வைத்த
சிந்தைகூர் தருபே ரன்பை கல்குக நிறியேற் கென்ன. (கடு)

ஒன்றிய சாப நீக்கி யுயர்புதந் தோமு னக்கே
யின்றுநன் சூண்டா நம்மை யினிமையிற் பூசை செய்து
சென்றுவா னகத்தெ மக்குச் சிறப்புடை விமானந் தந்த
வென்றிகொ ளமரர் கோவை விடாதுவா ழெனந வின்ரூன். (கக)

அங்கருள் புரிய்க் ஃண்டே யகமகிழ்ந் தடியே னுய்ந்தேன்
சங்கர வென்று வாழ்த்தித் தடத்துநீ ராட்டிச் செம்பொற்
பங்கயப் போது சூட்டிப் பூசித்துப் பழுது நீங்கி
யெங்களும் பரவச் சென்ற திந்திர வுலகத் தியானே. (கள)

ஆகத்திருவிருத்தம் - கசச.

கூ.—தடாதகையாரவதரித்த திருவிளையாடல்.

மாசின் மதுரைப் பெரும்பதியின் மலயத் துவச னெனுமாறன்
நேசம் முழுது மனுவென்னச் செங்கோல் செலுத்துங் காலத்தங்
காசின் மனிதர் முன்புலகா னரசர் தொகுதி மறந்தறஞ்சேர்
நேசம் முடைய பேரரசி னிழலே நிழலென் றினிதிருந்தார். (க)

மாலைக் குமர வேளென்ன வயங்கு மிளமைப் பருவத்தா
லேலத் திமிரக் குழற்காவி விலங்கு மடவார் தமைவைத்துக்
கோலக் களபத் தனதடத்துட் குளித்துச் செவ்வா யமுதுண்டு
சாலப் பரிந்தா னருட்சொக்கன் றனையே சாலுந் தகைமையினுன். (உ)

---

* 'மும்மூலைத்தடாதகையார்பிறந்த திருவிளையாடல்' எனவும் பிரதி பேத முண்டு.

ஏத மகல வித்தகவி னிருக்கு நாளி னங்குலத்தோர்
நீதி மாதைக் கொள்வலென நினைந்தி ரைந்து பொருத்தமுற
வாதி மரபின் வரும்பெரிய வரசர் குலத்தி லவதரித்த
சோதி வடிவ மங்கைதனைச் சுருதி விதியின் மணம்புணர்ந்தான். (ரு)

மற்ற மடவார் தமைவிட்டு மன்னர் குடியிற் பிறந்தாண்மே
லுற்ற வவர்பா லன்பெல்லா மொருங்கே வைத்து நனிவாழ்வோன்
சுற்றும் பெரிய விதிவசத்தாற் றுணைசேர் புதல்வ னிலாமையினுன்
முற்றுஞ் சடையான் றனைநினைந்து முயன்ரு ன்பவங்க ணெடுங்காலம். (ச)

ஆன்ற வரிய பேரறங்க ளரிவை யுடனே செயக்கண்டாண்
டோன்ற விளையா டலிலிரும்பி யெழிலார் சொக்க னருள்கூர்ந்து
மூன்று மூலியா லொருமகவை யளிப்ப முதிரு மதியென்னத்
தோன்றி யுலகு பதினுலுந் துதிப்ப வளர்ந்து துலங்கியதால். (ஙி)

வேறு.

சிதைவிலா விருப்ப மிக்க தேவியோ டினிய தென்ன
னதிசய முற்று மற்றை யதிகமா மூலையி னேக்கண்
டிதுதகு வதுவோ வித்த வடிவினுக் கெற்தா யந்தி
மதிபொதி சடையா யென்று மலரணைத் துயிலுங் காலை. (சு)

இணையிலான் கனவிற் சென்றோர் மாதிவ ளெனக்கொள் ளாது
தணிதிறீ யேத மந்தத் தனமுமோர் வழியி னீங்கித்
துணையுல காளுமென்னத் துயிலுணர்ந் ததிச யித்து
மணிமுடி யரசன் செய்தி மந்திரி கட்குச் சொன்னான். (எ)

ஐயமில் கணிதம் வல்லா னவரிலோ ரமைச்சன் போற்றிப்
பொய்யல வுதித்த கால பலத்தினுற் புவியை யாளுந்
தையலுக் கியைந்த நாமந் தடாதகை மற்றோர் பிள்ளா
மெய்யுறு கணவற் கண்டான் மிகைமூலை மறையு மென்றான். (அ)

இந்தநல் லுரைபொய் யாதென் றியைந்தவ ரியம்ப மன்னன்
செந்தமிழ் முத்தட் சொக்கன் செயலெனத் தெளிந்து தொல்லைத்
தந்திர நெறியி னுமந் தடாதகை யென்று சாத்திச்
சிந்தையா குலங்க ளார்ந்து செலுத்தினுன் செங்கோ லோங்க. (கூ)

மையமர் விழிவா ளென்ன மதிமூகம் வனச மென்ன
வையநுண் ணிடைபொய் யென்ன வணிமூலை மலய மென்னக்
செய்யவாய்க் கரிய கூந்தற் சிற்றடிப் பெரிய வல்குற்
றையலாள் வளர்ந்தாள் வாரித் தலமெலாம் வளர வாங்கு. (கo)

பரிவினெண் ணிறந்த கோடிப் பாங்கியர் சூழச் செம்பொ
னரியகத் துக்கங் ழுங்கோ டம்மதி யூசன் மற்று

மூரியன பயின்று கன்னி யோங்குமா டத்தி ருந்து
கரிபரி யேறி முற்றக் கற்றனள் கலைகண் முற்றும். (கச)

ஒன்றிய வடிவி னனு முதித்தகன் முருத்தத் தானும்
வன்றிறல் வலியி னனு மகவுவே றிலாமை யானு
மன்றினர் சிங்கஞ் சிங்கா தனத்திடை யிருத்தி யன்னு
டன்றணி முடியிற் செம்பொற் றனிமணி முடிக வித்தான். (கஉ)

பொருக்துபே ரறங்கள் செய்து போற்றரு மரசர் போற்ற
விருந்தர சுரிமை யெல்லா மிவள்வயிற் கொடுத்திங் கென்ன
வருந்தவஞ் செய்தே னிந்த வணங்கினைப் பெறுதற் கென்று
பரிந்துயர் வான நாடு சேர்ந்தனன் பந்த நீங்கி. (கரு)

ஆகத்திருவிருத்தம் - கஙிள.

ச.—மணஞ்செய்த திருவிளையாடல்.

மன்னு மாதவம் பெருகிய மலைக்கொடி மன்னன்
பொன்னி னூட்டிடைப் போயினி தமர்ந்துவீற் றிருப்பப்
பின்னர் வேறொரு புத்திர னிலாமையிற் பிறங்கக்
கன்னி தானுயா பிதாவினுக் குறுகடன் கழித்தாள். (உ)

தந்தை யில்லதுஞ் சாற்றரும் தனதெழி லுருவ
முந்தை மும்முலை யாயதுங் கொண்டிவண் முடியச்
சிந்தை யாகுலக் கீர்விலா திருந்தர சாண்டாள்
வந்த தெவ்வர்கள் யாரையும் வாளினுன் மாற்றி. (ஒ)

மன்னு முத்தமத் துணைவனே வரத்தொடு பெறுதற்
கன்னி லத்திடை யிலாதது கண்டடல் வேந்தர்
வெங்கி டத்திசை விசயநாஞ் செய்குவ மென்றே
யெங்கி லத்தினு முலாவின ளெல்லையில் படையாள். (ரு)

வேறு.

திசைவிச யஞ்செய் காலைத் திசைகளி லுருவ மிக்க
ருசையுறு மன்னர்க் கண்டா னனிநயந் தெதிர்சென் றங்க
ணசைவற கிற்பாண் மற்றே ரங்கவேள் விகாரங் காணுள்
வசையறு முளையி னேடு போகுவாண் மதியா ளாகி. (ச)

இருங்குண திசைமுன் னுக வெங்கணு முலாவி யுள்ளம்
வருந்துவா டன்னைக் கொள்வா னுசையாய் மதுரை மன்னன்
றிருந்துபே ரருளிற் போந்து சீயமா தங்க மற்றும்
பொருந்திய தயிலை யந்தண் டாள்வளைப் புறத்தி ருந்தான். (ஙி)

வெம்முனை யரசர்க் காய்ந்து வெல்லரு நிலங்கள் கொண்டு
கொம்மைவெம் மூலையர் சூழக் கோடிமா மன்னர் போற்றச்
செம்மலே றென்னத் தோன்றித் திறையிடான் யாவ னென்று
மம்மர்தீர்த் தாளும் வள்ளல் வாழ்பெருங் கயிலை சேர்ந்தாள். (சு)

கண்டபா ரிடங்கள் சித்தர் சாரணர் கணப்பி சாசர்
மண்டிய வியக்கர் வானோர் தானவர் மற்றுந் துற்று
மிண்டிகள் பேசிச் செல்ல விசயமா மகுட வல்லி
சண்டவெங் கோபத் தோடெந் தழல்விழித் தெதிர்க டந்தாள். (எ)

வெந்திறன் ஞாட்பி லேன்ற வீரர்க ளாற்ரு ராகி
மூந்திய திறங்கள் விட்டு முற்றுமா யுதங்கள் விட்டுப்
பந்திவா கனங்கள் விட்டுப் படுவன பட்டுப் போந்து
சுந்தரன் கழலில் வீழ்ந்து துதித்துநீ யியிர்த்துச் சொல்வார். (அ)

வே று.

தீர மிக்கமும் மூலெசி றக்குமோர் தெய்வ மாதராள் சேறி வர்தெதிர்த்
தார்கி லத்தில்வே றெதிரெ னக்கெனு வரிய வத்திரங் கோவி டுத்தடும்
போர்மு கத்துமென் முறுவல் கூருமுன் பொலிவ ழிந்துநம் படைமு ரிந்தவா
ரேரிடத்தினுங் கண்ட தில்லரா வுலகின் மண்ணில்வான் மிசையி லென்றனர்.

அன்றி ஞர்புரங் குன்ற வென்றவில் லரிய சேவகன் முறுவல் செய்திடா
ரன்று நன்றுசொல் கின்ற தின்றுபோய் நாடு காணவந் நாரி யாரையாம்
வென்று மேவுவ மஞ்ச லஞ்சனீர் வெய்து ரதிரு மென்று துன்றிமுன்
னின்ரு சேனையைத் தள்ளி யெய்தினு னீடு மன்மதன் சேனை பின்வர. (கo)

வே று.

அரிவையைக் கைப்பி டிப்பா ஞசையி னீறு சாத்தி
வரிவிலார் கரத்து வேரூர் வண்ணவெஞ் சிலையும் வாங்கிப்
பொருபடை நடவு செல்லப் புரிகுழ லொருவ னம்மேல்
வருவதென் மதியா தென்று வந்தனள் பூசல் வேட்டு. (கக)

இறைவனைக் காணு முன்ன ரிருமையும் மூலெயி லொன்று
மறைதல்கண்டதிச யித்து மானம்வந் தொல்கி நிற்பத்
தனறபட முன்னஞ் சொன்ன மந்திரி யிவனே தோலா
மறமலி மாதே யுன்றன் மாமண வாள னென்றான். (கஉ)

அப்பெரு திகல்செய் யாத வரங்களே னிகலக் கண்டே
யொப்பிலாள் வருத்தங் கூர முறுவல்செய் தவமை யில்லீர்
கைப்பிடிப் பதற்கே வந்தேன் கருத்தறி கில்லே னின்று
தப்பில்வேள் பொல்லான் வெற்போ தனதடி விலெயோ வன்றே. (கங)

கொங்கவி முலங்கற் கூந்தற் கொடியிடை யீரு மக்குப்
பங்கய முகனுக் தன்னைக் கொங்குதயாப் படைத்த வேதா

வங்கது கண்டு கண்டீ தலருமென் றச்சங் கூர்ந்தோ
ரிங்களே வதன மாகப் படைத்தனன் செப்பீ ரென்னுன். (கச)

பொருவருந் திறங்கள் வல்லாள் புகழினு னிறைந்தான் போதிற்
றிருவினு முருவ மிக்காள் சிறிதுமென் மூறவல் கூர்ந்து
மருமலி யிதழி யந்தார் வள்ளன்மேற் கடைக்கண் வைத்தாங்
கிருநில நோக்கி மெல்ல வியம்புவா ணயங்கள் கூர. (கடு)

வேறு.

மன்னியதென் புலத்திலங்கும் பாண்டிநாட்டு வளமைதரு மாமதுரை நகரொன் பேரூர், நன்னிலைசேர் தந்தையர சுரிமை தந்து நணுகினுன் வாளுட் டென் னல்ல யாயுங், கன்னிதனக் காணமண வாளன் றன்னைக் காணுமா றென்றென்று கலங்கு கின்ரு, ரின்னல்கெட மீனமதி யுத்த ரத்தங் கெழுந் தருளி மணந்தருளு மென்ரூள் போற்றி. (கக)

வென்றிதரு புகழுடையா யநங்க வாழ்வே விளம்பியதே செய்வலினி மெலியே னுள்ள, மென்றுவரங் கொடுத்தருளி யிறைவன் போக வின்பமுறு தடாதகைதன் பெரிய நாட்செ, சென்றுவளர் தருமதுரை நகருட் புக்குச் செய்திபயந் தவட்குநயம் பயக்கச் செப்பி, யொன்றியநன் னலங்கடரும் பெருங்கல் யாண முறச்செய்வா னெருப்பட்டா ணவப்பட் டாங்கு. (கஎ)

வேறு.

காசில்வா னகல முட்டக் கனகக்காற் பந்த ரிட்டுத்
தூசுபட் டாடை யான்மேல் விதானித்துத் தூபந் திபந்
தேசொளி விளங்கு பாளே செறிகிறை கரகம் வைத்து
மாசில்வெண் டரள மாலை மாணிக்க மாலை நாற்றி. (கஅ)

நிறைபனி நீரை டுத்து நிலந்தொறுந் தெளித்து வாச
நறுமலர் சுண்ணம் பொற்பூ நவமணி கலந்து சிந்தி
மறுவறு சமிதை நெய்பால் பாலிகை பரப்பி மாசி
லறுகொடு தருப்பை சூட்டி யட்டமங் கலங்கள் வைத்தார். (கஙு)

தோரண நாட்டி யெட்டுத் திசைகளுந் தொழில்சேர் செம்பொற்
பூரண குடநி ரைத்துப் பூகநீள் கதலி நாட்டி
வாரண நெருங்கும் வீதி மதுரையிற் சிறக்க மிக்க
காரண முதல்வன் காணக் காவண மலங்க ரித்தார். (உ0)

பல்லியங் கறங்க வெண்ணில் பார்த்திபர் வழுத்த முத்தச்
சொல்லரு மால வட்டந் தோகையர் வீசச் செம்பொ
னல்லசா மரையி ரட்ட நாயகன் வரவு பார்த்து
வல்லிநல்லணியாற் பொங்கி மாசிலா சனத்தி ருந்தாள். (உக)

நந்திமா முனிவன் குண்டோ தரனெனு நாமம் பூண்டோர்
வெந்திறற் பூத மாதி வெண்மதிக் குடைநி ழற்ற

வந்தனா குணலே கொள்ள வரிவையர் வனேகள் சிந்தச்
சுந்தரன் வந்தான் முன்னஞ் சொன்னகா டன்னி லாங்கு. (உஉ)

வே று.

நயந்தருதாண் மிசைவீரக் கழல்பு னேந்து நன்கரத்துக் கடகங்
கணஞ்செ றித்து, வியந்திரு மார்பில்லிடி நாண்முத் தாரம் வெண்புரிநூ
லணிந்தணிகுங் குமந்தோய் தோளிற், றயங்கியசண் பகமாலே கழுநீர் மாலே
சாத்திமருங் கார்த்ததுதி றழைவார் காதிற், புயங்கவொளி மாணிக்கக் குழையி
லங்கப் புதுமலர்வா சிகைமுடியிற் பொலிய வந்தான். (உங)

வே று.

மதிநெறி மாதை வேட்பான் மாமணக் கோலங் கொண்டு
கதிதர வந்தோன் மிக்க கடிமணங் காண்பா னெண்ணி
யிதமுறு தேவர் முன்ஞ விருங்கண நாதர் முற்றும்
புதுமையின் வந்தார் சூழ்ந்து சயசய வென்று போற்றி. (உச)

ஆதிநான் முகன்மா லேத்த வரம்பையர் வாழ்த்தெ டுப்பச்
சோதிசேர் கானம் பாடத் தும்புரு நார தாதி
நீதறு சடங்கு மைந்தன் செலுத்தநன் மூருத்தத் தேற்ப
மேதகு மாதை வேத விதிப்படி மன்றல் செய்தான். (உடி)

சேர்ந்தவொண் பாண்டி நாடு செய்தமா தவத்தி ஞனும்
வாய்ந்தமா மாதைப் பெற்ற மாதுறு தவத்தி ஞனு
மார்ந்தொன் முறைமை யிற்பெண் ணுயக மாகா தென்று
வேய்ந்தபொன் முடிக வித்தான் விசயமண் டபத்தி ருந்து. (உக)

பெருமையே தருங்கோ வென்னும் பெயர்தன தாத லாலே
குணாகட லுலகின் மிக்க கோமாற வரும ஞனுன்
கருநிமூ வுலகுங் காக்குஞ் சுந்தர மாற னென்றே
மருவிய வெழுத்து மிட்டான் வாய்மனத் துக்கு மெட்டான். (உஎ)

அருட்புனே கீதி யோங்க வருச்சனே புரிதல் வென்றி
யருத்தகு மரசர்க் கென்று மூரித்தென வுவமை யில்லா
விருக்கறை சிவலிங் கத் ந மிம்மையே தருவா னென்றே
யுரைத்தவா கூத்திற் பூசித் தருளின வுலகங் காண. (உஅ)

ஆகத்திருவிருத்தம் - கஅடி.

நி.—பதஞ்சலிக்குநடஞ்செய்த திருவிளையாடல்.

பாதிமா துடையான் வேந்தர் பாலையை மணந்த பின்றை
யாதர வயன்மா லாகண் டலன்முத னிறைவு செய்து
நீதியின் விடுத்து மற்று கின்றவர் தம்மை நோக்கிச்
சோதிசேர் சின்னீ ராடு மென்றலுந் தொழுதெ முந்தா. (க)

முனிவர்கள் தருவர் நாகர் சாரணர் சித்தர் முன்னுக்
கனலெழு பரியாற் போய்ப்பொற் கமலவா வியினீ ராடி
யினியதஞ் சடங்கு செய்தே யேத்தரு நீறு சாத்தி
யனைவரும் வாமுன் வந்த வகந்தமா முனிவன் சொல்வான். (உ)

வந்துமா மறைகள் பாட மகிழ்வுட னுடுத் தில்லே
யெந்தைபொன் னம்ப லத்தி னேத்தருங் கூத்தை யேத்திப்
புந்தியா லிறைஞ்சி னல்லாற் புகிப்பதோர் நாளு மில்லே
சுந்தரா போவ லங்க ணென்றடி தொழப்பக் கண்டு. (ஊ)

நீங்கரும் வெயிலா னெக்த பீமா வனத்தில் வாவிப்
பாங்கர்யா னளவில் கால முண்டிருந் ததுப ணிந்தீங்
கோங்கிய மகவான் வேட்டை யாடுவா னெருகால் வந்து
தீங்கற வளித்த செம்பொற் சீதள விமான மீதால். (எ)

நிக்குறுந் தலங்க டமமுட் சுந்தையித் தலத்
மைக்குழன் மடவா னோடும் வளம்பட வித்தன்கண் டென்பான்
மிக்கநீ காண்டி யென்று வெள்ளியம் பலத்துக் காணத்
தக்கநற் சொக்கன் சொக்கத் தாண்டவம் புரிந்தா னன்றே. (ஏ)

பரமுனி வரருண் மிக்க பதஞ்சலி முனிகண் ணுர
வரமுறக் கண்டா னந்த மகிழ்ச்சிமார்க் கடலுண் மூழ்கி
யுளைகெழு துரியா லேத்தி யுண்டுகல் விடையிற் போகப்
புளையற யாரு முண்டி போயினு ருனே வாழ்த்தி. (ஐ)

கே வ ரு.

மதஞ்சொரிகொல் குஞ்சரவி ருஞ்சரும கஞ்சுகவ ரன்சயில வஞ்சி கொ
மூரன், விதஞ்செறிபு ரஞ்சுடரெ னெஞ்சரம்வி டெஞ்சதுரன் விஞ்சையர்வி ரிஞ்ச
நிறைவ, னிதஞ்செய்கொடி நஞ்சவுர கஞ்சசிமி லெஞ்சசடை யெஞ்சலில
சஞ்ச லனுளம், பதஞ்சலிநி றைஞ்சடியி றைஞ்சிடாத டஞ்செய்தப ரஞ்சுடர்த
ருஞ்சொ ருபமே. (எ)

தலம்புகழ்த ரும்..... .....கடம்பவனமே.*

ஆகத்திருவிருத்தம் - கூஉ.

சு.—பூதமுண்ட திருவிளையாடல்.

பொலிவின் வந்தவர் யாவரு நிறைவுறப் புசித்தே
யலகி னன்கொடு போயின ரரும்பெரு விழாவின்
முலைவில் பல்வளத் தொகுதிகண் டுறத்தனே மகிழ்த்துத்
தலைமை சேழொழின் மடவர தலைவனுக் குரைப்பான். (ஏ)

* இச்செய்யுளின்முழுப்பாடத்தை இப்புத்தகத்தில் கூ - ம் பக்கத்தில் பார்த்துக்கொள்க.

பொருவி லாதவெஞ் சோற்றுயர் பொருப்பினைக் காட்டி
யிரவி தீமதி யுகுகுல மிராசிக டிகிக
ளரிய தேவர்கண் முனிவர்க ளிராக்கத ரகசர்
பெரிய மானிட ரியக்கர்விச் சாதரர் பிசாசர். (உ)

உரக ராயக ராதியர் யாவரு மண்டஞ்
சொரியு மிவ்வரை யின்னமும் தொலைந்ததோ வில்லை
யருளி னலிது தொலைந்திட வயில்பவ ரொருவர்
வரவு காண்கிலே னுண்பவர் யாரினி மண்ணில். (ஊ)

தேசி லங்குகின் னெடுபெருந் திரள்வரு மென்றே
யாசை கூரயான் மடைமுது நூல்வழி யமைத்த
மாசி லோதனந் தெய்வவான் வழுதிகேள் கிடப்பி
னூசு மேலினி யென்செய்வ துரைத்தரு ளென்ன. (எ)

வே று.

மங்கையங் கயற்கண் ணிக்கு வாய்த்தவன் முறுவல் கூரா
விங்கியா வரும ருந்தி யேகின ருயர்வான் மூட்டப்
பொங்கிய செல்கெ லன்னப் பொருப்பையார் தொலைப்பார் துங்கச்
செங்கயற் கருங்கட் பச்சைத் தேவிசொல் லென்ன முன்னம். (ஏ)

சார்ந்தவெம் பசியுந் தண்ணீர்த் தாகமு மலைப்ப நொந்து
காய்ந்தபே ருதரக் குண்டோ தரனெனுங் கடிய பூதம்
வாய்ந்தகீள் கவிகை கொண்டு வருதலா லிணைத்தே னிர்த்த
வார்ந்தவொண் சொன்றிக் குன்றை யருளென வணைத்த தாங்கு. (ஐ)

இன்னல்கூர் பசியி னெனைத் திடருறு மெண்ணை யும்பின்
றன்னிக ரில்லை யென்னுந் தடாதகை வலியும் போக்கத்
தென்னவன் மதுரை மன்னன் சிறிதுளே முறுவல் கூரா
வுன்னுடைப் பசிதான் றீர வுண்ணென வருள்சு ரந்தான். (ஒ)

வெள்ளிமால் வரையே போலும் வெண்மையு மிமவான் போலுந்
தெள்ளிய வயிர்வு முள்ள சோற்றினைச் சிறிது போழ்ந்து
வுள்ளதே னெய்பால் வாவி யுடைத்திவிட் டிருகை யாலு
மள்ளியுண் டதும டக்தை யதிசயித் தச்சங் கூர. (ஓ)

விண்ணுளோர் பூத முண்ணு மிதவையு மிகவு மாழ்ந்த
தண்ணிய வயிறுங் கண்டு சங்கர னேவ லாலிம்
மண்ணிலோர் பூத முண்டல் கண்டன மற்று மொன்று
ணுண்ணுமே னுமும் போதே முணவென வயந்தார் யாரும். (ஔ)

எ.—ஆறழைத்த திருவிளையாடல்.

சொன்றிமலே துய்த்துமுத ரத்தெழுசு டெந்தி
யன்றைவட வைக்கனலெ னப்பெரித லேப்பக்
குன்றினேநி கர்த்திடுகு றட்டனுவ ருந்தா
கின்றுசிவ னேப்பரவி நேர்படவு ரைக்கும். (க)

தேவர்தொழு தேவவருள் சேரிறைவ முன்னு
ளோவிறினா வாரிதிய டெக்கணேயு வந்தா
யாவியுறு சிற்றுணவி னுலறவி னேத்தேன்
மேவுபசி யின்னுமெனே விட்டதிலே யின்றே. (உ)

என்றுமுறை யிட்டலற வீறுளள வந்தாழ்
சொன்றிதிகழ் நான்குகுழி தோன்றியிட முன்னஞ்
சென்றுகயி லேக்குவடெ னத்தனிதி ரட்டா
வென்றியின்வி ழுங்கியது மேதினிவி யப்ப. (ஊ)

ஆங்கதுவி ழுங்கியபி னுவியெழு தண்ணீர்த்
தாங்கரிய தாகமுற லாலுடற ளர்ந்தூர்ப்
பாங்குளம டுக்கிணறு வாவிகள்ப ரந்தே
தேங்குபுன லுள்ளனகு டித்ததுதி கைப்ப. (சு)

இப்படிகு டிப்பவுமெ ழுந்தபரி தாப
வெப்பமம ராமலிறை வாவினேயி னேனுக்
கப்பினேய ளித்தருள கத்தடிமை யென்றே
செப்புமுன ழைத்தனர்செ ழும்புனலி யாறு. (டு)

கோகனக வாவிகள்கு லத்தணேமு றித்தே
யோகையுற வீசுதிரை யோடுதுரை திந்தி
மாகமுற நீரிரும ருங்கினுகெ ருங்கா
வேகமொடு வந்ததெழ வேகவதி யாறு. (கு)

வே று.

கண்டனன் காட்டக் குண்டோ தரன்கடி தியாற்றுட் புக்குத்
திண்டிறற் பேழ்வா யங்காந் தறிஞ்சினுன் சென்ற நீரு
மண்டுறு நீருஞ் சென்று மணலெழக் கண்ட மன்னோர்
புண்டையின் வியந்தார் பாலை பழிச்சினுள் பொறுத்தி யென்று. (எ)

ஆரவுந் தொலேயா வாழ்ந்த குழியுழை யயினி முற்றும்
வாரிதி யுரூவா யாற்றின் வரும்பெருஞ் சலில முற்றுஞ்
சேரவுண் டறிஞ்சி யொல்லைத் தேக்கிடு மவன்ப ணிந்தான்
சாரரு மன்றல் செய்து சகநெறி யிள்வோன் முனில். (அ)

கைத்தொழிற் பூதங் கண்ட குளமெனக் கண்டெய் தென்று
வித்தகன் பணிப்ப வெங்குங் கண்டது·வியப்பப் பூதம்
பத்திசேர் மணற்ப ரப்பும் பக்தர்கீ ராவி வாவித்
தத்துதெண் டிரைக்க ரைக்க ணிருந்தனன் சடங்குக் கந்தன். (க)

வாவியின் பெருமைக் கேற்ப வளமலி கழனி கண்டு
தாவில்பல் பதியுங் கண்டு தலந்தொறு நாட தாக்கி
போவற விளக்க விப்பா லுயர்ந்ததோர் பதியை யங்கட்
காவண வாவிப் பேராற் காவண நல்லு ரென்றூர். (கo)

காலிருங் குழியி லன்ன நாற்பெருந் திரளே யாக
மேலெழ விழுங்கித் தண்ணீர்த் தாகத்தான் மெலிந்து பூத
மோலிடக் கண்டு வேக வதியினை யொல்லை யங்கட்
சாலமுன் னழைத்தா னியாவ னவனடி சரண மன்றே. (கக)

ஆகத்திருவிருத்தம் - உகஉ.

அ.—கடலழைத்த திருவிளையாடல்.

வயமுறு மன்னவ னுகும் வள்ளல்பின்
னயனெடென் செய்தன னெனாக வின்றனிர்
பயனுறு முனிவிர்காள் பரவ சத்தைவிட்
டெரதி சயமுள தாைப்பல் கேண்மினே. (க)

கனவரை வில்லினன் கதம்பக் கானினன்
றனதுயர் மனத்தினை நாளிற் சூழ்குழல்
புனைவழி பாட்டினுற் புவியில் வேறொரு
னினைவறத் தன்னுடை நினைவி னுக்கினுள். (உ)

சதமுறை துதித்தொரு நாட்ட னித்துநின்
னதர்ப்படு மடியனேன் றூய மங்கலி
யுதயியின் மூழ்குவா னுவகை கூர்ந்தன
விதுதிரு வுளத்தடைத் திரங்கி டென்றனள். (ங)

கயந்தலை யாலையு நல்க வல்லவன்
பயந்தரு காரியம் பகரக் கேட்டலை
மியைந்துகே ளாதுபோ லிருப்ப நாயகி
வயங்கொளி மதிமுகஞ் சால வாடினுள். (ச)

மற்றவண் மதிமுக வாட்டங் காண்டலுஞ்
சற்றுளே கைசெய்து தரும நாயகன்
மூற்றுநீ ரிருந்தது மோன மாகவுன்
கெற்றருந் திருமுகச் சோகங் காணவே. (ஞ)

மாதர்க டிலகமே மாலில் கற்புடைக்
கோதையே யெனதுளங் கொண்ட தெய்வமே.
யேதநீ யொழியொழி யேழு வாரியு
மாதரத் தழைப்பல்கா ணெனவ ழைத்தனன். (சு)

தகநுரை சிதறிவெஞ் சண்ட வெண்டிரை
யிகலிவா ளெடுபொரக் கலித்தி லங்குசெங்
தொகுமணி யொளியினுந் சிவந்து துண்ணென
மகரமீ னெழவெழ வந்த வாழ்கடல். (எ)

பாங்குடைட் மதுரையம் பதியு ளோரெலா
மாங்கவை வருதல்கண் டதிச யத்தொடுங்
தாங்கரும் பயத்தொடுஞ் சார்ந்து தாணுவே
யாங்களென் செய்குவ மெனத்து தித்தனர். (அ)

உற்றெருங் குறவரு முதநி யாலவயு
மற்புத ஞணையா லங்கி மூலையில்
விற்பொலி கடலென விளங்கி மூற்றிசழ்
பொற்புறு தடத்திடைப் புகுந்த மர்ந்தவால். (கூ)

ஒதரு மனேகர முடைத்த டாதகை
யாதரத் தடிபணிந் தருளே வாழ்த்தின
ருதிலேழ் கடல்களுஞ் சேர்த வாற்றடம்
பூதலத் தெழுகட லெனப்பொ லிந்ததே. (கூ)

ஆகத்திருவிருத்தம் - உஉஉ.

கூ.—மலயத்துவசனையழைத்த திருவிளையாடல்.

மாண்டகு கடல்கள் கண்டு வழுத்திமுன் றுதிக்கு மாதை
யீண்டீநீ போயுன் மாதா வியைந்தபே ராசை தீரப்
பூண்டநல் வரங்க ணல்கும் புணரியின் மூழ்கு வித்து
மீண்டுவா வென்றான் மீளா வழிதர வல்லான் மெல்ல. (க)

ஆங்கது கேளா முன்ன ரகமிழ்ந் தியாயின் பாற்சார்ந்
தீங்கொரு கடலா டற்கென் றெண்ணினே மீதோ ழிந்தின்
றேங்குமேழ் கடலும் வந்த வொருகணத் தெனது கேள்வன்
பாங்குறுங் பெருமை யாலிப் பரவையு ளாடு கென்ன. (உ)

பரிவுகூர்ந் தருட்பெம் மானைக் கணவனுஞ் வுடைய பாவாய்
பொருவில்கா தலனே டாதல் புதல்வனே டூத லீரும்

வரிசையான் கன்றே டாத லாடுத லன்றி வங்க
ரசியுட் டனிபுக் காடார் மடந்தைய ரென்ப சென்றுள். (கூ)

என்றியாய் மொழிந்த மாற்ற மிறைக்குவந் தனைத்தா டற்கு
மன்றன்மா கணவ னில்லே மகவில்லே யென்ற ழுங்க
வொன்றுகா தலனே டாடு முத்தம தீர்த்த மாக
வென்றியுன் றந்தை தன்னே யழைத்தின்றே மெலியே ளுள்ளம். (சு)

அவையுறு துறக்க நீங்கி யவனிமீ திழிந்த வாறே
தவமுறு நம்ம மாமி தணிவிலா தரங்கெ டாமற்
புவிபுகழ் பெருங்கல் லோலப் புணரியின் மூழ்கச் சொல்லென்
றுவகைமா மடிக டம்மை யழைத்தன னுலகங் காண. (டு)

வே று.

மண்டு செல்வ மலயத் துவசனைக்
கண்ட மானிட ரன்றிக் கணங்களுங்
கொண்டல் வண்ணனுங் கோகன கத்தனு
மண்டர் கோனு மதிசய முற்றனர். (கூ)

வந்து போற்றுதல் கண்டு மகிழ்ந்துபோற்
றந்த மாமகட் கன்புறக் காட்டியே
யுந்தை யோடுமுன் ருயை யுவப்புற
மூந்தை யாழ்கடன் மூழ்குவி யென்றனன். (எ)

ஏத நீங்கு தடாதகை யின்றுநீ
காதல் கூர்ந்த கணவனெ டாடென
வாத ரித்த கணவனே டாங்கவ
ளோத வேழ்கட லாடி யுவந்தனள். (அ)

மன்று ளுயக வாழ்ந்தனம் வாழ்ந்தன
மென்று வாழ்த்தி யிறைஞ்சல்கண் டுத்தம
னன்று தண்ணுல கீந்திட வாங்கவர்
சென்ற டைந்தனர் தெய்வத் தனுக்கொடி. (கூ)

ஆகத்திருவிருத்தம் - உகூக.

கo.—உக்கிரன்பிறந்த திருவிளையாடல்.

மனனாக கரசன் மலியத் துவசன்
றன்னற் புதமண் முழுதுந் தனியே
பொன்னிற் நிகழும் புரமீ தெனவே
மீன்னப் பெடையோ டரசாண் டனனே. (க)

அணியார் தமிழும் மருநான் மறையும்
பணிவே தியரும் பசுவுந் திசையாள்
குணமே வியதென் னவர்தங் குலமுந்
தணியா வறமுந் தழைவெய் திடவே. (உ)

தாரார் குழன்மங் கைதடர தகைபா
லாரா வமுதா னவனின் னருளாற்
போர்வே ளெனவே பொருவில் புதல்வன்
போரார் சடையோ டுபிறந் தனனே. (ஊ)

மெய்யார் சுரரும் விதமா கரரு
மூய்வான் முழவெங் குமொலித் தினிதா
நெய்யா டல்புரிந் துலகங் கடொறும்
பொய்யா மலர்மா ரிபொழிந் தனரே. (எ)

உறவுக் கிரமா னதுகொண் டுருவ
மிறைபொற் பமர்கை யிலெடுத் தணையா
மறையுற் றறிக் கண்வரும் பெயர்பே
றறிவுக் கிரனென் னவறைந் தனனே. (ஏ)

உளமா யாயுரா ஞமூருக் கியுவந்
தளவோர்கலையா வமுணர்ந் தழகா
லிளமா தர்மயங் கவிருந் துலவா
வளர்நீ திவிரங் கவளர்ந் தனனே. (ஐ)

அறிவால் விறலா லருளா லுயர்பா
னிறைவா லிவனுக் கிவனே நிகரென்
றுறநீ டுலிழா விதிசெய் துலகாண்
முறைசேர் மணிமா முடிசூட் டினனே. (ஒ)

வேறு.

எண்பயிலு நெடுஞ்சடிலம் பிறங்குதலா லிலங்கிவனுக்
கொண்புவியோர் கொண்டாடு முபநயனத் திருநாம
மீண்பரவு கோச்சடில வருமெனன லியையுமென
விண்பரவ விளங்குவித்தான் விதிகுடுமிப் பெருவழுதி. (ஓ)

ஆகத்திருவிருத்தம் - உகஅ.

கக.—வீரவேல்செண்டு கொடுத்த திருவிளையாடல்.

முன்ன மிந்திரன் கடல்வடமேரு முந்துதம் வல்வினை வசத்தான்
மன்னு நம்முடி சாணையைக் கடப்பர் மதித்தொவ்வொர் காலத்தி லென்று
பின்னர் யாவையு முணர்ந்பவ னதனைப் பேரருட் டிருவுளத் துணர்ந்து
சொன்ன மூவர்தம் பெருவலி தொலைப்பான் சோர்வறச் சிறிதுசே முனிந்து.

வேறு.

அறமலி தனது புதல்வனுக் கிரணுக் கருள்சுரந் தரும்புக ழோங்க
மறுவிலோர் வஞ்சனை யிந்திரன் பெரிய மவுலியி லறையென வளித்துச்
செறிகடல் வலியை யறவெறி யென்று சிறந்ததோர் வேலினை நல்கி
யறிவட கிரியைப் பற்றுபோற் சுழல வடியெனச் சென்றடையுங் கொடித்தான்.

ஆதிமா மரபின் வருவடி வணங்கை யறநெறி மணம்புணர் வித்திக்
காதல்கூர்ந் தறத்தின் றருதிசேர் புவனக் கனமெலா மவன்றலை வைத்து
நீதிமே வுலகு மதிசயித் திரங்க நிறைமலி தடாதகை யோடு
மாதர முறுங்க ணூற்ப ரோடு மறைந்தனன் பிறங்கவா லயத்து. (கூ)

வேறு.

ஆண்டகை தெய்வ வீரெட் டாண்டணி மவுலி சூடித்
தூண்டுமா வரசர் போகந் துய்த்துல காள வாலே
பூண்டபி டேகச் சொக்கன் புழுருநெய்ச் சொக்க னென்னு
மீண்டியர் கன்னு மங்க ளெங்களும் பிறங்கு மாலோ. (ச)

மன்னவர் முடிக ளித்து மருவிய கணங்க ளோடு
நன்னெறி யோங்க நாடோர் நகரென ஞாலங் காண
வின்னர சாள லாலே யமன்றிசை யாய வெய்ய
தென்னவன் பாண்டி நாடு சிவலோக மான தன்றே. (ஞ)

ஆகத்திருவிருத்தம் - உசச.

கஉ.—நான்மாடக்கூடலான திருவிளையாடல்.



சிலமார் வருண ராசன் றிறத்தினுன் மூன்னோர் கால
மாலவா யழகார் மெய்யன் பெருமையை யறிவா னெண்ணி
ஞாலநீ கைக்கொ ளென்று களிபுனற் பெருந்த ரங்க
வேலையை யேவ வேலே வேலைநல் வேலை யென்று. (க)

உரனெடுங் கனத்துப் போதி னெளித்துல கனைத்துங் கொள்ள
வரனுறு தேவர் சித்தர் மானிடர் நாகர் முற்றும்
வெருவுரு மூள்ளத் தோடு மாலவாய் மெய்யன் செய்ய
திருவடி சரண மென்ரு ஓய்யலா மென்று சேர்ந்தார். (உ)

காலமல் லாத காலத் துதிவா னுறக்க லித்து
மேலெழ வாரா நின்ற தென்செய்கோம் விண்ணோர் கோவே
யேலவே யருள்செய் யாயே லிறப்பமிங் கெவரு ஞாலஞ்
சாலமுற் றுங்கா லத்து நீயலா லுண்டோ தம்பம். (ங)

என்றடி தொழுது வீழ்ந்து முறையிட விரங்கி யென்று
மொன்றிய வடியார் தங்க ளுறுகுறை தீர்ப்பான் கண்டு
பொன்றுமுன் காப்ப லென்றே புட்கலா வருத்த முன்னு
வென்றிகொ ணுன்கு மேக வேந்தரை வரவ ழைத்தான். (சு)

தக்கபே ரணுக்க ளுய்யத் தரங்கவெங் கடனீர் மூற்றும்
புக்குநீர் மாந்து மென்று புகலுமுன் போற்றி செய்து
சொக்கனு ணையினி னேந்தே சுவறிடக் குடிப்பக் கண்டு
மிக்கவிண் ணோர்கண் முன்னு வியந்தனர் பயந்த ணிந்து. (டு)

அப்பொழு ததிச யித்தவ் வருணன்மீண் டாங்கா ரித்துத்
தப்பருந் தன்கொண் மூக்க டமையெலாம் வரவ ழைத்து
மைப்பணை யீனைய நுந்தம் வள்ளுறை சிதறி யந்தச்
செப்பரு முயிரை யெல்லாம் வருத்திடு மெனச்சி வந்தான். (சு)

மீடுசேர் முகில்கள் சாய்க்கும் பெருமழைத் துளியால் யாரும்
வாடுதல் கண்டு தொல்லைப் புட்கலா வருத்த முன்னு
நாடருங் காம ரூபப் புயல்களை நான்கு மாடக்
கூடமு தாகக் கற்பித் தருளினன் கூட மில்லான். (எ)

சோதிசேர் பாதா ளத்தார் துறக்கமர் தரத்தோர் பாரோ
ரேதமீ ருறுதி யாரு மியைந்தநான் மாடத் தும்போய்
வீதியி னெருக்க மின்றி மேதகு புதல்வ ரோடு
மாதர மாத ரோடு மிருமென வருள்சு ரந்தான். (அ)

அப்பொழு தெவரும் போற்றி யணுகிமா நகரின் பாங்க
ரொப்பிலா வடைவிற் பொங்கு முயர்ந்தமா டங்க டம்முண்
மெய்ப்பட நயந்தி ருப்ப மின்னிடி முழக்க மிக்க
மைப்படு கருவி வான மழைவலி தொலைந்த தன்றே. (கூ)

பேசரும் புயல கத்துப் பெரும்புயல் சுவறக் கண்ட
வாசைசேர் வானோர் முன்னு வதிசயித் தச்ச நீங்கித்
தேசிருங் கங்கை யாற்றைத் திருச்சடைப் புனையுட் டேக்கு
மீசனுக் கிதுவு மொன்றே யெனத்துதித் திறைஞ்சி னார்கள். (கo)

அருளின னவனைத் தத்தம் பதியகத் தணைய வேவி
வரிசையி னிருப்பக் கண்ட வருணன்வெங் கிறம்விட் டஞ்சிப்
பெரியவ னிறியேன் செய்த பிழைபொறுத் தருளென் றன்பிற்
றிருவடி பூவி னாளிற் றிகழுளம் வாழ்த்து போனான். (கக)

வாடுவோர் தம்மைப் போற்ற வயங்கொளி மாந கர்க்கட்
கூடரு மேக நான்கு மாடமாக் கூட லாலே

நாடவரதிச யிப்ப நான்மாடக் கூட லென்று
பீடுடை நகர்க்கு நாம மெங்களும் பிறங்கிற் றன்றே. (கஉ)

வே று.

கொண்மூ மாடங்கள் கூடலின் மீறியு
நண்ணி நீள்கடல் கொள்ளா நகரிதான்
மண்ணின் மாடக் குளக்கீழ் மதுரையென்
றெண்ணில் காலத் திலங்கிய தெங்களும். (கரு)

ஆடவர்.....கூடனகரே" (கூ-ம் பக்கத்திற்பார்க்க.)

ஆகத்திருவிருத்தம் - உஙள.

கரு.—சித்தரான திருவிளையாடல்.

அருவ மெய்யின ளுலவாய் நாயகன்
கருதி முன்னமோர் காலங் கருணையின்
மருவி யாவருங் கண்டு மகிழ்வுறப்
பொருவில் சித்த வுருவம் புனைந்தனன். (க)

விண்வி ரும்ப மறலியை வென்றுநீள்
கண்ணு மன்பரை யாளுங் கழன்மிசை
வண்ண நண்ணி மலேகர மாகிய
பண்ண மைந்த பரிபுரஞ் சாத்தினன். (உ)

கற்ப வெங்கனற் கண்ணுடை நெற்றிமே
னிற்ப விட்ட திலக நிலாவிடச்
சற்ப மாலை தயங்க மனங்கவர்
பொற்பு யத்துறு பொக்கணந் தூக்கினன். (ங)

மெய்யிற் பூசிய நீறும் விளங்குசெங்
கையின் மாத்திரைக் கோலுமென் காதின்மேற்
செய்ய மூத்திரை யுந்திரு வானவொண்
டெய்ய குஞ்சிச் சடையுந் துளங்கவே. (ச)

யோக பட்டம் விளங்க வுளங்கவ
ராக முற்று மழகு பொழிந்திடப்
பாக மூற்ற பரிவுடை யாளையுட்
போக விட்டு நடந்தனன் பூமிசை. (ஞ)

ஆழி மண்கட வாம னிறுத்திய
தாழ்வில் சித்தன் றமனிய வெற்பினை
னூழி யுள்ளவ ரேங்குலோ ரெங்களை
மீழ்மாக்குவன் யாருளர் காணவே. (ரு)

ஆதி நாத னறிவ னெனச்சொலீஇத்
தோத கம்பல காட்டித் தொகுபுகழ்
மாது மேவு மதுரைத் திருநகர்
வீதி தோறும் வெளிப்பட் டுலாவினன். (ஏ)

வே று.

விருத்தரை மைந்த ராக்கி மைந்தரை விருத்த ராக்கிக்
கரப்பெருங் குன்றை யைய கடுகினு டைக்கிக் காட்டி
யுருத்திக ழும்ப லத்தை விழுங்கிடா வுமிழ்ந்து காட்டி
மரித்தெழுந் திருந்து காட்டி மற்றும்வல் லபங்கள் காட்டி. (அ)

மன்னிய சிறுவர் சூழ்ந்து வரவினே யாடி யாரு
மின்னருள் சேர்ந்த காந்தன் யாவனென் றறிச யிப்பக்
கன்னிமா தரைம யக்கிக் கடிமனே தொறுங்கு ழப்பித்
தென்னனே மதியா ளுடி நடித்தனன் றெய்வச் சித்தன். (கூ)

பொற்பமர் தரங்க வாரிப் புடவியை யடைவிற் காக்கும்
விற்பொலி தடக்கை வேந்தன் வெய்யதன் மனித ராலே
ஈற்றவன் சரிதை முற்று நாடொறு முரைப்பக் கேட்டு
மூற்றிய சீற்றங் கூர்ந்து விட்டனன் முறைசெய் வோனை. (கo)

பொக்கணச் சித்தன் றன்னைப் பொய்செய்து போகா வண்ண
மிக்கணம் பிடித்து வாரு மென்றுமுன் னேவப் போலே
ரக்கணத் தின்கட் கண்டு பிடித்தனு மகப்ப டாமற்
றக்கர மொக்கக் செப்பித் தப்பினன் வெற்றிச் சித்தன். (கக)

தப்பினன் மற்றோர் ஞான்று சங்கரன் விரும்பி வாழு
மப்பெருங் கோயி றூங்கி யனிலமார் மூலை மன்னு
மொப்பருஞ் சிறப்பின் மிக்க வுத்தமக் களிற்றின் முன்னர்
மெய்ப்பட விருந்தான் வந்து வியன்றிரு நோக்கா னெங்கி. (கஉ)

தக்கபே ரால யத்துச் சதுமறை முனிவர் வாழ்த்தச்
சொக்கரா யகனைச் சூழ்ந்து துதிசெய்து தொழுவான் போந்த
திக்கெலாம் புகழு மன்னன் சேருங்கான் முன்னர்க் கண்ட
மிக்கவேத் திரக்க ரத்து வெய்யகஞ் சுகியர் சீறி. (கஙு)

பாண்டிய னிறைவன் றன்னைப் பணிகுவா னடைந்தா னீற்றுப்
பூண்டகு மூண்டி யேடா போய்விடு போய்வி டென்ன
வாண்டகை சேளான் போல வசைவிலா திருப்ப வங்கட்
டண்டரு நூய மேனிப் பாண்டிய வேந்தன் சேர்ந்தான். (கச)

இனியதாண் மலரே றிட்டு மூறுவல்கொண் டிருப்பக் கண்டு
வனுபமன் செழியன் மாற னன்னைந்தே ரிளமை யாலே

தனைநனி மதித்து நீயார் தரித்தெழா திருந்த தேது
நினைவதா னேது சேது வல்லதே தென்ரு னீத்து. (கடு)

ஆங்கது பகர வேடா வணைந்தகா ரியத்தி னேகா
தீங்கிலை யுரைத்த தென்கொல் யானெலாம் வல்ல சித்த
ரெங்கிய வுலக மெல்லா மதித்தவ னுன்ற னக்கென்
பாங்குகா ரியமோ விவ்வி யென்றுபற் றற்றி ருந்தான். (கசு)

திறமுறு முனிவீ ரென்னத் திருவிளை யாட றன்னைக்
குறுமறை முனிவ ரின்று கூறிய வாறு கேட்டே
மறமலி திறத்து மன்னன் வரமதி யாகி ருந்த
வறமலி சித்தன் பின்னென் செய்தன னறைதி யென்ரூர். (கஎ)

ஆகத்திருவிருத்தம் - உஎச.

கச.—கல்லானை கரும்புவாங்கின திருவிளையாடல்.

மன்னு நீள்புகழ் வழுதிகண் டெமைமதி யாமன்
முன்னர் யாவையும் வல்லவன் யானென மொழிந்தான்
பின்னெ ராசையற் றிவன்றிறம் பெரிதறி வோமென்
றுன்னை யொப்பவ ரில்லையோ வுயர்ந்தவ ருலகில். (க

இத்த லத்திய ராக்கினைச் சித்தனு யிருப்பின்
வித்தை தோன்றவிக் கோயிலின் வெஞ்சிலைக் களிற்ருற்
சித்த நன்குறச் செப்பிய வாறுபோ லெனது
கைத்த லத்தமர் கன்னலை வாங்குவீ காண்பேம். (உ)

இன்று தானிது தின்றிட வேவினை யாயி
னென்று தாழ்வற வுனக்கியாம் வேண்டு வளிப்ப
மன்று ளாடிய மாசிலா நாயக னறிய
வென்றி நாதனீ யெமக்கென விளம்பினன் விளங்க. (ங)

வேறு.

தென்னன் வார்த்தையைச் சித்தனுங் கேட்டலுந்
தன்னு ளேநகை செய்து சடக்கென
முன்னர் நின்ற முதியகல் லானையைக்
கன்ன நின்னென வேவினன் கண்கொடி. (ச)

அங்க ணேவ வழல்விழித் தஞ்சமண்
டங்கு நீழலைச் சாடிமுன் காட்டுகைப்
பைங்கண் வேழத்தைக் காணுமுன் பாய்மதச்
செங்கண் வேழ மடர்ந்து செறுத்ததால். (ஞ)

பத்தி மன்னவன் பாணிக் கரும்பினைப்
புத்தி யாரு நயந்து புகழ்ந்திடச்

சித்த னேவிய தெய்வப் பெருந்திற
லத்தி வாங்கி விளாவி னயின்றதால். (௬)

தந்து மேவிய தாமரை நாளமென்
றிந்து மன்னவ னேகா வலியையும்
வந்து வாங்க மறம்படக் கொல்வமென்
றுந்து வீரர்க ளோவெனச் சென்றனர். (௭)

வாங்கு முன்னர் மணிமுத்த மாலையை
யோங்கு மும்மத நால்வா யுவாமேல
தாங்க ருஞ்சினத் தோடு சடக்கென
வாங்க யின்றிடி யென்ன வதிர்ந்ததால். (௮)

மன்ற லந்தொடை மன்ன னழன்றுளம்
வென்றி சித்தர்க் கழகிது மேம்பட
நன்று நன்றென நாணினன் பேணிமுன்
சென்ற வீரரு நின்று செறுத்தனர். (௯)

அங்க டார்ந்தவர் தம்மை யடர்ந்துமெய்
தங்கு நீற்றினன் சற்று நகைத்துமன்
னெங்கு மோங்க விமைப்பி னெளித்தனன்
பைங்கண் வேழமும் பண்டைமெய் கொண்டதால். (௧0)

அரச னஞ்சி யதிசயித் தன்புடைப்
பெரிய கோயிற் பெருமான் பணியென
மருவு கோபந் தணிந்து வாயறப்
பரசி வான்மிசைப் பன்முறை பார்த்தனன். (௧௧)

ஆல யத்து ளணைந்து வணங்கிமுன்
சால வேண்டுப நல்கித் தலத்துநின்
போல யாவர்வல் லாரெனப் போற்றினன்
ஞால மெங்கு நயந்து வியந்ததால். (௧௨)

ஆகத்திருவிருத்தம் - உஅசு.

கடி.—சங்கப்பலகைகொடுத்த திருவிளையாடல்.

முன்னமோர் காலஞ் சங்கமண் டபத்து முறைமையி னிருப்பதற் கியை ந்தே, மின்னிய பணிவற் காரண மாகி விளங்குபே ராசனம் விரும்பிப், பன் னியல் வாணர் கபிலர்நக் கீரர் பரணர்முன் ஞகவா லயத்துத், தொன்னெறி யடியார்த் தினியன கொடுக்குஞ் சொக்கனுக் குரைப்பமென் றடைந்தார். ()

தேவர்க டேவே நின்னரு கிருக்குஞ் செந்தமி ழோர்நெருக் கின்றி
யாவரு மிருக்கச் சிறக்குமோர் தவிசை யீந்தரு ளெனத்தொழு தேத்த

மூவர்க ணீலவன் கோணமொத் திலங்கோர் முழத்தினி ஞெருவரே யிருக்கும்
பாவறி ஞானப் பலகையொன் றளிப்ப வாங்கிய பாவலர் பகர்வார். (உ)

அருளுடை யரசே யாவரு மிருந்திங் காயநீ டாசனம் விரும்ப
வொருவரே யிருக்கு மாசனங் தந்த தென்னையென் றுளந்தளர் காலே
யிருமையி னின்லங்கும் புலவரை யறிந்நீ திடந்தரு மிடந்தரு மென்றேர்
பரிவுடை வாக்கு விசும்பிடைத் தோன்றப் பணிந்தநி சயத்தொடும் போந்தார்

வாங்கருந் தெய்வப் பலகையைச் சங்க மண்டபத் திடைநடு விட்டாங்
கோங்கருமுன் கீ ரிருந்தனர் பின்ன ருயர்புளோ ரொருவருக் கிருப்ப
வாங்கது வளர்தல் கண்டுசென் கபில ரிருந்தன ரன்பொடு முன்போற்
ருங்குதல் கொடாது வளர்ந்திட விருந்தார் பரணருந் தலமெலா மதிப்ப. (ச)

மூற்றிய பயன்க ணுன்னுணல் விளங்கு மூத்தமிழ்க் கொத்தியல் வல்ல
மற்றுள சங்கத் தவருமவ் வடைவின் வளர்ந்திட வளர்ந்திட நயந்து
கற்றவ னருளின் பெருமையை வாழ்த்தி யிருந்திட நானிலத் தோர்கள்
செற்றம தகல வறிந்திடங் கொடுத்த சித்திரப் பலகையைத் துதித்தார். (ஙி)

சான்றவர் தேர்ந்து தம்முடைத் தெளிவாற் சயமுறக் கோத்தசெந் தமிழைத்
தோன்றிய சங்க மண்டபத் தின்கட் சோர்வற வைத்துவைத் தேக
வான்றவச் செய்யுள் காலநீ ளத்தா லளவில வாய்த்தலே மயங்கி
வான்றொட வுயர்ந்த வாங்கவர் திரண்டி வந்தனர் மற்றொரு காலம். (சு)

சொல்லருஞ் சொல்லின் றகுதியாற் றம்மிற் றொடர்விடா வழக்கினுண் மலிந்து
வெல்லருந் திறத்தைக் கண்டுசெந் தமிழுள் விளக்கமில் லாதனவிட்டு
நல்லன கொள்ளக் கடவமென் றியைந்து நயந்தரு பனுவலா ராய்வா
ரெல்லையி லழகார் சங்கமண் டபத்து ளேறினு ருறத்தமை மதித்து. (எ)

வந்தவர் குலீந்து முன்னமே கலீந்து வாயறக் கிடந்தவை யெடுத்து
மூந்தவா றாயு மளவிலப் பனுவன் முறைதலே மயங்கலா லழுந்து
கிந்தையா குலத்தோ டென்செய்கே மெனத்தஞ் செழுமுகம் வாடலுங்கருணை
யெந்தைநா யகனும் வந்தனன் முழா தின்றமிழ்ப் பலவனு யிரங்கி. (அ)

இத்தல மதிக்கக் குற்றமி லெழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரக்
கொத்துறு பனுவல் வல்லவர் நீங்கள் குறைவற விருந்நிர்செங் கமல
மொத்தநும் முகங்கள் வாடிய தென்னை யுற்றது போக்கலா விருப்பிற்
புத்தியா லளந்து போக்குவம் புகுந்த காரியம் புகலுமி னென்ன. (கூ)

முதுகவிப் புலவ மயங்கிய தெமக்கிம் முத்தமிழ்க் கொத்துநீ கோத்து
விதியினி னளிக்க வல்லையே னுற்பத் தெட்டெனல் விட்டுனைக் கூட்டி
யதர்பட நாற்பத் தொன்பது பேரென் றறைந்திடக் கடவமென் றியம்ப
மதியுளான் விரும்பி யிமைப்பினி லுவப்ப வகைப்பட விதிப்படி கோத்தான்.
யாவையுங் கூட்டுங் கடவுளுக் கியம்பி னீதுவுமோர் புதுமையோ மற்றப்
பாவலர் நயந்தி சொக்கனே போலுழ் பழுதற நிறைந்தவா சிரியன்

கேவல னல்ல னம்மினு மூயர்ந்தோ னென்றுமூன் னிளர்வுறத் துதித்து
மேவிய வரனைத் தம்மொடுங் கூட்டக் கூடினன் மேதினி வியப்ப. (சக)

ஆங்கிடங் கொடுப்ப விருந்திருந் தமிழ்க ளாய்ந்திடுங் காலையி லொருகாற்
பாங்குறு பொருளின் றகவறி யாமற் பாவலர் மயங்கிடக் கண்டாண்
டோங்கிய பொருணூ லன்பினோ டினையென் றெடுத்தவ ருவப்புறக் காட்டி
வாங்கரு னினைவிற் பிரித்தனனுரைத்தவண்பொருட்கியைந்தவொண்டமிழ்கள்.

நயமுறு பொருட்குப் பொருந்திய தத்த நலந்தரு மிருந்தமிழ் கண்டே
யியலுடை வாணர் மகிழ்ந்தநி சயத்தோ டிவையிவை யொள்ளிய வென்னச்
சயமுறு சேரன் பொருமையா லங்கண் சாற்றுவா னென்றனித் தமிழிற்
செயிறறு மைந்தாம் பனுவலுக் கொப்புச் செப்புதற் கரிதெனச் செப்ப. ()

வேறு.

நண்ணியவை யிடைவியந்து நவிலுவதே யொருவனெனக்
கண்ணிலியன் றரும்பொருளாற் கனத்ததொரு கவிதைதொடா
வுண்ணிறைந்த புலவீர்கா ளிதன்பொருள்கண் டுமாமினெனப்
பண்ணினெடு மூசைசெய்தான் பாவநீத்த நாவலவன். (கச)

எயவழு வின்றியிலங் கிருங்கவிதை கேட்டலுமே
நேயமுடு நிறைந்திருந்தார் நேர்கொடுப்ப வுரையின்றி
யாயுமிய னக்கோ னஞ்ஞானத் தாலதனைத்
தீயதென வுன்னெய்யத் தமிழ்ச்சொக்கன் சிரித்தருளி. (கடு)

என்றுமிவன் பொருமையுள னென்னுமதிங் கியாரறியார்
வென்றியுளீ ரவன்றனக்கு வேண்டுவன விளம்பிடுக
வொன்றியநங் கவிதைக்கிங் கிவனெழுதிய வுங்களிலோர்
நன்றியுளார் குற்றமெனிற் குற்றமது நனியென்றான். (கசு)

இத்தகைமை யியம்பக்கேட் டினிமையினு லேனுரு
மூத்தரமொன் றுளையாம லிருக்குங்கா ணியர்விசும்பில்
வித்தகரே நும்வழக்கு விடுவிப்பான் காரணமா
வத்தனும்வந் தானுமைப்போல் விடும்விடுது மறிவின்மை. (கஎ)

வணங்குமினீர் வணங்குமினீ ரெனமயக்க நீக்கிடுவா
னணைந்தருள்சேர் திருவாக்குத் தோன்றியிட வதிசயித்துக்
குணம்பயில்வோர் பயமெய்திக் கும்பிடுமு னியற்கோன்
பணிந்தடியேன் செய்தபிழை பொறுத்தியெனப் பழிச்சினனுல். (கஅ)

பெருமைதரும் பெயர்மதுரைப் பேரால வாயனென
வுரைசெய்தே யவைகெடொ ளிருந்தவனவ் வயினெளிப்ப
வருளுடையார் சொக்கனப்போ லாருளரிங் கெனத்துதித்தார்
பொருளதிகா ரம்பிறங்கிற் றிறையனுர் பொருளெனவே. (கக)

ஆலவாய்த்திருவிருத்தம் - உ-ரை.

ககூ.—கிழியறுத்த திருவிளையாடல்.

நற்றுயல் வியங்க ளேங்கப் போந்தனர் மூகை வன்றே. (ங ஏ)

சாலிநீள் கழனி தோறுந் தண்டலைக் கதிர வீனும்
பாலுறு தடங்க டோறும் பணிலஞித் திலம்பி றக்கு
மேலுறு சாபந் தீர வித்திரன் வெள்ளை யானை
காலிலவந் திறைஞ்சுந் தொல்லைக் காளையம் பதியு டைத்தார். (கூக)

வே று.

ஆரண முமபகலு மிந்துவு மாடாவு மந்தண னும்மரியுந் தும்புரு நார தரும், வாரண முந்திருமான் மைந்தனு மிந்திரனும் வானுயர் தேவர்களுங் கோடுடை மாமுனியும், பூரண நாமகளும் பூமக ளும்முமையும் பூழிய னுந் திருவோ டேழுல கும்பரவுங், காரண வன்குரவார் கந்தவ னச்சோமன் காணிம ணங்கமழுந் தாளிவ ணங்கினரால். (கூஉ)

வே று.

கருதுமப் பதியை விட்டுக் காதங்கள் பலவு நீங்கி
வருநெறி வசத்தி னனு மாசின்முற் றெருட்பி னனு
மருள்புனை வாத வூர ரன்புடைச் சம்பு வாழுந்
திணைபொரு மொய்யார் பொய்கைத் திருப்பெருந் துறையைச் சேர்ந்தார். ()

வனிமதி காட்டப் பூக மரகதங் காட்டக் கொன்றை
நளிநிதி காட்டக் காட்ட நாகநித் திலமெ லர்க்கு
முளமகிழ் துறக்கங் காட்ட வுயர்சிவ புரத்துச் செல்லக்
கினரொளி வழியீ தென்று கேதகை காட்டச் சென்றார். (கூச)

நிறைபெருந் தவத்தோர் வேள்வி நீங்கரும் பெருமை மிக்கோர்
மறுவிலா மூன்று நூறு மறையவர் விளங்கு மூதூர்
நிறையினின் மருங்க ணேர்தோ ரியாவரா யினும்பி றங்கப்
பிறிவிலா வமர ராக்கும் பெருந்துறை முந்தைப் பேரூர். (கூசு)

வே று.

அருந்தவர் சிந்தைசெ லுந்துறை வந்தணர் மூன்றைமகம்
புரிந்துசெ யுந்துறை சந்தைப டுந்துறை புந்திக டந்தபதந்
தருந்துறை யிந்திரை வந்துறை யுந்துறை தொந்திகொ டந்திபடும்
பெருந்துறை யெந்தைப ரிந்துகு ருந்தினி ருந்தபெ ருந்துறையே. (கூசு)

வே று.

வயலெலாங் கன்னல் செந்நெல் வனமெலா நாகம் பூக
மயலெலாந் தேர்வி மான மலையெலா முனிவர் வாளூர்
புயலெலா மாட கூடம் புறமெலாம் வேள்வி யோமங்
கயலெலாந் தாவும் வாவிக் கரையெலாந் தவஞ்செய் வோரால். (கூஎ)

வே று.

சகம்பரி வறுகலைச் சங்க மேறிய
மகந்தரு மறையுரு வங்க மாறற
முகந்தரு புவக்கடன் முடிய வோடியே
தொகும்பொருள் படும்பெருந் துறையைச் சார்ந்ததால். (கூஅ)

வே று.

அங்ஙக ரணேயா முன்ன ரங்கநெஞ் சுளைவே ருஙித்
துன்னுபே ரன்பு கீடத் துணேவிழி யருவி பாய
வுண்ணரு மயிர்சி லும்ப வுயர்காங் குவிய வாரூ
வண்ணிசேர் மெழுகே யென்ன வுருகினர் வாத வூரர். (ஙூ)

திருந்துமூற் றவத்தி னுலே செல்வமே லாசை விட்டுப்
பரந்தநெஞ் சொடுங்கக் கண்டு பன்முறை யநிச யித்திப்
பெரும்பதி யடையா முன்ன ரடைந்தது பேரன் பெந்தை
பொருந்திய தலங்க டம்முட் டலமிது போலொன் றின்றே. (சo)

பரிவினிங் கெய்தற் கென்ன பாக்கியஞ் செய்தே மிந்த
வரியசெங் கனகத் தோடு மமர்வமென் றறிஞி யிட்டுப்
பொருவரும் படையை மிக்க பொன்பரித் தவரை மற்றும்
வரிசையுள் ளவரா யங்கண் வரவழைத் தருளிச் செய்வார். (சஉ)

வே று.

வரர்புகழாடித் திங்களிற் குதிரை வந்திடா தாவணி மதியிற்
களைதொறு மிறங்கு மையமோ வில்லே காவல்கூ ரரும்பொருட் கெல்லாம்
பரிநனி கொண்டு வருகுவ லியானே பாண்டியற் குரையுமிச் செய்தி
தெருமரு வுருத்து கூடுதபோய் நீங்கள் சிவன்செய நெரிக்திடா தென்ரூர். ()

வே று.

ஆங்கவர் போயு வப்ப வரசனுக் குரைப்ப விப்பா
லீங்கிவ சொப்பார் போல யாவையும் விட்டுப் பொய்கை
யோங்குகீ ராடி வெண்ணீ றணிந்துய ராலத் தித்துப்
பாங்குறு மிறைவன் றன்னேப் பணிகுவான் றனிய டைந்தார். (ஙூ)

திருந்திய சிகையு நூலுஞ் செவ்வியிற் றுளங்க வானுள்
யிரிந்தசா ரகைக்க ணத்துள் விளங்குதண் மதிய மென்னப்
பரிந்துமா ணவர்கள் சூழப் பத்தனூர் வரவு பார்த்துப்
பெருந்துறைக் குருந்த நீழ லிருந்தனன் பெரிய வாசான். (சச)

காசினுன் மறைமு ழங்கக் கருணேயிற் கிருந்தி ருந்த
தேசிகே சனேக்கா ணுமுன் செயலழிந் தடலங் கம்பித்
தாசிலா விதியி னெட்டா லஞ்சினுன் மண்ணிற் ரேயப்
பாசமுன் றகல வீழ்ந்து பன்முறை பணிந்து நின்றார். (சஙி)

நின்றவர் தம்மை யன்பு நீடிய திருநோக் கத்தால்
வென்றிகொள் சிரமுன் னுக மேவதா வீற தாக
வொன்றிய மந்தி ரத்தா லுலக்கோக் குபதே சத்தான்
மன்றுற வுபதே சித்து முன்னுற வமைத்தான். (சஙூ)

அன்னவ ரொல்லை மெல்ல வஞ்சியஞ் சலியிற் செல்லப்
பன்முறை முறுவல் கூர்ந்து பாவனை செய்து பண்பிற்
றன்னடி சூட்டி நாமஞ் சாத்தியா சாரம் பூட்டிச்
சின்மய வஞ்செ ழுத்தைச் செவிப்புலத் துபதே சித்தான். (சஎ)

நோக்கினற் பாவ கத்தா னுவலரும் பரிச னத்தாற்
காக்குமீ னுடல டக்குங் கமடமொண் பறவை யென்ன
வாக்கினு னுக்கு முன்ன ரடைந்தது ப்ரம ஞானம்
வாக்கினு மடந்தை சேர்ந்தா ளகன்றன மலங்கண் மூன்றும். (சஅ)

வேறு.

தேடு நீசிவ பாக்கியஞ் செய்தனே
நாட வேண்டுவ கண்டனே யானமைப்
பாட வேண்டு மெனப்பரங் கண்டவ
ராடி வாசக மோதுவ ரன்புற. (சகூ)

மருவு பொற்பத மன்னுறக் கண்டுள
மூருங் யற்புத வாசக மோதுவார்
பரவு சென்னியம் பத்தெடுத் தோதியே
யரிய பாடலச் சோவென வோதினார். (கூ)

வேறு.

சிரித்த முகமுங் கவின்குழலுந் தீரா வருவிக் கண்மலரும்
விரித்த கரமுஞ் சபவடமும் வெண்ணூன் மார்புந் திருநீறுந்
தரித்த திருவா சகமொழியுஞ் சார்ந்த மெய்யுங் குறுவியர்வு
மரித்த மனமும் புளகமுமாய் நின்றார் வாத வூர்முனிவர். (கூக)

வேறு.

பதியின்வை பவத்தி னுணும் பதிந்தமெய்ஞ் ஞானத் தாறு
முதிரும்வெம் பிறவிப் பாச மறுத்தவர் மூர்த்தி நாதன்
விதியினிற் காண்டி யென்ன மேதகு சாத்த லோதும்
புதுமைகூர் பிரம சாரிப் புதல்வனை விதியிற் கண்டார். (கூஉ)

நன்புளீர் நீங்க ளென்ன புண்ணியஞ் செய்தீர் நாதன்
றன்பரி வெய்தி நாளுஞ் சார்ந்தரு கணையப் பெற்றீ
ரின்புறு மெனக்கு மிப்பா லிருப்பதோர் கரும மில்லை
யன்புளீ ரடைந்தே னென்பா ரதிசயப் பத்தெ டுத்தார். (கூங)

வேறு.

அங்க ணிவ்வா றறைந்திடுங் காலையப்
பொங்கு ஞானப் புதல்வர்க டம்மொடு
மங்கை நாயகன் மாணிக்க வாசக
விங்கு நில்லென் றியம்பி மறைந்தனன். (கூச)

ஆதி நாயக னென்றெழுந் தாயிரம்
போத மேவும் புதல்வர்க டம்மொடு
மோது ஞானங்கள் காட்டி யொளிக்குமுன்
வாத வூரர் வலியபித் தேறினார். (நடு)

குழுவி னோடு குருவை நினைந்தினை
விழிக ளாறு பொழிய விழுந்தெழுந்
தழுது விம்மி யரற்றி யரற்றின்
றெழிவில் வாசக மோதத் தொடங்கினர். (நிசு)

வே று.

மாறின் றென்னை யென்னு மாறிலொண் கோயிற் பத்துத்
தேறல்வண் புனர்ச்சிப் பத்துச் செத்திலாப் பத்து மற்று
மாறிய பிரார்த்த னைப்பத் தாசைப்பத் துயிரு ணிப்பத்
தேறிய புலம்பல் வாழாப் பத்தெண்ணப் பத்தை யேத்தார். (நிஎ)

அரும்பெரு நகரி னிற்போற் றவ்வயிற் றிகழ்வ கண்டே
பொருந்துமய னினையே சுண்ணங் கோத்தும்பி புகழ்ந்தெள் ளேணைத்
திருந்துபூ வல்லி யுந்தி தோணெக்கஞ் சிறந்த பாவை
முரன்றுகட்டி சதக மெய்யென் றேத்தினு ரோதப் புக்கார். (நிஅ)

வே று.

யருந்தியுட னூணுறக்க மின்றி யாங்கண் வாசகமோ திடக்கேட்ட தொ
ண்ட ரெல்லாம், பொருந்தியநி சமித்தங்களுமுன் கேட்ட வல்ல புனைமையெ
னச் சூழ்ந்திறைஞ்சிப் போற்றல் கண்டு, பெரும்புரவி கொளவந்த பொருள
னேத்தும் பின்வருங்கா ரியமொன்றும் பாரா ராகிப், பரிந்துகொடு மெனக்
கொடுத்தார் சிறிது காளிற் பாண்டியனு ரீண்டுபொருண் மாண்ட தாங்கே.()

தருங்கனகக் குவையனைத்து மளித்து நாளுந் தாமேயோர் சங்கையறப்
பாடிக் கொண்டு, குருந்திலெடு மறுகினெடு மதுக விப்பாற் குணமொழித்
தித் தனமழித்த செய்தி முற்றுந், திருந்துநெறி மதியமைச்சர் திரண்டு சென்று செப்பக்கேட் டளத்தாருச் சீற்றத் தோடு, மிருந்துமணி முடிதுளக்கிச் செங்கோன் மாற னிகற்றூதர் கரத்தோலை யெழுதி விட்டான். (சுo)

வே று.

தென்னவர் பரவுந் தென்னவ னேலே தென்னவன் பிரம ராயனே
காண்க, பொன்னிறை யறையிற் பன்முதல் கொண்டு புரவிகொண் டணை
வான் பரிவொடும் போனு, னென்னினைந் தின்னம் வந்தில னமைச்சற் கிப்
படிச் செய்யத் தக்கதோ சடிது, மன்னிய-வாடற் புரவிகொண் டடைவின்
வருவது கரும மற்றது பழுதால். (சுக)

வே று.

இத்திரு மூகத்தை யாங்க ணெய்திய தூதர் காட்டப்
பத்திசெய் தடைவின் வாங்கிப் பாசுரங் காணு முன்ன

முத்தமம் மன்னன் சித்த முணர்ந்தனர் நெடிது யிர்த்தார்
புத்தியு ளினைத்தார் சாலக் கலங்கினர் புலம்பி ஞரால். (கூஉ)

திதென்ன வனைச்ச னேயா னென்னகா ரியஞ்செய் தேன்மே
லென்ன சாய் வீனையுங் கெட்டே னிவளிகொள் வதற்கே வந்தேன்
பொன்னே யழித்தே னங்தோ புகலவோர் மாற்ற முண்டோ
மன்னவற் பிழைத்த லாகா மற்றினி யாவ தென்கொல். (கூசு)

ஆதரித் தடிய னேனை மாலழித் தாண்டி கொண்ட
வேதகா யகற்குச் சென்று விண்ணப்பஞ் செய்வ லென்றுங்
கோதரும் பெரிய செல்வ சொப்பார்போ லச்சத் தோடுஞ்
சோதியா லயத்துப் புக்குத் தொழுதுநின் றழுது சொல்வார். (கூச)

வே று.

தேமா லயனு மறியாத தேவ தேவே தயாநிதியே
வாமா கொண்டு வரச்சொல்லி வழுதி யோலே வரவிட்டான்
ரூமா வொன்றுங் கொண்டதில்லை தனமு மடியார் தமக்கிட்டேன்
போமா றுளையாய் கண்பாராய் புவியி லினியார் துணைசெய்வார். (கூடு)

பொருந்து திலேவ னங்கடந்து போந்து வேந்தற் சேர்ந்தருளின்
வருந்த வடலக் தனிவிருத்த மறையோ னுகி மறையோர்கட்
கிரங்கி யருங்கிழ் நீர்காட்டி யிரங்கன் மீட்ட பெருமானே
குருந்த வரம்பிற் கரந்தமனைக் கொழுந்தே செழும்பொற் முள்போற்றி. (

வே று.

போற்றியென் வாழ்முத லேயென வெடுத்துப் புலமுன் னினியவா சக
த்தா லேற்றுயர் கொடியுடை யானையங் குணர்த்தி யினியநற் றுதிகளாற்
றுதிப்பச், சாற்றருங் கொடுந்துயர் கூர்ந்தவர் துயரந் தணித்திடு வானருள் கூர்
ந்து, தோற்றிய தவ்வுழி மேற்றிகழ் விசும்பிற் முளங்கிட வுயர்திரு வாக்கு. (

வே று.

கிலத்தி யாமுண் டெமஞ்சே னிலைமை யுடனே கைதவற்குக்
கனத்த புரவி வருமென்று கருணை யுறவேண் டெவிட்டுப்
பனைப்பை போலே நிறைத்தெழுதிப் பரிவின் விடுப்பா யெனக்கேட்ட
வினைச்ச னிலார் களித்தெழுதி விட்டார் நெடிய கட்டோலை. (கூஅ)

வே று.

ஏதுபுரி வாள்வழுதி கடியேன் வாத வூரனேன் விண்ணப்ப முணர்ந்து
கொள்வாய், தீதுமொழி தோளாதைத் தாறு நாளிற் திரளிவளி வருஞ்சிறந்த
பந்தி கட்டி, வீதிபட நீர்க்குவிடுந் தடங்கள் வெட்டி வீதிகளர் வையாளி யல
ங்க ரித்தாங், கேதமொழிந் தடியேனை நயந்து முன்போ லெழுத்தருளி யிருங்
தருண்மெய் யென்றே தேறி. (கூக)

இத்தகவிற் றூதர்கரம் விடுத்துத் தம்பா லியைந்தபெரும் பாரம்விடுத் தால யத்து, மெத்தனவிற் றுயிலுங்கான் மருங்க ணேந்து மெய்த்தவகே ளன்புடையார் நின்போ லில்லே, சித்தமுறு காரியநா முடித்த றிண்ணந் தீர மொடு தென்னவனுள் வருமுன் சென்று, புத்திகளி தரத்தக்க துரைத்தி யென் று புகன்மொளித்தா னன்பர்சுமை பூண்டு கொண்டான். (எ0)

கனவுநிலே நீங்கியபின் போவ லென்றே கருணையுடை நாயகனே வணங்கி வாழ்த்தி, மனமகிழ்ந்து விளாந்தொப்பார் போலச் சென்று மதுரையடைந் தமைச்சருடன் மண்ட பத்தின், முனமெழுதி வருமோலே கண்டு ளத்து முளிவொழிந்த மன்னவனைக் காண மன்னன், றனதருகு வரவழைத்தாங் கிருந்தோர்ப் போக்கித் தனித்துரைப்பா னுளத்தினிய தயாமீக் கூர்ந்தே.(எக)

வே று.

மறங்கடி பொருட னக்கு வாசியெவ் வளவு கொண்டீ
ரிறங்கிய துறைநா டேதே தெவ்வுள வுயர்பு போது
நிறங்கடா மென்னெ மக்கேற் றுனதென் போது நீயி
பிறங்கிலக் கணங்க ளென்னை பேசிடீர் கூச லின்றி. (எ2)

என்றுரை செய்யக் கேட்ட வினியமா முனிவர் தேறி
மன்றுளு தனேகி னேந்து பகருவார் மன்ன ரேறே
வென்றிமா ராட்ட கங்காம் போசமா ரியஞ்சாம் ப்ராணி
துன்றுசைத் தவமுன் னுன துரகமோ பெருகக் கொண்டேன். (எசு)

புகலருஞ் செலவு டைத்தாய்ப் புணரியின் முழுக்க மிக்குப்
பகைபட வொன்றுக் கொன்று பணைத்தெழும் பெருமை கூர்ந்து
சகமதி சயிப்பத் தோன்றுத் தாண்டுவெம் பரிமா நிற்க
வகைபடு மதுகாற் பொங்கு மதுரையு மிடம்போ தாதால். (எச)

மன்னிய விலக்க ணத்தால் வருணத்தாற் கதியான் மிக்க
நன்மைகள் சொல்லத் தக்க வல்லவோர் நாவா லின்று
முன்னுற வந்த வாறே காண்கின்றுப் முழுது மீங்கே
யென்னையான் வியந் தது கூறே னென்றனர் நிலேமை பூண்டு. (எடி)

உற்றது வேளா முன்ன ருவகைகூர்ந் தணியல் வாசி
கொற்றவெண் குடைக ளாசி கோவைசேர் முத்த மாலே
பொற்புறு மாணிக் கப்பூண் பொற்படாம் பட்டுக் கூறை
மற்றும்வேண் டுவகொ டுத்து விடுத்தனன் வரிசை கூர. (எசு)

விளாவொடும் விடையிற் போந்து வேண்டுப தமக்கு கல்கும்
பரிவுடைச் சொக்கன் வாழும் பைம்பொளு லயந்துப் புக்குக்
கனையழி யன்பி ளுெடுங் கசிந்துநின் றிறைஞ்சி யேத்தி
யுளைசெய்வார் தனித்து மெல்ல வுற்றகா ரியத்தை யாங்கு. (எஎ)

வேறு.

நந்தார்கரர் செந்தாமரை வந்தார்தொழு மெந்தாய்
நாதாவதி பூதாசதுர் வேதாலித தோ
பந்தார்விரல் வண்டார்வரி வண்டார்குழல் கொண்டாள்
பாதாவென தாகாபர யோகாதிவ லோகா
மூந்தாதர கங்காதர சங்காரவி டங்கா
மூலாகம நூலாகுண சீலாதிரி சூலா
தந்தாவென கின்றூடிய பொன்றூழ்மணி மன்றூர்
தாளாவரு ளாளாகின தாளாவெனை யாளே. (எஅ)

வேறு.

மன்னு துரகம் வருமென்று வழுதி மகிழ வுரைசெய்தேன்
பொன்னு மடியார் தமக்கிட்டேன் போமா றுரையாய் கோமானே
யென்னை யடிமை யாக்கொண்ட விமையோர் தலைவா வுமைபாகா
வுன்னை யொழிய வறியேனென் றுரைத்தா ரிடும்பை யுடம்பானூர். (எக)

வேறு.

ஈங்கிது சொல்ல வானந் திசைந்ததோர் பெரிய வாக்காங்
கோங்கிய தஞ்ச லஞ்ச லென்னவவ் வுரைகே ளாமு
னீங்கரும் பரிவிற் போந்து நீடிதம் மனைக்க ணெய்தி
யாங்குயர் நாய ஞாைப் பூசைசெய் தமுது செய்தார். (அ0)

உண்டலுஞ் செய்தி யெங்ஙன் முடியுமென் றுளத்த மூங்கிக்
கண்படை கொள்ளுங் காலைக் கண்ணன கினைஞர் வந்து
பண்பினி னுணர்த்தி மன்னர் நீதிநூல் பரக்கக் கற்றுத்
தண்புக ழமைச்ச ரூனுய் சாதுமார்க் கந்த வீர்ந்தே. (அக)

மன்னவ நிதய மாரே யறிகுவார் வாத ஆரா
வென்னது கினைந்தா யந்தோ வருவதே யினியா ருண்டு
கின்னுறு கினைஞர்க் கென்ன விடும்விடு நீரார் யாமா
ரன்னிய ரல்லான் ஞாலத் தார்வெறப் பாரு வப்பே. (அஉ)

ஈசனேர் மனிதன் போல வென்னைவக் தாண்டு கொண்டான்
மாசறு பிறப்பும் விட்டேன் மன்னவற் பிழைத்த லாகா
பேசிலிங் கதனல் வந்தேன் பெரும்பொருட் டனிசு மின்றே
யாசிலோ ருபாயத் தாலே போக்குவ லேய மின்றே. (அங)

இங்குளீர் போமி னுங்கள் காரியத் தென்று கீக்கப்
பங்கய விலேயு நீரு மெனவவர் பற்றற் றூங்குத்
தங்கனெஞ் சகத்து கொந்து போயினூர் தரும மாறன்
மங்கல முறைசெய் வோர்கள் வந்தனர் மிற்றை ஞான்று (அச)

புரவிவந் தனவோ வென்ன மெய்ப்பட வருமிப் போது
விரைதல்வேண் டாம்பொ றுத்து வீதிகோ டிக்கச் சொன்மின்
கருதினீங் கென்னை யின்றூர் கலியாண ஞகக் காண்மி
னுரைசெய்த மாற்றந் தப்பா துரைசெயு மரசற் கென்றூர். (அடு)

ஆங்கவர் போந்து செய்தி யறைந்திடக் கேட்ட வேந்தன்
பூங்கமு கரம்பை நாட்டிப் பூரண குடங்கள் வைத்துத்
தேங்கமழ் தாம நாற்றித் திசைதொறுந் தீப மேற்றி
யோங்குபட் டாடை யான்மேல் விதானித்தா னுயர்வான் முட்ட. (அசு)

பந்திவை யாளி சங்க மண்டபம் பண்ட சாலே
கொந்தவி ழலங்கன் மாட மாமடங் கோபு ரங்கள்
சுந்தரன் பெரிய கோயி றூரண வாயில் வீதி
யிந்திர நகரி யென்ன வெங்கணு மலங்க ரித்தான். (அஎ)

மெய்ந்நெறி மன்னர் மன்னன் வீளம்பிய காலஞ் சென்ற
தின்னமும் வந்த தில்லே யினப்பரி யென்று சீறி
ரன்னெறி முறைசெய் வோரை விடுப்பவாங் கவர்க ணண்ணி
முன்னுறக் கேட்பப் பின்னு முன்புபோன் மொழிந்து விட்டார். (அஅ)

வே று.

மல்லல் லோங்கு மலய முனிவகே
ணல்ல தோர்வினே யாட னவின்றனே
கல்வி மன்னன் கனக மழித்தவொன்
செல்வ மாமுனி பின்னரென் செய்தனன்*. (அசு)

ஆகத்திருவிருத்தம் - டுகக.

உஅ.—நரி குதிரையான திருவிளையாடல்.

இத்தகு தியினி ருக்குங் காலேயி லெழுந்தி றைஞ்சி
யொத்தபே ரமைச்சர் முன்னின் றுரைசெய்வா ராச ரேறே
மத்தன்வார்த் தையினைக் கேட்டு வளநக ரலங்க ரித்தாய்
பித்தனீ யல்லா யுண்டோ பேசுவ தென்னை யாங்கள். (க)

பெருந்துறை யடைந்த போதே பித்துமேற் கொண்டா னங்கண்
டிருந்துசெங் கனக முற்றும் போக்கினன் செயல்வே றுனன்
பொருந்துகோ வணமு மோடு மல்லதோர் புரவி யில்லே
யிரங்கிடேல் வரைந்து வாங்கு பொன்னிழ வாதே யென்றூர். (உ)

---

* இது, வெள்ளிபாட்டென்றி சிலபிரதிகளில் எழுதப்பட்டுள்ளது.

வேறு.

தூய்ய மன்னவ னன்னவர் சொல்லகீ யிர்த்துச்
செய்ய தாமரைக் கண்மலர் தீயெழ வீழித்து
மைய னெஞ்சினை வனைத்திடும் வனைத்திடு மென்ன
வெய்ய சொல்லுடைப் பிரம்படிக் காரரை விடுத்தான். (கூ)

இன்னல் செய்குவான் சென்றவ ரிடர்கெட வோது
முன்ன ரும்பெருஞ் செய்திகள் கண்டுள மஞ்சித்
துன்னு மன்பிது கண்டில மென்றுகை தொழுதே
மன்னு மேனியி னேவன செய்திலர் வனைத்தார். (சு)

மற்று மூனெழித் தினைத்தவர் வனைப்பிடை யிருப்பக்
கொற்ற மன்னவன் பின்னரு நூற்றினை யனைய
வெற்றி வீரரை விடுத்தனன் சிறைசெயு மென்றே
செற்ற மோடெழ வைதனர் வைத்தனர் சிறையில். (ரு)

வேத னைப்பட விருத்திய வெங்கொடுஞ் சிறையாற்
போத நீடிய கடுந்துயர் பொறுக்கமாட் டாம
லாதி நாதனை நினைந்தழு தலர்க்கணீர் சொரிய
வாத வூரரும் புலம்புவார் வாசக மோதி. (கூ)

வேறு.

மன்னுகந் தரனே வாசி வந்தன வில்லை யென்று
தென்னவன் வனைத்து வைத்துத் தீயெழ நெருக்கா நின்றான்
முன்னது பொறுக்க வில்லேன் முடிப்பனென் னுயிரை நீயன்
றென்னையாண் டாளெ யென்ன வெண்டிசை யின்றிரங் கூத தென்ன. (எ)

வேறு.

பொருவி லெரிவாய் சொரிந்ததெனப் புரவி வரவு சொலச்சொலவிங்
ஙெருகி லிருகின் மானபுர மென்னுங் கொடுமை பொறுக்கவில்லேன்
வரிசை கூர வீற்றிருக்கு மன்னர் வாழ்வு மினியமையு
முகாயும் பொருளுங் கடந்தமறை யொளியே வெளியே யுதியாயே. (அ)

மின்னும் புகழா வருளாளா மெய்யே மணிநீர் போல்வந்திங்
கென்னெஞ் சுருக்கி யுனைத்தவுரை தப்பா தெனவந் தியானுனைத்தேன்
மன்னன் காண்பான் விழிகுழிய வழியை நோக்கி யிராதின்றுன்
றுன்னும் புரவி கொடுவினைவிற் றுரன்றுப் தோன்றுய் தோன்றுயே. (கூ)

வேறு.

ஆரிய மொழியு ளோரு மருந்தமிழ்ச் செய்யு ளோருங்
காரிய முறைசெய் வோரும் யாவருங் கசியச் சொல்வார்
சோர்வறக் குழைத்தா யென்றுஞ் சோதியே சுடரே யென்றுஞ்
சீரிய நாம மோதத் தரித்திலர் தேவர் தேவே. (எடு)

வேறு.

ஒழுக்கந் தருமந் தவந்தான முறவு வாய்மை பொறைமற்றும்
விழுப்ப முள்ள சூத்திரர்வாழ் மிழலை நாட்டு நரியெல்லா
மழைத்துத் தெருட்டி விஜையாட லலவனி மீது னனிவிளங்கத்
தழைத்த தலத்தை நரிக்குடியென் றின்றுஞ் சொல்வர் சான்றோரே. (கக)

வேறு.

அண்டம் விள்ள வடிப்பர் பிடிப்பர்க
ணண்டு ணுங்நரி காணரி யாதுநீர்
கொண்ட மன்ன னிடங்குறு காமுனம்
பண்டை நுங்குரல் காட்டும் பயமற. (கஉ)

வேறு.

குணங்கொண் டினைய போதித்துக் குதிரை யாக்கித் தம்பிரியா
ணிணங்குங் கணங்க டமக்கடைத்துப் புறப்பட் டாஞ்ரி வுளிம்பிசை
வணங்குங் கணங்கோ மாயுமா மாயப் புரவி மீதேறி
யணிந்து புறப்பட் டதுதுறையா ளுடைகா யகனைப் புடைசூழ்ந்து. (கங)

வேறு.

ஆதர வுடியார் முற்று மடிபணிந் தேத்தப் போந்து
வாதையம் புரத்து நண்ணி மணிச்சிலம் போசை காட்டத்
தீதற வாண்ட வெந்தை திருச்சிலம் போசை யென்றே
யேதமா முனிவர் தேறி யிசைபடத் திகைக்க வுற்றார். (கச)

வேறு.

கணங்கொள் சிறவ ரிடியெனமுன் னுதுங் காளங் கறங்குற்ற
ணிணந்து புடவி விசேடமுயர் துறக்கத் திணர்த்தச் செல்வதுபோன்
மணங்கொண் மதுரை காதமென வாகித் தூசி வீசியதங்
கணங்த தறியா ராயறிவா னறைவா ரீசன் றிசைநோக்கி. (கஎ)

வேறு.

கொலிய பொன்னே வில்லை குதிரையோ வரவு காணேன்
காலவெங் தூதர் போலக் காவல னேவ லாளர்
மேலெழ நெருக்கா நின்றார் மெலிவதும் வினையே னுற்றே
னலவா யானே சால வஞ்சினே னஞ்சி னேனே. (கஅ)

காதனே யருளிச் செய்த வார்த்தையை நம்பி வந்தேன்
வேதனே யுறவோ காயேன் மெய்ம்மொழி மொழிந்தே னுகச்
சோதிநீள் வாசி கொண்டு தோன்றெனப் புறம்போக் தள்ளத்
தேதமுற் றழுங்கா முன்ன மெய்திய தூதர் சொல்வார். (கஉ)

புண்ணிய வடிவ ரேயொண் புத்தியுள் ளுவரே யிந்த
மன்னிலை யமைச்சர்க் கெல்லா மன்னர்கீ ரல்லா லுண்டோ

வெண்ணரும் புரவி வந்த வின்புறக் கண்டோர் தாழா
துண்மகிழ்ந் தேத மீங்கி யுரைசெயு மரசற் கென்றூர். (கஅ)

அத்திறங் கேளா முன்ன ரகமகிழ்ந் தரசன் பாற்சென்
றுத்தம மன்ஞ சேற்ற மொழிபொழி நகரின் பாங்கர்த்
தத்துமா வந்தி வென்று சாற்றினர் தூத ரென்னச்
சித்திர மண்ட பத்துச் சேர்ந்தனன் வாழ்த்து வேந்தன். (கக)

நிலவுசா மரையி ரட்ட நித்திலக் குடைநி ழற்றத்
தலமகி ழால வட்டங் தையலார் நின்று வீசத்
தொலைவிலா மன்னர் போற்றச் சூதமா சதர்கள் வாழ்த்த
வலகிலா வணியாற் பொங்கி யரிகொளா சனத்தி ருந்தான். (உ)

வெம்பரி வரவு பார்த்து வீதிவா யிருக்குங் காலைச்
சம்புமா சமாதி யாலே சம்புமாத் தாழ்க்கக் கண்டு
வெம்பிநீ டம்பி னோடி யோசனை மீண்ட தூதர்
செம்பரி வரவு நான்கு திசையிலு மில்லை யென்றூர். (உக)

மற்றது சொல்ல நல்ல மந்திரி வாய்த்தா னந்தோ
வுற்றநம் பொருளே யெல்லா மழித்தலு மன்றி யோங்குங்
கொற்றமா வீங்கிப் போது வரும்வரு மென்று கூறி
முற்றிய பொய்க்க டாத்தா நின்றன னெனமு னிந்தான். (உஉ)

நீக்கினேக் கடியார் தம்மை நினைநினை வரவ ழைத்துத்
கோக்கட னுரு நீங்கள் கொண்டுபோ யஞ்சிக் கூசா
தூர்க்குள புளிக்க ணேங்கி யுள்ளமா றனைத்தும் வெட்டி
மூர்க்கமந் திரியி வன்றன் முதுகிடைப் போக்கு மென்றான். (உங)

அங்கவர் கொடுபோய் நோவ வடிப்பதற் கணையக் கண்டு
செங்கணீர் வார வாரத் திருமுகம் வேர்ப்ப வேர்ப்ப
வங்கணன் றனைநி னைந்தாங் கடைக்கலப் பத்து முன்னுத்
துங்கவா சகங்க ளோதத் தொடங்கினர் வடக்கு நோக்கி. (உச)

வேறு.

வாதை மறலி தண்டமென மன்னன் சிறைசெய் கூடத்துப்
போது நிகழ்பூம் பொழிலணைந்த பூங்கோ யிலத்தைப் பார்த்தருளிக்
கீத மினிய குயிலேயென் றெடுத்த திருவா சகங்களர
வோதி முடியா முனமெங்கு மூள்ளா னுள்ளத் தருள்சுரந்தான். (உஎ)

வேறு.

தெரிதரு காள வோசை யவனியைச் செவிட தாக்கி
மருவிய கடைநாட் பொங்கு மழைமுழக் கதனைக் காட்டப்
பரியெழு குரஞ்சேர் நூளி பகன்மனந் திரையைக் காட்ட
விருமைசேர் நகரி தன்னு ளெய்தின வெவருங் காண. (உஅ)

மாவல வீரன் வந்தான் வணங்குவோ ரிணங்கன் வந்தான்
பாவலர் புலவன் வந்தான் பாண்டிநன் னாடன் வந்தான்
காவலர் பெருமான் வந்தான் கடம்பமா வனத்தான் வந்தான்
றேவர்க டேவன் வந்தா னென்றன தெய்வச் சின்னம். (உஎ)

வழுதிகண் டதிச யித்து மயங்கிமால் கொண்டோர் போலத்
தொழுதுகொண் டெவருங் கண்ணீர் துளிப்பவா சகங்க ளோதி
யிழுதிடு காய ஞாை யழைத்தரு ணேத்தி ருத்திப்
பொழிதரு கண்ணி னீரைத் துடைத்தனன் பொறுக்கச் சொல்லி. (உஅ)

வே று.

குழுவொடு திரண்டுஞ் சிதறியும் பரந்துங் கூடியுங் கடன்முது திரைபோற்
கழறிகழ் பதத்துக் கறுழ்பொரு செவ்வாய்க் கடையின்வெண ணூனோ ணனே
விழுமிய வெண்சா மரைமுக மசைய விண்ணெனத் தார்மணி யார்ப்ப [ப்ப
முழவொடு சுற்று முற்றையுங் காத்து வந்தது முதுபரிச் சாத்து. (உக)

வே று.

கடப்பன குதிப்பன பகைத்தவை தனித்தனி களித்தறு மனிப்ப வொ
ருபா,ண்டப்பன நிலத்துறு பணப்பணி சொறுகென நடிப்பன நெறிக்க ஞெ
ருபா, லடர்ப்பன மிகைத்தக னபப்பரி நிறப்பரி யையச்சமு றுவிப்ப வொ
ருபால், விடக்கடல் கொதித்தென மிகைத்தெவ ருமுட்கிட மிதிப்பன வித்தித்
ஞெருபால். (ஙo)

வே று.

வாளகி ரூறுபட நூறுவன மாறுபட வானமுறு பேரண்டமீன், கோள
கையின் முட்டுவன பட்டமுறு மெட்டியாகு லக்கரிகண மத்தகமிசைத்,
தாளதிர வைப்பவம ரேசன்விடு மாவினொடு தலடுவென மண்டியொரியா,
மீள்கடலு தித்தவட மேருவைநெ ருக்கியெழ நேரிவ மற்றுமொருபால். ()

வே று.

இசைப்படி முகிற்குல நிகர்ப்பன நிலத்தினே யிலத்தியி னிறைப்ப வொரு
பாற், நிசைப்படி குலக்கிரி களெட்டையு முழக்குவ செடுத்தும றவுற்ற வகல்
வான், மிசைப்படி முடிக்குல மூகிர்த்திரு சுடர்க்களும் வெருக்கொள வுகைப்ப
வொருபால், வசைப்படி மணத்தொடி பெருத்திடி மிலக்கண வகைப்படி வய
ப்ப ரிகளே. (ஙஉ)

வே று.

எற்றிகழ் பலவி தஞ்சேர் பொற்றலைக் கீடி லங்க
வுற்றபன் மணியாற் பொங்கு மொப்பிலத் பாய மின்னங்
கற்றையங் கவரி தூற்ற வாயுதங் கையில் வாங்கி
வெற்றிகொள் வொற்ற வீரர் வீரியிற் ரூண்டு விட்டார். (ஙக)

வே று.

மன்னியசித் திலமாலே நிலவெறிப்ப மாணிக்கக் குண்டலங்கள் வெயி
ல்வி ரிப்பத், துன்னுலகுக் கொருகுதிரை யாளஞ் சோதி சோதிவிடு குப்
பாய மெய்ப்பான் மின்ன, முன்னேமறைப் பரியைதெறி யைத்து மோங்க
மூடுவல மீடம்பரிவத் தனஞ்செய் வித்து, மின்னவணி பொலன்கலினக்
குசைவ லித்து விளங்குகர வாளங்கை துளங்க வந்தான். (சை)

வே று.

வெல்பரி நிறத்தாற் பீடா லொலியினு ளையான் மிக்க
பல்கடல் இளர்த்த வென்னக் இளர்த்தன பல்க டற்பாற்
சொல்லரு மளவில் கோடி சூரிய ருதித்தா லென்ன
வெல்லொடு விளங்கி னார்க ளியைந்தசாத் தவர்க ளியாரும. (சஇ)

விழுமிய குதிரை யீடு காண்பதற் கிணைந்த விண்ணோர்
வழுவிலா முனிவர் சேமி மாலயன் மகவான் மற்று
தொழுதுரு மருங்கு மீண்டித் துதிசெய்தா கற்ப கப்பூஞ்
செழுமலர் பொழுது வாழ்த்திச் செயசெயென் றடிசே வித்தார். (சஉ)

தூங்கெம் பரிமேற் சேலனுஞ் சொக்கணை கண்ட வீதி
மங்கைகள் சங்க ழப்பா வணவெல சரிது நிறபா
ரங்கத்தற் செம்பொட் டூப்பா ரறிகா வைவ்வா ரெங்கும்
பொங்கய பெருஞ்சூல் கொள்வார் புடம்புவார் வீழ்வார் சோர்வார். (சஎ)

அழையிணை சாரீ ரென்பா ரலர்ந்ததா மரைக்கண் செவ்வி
வடிவினைப் பாரீ ரெலலாம வலலகுக் தாமே யென்பார்
படிபிரகக் காணடற் ரென்ன பாக்கியஞ் செய்தீ தென்பார்
கடுவிசைப புரவி தமைய யோட்டிமோ காண்டற் கென்பார். (சஅ)

அன்னவர் புலம்பக கண்ட வாடல்மோ பாட லன்பர்
பன்னருர் தமமை வென மொழியென் றெறித்து மெல்ல
வினனிய லகனே யென்னு மெலலிசை படமு டித்துக்
கன்னல்ச னன்னப் பதாங் கோதைரூர் களியிற் கூடி. (சக)

நிருநறி பரவ ரூபா தெணணில்பல் லியங்க ளங்கப்
பொன்மகுகி னைடர் ழுர்ப்பொலன்கொள்சா மரையி ரட்ட
மனனாட் டவலை டானலா வீசி வந்தவை யாளி வீதித்
துனனவே கலாங்க ளொரும் துளங்கிஞ்ஞன் வளங்கொ ணுதன். (சஅ)

ஆங்குற கண்ட வேந்த னெதிசய முற்றி யாரு
மோங்குமா யுதமும பூணு ப மும முருவு மொத்துத்
தாங்குறை வற்றி ருந்தார் தலேவர்பா ரென்னக் கேட்டப்
பாங்கினே வாத ஹரர் தோன்றுவர் பரியி லென்றார் (சக)

அவ்வயி னெங்கும் தானே யாதார மாயி ருப்பத்
தவ்வுமோர் கோட கத்தை யாதார மாக்கிச் சால
வெவ்விய மூன்று பாச மறுக்குமென் கரத்து மிக்க
செவ்விய விரண்டு பாசம் பிடித்தனன் றிறமை கூர. (சஉ)

கருதிடி னெருகா லத்து மசைந்திடாக் கமலத் தாளைப்
பரிவொடுங் காண யாரும் பன்முறை யுறவ சைத்து
மருமல ரயனுன் மாலான் மறையினு ளளக்க வொண்ணுத்
தருமமீ ருருவத் தாணு தாணுவே யெனவி ருந்தான். (சஊ)

கள்ளகீங் கிடவ டிக்குங் கசையொலி யசனி மான
வுள்ளபே ரண்டம் விள்ள வுயர்மிடற் றோசை காட்ட
வெள்ளிமால் வரைமேற் றோன்று மேருமால் வரையே யென்னத்
துள்ளுவெண் புரவி மீது தோன்றினுன் நரணி நாதன். (சக)

புண்ணியஞ் செய்த மேனிப் பூழியா வாழி வாழி
கண்ணிமை யாது சற்றுக் கண்டிடு கண்டி டென்று
பண்ணியல் குதிரை வீரர் மெச்சுசே வகன்ப ரிந்து
மண்மிசை யேறி ஞனவ் வாசியை வாசி யாக. (சடு)

வேறு.

கூருந் தொடையும் பெயர்ச்சியுஞ் செல்லுங் குறிப்பொடு குசைகசைக் குர
யாருங் காணச் சீருந் தொழிலு மிதம்பட வித்தம்பல காட்டிச் [லும்
சேரும் பாடி நேரும் விலங்குந் திறல்வல வோட்டிட வோட்டுஞ்
சாரும் மாக வாளியு மற்றுஞ் சாற்றரு மார்க்கங்க டோன்ற. (சஎ)

வேறு.

விக்கிதம் வற்கி தம்முப கண்ட மேவரு முபசவஞ் சவமாஞ்
சிக்கில ஞடைவெம் புனேவுனு வாளி சிறுகின மெய்ந்நிறை கடப்புப்
புக்குள பஞ்ச தாரையோ டத்த புளகித மத்தமண் டலம்பே
ருக்கிர பெகிர மண்டலங் கோமூத் திரியெனு மொன்பதும் விளங்க. (சஏ)

வேறு.

மின்பரிவ கூரவெழில் வெவ்விடைந டாத்தித்
தென்புலமி லங்ஃவரு தேவர்தொழு தேவ
னன்பரிரு பாதமலர் சிந்திநனி யார்ப்ப
வின்பமுறு வெம்புரவி யேறினனு வந்தே. (சஅ)

வேறு.

அரனரி யயனச் சுறவர சுழனு
யிரமுக சுபதக் ரமமுறு நெறியே
சரிகம பதனித் தகவனு மனியா
வருமறை யயமுய்த் தன்ன்வய முறவே. (சக)

வேறு.

மனத்துறு செருக்கொடு மருத்தரசிகர் வெற்றிச்
சினப்பரி பொருத்தமமர் செண்டுவெளி தன்னுட்
டனத்தன தனத்தன தனத்தன வெனத்தன்
விளைப்பட நெறிப்படி மிதித்தது நடித்தே. (கூ0)

மூர்த்திய செழுங்கவரி நின்றசைய முற்றும்
பத்தமுறு கஞ்சமணி கொஞ்சவெழு பண்ணிற்
சந்துறு சதங்கைகள் சலன்சல னெனத்தன்
சுந்தர விசைப்படி நடித்ததுது கைத்தே. (கூக)

வேறு.

தருமப் பரதச் சவுதத் தடைவே
தெரியத் தனதத் தனதத் தெனவே
புனையற் றுருகிப் புவிமெச் சிடவே
பருமப் பரிநற் பதம்வைத் ததுவே. (கூஉ)

மெத்துத் தகவும் விதமும் படவே
தித்தொந் தொந்தெனத் தித்தி யென்றென்
றெத்துந் தாளத் தொக்கத் தத்தித்
தத்தும் பரிதன் முள்வைத் ததுவே. (கூங)

வேறு.

பதிந்துமுன் காட்ட வெய்யோன் படியுமால் வரையிற் பாயா
வுதைந்துபின் காட்ட வெய்யோ னுதிக்குமால் வரையிற் முவா
விதம்பட விடத்துக் காட்ட யமன்றிசைக் கிரியின் முட்டா
விதம்பட வலத்துக் காட்ட மேருவைக் கடந்த தாங்கே. (கூச)

குறைவின்மண் டலம்வ ளைப்பக் கொள்ளிகொள் வட்ட மன்றி
மறுவற விளங்கிற் முங்கு வனைத்தோர் குதிரை யென்னத்
துறைநிறை வீதி காட்டத் தொடுகணை செலவே யன்றி
நிறைவொடு பிறங்கிற் முங்கு நீண்டதோர் குதிரை யென்ன. (கூடு)

இடம்வலம் பரிவத் திப்ப விரண்டியர் குதிரை யென்னப்
படிமிசை விளங்கிற் றந்தப் பார்த்திவ னதிச யிப்ப
வடிபடும் வேத மென்ன வருந்தவஞ் செய்த தென்றே
யிடபமால் குதிரை யாவே னென்றியா னெனைப்ப ணிந்தான். (கூசு)

மண்ணகத் தெவருங் காண வாதஷ் மார்க்கா வந்து
கண்ணுறத் கரிய வீரர் நாற்பெருந் திசையு மூட்டப்
பண்ணுறத் தூண்டு நீத்தப் பரித்துகட் கிமையா விண்ணோர்
கண்ணிமைத் தார்விண் மண்ணு னதுகட் நிடரா யிற்றே. (கூஎ)

ஏறஅ மற்று மூள்ள விருங்கண நாத ரெல்லாங்
கூறரு மல்ல மார்க்க மயின்மார்க்கங் குரக்கு மார்க்கம்
வீறுடை முயலின் மார்க்கங் கணைமார்க்கம் வியரால் வீதி
சேறுற வுகைத்தார் மற்றுங் கதிகளாற் சிறக்க வாங்கு. (இஅ)

இடவிய கதியின் வாசி யெருவர்போ லேறற் கிந்தப்
படிமிசைக் கண்ட மில்லே தலைவர்யா ரென்னப் பல்கா
லடியிணை பரவி வந்த வருங்கண நாதர் யார்க்குங்
கடவுள ரிவர்கா ணென்று விரல்கொடி காட்டி ரைால். (இக)

ஆங்கவற் காரூ முன்ன ரவசமா யெழுந்த தங்கந்
தேங்கமழ் முடியிற் றூமே சென்றன கரங்க டென்னன்
பாங்கல வெழுந்தி ருத்தல் பார்த்திவற் கென்றி ருந்தா
னீங்கரு மனிதர் மூற்று நின்றிலர் தொழுது வீழ்ந்தார். (கo)

மிக்கமந் திரிகா ளிந்த வெம்பரிச் செட்டி நந்தஞ்
சொக்கனே போலெ னக்குத் தோன்றிடா நின்றூன் வந்த
கொக்கினைப் பாரீர் காலந் தாழ்த்ததா யினுங்கொ ணர்ந்த
மிக்கமந் திரியைப் பாரீ ரென்றுபன் முறைவி யந்தான். (கக)

கொற்றவன் றிருமு னின்று கூறுவான் குதிரைச் செட்டி.
யுற்றநின் னமைச்சன் றந்த வுயர்பெருங் கனக மூற்றுங்
கற்கிக் ளிவ தாக நம்முளோர் கைக்கொண் டார்கள்
வெற்றிகொண் மன்ஞ கொற்ற வெம்பரி கீதி கேண்மோ. (கஉ)

வேறு.

புரிதீபா் தரத்திமவான் புறத்தி னின்று போர்தபெருந் துறையிறங்கி
வந்த வின்றிங், கருமறையிற் கடலமுதில் விதிகண் ணீரி லாரழலி லுலகத்தி
லண்டத் தன்னி, லுரியதிசை யிருநான்கு தேவர் தம்மி லுயர்ந்தவெழு பிறப்
பினவா யுரைசேர் மண்வாழ், சுரரரசர் வணிகர்குத் திரர்நாற் சாதித் தோற்
றத்த காணிந்தத் துரக மொத்தம். (உo)

வேறு.

மருவுநாய் கழுதை கோழி வாயதம் வெருகு கூகை
ஈரிபசா சேனம் பொல்லா நல்லன மயூரங் கிரி
பொருவிடை மடங்க லன்ன மகரம்வா னரம்பு ழைக்கைக்
கரிபுலி முனிவர் வானேர் கடும்பரிச் சுபாவ மன்றே. (உக)

வேறு.

உத்தம வீரலிற் காயமுஞ் சுழியு மொளிகளு நடைகளுந் துளங்குஞ்
சித்திர நிறமு நாற்றமுங் குரலுந் திறப்படி மனமுமிவ் வெட்டுஞ்
சுத்தமா வுடைய விந்திரன் றனுப்போற் றுளங்கவா டரவுபோ னலத்தான்
மெத்திகேர் வளர்த்து திரண்டுநீண் டியர்த்து விளங்கிய கழுத்தன காணே. ()

வேறு.

மல்லிகை கோங்கு காயா மாதவீ மலர்பூங் கிள்ளை
நல்லன மற்று மிக்க நவமணி நிறத்த வாகி
மெல்லிய சிவந்த நாவும் வெளுத்துநெய்த் தொத்த பத்திப்
பல்லுமாற் றக்கு றுத்த கன்னமும் பழுதி லாத. (சுசு)

வேறு.

இறுகிக் குவிந்து குழிந்ததகர்க் குரம்போற் குரமு மிளகவ்வி
மறிவிற் கண்ணு மகன்றுதணி முதுகு நீண்ட வாலதியுங்
குறுகிச் சிவந்த மேட்டிரமுங் குறுகா முகமும் வியனுதலுஞ்
சிறுகித் திரண்ட வண்டமுமெய் யழகுஞ் செழிய காணுயே. (சுள)

வேறு.

மேலெழின் முகமுந் தூய விதழுமை நான்கு தாளும்
பாலதின் வெளுத்த சுத்தப் பஞ்சகல் யாணன் பாராய்
வாலதி தலைநெஞ் சொக்க மற்றவற் றொடும் வெளுத்த
வாலிய மணஞ்சி றந்த வட்டமங் கலங்கள் பாராய். (சுஅ)

உயர்கன வட்டம் போரா னுரனுளான் கொங்கான் கங்கான்
மயில்வரி நீலான் பொல்லான் மகிழ்விதை மெனவான் சேயா
னயனவஞ் சனம்பொன் மாரி பாடல நளினி பச்சை
பயமிலா மரீசி கோரம் பட்டவர்த் தனங்கள் பாரே. (சுக)

கஞ்சுகம் விலங்கு கொங்கை கவைக்குளம் புலக்கை கௌவ
மஞ்சீதா ளிரட்டை நாவோ ரண்டம் வேற் றண்டங் கொள்ளி
நஞ்சராத் தொழுநோய் காளை முகந்திரி கன்னங் கொம்பு
மிஞ்சிய மற்றுங் கூற்ற மொன்றிலை விளம்புங் காலே. (எ0)

மன்னதீ மனம்வி நிர்த்தல் பிசகல்கான் மடித்தல் வீழ்த்த
லின்னெறி விலங்க லச்சப் படுதன்மே லேறப் பாய்தன்
முன்னெழல் கடித்தல் வீதி நிற்றறுண் முகஞ்சா டித்தல்
பின்னெழ லிருத்தன் மற்றுந் தீங்கிலை பேசற் கின்றே. (எக)

கருதின்வண் கதிவெங் கால கந்துக நிலைமை யோங்க
மருவிய குலமா மங்கை முகமுக மடங்கல் வாவல்
பொருவரு கடிகள் வைப்பிற் புயலொலி யொலியே மிக்க
பரிவுடை மன்ன நின்னைப் பரிக்குமிப் பரிமா மொத்தம். (எ2)

முருக்கும்வெம் பட்ட யானை முகத்தலாற் றுள்கள் வையா
கருத்தினி லுலவு மாக்கள் கருத்தனைத் தையுங்க டக்கு
முருத்தெழ வொலிப்பின் வானத் தும்பர்கோன் பரியு மஞ்சு
மருத்திறுங் கடிய மாக்கள் வாய்த்தன சம்பு வாணை. (எக)

வே று.

இப்பரி மாவொரி லக்கம வற்றினு ளிக்குழு வோரொருமா
மூப்பலீ தாயிர மோர்பழு தின்றிமு தற்றர மித்தரமும்
வைப்பதி னூறுகு றைந்தன பின்னிவை யாயிர மற்றிவையு
மப்படி பெற்றவி லேப்பொனி லக்கம னேத்துமு னர்ந்துகொளே. (எச)

வே று.

ஆரிருள் விடப்பே ரண்ட மாயிரங் கதிர்வி ரிக்குஞ்
சூரிய ஞருஞ் சூழ்த றுரிதமார் பரியா லேகாண்
கூரும்வா ரிதிகொ ளாமற் குவலயங் கிடத்தல் கௌவை
வாரிதி குடிக்கு நீவாய் வடவையம் பரியா லேகாண்ட. * (அடு)

திண்டிறன் மன்னர் சென்று செற்றவர் மண்ட லங்கள்
கொண்டுதம் மன்ன ராளக் கொடுப்பதுங் குதிரை யேகாண்
டண்டுபோ ரினில்வென் னிட்ட மன்னைப் படக்கொ டாமற்
கொண்டுபோய் விரைவி லுய்யக் கொள்வதுங் குதிரை யேகாண். (எக)

அரும்பெருஞ் செந்தீ யில்லா வந்தணர் வாழ்வு போலும்
விரும்புதா ரகைக ளில்லா விளக்கமி லகல்வான் போலுந்
சுரும்புசூழ் மலரில் லாத சோலையுந் தடமும் போலு
நெருங்கிய துரக மில்லா நீள்பெருஞ் சேனை மன்னே. (எஎ)

பரியலீக யானை தண்டோர் பதாதிக ளெனும்ப டைக்குப்
புரவியில் லாத போது பொலிவுடைத் தன்று மண்ணும்
வரிசையு மற்று முற்றுந் தருவது மன்ன வர்க்குத்
துரகமே யல்லா லுண்டோ தென்னவ சொல்லுங் காலே. (எஅ)

வரும்பரி தாழ்த்த வாகைள் வளர்சரா சரங்க ளெல்லாம்
புரிந்தினைப் பாறுந் தில்லைப் பொதுவினு ளாட லாலே
யரும்புக ழாயி வற்றுக் கச்சுவ மென்று நாமந்
திருந்தவோர் பொழுது நில்லா தெனுமது கொண்டு தேறே. (எக)

ஆதலா லறிஞர் மூன்று வறவுரப் பேசிக் கொண்டி
நீதியிற் கைக்கொ ளின்று நின்னது புரவி யாக
வீதியிற் கயிறு மாறி விட்டபி னன்மை தின்மை
யோதுவ தமது பார மல்லமே லுன்ன வெல்லுன். (அ0)

அத்திறஞ் சொல்ல கில்ல வறிவனீ யறைந்த தொக்கு
மூத்தம நன்மை தின்மை யுன்கையிட் டென்கை புக்கா
லெத்தையு மறிதல் வேண்டா வென்னவே முற்று மென்னச்
சித்திர மாக்க டம்மைத் தென்னவன் கைக்கொ டித்தான். (அக)

* எடு, எக, எஎ, எஅ, எக - இவ்வெண்ணிற்குரிய பாடல்கள் சில ஏட்டுப் பிரதிகளிற் காணப்படவில்லை.

ஏத்திமா வறிஞர் முன்னு வினியபே ரன்பிற் கூடிச்
சேர்த்தநம் மிடத்தண் டான செழுங்கன கங்கண் முற்றும்
பார்த்திடி னின்றி வற்றேர் பரிக்குநேர் விலைபோ தாவால்
வாய்த்தன குதிரை யென்று மன்னவன் வாங்கிக் கொண்டான். (அ2)

அய்யமில் லாமன் முன்னின் ரூவணி மூல நன்னாட்
டெய்யபே ருலகுக் கெல்லாந் துளங்குரா வுத்த ராயன்
மெய்யைமெய் யுடைய மெய்யன் மெய்யடி யாரை வேண்டிப்
பொய்யிலா மன்னன் காணப் பொய்ப்பரி மாற்றஞ் செய்தான். (அசு)

மின்னிய வுலகு தன்னில் வித்தின்றி நாறு செய்வோ
னன்னெறி யில்லாப் பொல்லா நரகனைத் தேவு செய்வோன்
மன்னிய நரக டம்மை மறுகெலாம் வாவி யேறித்
தென்னன்முன் குதிரை யாகச் செய்புதோன் ரூமல் விட்டான். (அச)

வந்துறக் கயிறு மாறி விட்டபின் வரிசை கூரப்
பந்தியுட் கட்டு மென்று பரித்துறை யாளர் கையின்
மூந்துற வடைப்பப் போற்றி யவரவர் முதுபே ரன்பிற்
றந்தமில் வகையிற் சேர்ந்து தனித்தனி கைக்கொண் டாரால். (அஞ)

இக்கெறி மன்னர் மன்ன னினிமைகூர்ந் திராவத் தற்கு
நன்மைகூர் வரிசைத் தாசு நல்குவ மென்று நல்கக்
கொன்னுறு கரஞ்சேர் செண்டி லேற்றுமூற் கொம்பிற் சேர்த்துத்
தன்னடி யாரை வேண்டிச் சடைமிசைப் பூணர்ந் கொண்டான். (அசு)

பாடன்மா முனிவ ரேத்தப் பாண்டியன் நிருமுன் னெய்தி
நீமொ றேடுஞ் சொக்க னின்பரி யுகைத்துக் காட்டிச்
சேடன்மா நிலத்தா ரன்றிச் சேணுளா ரெல்லாங் காணச்
சூடலாற் றாசு சொக்கன் றாசென வழங்கிற் றன்றே. (அஎ)

ஆங்கது சண்டி லேற்பச் சீறிய வரசற் கண்டு
தீங்கல வாத வோர் தேசவா சார மென்ன
வோங்கிய தியாக வேத வொழுக்குமென் றெவர்க்கு நாசு
நூங்கில் லாம னல்க வாங்கிமுன் சூடி ரூரால். (அஅ)

முன்னுறச் சென்று பன்றி நேதோண் முளரி சூடிப்
பின்னியன் முனிவ ரங்கண் பிடித்தபத் தெடுத்துப் பா
நின்னுடை நினைவு வந்து முடித்தன நேச மிக்க
னன்முனி யடிவி டென்று ரூயக னருளிச் செய்தான். (அகூ)

ஈற்றிரு மேனிக் கீடு நவையற விட்டுக் கையிற்
போற்றுகை வாளும் வாங்கிப் புரவிமேற் கொண்டு காணச்

சற்றடி வடிம்ப சைத்துச் சடைமுடி யிலங்குந் தூசு
மற்றுமோர் கங்கை யென்ன வருபவ னுருவம் போற்றி. (கூ0)

பல்வித வலங்கா ரஞ்சேர் பாய்பரி யுகைக்கு மிக்க
செல்வமார் சிறப்பி னுசை யுடையனு மீசன் றென்ன
னெல்லையி னீந்த தூசு சூடினு னும்பர் கான
மல்லல்கூர் கமலக் கையிற் கபாலமார் வாங்கு வாரே. (கூ1)

கண்டவ ரமைச்ச னுரைக் கடவுளே வியந்து செங்கை
முண்டகங் குவிய நெஞ்ச முண்டக மலரக் கண்க
ணுண்டுளி சிந்த வீந்த துவலருங் குதிரை யீடு
கண்டன மென்ரு னந்தக் கடலிடைத் திரைத்தா ரன்றே. (கூ2)

வாழ்ந்துபொற் பட்ட மூன்று வரிசைகள் வாத வூரர்க்
கீந்துகல் விடையிற் போக்கி யெழுந்ததன் னுழைக்கண் வேந்த
னூர்ந்தபல் லியங்க ளாலே யவனியை நிறைத்துச் சார்ந்தான்
மூழ்ந்துசெவ் வந்தி மாலை தபனனூர் சாத்தக் கண்டு. (கூங)

குணந்தரு கணங்க ளோடு குறுகைசெய்து தேவர்
பணிந்துபின் வரமூன் போன பத்த கள் பத்தன் முனும்
பிணைந்தபல் செய்தி யெல்லாம் பிதங்குதன் பெரிய கோயி
லணைந்துபே ரங்க யற்க ணுமைமையிற் கருளிச் செய்தான். (கூச)

சயந்தரும் பெருமை மிக்க சம்புவின் குதிரை யீடு
வியந்துகற் பவர்ப ரிந்து கேட்பவ ரிடத்து மெல்ல
முயங்குநல் குரவு கீங்க மூத்தவ ணீங்க கீங்கா
சயந்தரு மினைய மங்கை ரண்ணுதற் கையு மின்றே. (கஇ)

வே று.

அரிய நாயக னர்வினை யாடிய
புரவி யீடு புகன்றனை மன்னவர்
பரவு மன்னவன் பத்தியிற கட்டிய
பெரிய கோடகம் பின்னசென் செய்தவால. (கக)

ஆகத்திருவிருத்தம் - கூகஇ.

உகூ.—குதிரை நரியான திருவிளையாடல்.

இருமைதரு மதனைகர் கின்ற மாய வினப்புரவி முகமுகம்பார்த் தென்னே யென்னல், வெருவவடி யுண்டதல்லாற் கழுத்துங் காலும் வெங்கயிற் றும் கட்டெண்டே மேலு கிற்பிற், ரூருபடப் புண்படுவே முனவு மில்லை கொள்ளிவெர் புல்லிவெர் பாவம் பாவு, நரருமினித் தொத்துவர்காம் விடியு முன்னர் நம்முருவங் கொடுமுவகீ கடவோ மென்றே. (க

மிடற்றிலுறு கயிறெயிற்றுற் கங்குற் போதே மென்றறுத்து மதியாதி நிக ளாகிக், கடைத்தெருவும் வாயில்களு மடமு மன்றுங் கடிமனையு மங்க ணமு நுழைந்து மற்றெவ், விடத்திலும்புக் கொன்றுக்கொன் றுறுமிச் சள் ளிட் டிரும்பசியா லிகல்செய்து நகரி தன்னுட், புடைத்தெருவு மெழுந்திருப் பச் சுழல வோடிப் போகாம லூனையிடப் புகுந்த வன்றே. (உ)

வேறு.

மண்டு மமரர்கள் கண்டு நகையுற மாறன் வெருவுற நீளவே
தொண்டை விடுவன வண்டம் வெடிபட நண்டை நினைவன துன்றியே
பண்டை நெறியினின் மண்டை யகழ்வன பற்றி மனைமறு கெங்கணுங்
கண்ட வவரவ ரஞ்ச வுறுமுவ கள்ள முறுமன முள்ளவே. (ஊ)

வேறு.

மற்றது கண்டு நின்ற வகைத்துணை யாளர் முற்ற
முற்றிய பயத்தோ டென்னுய் மூடியுநீ தெனக்க லங்கிக்
கொற்றவன் றிருமுன் சென்று கூறுவார் புலரு முன்னம்
பற்றல ரேறே நர்த்தம் பற்றியுள் விசேடங் கேண்மோ. (எ)

இன்னவென் றறிந்தோ மில்லை யிரவிடை யாணர் மாக்க ணன்னரி போற்கி றுத்து நம்மூளைார்க் காளு முன்ன
மூன்னெழ வெருவிக் கையி லகப்படா தோடி முற்றுந்
தன்னமார் தொண்டை யாலே தரணியை நிறைக்கக் கண்டேம. (ஙு)

பழுதில்கண் டெயின்றே மில்லை பருப்புகெய் கருப்புக் கட்டி
யெழிரை மட்டித நிட்டே மிதமிய புல்லு மிட்டேங்
கழுவிய பயறுங் கொள்ளுங் கடலையுந் துவளா யோடு
முழுவது ஞ் சிறக்க வீட்டே மொக்கனி முட்டக் கட்டி. (சு)

உற்றவை மற்ற வற்று ளொன்றையி லாது பண்டை
வெற்றிகொள் புரவி தள்ளு மறிக்குழு வேழக் கன்று
குற்றமி னில்லி யாடு குக்குடஞ் சூக ரங்கண்
மற்றுமிங் குள்ள வற்றின் மணிக்குடர் பிடுங்கக் கண்டேம். (எ)

இக்நெறி வினோ தவெள்ள வேங்கிகீ யெரித்து வீழா
மின்னற விடக்கு மேயோ வினைவதற் கேது வேதோ
நன்னெறிப் பொருட்கு நீங்கு நுணுகுமோ நெறிக்கே துண்டோ
செந்நெறி போர்க்குக் குற்றஞ் செய்தன வுளவோ வின்றே. (அ)

குருமொழி பிழைத்த துண்டோ கோளர்வாய்க் கேட்ட துண்டோ
தருமநேர் குன்றிற் றுண்டோ தகாக்கொலை செய்த துண்டோ
வரமழக் கொண்ட துண்டோ மறைநெறி கோடிற் றுண்டோ
வரவிதி வசமோ வேதோ வறிவிலே னெனவே யார்தான். (கூ)

வினைகொண்மண் டபத்துப் போந்து மெலிருவோ னென்கொ லென்று
பொருவருஞ் சிறப்பின் வந்து போற்றிடு மமைச்சர்க் கண்டு
தெரிவுறப் புகுந்த வாறு செப்பலீ யெரிர்த்தி யாரு
மிருநில நோக்கி நின்ரு ரியம்பவோர் மாற்ற மின்றி. (கஎ)

தகவொடு நாளுஞ் செய்யுஞ் சடங்குகண் முடித்து ளத்து
ணைகையொடும் வாத வூரர் நணுகியீ தறியார் போலப்
புகலரும் தழலிற் ரேய்ந்த புண்டரீ கமபோன் மிகை
முகநனி புலரு மன்னன் முன்பணிந் தென்கொ லென்ரூர். (கக)

மாதிரங் கண்டு நல்ல மதியுடை யமைச்ச னேநீ
காமடிங் குனையா ரொப்பார் நல்லகல் யாண னன்ரே
கூடிய பரிசன் ரூகக் கொண்டுவந் தனையே யுண்டோ
தேடிய வருமை சற்ரே தினருவே றுண்டோ வென்ன. (கஉ)

பகையிலா வேந்தே யெங்கும் பழுதற நேடி நல்லோர்
புகழயான் கொணர்ந்த தெய்வப் புரவியிற் பொல்லாங் குண்டோ
வகைகுகை நெருநற் போதே வரையறுத் தறிஞர் மூன்ரு
வகைகூழ லொடிகைக ளொண்ட தாரறி யார்கூ றென்ரூர். (கரு)

அணிந்திது நெஞ்சஞ் சாம லறைவதி னெருநற் கண்ணீ
ரொணர்ந்தமா நரிகளாகிக் கொடுங்குரல் காட்டி யூருட்
பிணமபட யாவுங் கொன்று திரிகின்ற செய்தி பித்தா
வுணர்ந்தனை யிலையோ கெட்டே னினியுனை நிந்தியோ வின்றே. (சூச)

மேலுயர் குருவின் மாட்டும் வேந்தர்கண் மாட்டுந் தூய்மை
சாலுநான் மறையோர் மாட்டுந் தயாவுடைத் தோழர் மாட்டுஞ்
சீலமா தவத்தோர் மாட்டுஞ் சிந்தையஞ் சாது வஞ்சங்
கோலுமூக் கருக்குத் தண்டங் கொலையலா லுண்டோ வேறு. (சுடு)

வெற்றிஞ் சிவைபை யெல்லாம் வெம்பரி யாக்கி யின்றென்
மற்றுனை தன்னுட் கட்டப் பண்ணினே மதிம யக்கி
யிந்திர ஞாலஞ் செய்வ தெம்மூட னேயோ சாதி
யந்தண னலை யான்மற் றறைவதிங் கென்னே நின்னே. (கசு)

வேந்தர்பொன் னழித்தோர் கல்லோர் வீடுமார்க் கஞ்சா நிப்போர்
வாய்ந்தமா வுலகத்து வாசி வாரியப் பெருமா னெங்கே
சேர்ந்தசாத் தவரோ சொல்லாப் திண்ணிமை யோடு மெல்லச்
சார்ந்தகின் மேனி முற்றுந் தண்டிக்க வடிக்குங் காணே. (கஎ)

ஆணை மோதிற் றிந்த வடைவுசெய் வதற்கோ வென்று
கோரமா மொழிகள் கூறிக் கூற்றென முறைசெய் வோரைத்

நீர்வற வழைத்து வெய்ய சிறையறை வனைத்து வைத்துச்
சாரரும் பொருள னேத்துந் தண்டித்து வாங்கு மென்றான். (கச)

ஆங்கவர் தம்மைக் கைக்கொண் டகன்றவ ரிணையி லாத
வோங்குபே ரன்பு கண்டுள் ளுருகிமெய்ந் நலியா ராகி
யீங்கிறை பிணித்த வாறு செய்திடா விடினை மக்குத்
தீங்குறு மென்று வெய்ய சிறையறை வனைத்து வைத்தார். (கக)

பிறங்கிய வடிவான் மிக்க பெரும்பருந் துரக மெல்லாங்
குறும்பெரு கரிக ளாகி கெடுங்குரல் காட்டக் கூற்றிற்
றிறம்பட முனிந்த தென்னன் சிறைபுகுந் தழுங்கி மிக்க
வறந்தரு முனிவன் பின்னென் செய்தன னறைதி யென்றார். (உ0)

ஆகத்திருவிருத்தம் - எகடி.

கூ0.—மண்சுமந்த திருவிளையாடல்.

பொறையகத் துடைய வேந்த னமைச்சரைப் போக வேவி
யறையகத் தொழியாத் துன்பத் தொடுபுகுந் தழுங்க விப்பான்
மறையகத் தோரி ரும்பு தருமனத் தேனை யென்று
சிறையகத் தோதா முன்னஞ் சிவனகத் தருள்சு ரந்தான். (எ)

வே று.

மொகியில் வளசேர் தமிழ்நாடும் பொய்யா வையை மாநதியு
மதுரை நகரும் பாண்டியனு மண்ணுஞ் செய்த தவத்தானுந்
திகழ்செய் தொண்ட ரகமகிழத் தொண்டு செய்து பிட்டளிக்கு
முதுமா மங்கை தவத்தானு முகிழ னகனை நினைப்பிட்டான். (உ)

பணிந்த வருணன் றனைநோக்கிப் பண்டே நமக்கு நனிநலல
குணஞ்சேர் வேத முனியிருக்குங் கொடிய சிறையைக் கண்டனையே
கணஞ்சேர் பொழுதிற் றுழாது கங்குற் கண்ணே களைகடப்ப
மணஞ்சேர் பொருள்கொண் டொருநதியை வருவிப் பாயென் றறிவித்தான்.()

மேக நாத னெழுந்திரங்கி மெய்கள் கருகி மழைவிடக்கண்
டாகங் கலக்கி வேகவகி யருங்கால் கட்ட நில்லாது
பூகந் தெங்கு பறித்தெறிந்து பொருமீன் மறியப் பரந்தழுங்கி
மாக முட்டப் பயங்கொண்டு வந்த தெவரும் பயங்கொள்ள. (ச)

மன்ற நிகழ்தென் கரைகடந்து மதுரை நகருட் புகக்கண்டு
தன்று மிரவிற் பறையறையுஞ் சும்மை கேட்டு வாள்வழுதி
கன்றி மனமென் ஞருகி கால மெழுந்த காலத்திங்
கென்று பரவை யெனப்பரந்த தின்றே மூடி வென் றழிந்தெழுந்தான். (ஞ)

ஆண்ட வதிகா ரியையழைத்தின் றருள்சேர் முனியை வணித்ததனு
லீண்ட வந்த தோவறியே னிறைவன் செயலோ தெரியாது
மாண்ட கரையை விளாவினிற்போய் மனைக டொறுங்கோ லறையிட்டு
வேண்டி யடைப்பா யெனப்போக விட்டான் விடிந்த திருங்கங்குல். (க)

செருவார் கணைக ருடன்கூடிச் செல்வோன் றண்டஞ் செய்தூரீ
னைசேர் மிழவர் மிறியோர்கண் முதலோர் நடுங்க வடித்தெற்றித்
திசைசேர் கரையை யளந்திட்டுக் கொடுப்பத் தெருமந் தவர்பெரிய
வனாயே யெனத்தங் கோலறைகண் மடிந்து சுமத்தப் புகுந்தனரால். (எ)

முதுபேர் நகரிற் றென்கீழை மூலை மனையி லிருப்பாளோ
நிதமார் பிட்டு வாணிச்சிக் கிடுங்கோ லறைக்கோ ளாலின்றி
விதிரா வழுது விழுந்தெழுந்து மேவு தண்ட மாற்றுமற்
பதிவா யுழன்று திரியுங்காற் கண்டா னெங்கும் பரந்துள்ளான். (அ)

நாதப் பறையன் பெருங்குயத்தி பங்கன் றுங்க நஞ்சுண்டோன்
வாதைக் கிழவி பிட்டுதிர்க்கு மடிந்து மண்மீ தருக்கொள்வான்
சோதிக் காதிற் றழைசெருகிச் சும்மா டம்மா மதியாகவிப்
பேதித் தறுதற் கச்சைபுனைந் ததிலே விட்டான் பெருங்கொடுக்கு. (க)

மழுவைப் பிரமன் றலையோட்டை மண்வெட் டியுங்கூ டையுமாக்கி
யழகார் தோளின் புசைவைத்தொன் றணிமா முடியிற் கவித்தொன்று
பழுதி லொழியா நகைதுளங்கப் பதிஞ ருண்டின் பருவத்திப்
புழுதி படைத்த திருமேனி பொலிய வலிய நடைநடந்தான். (கo)

வருந்து மவடன் பாற்சிட்டி வாரா யம்மே வீழ்ந்தெழுந்து
பரந்து திரிகின் றனையிந்தப் பார்மே னினக்கின் றென்போலத்
திருந்து கொற்றுள் கிடையாது வேண்டு மாயிற் செப்பெவரும்
விரும்பி யழைப்பப் போகாதிங் கணைந்தே னின்னே வேண்டியென. (கக)

வே று.

நல்ல வவதாரத்தே நண்ணினீர் நாயகரே
தொல்லை வினையறுக்குஞ் சொக்கோ வறியகிலேன்
மெல்லியமெய்ந் தோவ வடிப்பரிகல் வேந்தரான்
வல்லியினின் மண்சுமக்க வல்லீரோ கீரென்றான். (கஉ)

வேலை யுலகில் விறகு சுமப்பதல்லாற்
சாலுமுடி மேல்வைத்துத் தண்ணீர் சுமப்பவன்யா
னேலவரு மண்சுமக்க வல்லே னினையாமற்
கூலியெனக் கேது தருவா யெனக்கூற. (கங)

அந்தித் திருக்கும் பொருளில்லை யையரே
கந்தித்து வெயதாய் நறுவிதழ்க் கண்ணுகுச

சிந்தைக் குவந்திருக்குஞ் செவ்விகூர் பிட்டெண்டி
மூந்தத் தருகுவல்யா னென்றுண் முதுகாயாள். (கச)

சிட்டனருட் சொக்கன் றிருவுளத்துக் கொத்தவணீ
வட்டமுறு பிட்டென்ன வேண்டா வமைந்தம்மை
யிட்ட மதுகே ளெனக்கிங்கு நீயிட்ட
பிட்டேயிரு மாமென்றுன் வேள்வி யவியுவந்தான். (கடு)

வேறு.

தக்கதோ மனிதர் பொல்லார் கோலறை தாழா தோங்க
விக்கணத் தின்க ணுற்றங் கனையடைத் தயின்றி வற்றை
யொக்கமண் வெட்டி மூட்டச் சுமத்திடு முழப்பா தென்று
மிக்கமென் பிட்டுச் சுட்டுக் கொடுத்தனள் விருப்பங் கூர்ந்து. (கசு)

நின்றது வாங்கிக் கச்சைச் சுற்றுழை நெருங்கக் கட்டித்
தின்றிது போலொன் றில்லே சிவனறி குவனென் றூடி
மன்றலம் பொழில்சூழ் வையைக் கமைமருங் கடைந்து மாறு
வொன்றிய நகையி னேடு மூலாவினு னகில நாதன். (கஎ)

இனியன பெற்று னல்லோ ரெவர்க்குமிட் டுயில்வ தல்லாற்
றனியயி லார்க ளென்று சாற்றுவார் பழையோ ரென்று
கனவிய வட்டப் பிட்டுக் கைக்கொடு பிட்டுப் பிட்டு
வினைபடச் சுமக்குங் கூலி வேலையா ளர்க்கு மீந்தான். (கஅ)

வஞ்சரு பிட்ட னேத்து மாண்டபின் மீண்டு மெய்தித்
தளர்ந்திடே லம்மை சாலத் தளர்ந்தியான் பசியால் வந்தே
னளந்தகோ லறைபார் சென்று சிறிதொழிற் தவற்று ளெல்லாந்
துளங்கவா னுறச்சு மந்தேன் சொக்கனு ராணை யென்றுன். (கக)

சுத்தமா வதினை வேண்டிச் சுமந்திடான் சுமந்தே னென்ன
வுத்தம மெய்தோய் மண்கண் டிவகைகூர்ந் தரசே யின்னுஞ்
சித்திரப் பிட்டுச் சுட்டுத் தருகுவல் செல்லு மென்று
வித்தகப் பிட்டுச் சுட்டுக் கொடுத்தனள் வெம்மை கூர. (உ0)

புகழ்ந்தது வாங்கி யொல்லே போந்திரும் புனலி யாற்றின்
றருங்கரை யடைந்து முன்போற் றுனையின் றெவர்க்கு நல்கி
யுகந்தகொற் றுளர் நாப்பண் வளம்பல வுதைத்து நல்ல
சுகம்பட வடைப்பான் போல வடைப்பண்டண் சுமவா னுஞ்சி. (உக)

தங்குகோ லமைய னந்த வுயர்பெருங் கணக்க ரங்கட்
டூங்கறச் சுமக்கு நல்லா டெரிப்பதற் கணையக் கண்டு
வாங்குநும் வினாவி னேடுமை வந்துபோ் செயக்க னல்லா
ளிங்கெனை யொப்பா ரில்லே யென்னுமுன் சொரியு மென்றுன். (உஉ)

மற்றுள பெருங்கொற் றுளர் சுமவாது மருட்டி யெங்குந்
தெற்றிய லிவனே யோமுன் றெரிப்பதின் றெனவி லக்கக்
கொற்றுள விவரி லீங்கோர் கூடைமண் சுமந்தா ரில்லே
மூற்றுமிங் கியானே நின்று சுமந்தன னெனமொ ழிந்தான். (உங)

செம்மையின் வேலே யொன்றுஞ் செய்தில னேனுஞ் சொல்லு
மம்மர்தீர் வார்த்தை யாலே யாரையு மழுப்ப வல்லா
னம்மையுங் கோளு ரைக்கத் தருமிவ னென்ன நாடித்
தம்மூளே வெருவி முன்னர்த் தெரித்தனர் தமிழ்க்க ணக்கர். (உச)

கொடியதிண் கணக்கர் போகக் குழம்புகொற் றுளர் நாப்பண்
முடியணை கூடை யாக முறுவல்கூர்ந் தினிய பாடித்
தடமிசைக் கொட்ட ணைத்துத் தாண்மிசைத் தாளே றிட்டுக்
கிடையற வுலக மெங்கும் படர்ந்தவன் கிடந்தான் மெல்ல. (உஞ)

வளர்கரை பார்ப்பான் வந்த மன்னவன் மனிதர் கண்டு
ளிளரமண் சுமவா ளுகிக் கிடப்பவன் யாவ னென்னத்
தளர்வுடை வேலே யாளர் சாற்றுவார் மற்றிவ் வூரு
ளொளிவளர் பிட்டு விற்பா ளிட்டவா ளெனவு ரைத்தார். (உக)

நெறிப்படக் கிடப்ப தென்னை வடிவணீ கின்னை யாருந்
துறைசீசுமை யாளென் றிங்குச் சொல்கின்ரு ரின்று னக்குக்
குறித்தகோ லறையி லாங்கோர் கூடைமண் ணிட்டா யில்லே
கறுத்தநி காரிக் குன்னைக் காட்டுவம் போது கென்ரூர். (உஎ)

நல்லகா ரியம தென்று நயந்தவ ரோடுஞ் செல்லக்
கொல்லெறி யடிகுத் தென்று கூற்றெனத் தண்டஞ் செய்யும்
வல்லநி காரி கண்டு மனத்தநி சயித்துச் சால
மெல்லிய வடிவ னீயார் விளம்பிடு விளங்க வென்ரூன். (உஅ)

தந்தைதாய் நட்டோ ருற்ரோர் சகோதரர் பொருளொன் றில்லே
யிந்தமா நகரி லியானேர் மூலயி விருக்குங் கொற்ரு
ளுய்ந்திட வெவர்க்கு நாளு முதவுவ லென்னைக் கொண்டி
பந்தநி காரிக் கென்ன காரியம் பகர்தி யென்ரூன். (உக)

புத்தியு ளொழியாச் சீற்றம் பொருந்தநி காரி நல்ல
பத்திசேர் குணவான் போலப் பகர்ந்தனே பகுந்து னக்கு
வைத்தகோ லறைக்கோர் கூடை மண்சுமந் திட்டா யில்லே
யுத்தாஞ் சொல்லா நின்ரும் கண்டில முனைப்போ லெங்கும். (கூ0)

சதமுறை யடித்தற் குன்னைத் தருந்தகா தல்ல வன்றன்
விதமுறு வடிவங் கண்டே மெய்யெரிப் பட்ட தில்லே

யதர்பட விளைவொ டெம்போ யடையடி படாதென் றேவப்
புதியவ னடையா ளுகிக் கிடந்தனன் போந்து முன்போல். (கூக)

வே று.

அவ்வயினில் வெய்ய வரசன் விடையின்வருஞ்
செவ்வி முறைசெய்வோர் தீரக் குறைபார்த்துக்
கவ்வைவிளைத்து வருங்காற் கையழிந்து
தவ்வுபுனற் கோலறையைக் கண்டார்க டாழ்வாக. (கூஉ)

காய்ந்து விளைவி னிகலிக் கறங்கென்னச்
சேர்ந்து சுமக்கின்ற சிற்றூ யெற்றுபுன
லூர்ந்தகளை யெங்கு முயர வுயராமற்
சூழ்ந்ததிது யார்கோ லறைவிளைவிற் சாற்றுகென. (கூங)

மன்ற றிகழ்பிட்டு வாணிச்சி கோலறையீ
தின்றிங் கவளிட்ட கொற்ற ளிவணுழப்பி
வன்றிறலீர் யாங்கள் சுமப்பமதி யாதுகிடந்
தின்று வினையாடு கின்றன்போ யென்றார்கள். (கூச)

வெந்தழல்கண் சிந்த வெருண்டாங் கவர்கண்டு
சிந்தைசிறி தஞ்சாது தீரத்து மண்சுமவா
திந்த வினையாட லெக்கா ரணமென்னக்
கந்தரநோ வச்சுமப்பல் காரணமொன் றில்லென்றான். (கூஞ)

இன்று விளைவி லெழுந்து சுமவாயேற்
பொன்ற வடிப்பமென வஞ்சினன் போலெழுந்து
மன்றறிகழ் கொட்டா லொருகூடை மண்வெட்டா
வென்றிமுடி மேல்வைத்து மெல்ல நடையிட்டான். (கூசு)

வே று.

உன்னவரி யான்மேன்மை யங்க யற்க ணுமைகொங்கை படச்சிவக்கு
மெய்யன் முற்றுந், தன்னுருவ மென்னுமது மண்ணிற் காட்டத் தளருநடை
யிடக்கண்டு தண்டஞ் செய்யுந், தென்னன்முறை செய்வோர்க ளுந்தோ விற்
தச் செற்றுயக் கொற்றூளின் கையிற் சற்று, நன்மையிலே யுடைப்படையா
னெனப்பி டித்து நடுமுதுகிற் கறுத்தடித்தார் சிவக்க நாடி. (கூள)

வே று.

மன்னிட வடிப்பக் கங்கைக் கரையுயர் மண்ணே யோங்கக்
கன்னல்சேர் செந்நெல் வைகைக் கரையிடா முறுவ லோடு
மென்னேயே னடிக்கின் றீரென் றியைந்தகொற் றூளர் நாப்பண்
டன்றுபு வெளிதாகான் புக்குத் தன்னேத்தான் பிழை ஒ மேத் என (கூள)

படுமெழு மதியை நந்தம் பாண்டியன் மரபெ னத்தான்
முடிமிசைச் சுமத்த லன்றி முடிமிசை யுவர்து வைத்த
வடிவுடைக் கங்கை யாறு தென்னவன் வைகை யாற்றிற்
கடிபட மண்சு மந்தா னவன்றிரு வருளுக் குண்டோ.* (கூக)*

இறையவ ளெளிப்ப கின்ற விறைமுறை செய்வோ ரோடிக்
கறுவியெங் கொளித்தா னென்று நேடிமூன் காணு ராகி
வெறிகமழ் பிட்டுச் சுட்டு விற்பவ ளிடத்தி மைப்பிற்
குறுகியாங் கவனைக் கண்டு தண்டிப்பான் கோலி னார்கள். (சo)

ஆங்கவர் கோலா முன்ன ரருளினு லெவருங் காண
நீங்கரு மிளமை பெற்று நிலத்தினின் றெழுந்து தெய்வப்
பாங்குடை யுருவத் தோடும் பரசிவ லோகத் தேகத்
தேங்கிய முறைசெய் வோரும் திகைத்தறி சயித்து நின்றார். (சக)

வேறு.

அடித்தபுளி மாறுபல சொல்வ தென்னே யரசன்முது கோவல்ல நம்பி
ராட்டி, முடிக்குரிய விந்திரனுன் முகன்மா லாகி மூப்பத்தி முக்கோடி தேவர்
தம்மிற், பிடித்தவரி லடித்தவரிற் பாலர் பார்ப்பார் பெண்டிரின் மூத்தோரி
னிற்பவற்றி, னடப்பவற்றிற் பறப்பவற்றி லூர்ப வற்றி னடுமுதுகி னிடைப்
புடைப்பு ணணுகிற் றன்றே. (சஉ)

போருந்துதலத் தோர்நகரோர் புறத்தோர் நாட்டோர் பூழியன்பாற்
சென்றறிவ மென்று சென்று, வளைந்தொருவன் மேலடியிங் கியாவர் மாட்டு
மன்னியதென் னெனமாறன் மாற னென்றாங், கரும்பெயர்பெற் றோதுந்
தன் முதுகு காட்டி யருட்சொக்க னறிகுவனென் றிருப்ப வாங்கண், டிருந்த
வெழுந் ததுவிசும்பி லெவருங் கேட்பத் திருவாக்குத் திருவாத வூர்க்காக. ()

பாண்டியனே வேதஞ்சொல் யாண்டு வாழி பாக்கியமன் ஞமக்கு வாத
வூரன், பூண்டதொண்ட னிவன்முகத்தா னம்மு ளோர்க்குன் பொருளறத்
தின் வந்ததனுல் வாங்கி யிட்டோம், வேண்டுவன பரியுமிட்டோம் விடுவித் தற்
குன் வேலியின்மண் சுமந்தடியும் பிட்டு முண்டே, மீண்டுவிடு விடுனெனக்கே
கன்மை சால விவனைத்தன் வழிநிறுத்தற் கிரங்க லென்றே. (சச)

அந்தவுயர் திருவாக்குத் தோன்ற யாரு மதிசயித்து மன்னவனே நோக்க
மன்னன், சிந்தைபய மெய்தியுறு புளகத் தோடுந் தேவர்பிரான் பரிமதுரைத்
தெருவி லேறுங், கொந்தகன்வாக் கிதுபரிமாற் றறுதி யென்று கொடுஞ்சிறை
யின் விடுத்தருகு வரவ ழைத்து, வந்தனைசெய் தினியபல வுபசா ரத்தால்
வணங்கினுன் திருவாத வூர் தாளில். (சடு)

சார்ந்தவென தறியாமை யாலே மிக்க தாழ்வுகள்செய் தேனவற்றைப்
பொறுத்துச் சாலச், சேர்ந்தருளிங் கெழுந்தருளி யிருப்பீர் போவீர் திருவுளத்தி

* இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை.

லடைத்தபடி செய்யுந் தூய, வேந்தர்புக ழருட்சொக்கர் நும்மேல் வைத்த மெய்யன்பு வையகத்துக் கண்டே மில்லை, யேந்துதிரு வாதவூர் நாய னீரே யெனத்துதிப்ப யாரும்வியந் திறைஞ்சி னார்கள். (சக)

செந்தெரிசேர் விசும்படையிற் ரூன்றுஞ் சொல்லைத் திருவாக்கே யெனத்தெளிந்தாய் தேவே றுண்டோ, நின்னையடைந் ததுகொண்டிப் பேறு பெற்றே னீக்ஷரிய வெம்பாசத் துவக்க றுத்தே, னென்வழியிற் போகுவலின் றைய நீக்கி யிணையில்லா வெற்தையையுண் டென்று ணர்ந்த, வுன்னருமிப் பிரமாணத் தானின் செல்வ மோங்கியிங் நீங்கின்றி யுண்மை யென்றே. ()

வே று.

வைத்தரு ணமச்சி வாய வாழ்கவென் றெடுத்தாங் கோதி
யுத்தமர் போகக் கண்ட வுவகைகூர் செழியர் கோமான்
பத்தியிற் பின்சென் றேத்திப் பணிந்துநல் விடையிற் போந்து
சித்திர மண்ட பத்து ளிருந்தனன் செயலே வாழ்த்தி. (சஎ)

வாழ்ந்தருள் பெற்ற வேந்தன் மந்திரித் தலைவ ரைப்பார்த்
தேய்ந்தகா ரியந்தா னுவ தழிவதிங் கினிநீள் வாரி
சூழ்ந்தமா நிலத்துத் தூய சுத்திர மொழிந்து நீதி
வேந்தர்மாட் டமைச்சி னுக்கு வேதிய ராகா ரென்றான். (சக)

தொன்னெறி வாத வூரர் சொக்கரு லயத்துப் புக்கின்
றென்னையா ளுதற்கு நாதா வினப்பரி யிட்ட தன்றி
மன்னிய மூடிவ ருந்த மண்சுமந் தனையே யந்தோ
வன்னமா மேனி நோவ வடியுமுண் டனையே யென்ன. (இ0)

உத்தர கோச மங்கை கழுக்குன்றங் குருவங் கண்டு
சித்திரக் கோவை பாடித் தில்லையம் பலத்து வாவென்
றத்தன்வா னத்து ளாப்பப் போந்தருந் தமிழ்கள் பாடிப்
புத்தன்வா தையும்வென் றியாரும் போற்றுபொற் பதம டைந்தார். (இக)

தொல்லைமா மன்ன னெந்தை சுத்தரு விருப்ப வேடன்
பல்லுறு மிறைச்சி நஞ்சம் பாலக னிறைச்சி யம்மை
நல்லபிட் டயிலக் கண்டே நல்லடி யார்க்கு நல்லான்
மெல்லியல் பாக னல்லால் யாருள ரெனவி யந்தான். (இஉ)

பொருவரும் கோயின் முற்றும் பொன்னிலுண் மேய்ந்தி யாரும்
பரவவெண் குடைக ளாசி பகுசோ மனாது சேரு
னரிவையர் முதலா நல்கி முன்னையி னன்பு பூண்டு
தரையினை யளவில் காலந் தருமான் னெறியி னுண்டான். (இங)

வெருவரு முற்றும் பட்ட வெந்திற லடியும் வேய்ந்த
வொருதனிக் கூடை மண்ணு லுயர்ந்தநீள் கரையு மூத்த

ஸோமக ஞயர்து றக்க ணண்ணிய வாறுங் கண்டு
பாவிய மனிதர் முன்னிற் பல்பெருஞ் சிறப்பின் வாழ்ந்தார். (இச)

கிறைவுறு மதியங் கண்ட நெடுங்கடல் போலச் செல்வம்
பிறிவற விளங்கி மன்னன் பெருதபே ருலகம் பெற்றூன்
மறைபறை யிறைவன் பிட்டுண் டடியுண்டு மண்சு மந்த
வுறுகதை கற்போர் கேட்போ ருயருல காள்வ ரன்றே. (இடு)

சுந்தர னவதா னங்கள் சொல்லுவோர் கினைப்போர் கேட்போர்
சந்தத முனிவர் வானோர் சாரணர் சித்த ரேத்த
மூந்தொளி விமானத் தெய்தி மூவுல கத்தி னோடு
மிந்திரன் முடிமேற் ரூள்வைத் தேறுவர் சிவலோ கத்தே. (இக)

ஆகத்திருவிருத்தம் - எஎக.

ஈக.—விருத்தகுமாரபாலரான திருவினையாடல்.

சீர்விளங்கு முன்னெருகாற் பாண்டி நாட்டுச் சிறந்தபெருங் கிராமத் தோர் மறையோன் செல்வம், பார்புகழுங் குலமொழுக்கம் விழுப்ப மிக் கோன் பணிந்துஞரச் சொக்கற்கே பத்தி பூண்டோன், பேரியலாண் மகவி ன்றி யருமை யாவோர் பெண்பயந்து வேதத்தால் வடிவாற சொக்கை, கேச வரு முயர்பிரம சாரிக் கிந்த நேரிழையைக் கொடுப்பமென நிச்ச யித்தான். (1)

இத்தகவி னிருந்தோனெண் டொடிக்கு நல்யாண் டெட்டுறை தரு காலே யோதி மிக்க, புத்தியினேர் பாகவதப் பிரம சாரி புக்கிலழைப் பிச்சை கொள்வா னணுகக் கண்டு, வித்தையினல் வடிவான்மற் ரொன்றுங் காணன் விஸாவொடென் னியையுதகஞ் செய்யக் கண்ட, சுத்தமுடை மாதாவுஞ் சுற் றத் தாருந் துயருழந்து நனிவெகுண்டு சோகங் கூர்ந்தே. (உ)

குன்றமனந் தாதையையிப் பிரம சாரி குடிமுதல்கே ளாதினிய வேதங் கொண்டே, நன்றியினை கன்னிதனை யுதகஞ் செய்தாய் நன்றறியா யென்றி கழ நல்ல தாதை, யொன்றியிவன் கோத்திரருத் திரங்கேட் பாமிங் கும்பர் பிரா னருளினு லொத்த வாயி, னின்றிதுகாண் பேமென்று கேட்பச் சொ ன்னு னிடுகுறிகோத் திரமுதன்மற் றியாவுந் தோன்ற. (ஈ)

இன்பமுறு பாகவத னியாவுஞ் சொல்லி யிடுகுறியே றென்னலுமே யே ங்கி கின்ரூர, ரன்புமுதற் பலகுணங்க ளுண்டா னுஇ மவனிமீ தொருகுற் றம் யாவர் மாட்டுக், துன்பமுற வுண்டாகா தினாது வேத சுத்திரங்கோத் திரா ங்கல்வி யொழுக்க மற்று, நன்புதரப் பெற்றேமென் ரூறி யாரு நலந்திகழ்மா தாவையுஞ்சொன் னயத்தா லாற்றி: (ச)

கூஅ.—கழுவேற்றின திருவிளையாடல்.

கட்டெழுன் மாறனுறு காசினிவி ளங்கச்
சிட்டர்புகழ் கொச்சைமுனி சென்றருளின் விட்ட
மட்டவிழ்பொ ழிற்றிரும டத்திலெரி யிட்ட
துட்டர்கழு வேறுகதை சொல்லலுறு கின்றேன். (க)

வே று.

கன்னன்மொழி மடவாரு மமைச்ச ரூருங் காழிநகர்ப் பெருமானைத்
தனிய ழைத்தி, முன்னவில்வா ருயர்ந்தசிவ சமயங் குன்றி முழுதிலமுஞ்
சமண்மூடிம் தியாவும் வல்ல, வின்னருள்சேர் சைவசிகா மணியே வெல்வ
தெங்ஙனவர் பலரொருவர் நாம மிழ்ந்த, தென்னனெனின் மன்னருள மறி
யொ ணாது திருவுள்ள மறியகிலே மெனப்ப னிந்தார். (உ)

இத்தகவென் னவில்கின்றீ ரிறையுண் டஞ்ச லேகுமென விடித்தமடத்
தமளி மேவி, நத்தகடு வெழுந்துணர்வார் புகன்ற தொக்கு நாமொருவ ரவ
ரெண்ணூ யிரவர் காணின், மெத்தியசூழ்ச் சியும்வல்லா ரவர்க டம்மை வெல்
வதற்குப் பல்புகழ்க்கு நல்ல சொக்கன், பத்தர்கள்பத் தினையல்லாற் றுணைவே
றில்லை பரசியவன் றிருவுள்ள மறிவோ மென்றே. (ஙு)

வே று.

சோதி வேதியர் தினைசெயு மவசொடுங் கூடி
யேத மீங்கிட விடியுமுன் னுலயத் தெய்தி

---

* இச்செய்யுள், சிலபிரதிகளில் இல்லை.

வேத வேள்வியென் றெடுத்திசை மேதகு பதிக
மோது மெல்லியோ மோமென வோங்கிய தோர்சொல். (சு)

அனேத்தும் வல்லவ னருட்டிரு வாக்கெனத் தேறி
நினேத்த காரிய முடித்தபே ரமைச்சரு நிறைந்த
மனத்து மீதருங் களித்தடி வணங்கிட நயந்த
வினேக்க ணில்லவர் சொல்லுவர் பின்னரு மெல்ல. (டு)

கலக வெஞ்சமண் கையரைக் களேந்திடா தொழியி
னிலகு சைவசித் தாந்தமுன் னிறந்திடு மிறந்தா
லலகில் வேதமும் வேள்வியு மழிந்திடு மழிந்தா
லுலக வேந்தனு மாரியு முலகமுங் கெடுமால். (சு)

ஐய மில்லென வறைந்திட வாங்கவர் விரைந்து
வைய மன்னனே வருநலந் திங்கினுக் குரியான்
றுய்ய காரிய மவன்வயிற் சொல்வமென் றடைந்து
பைய வோதுமுன் வழுதியும் பழுதிலே யென்றான். (எ)

பின்ன மாநெறிச் சமணரைப் பெருந்தண்டஞ் செய்வான்
கன்னி மன்னவ னியைந்தது கேட்டலுங் கடுகித்
தென்னன் முன்னரின் முன்னையிற் சிறப்பொடு மடைந்தே
மன்னு மாசனத் திருந்தனர் வைகிகத் தலேவர். (அ)

வே று.

மீற்றவ ரிருப்பக் கேட்டெண் வரைப்பெருந் தலேவ ராய
செற்றமில் சமண ரெண்ணு யிரவருஞ் செற்றங் கூர்ந்து
கோற்றவன் கான வென்றி குலேத்திடக் கடவே மென்றே
வெற்றிகொண் முரச மெற்றி யடைந்தனர் விரைவிற் கூடி. (கூ)

கருதினிச் சிறுவ னெண்ணெண் கலேமுதற் கல்வி யாவு
முரைசெழு முளத்து ளோதா தணர்ந்தவ னுயர்த ருக்க
மரியபல் கலேயால் வெல்ல லரிதுகை கண்ட நந்தஞ்
சுருதிமந் திரத்தால் வெல்வக் தோன்றவென் றெண்ணி யாரும். (கo)

வாரடா சிறுவ நீதான் மந்திர மேத நிந்தா
யோரினின் வேத நான்கி னேநிய வெழுத்த னேத்தின்
லீரியம் புழுத்தி ரண்டு வெட்டிய தொப்ப தல்லாற்
காரிய முண்டோ வென்றி கண்டிங்ஙன் களித்தல் வேண்டா. (கக)

படுவழி நினக்கொ ருக்காற் பலித்தது கொண்டா லித்தாய்
விடுவிடு காகஞ் செல்லப் பனேக்கனி விழுந்த தொச்சூங்
கடைவழி யிதுகொண் டோநீ சாதிக்க வுந்தாய் கற்றுப்
புடவியி லெம்மை வெல்வா ரில்லேகாண் புகலுங் காலே. (கஉ)

மணிநிக ழுன்றன் மிக்க மந்திரந் தனையு மெங்க
ளிணையிலா வீர மிக்க மந்திரந் தனையு மின்று
துணிவுற வெழுதி யேட்டைத் தோற்பவர் வெல்வார்க் காணத்
தணிவிலா நெருப்பி னுப்பண் டனித்தனி யிடவா காண்பேம். (கஙூ)

வேகாவே டையா ரீங்கு வென்றவர் போது கென்னப்
பாகாரு மொழியாள் கொங்கைப் பாலமு துண்டோர் மெல்ல,
வாகாதோ வென்றி யைத்தாங் கெழுந்தணி முரச மார்ப்பப்
போகாமுன் முருட்டுக் கையர் புறப்பட்டார் புரட்டுப் பேசி. (கச)

வஞ்சனை செய்வா னெண்ணி மறைந்துகின் றுதவி செய்யுங்
குஞ்சரந் தாங்கு கோயிற் கூத்தன்வாழ் தேத்தி ஞகா
தெஞ்சழல் வடகீழ்க் கோணத் திடுமென வேவல் செய்வோர்
மிஞ்சிட நெருப்பிட் டார்கள் விண்முடி வாங்க வாங்கு. (கஙி)

மானமி லாதோர் தம்மை மதித்துமு னடைந்த தேத்து
ஞானமா முனிவர் தாமு நணுகிடக் கண்ட வீச
னீனமில் புனிற்றி ளம்பாற் கன்றின்பி னிரங்கிச் செல்லுந்
தேனுவே யெனக்க ரந்து சென்றன னிரங்கி யாங்கு. (கசு)

நீதிசேர் செழியர் கோமா னேசமார் தேவி யோடு
மாதர் வமைச்ச ரோடு மளவில்சான் றவர்க ளோடுந்
தீதில்பல் லியங்க ணங்கச் சிறப்பொடு விளங்கி மிக்க
வாதினைக் காண்பா னுசை யுடையனு யடைந்தான் வந்து. (கஎ)

சுற்றநற் றவர்க ணெஞ்சந் துயருழந் தென்னு மென்ன
வெற்றியே நமக்கென் றெண்ணி விளைந்தியந் திரங்கண் மற்றுங்
கற்றமந் திரங்க ளெல்லாந் தனித்தனி கனத்த வேட்டி
லெற்றருந் தலைவ ரெண்ணு யிரவரு மெழுதி யிட்டார். (கஅ)

சிரபுரப் பால ரெந்தை திருவுள்ள மறிவே மென்றே
கருதிகின் றெழுங்கி முன்னர்த் திருமுறை வகுத்த காலைப்
பொருவரும் போக மார்த்த பூண்முலை யென்னு மிக்க
வரர்புகழ் பதிகந் தோன்ற வாங்கினர் மலர்க்க ரத்து. (கஙு)

கழறுமா மறைவி ளங்கக் கையுறு தூய்ய வேட்டைத்
தழைவுறு பதிக மோங்கத் தனிரிள வளசென் றேறி
யழலிடை யிடவே வாம லாதிமெய் யாத லாலே
பழுதற விளங்கிற் றியாரும் பரிவுறப் பச்சை யாகி. (உ0)

தருக்கமார் சமணர் தேர்ந்தெண் ணுயிரர் தருகி யாக
வரிப்பட வெழுதி யிட்ட மந்திர வேட னேந்து

நெருப்பிடை நணுகா முன்னர் நின்றவர் நகைப்ப வற்றற்
கருப்பிலே போலெ ரிந்து கணத்துநீ றெழுந்த தாலோ. (உக)

யாவையும் வேவ வேவா திலங்கிய வேடெ டுத்துப்
பாவமை முறையிற் கோப்பப் பத்தர்க ளெல்லி யார்த்தார்
காவலன் முதலா வுள்ளோர் களித்தனர் காண்பான் வந்த
தேவரு மதிச யித்தார் செழுமலர் மாரி பெய்து. (உஉ)

தெளிவுறக் கண்டெ தீயிற் றெளித்துநீ ரளித்துப் பார்ப்போர்
விளிவிலா துளைப்பா ரங்கித் தம்பனை கொண்டு வென்ற
பொளியுறக் காணுங் காலை மும்முறை யுண்டு வாது
களியுற வேண்டா வின்னுங் காண்பமுன் கல்வி யென்றார். (உங)

பெருகுமுன் விளைவி னுமெம் பெரும்புனல் வையை யாற்றுட்
பரிவுற வெதிர்போ யேறும் பத்திரம் வென்ற தாக
நரபதி சான்ற தாக ஞானிலத் தெவருங் காண
விருவர்மந் திரத்தை யுஞ்சேர்த் தெழுதியிங் கிடவா காண்பேம். (உச)

சிறுவனின் னேடெ திர்ந்து சென்றதே லின்று னக்கே
யறிவுடை யாங்க ளெல்லா மடிமையாக் கடவே மற்றும்
பறைதலிங் கொன்றும் வேண்டா பாடைக்குத் தப்பே மென்னாப்
புறவமா நகர்வாழ் ஞான பூரண ரருளிச் செய்வார். (உடு)

அடிமையி லாசை யில்லை யின்றுநீ ரவையிற் சொன்ன
படிபுகழ் வாதுஞ் சொக்கன் பரிவினுல் வென்றே மாயிற்
கடிமையி னும்மை முற்றுங் கழுதுகி யேற்று தற்கு
முடியவே யாசை யென்று ரியைந்தனர் வினையான் மூடர். (உசு)

உளப்படு மமைச்ச ஞரை யுயிர்க்கழு வினவா முன்ன
ரளப்பருந் தயாவு கூர்ந்திங் கையரே கையர் தம்மைக்
களத்துள வேற்றற் கென்றே கழுதியான் மூன்னஞ் செத்திக்
குளத்துற விட்டு வைத்தே னருளினு லெனக்கொ ணர்ந்தார். (உஎ)

அங்கது கண்டு சால வதிசய முற்று மற்றைப்
பாங்கிறீ வினையான் மூடும் பாதகர்க் கருள்சு ரந்தே
யோங்குநன் னலங்கள் கண்டு முணர்விலா மூர்க்கர் நீங்க
வீங்கிதற் கியைந்த தென்ன காரிய மெடுத்தற் கின்றே. (உஅ)

வே று.

பவங்க ணீக்கும்வெம் பாதக மாற்றுநற்
றவங்க ளல்குக் தலைமை தருக்தொழுஞ்
சிவத்த தாணிழல் சேர்த்திடுங் காத்திரத்
திவந்து பூணி னுருத்திர சாதனம். (உக)

வேறு.

வினைவினை முடிக்கும் தூய்மை யாக்கும்வெம் பாவ நீக்கு
மனவிடர் விடம்பேய் தெவ்வு மறலிவா ராமற் காக்கும்
புனையற மின்பம் வீடு பொருண்முத லெவையு நல்கும்
வினைகடி நால்வே தத்து மிக்கமந் திரவெண் ணீறு. (கூ0)

குலந்தரு நீதி மிக்க குணந்தரும் வேதஞ் சொல்லும்
பலந்தரு முயர்ந்த சாயுச் சியந்தரும் பழுதிலாத
தலந்தரு மெல்லாம் வல்ல சயந்தரு நிறைந்த செல்வ
நலந்தரும் பெருமை சூன்ரு நயந்தரு நமச்சி வாய. (கூக)

நாணிலீர் மன்னன் மூன்ரு நல்லசொல் கின்றேன் கண்டி
பூணும்வெண் ணீறு பூசும் போற்றியஞ் செழுத்தை யோதுங்
காலனை முத்தி யின்பங் காணலா மென்னக் கேட்ட
சோணுறு சமண ரெண்ணு யிரவருங் கொதித்தெ முந்தார். (கூஉ)

மூற்றிய சீற்றம் பொங்கி மொழிவன கேட்டுக் கெட்டேன்
வற்றிய தவத்தார் நும்போற் கண்டிலம் வையக் கத்திங்
கிற்றைநாட் டோற்பின் யாமே யேறுவ மென வியைந்தீர்
பொற்புடைக் கழுக்க டம்மை வாங்குமி னெனைப்பு கன்ரூர். (கூங)

வேறு.

எண்டி துஞ்சொன்மூ குந்த னிறைஞ்சொளி
வண்டி துங்கழல் வாழ்த்தவர் பாத்தொகை
கண்டி துந்தொனிக் காளத்தர் ஞான்றுமேற்
கொண்டி தம்மெனக் காளங் கொடித்தனர். (கூச)

வேறு.

மெய்யுறக் கேட்டி னக்கிம் மிகையெலா மென்கொல் வேண்டா
கையறத் தோற்பி னன்றே கழுதுதி யணைவோ மென்று
துய்யவை யங்கை வாங்கித் தோளில்வைத் தங்கை வீசி
வையையா நதியின் பாங்கர் நணுகினர் மன்னன் காண. (கூடி)

மேவிய திறங்க ளோடு மவரவர் வீரம் பேசித்
தீவினைப் பயத்தி னுலே வரும்வினை தெளியா ராகிக்
காவல்சேர் மந்தி ரங்கள் கற்றயந் திரங்கண் மற்றும்
யாவையுங் காண வேட்டில் யாற்றிடைத் தீட்டி யிட்டார். (கூசு)

வேறு.

காழி நாயகர் கருணைசே ரழகனை நினைந்து
வாழ்க வந்தண ரென்றுயர் வண்டமிழ்ப் பதிகம்
தாழ வோதியே தடமலி யேட்டிடைத் தீட்டி
யாழ மாற்றிடை யிட்டன ரீரிலரும் தழைப்ப. (கூஎ)

கொடிய நெஞ்சுடைக் கூற்றினே யனையவர் வளைவுற்
றடைவின் மூந்துற விட்டவெண் ணூயிர வேடு
மிடையி னின்றவர் இளராகி னைகையுற விமைப்பிற்
கடுகி நீர்வழி யோடிமுன் புகுந்தன கடலுள். (நஅ)

மாறி லாமறை ஞானசம் பந்தர்தம் மனத்துட்
டேறி யிட்டவொண் செந்தமிழ் மந்திர வேடு
கூறும் வெம்மொழிச் சமணர்கள் கூரிய கழுக்க
ளேற வேறிய செழுவரு மாற்றிடை யெதிர்த்தே. (நக)

வே று.

இயல்பட வெங்குரு வரசர்ப தம்பெற வெழுதிவ ளைந்திடுமே
லியர்தரு தண்புன னடுவுறி ழிந்திட வுரனெடு தீர்ந்திடவே
நயமலி யன்பர்கண் மறைமொழி யந்தணர் நடமிடு தொண்டருளோர்
செயசெய வென்றன ரரகர வென்றனர் சிவசிவ வென்றனரே. (சo)

வே று.

பொங்கு மங்கைய ரமைச்சனர் பூழியன் முதலாத்
துங்க வைதிகஞ் சைவமோங் கியவெனத் துதிப்ப
விங்கெ ழுகுமென் றீரங்கிய மூனிவர்க ளமரர்
சிங்க நாதங்கள் செய்தலர்ச் செழுமழை பொழிந்தார். (சக)

வே று.

நிறங்கள்வே றுய்வி யர்த்து நெஞ்சுலர்ந் தாங்கா ரங்கள்
சூறைந்துகை தவமோ வில்லை கைதவ வென்று கூறி
யறம்புரி பால ஞர்த மணிமலர்ப் பாதம் போற்றி
மறம்புரி யமண ரெண்ணூ யிரவரும் வணங்கி ஞரால். (சஉ)

நேசமார் ஞான வேந்தர் நெடுங்கழுத் தரித்த போதே
யாசற விருந்தீ ரின்னு மறைகுவ மடிதல் வேண்டா
பூசுமி னினிய நீற்றைப் போற்றுமி னீசன் சூனே
மாசற நீரு நாமும் வாழலாங் கூடி யென்ஞர். (சங)

முன்னேயூழ் வினையால் வென்ற முனிவகேண் மடிவ தல்லாற்
சொன்னவெஞ் சாம்பல் சீசீ தொடிவமோ வென்று கொண்டு
நன்மைகள் சொல்லா நின்ற ஞானசம் பந்தர் தம்மைப்
புன்மைகள் சொல்லக் கண்டு பொறுத்திலர் பூதித் தொண்டர். (சச)

வே று.

கையர் தங்களைக் களையுமின் களையுமி னெனவே
தய்ய மன்னவன் சொல்லுமுன் கறுவிய தொண்டர்
பொய்செய் பாதகக் குழுவெலாந் தொலைத்திமைப் பொழுதில்
வெய்ய நீள்கழு வேற்றினர் மெலிந்துயிர் பதைப்ப. (கடு)

புகல்வ தேதெதி ரிருந்திடுங் குதவழிப் புகுந்து
பகைகொண் முட்டுடைப் பட்டினி வயிற்றிடைக் குளித்துத்
தகவில் வஞ்சக நெஞ்சகந் தனினின மருந்தி
யிகழும் வாய்முகங் காட்டிட வேறினர் கழுக்கள். (சகூ)

வே று.

பவமுறு கையர் வெய்ய பாறுசெங் குடர்பி ரிங்கச்
சிவையவை சூழக் காக நிழலிடத் திரண்டோர் தாளிற்
றவமுய லலகை யென்னச் சாலவே வாயங் காந்து
கவடிவெண் பற்கள் காட்டி யிருந்தனர் கழுக்க டோறும். (சஎ)

சாணகம் பூசி யேடா சுட்டிடத் தரியே மென்பார்
கோணில்கன் றெடுத்து நீறு தருந்திருக் கோயி லென்பார்
காணநீ றின்றி வெள்ளை கண்டன வணிவா ராகி
வீணழிந் தொழிந்த கையர் விலாவொடி யாக்கி ஞரால். (சஅ)

தளம்புநெஞ் சுடைய வெண்ணூ லிரஞ்சமண் டலிலவர் தம்மை
யுளம்பரி வொடுக முக்கண் யோசனை யகல மேற்ற
வளம்பட வாது செய்த வாரண மென்னு நாமம்
விளங்கிய தன்று முன்னு மேதகு தராத லத்தே. (சகூ)

வே று.

பாசமற நீறணிவான் பாக்கியமில் சாக்கியர்க
ணேசமுற விருந்தகழு நிரைமுடிந்த விடமின்றும்
பூசுரர்கள் பணிந்தேத்தும் பூவணநன் னகர்மருங்கிற்
காகினிமேல் விளங்கியது கழுவர்படை வீடெனவே. (இ0)

வே று.

உறைத்த மன்னவன் முன்ன ருயர்ந்திடக்
குறித்த சாமரம் பெற்றது குற்றமோ
பொறுத்த தோணி புரத்தவர் தம்மொடுங்
கறுத்த செங்கழுக் காணிச் சமணரே. (இக)

வே று.

நன்னெறி யேடு காண்பா ருகையாய் நலங்கள் செய்து
மன்னவன் றுஞ்சிப் நாலு கவிப்பெரு மாண்ம டிழ்ந்து
மூன்னுறக் காட்டு கின்றேம் போகென முடுகிக் சென்றூர்
கன்னல்சூழ் புனலி யாற்றங் கரைவழிக் குடபா ஜைக்கி. (இஉ)

வே று.

ஆர்ந்து செல்கதி கண்டுகண் டன்புறு நெஞ்சம்
வாழ்ந்து செல்வழி மந்திரச் செந்தமி ழேடு
சூழ்ந்த தெண்டிரைக் கடலென வருநதித் துறைக்கட்
சேர்ந்து மூழ்கிய தோசனை யொன்றனா சென்று. (இங)

அங்குக் காணுமு னிழிந்தன ராதா முதிர்வா
லோங்கு நாயக ஞானேயா னுணர்வுடைத் தடினி
தாங்க ருந்திற லொடுவரும் வெம்மையைத் தணிந்தே
பாங்க றிந்துதாள் படிந்தது பாரதி சயிப்ப. (இச)

வே று.

வடகரை யேறி யேறு மேடகா ணமல் வாடிப்
புடைவரும் புதல்வர்க் கண்டு புதுமையே னுண்டோ வென்னப்
படிபுகழ் நிலையான் மேய்ப்போர் யாங்கள்கேள் பழைய தாய்நன்
குடையதோர் சிவலிங் கந்தா னுண்டோ வெனன்னூர் காட்டி. (ருடு)

ஞானசம் பந்தர் கண்டு நணுகியா லயத்தி றைஞ்சித்
தேனுற வன்னி யென்று செந்தமிழ்ப் பதிக மோதப்
பானரை பிறங்க மூத்துப் பழுத்தவோர் விருத்த ருகிக்
கூனிவந் துயர்காப் பிட்டான் சேடனூர் கீடு கோமான். (இசு)

மிக்கபா லகுகே ளிந்த வேடெதிர் மேவி யாற்றுட்
புக்கியான் மூழ்குங் காலென் காலிடைப் பொருந்தல் கண்டு
திக்கறிந் தெடுத்தேன் மூத்தே ஞதலாற் றெரிந்த தில்லை
மக்களுண் டவர்க்கு நல்க வாசித்துத் தருதி யென்றான். (ருஎ)

சித்திர நுதற்க ணிட்ட தெய்வநீ றிலங்க வுச்சி
வைத்தவொண் சிகைவி ளங்கப் பிணங்குநூன் மார்பின் மின்ன
வித்தக வடிவின் வந்த விருத்தவே தியரே நும்மை
யுத்தமச் சிவனே யென்ன வுதிக்கின்ற துளத்தெ னக்கே. (இஅ)

சிறியனேன் பனுவல் கல்வி சிறந்தநின் றிருமைந் தர்க்கு
முறுவலே தருவ தல்லால் வேறிலே முடிவிக் காண்பான்
மறுவறு தென்னன் வந்தான் வருந்தியோர் கார ணத்தா
லிறையவ காட்டல் வேண்டு மென்றுமெய் யொடுங்கிச் சொன்னார். (இசு)

அவ்வுரை கேளா முன்ன ரருமறைக் கிழவ னக்கென்
செவ்விய மைந்தர் கட்குத் தேடிவே றளிப்ப ரேனும்
மெய்வரு தென்னன் கையின் மேதினி முழுது மெச்ச
விவ்வுரை நீட்டு மேட்டை யீயென வீந்தா னன்றே. (சுo)

வே று.

சிறுபா லகனீ சிவபத் தனுமா
யறிவால் விறலா லருளா லுயர்வா
னிறைவா கியிருந் தனைநீள் பகைவென்
றுறவா ழுநிநான் மறையோ நியநாள். (சுக)

னெவாழ்த் தியொளிக் குழுனின் பழுறுந்
தனியா னெவியந் துயர்தா னெயொடு

மனவா தரவால் வருமன் காமீ
தனேவோ ரும்வியப் பவளித் திடவே. (கஉ)

வே று.

மன்னவ னதிச யித்து வந்தவா றெங்ங னென்னத்
தன்னிக ரில்லா விந்தத் தலத்திடை நயந்தி ருக்கு
முன்னிகழ் சிவன்மெய் மூத்தோர் முனிவனில் வந்த ளித்த
னென்னுமுன் பணிந்தான் பல்கா லேத்தினன் கூத்து மாடி. (சுஙு)

இகலமண் பரிச னத்தா லேறிய பாவ நீங்கச்
சிகரீள் கோயில் கண்டு சிவனேகா டொறும்வ ழுத்தித்
தகுநித் தென்பா னன்கு தரும்படை வீடு செய்து
பகையற விருந்தா னங்கண் பாண்டியன் சிறிது காலம். (கச)

வே று.

விரைவோ டிகலா விடுமே டெதிர்போய்க்
கரைசேர் தலினு றைகா ரணனேப்
பரவே டகனென் றிடவே பதியுந்
திருவே டகமென் றுசிறந் ததுவே. (கஙி)

வே று.

உன்னீ மாலு முவணனுஞ் சேடனு
மன்னு சாத்தனு நான்குகம வாழ்த்தகத்
தன்னு பல்பொரு டோன்றி யொடுங்கக
மென்னே யாளுடை யானுறை யேடகம். (சுசு)

வே று.

அறநெறிக் காழி வேந்த ராதரத் தேடெ திர்ந்த
திறைவயிற் சமண ரோடும் பாடித்த தோடந் தீர
வுறவுறத் தமது பேரா லுயர்வுடைச் சிவலிங் கத்தைச்
சிறுமையிற் றெள்ளி யாரென் றருச்சித்தார் செழியன் காண. (கஎ)

வே று.

பொழிலார் மதுரா புரிமே விவியக்
தழகா யதனு ரணகா யகனேத்
தொழுதாய் தமிழ்பா டியபின் றுதியா
லெழிலா லயமற் றுமிறைஞ் சினரால். (சுஅ)

புகழ்நீ டியபூ ழியன்மண் டலமும்
மிகநா ஞமுளத் துவிளக் கமுறத்
தகவார் தருமந் தருமீ சனையும்
மகிழ்வா லணிநீ றுமறந் திலதே. (கக)

நயமெய் தியதென் னவனு டைவே
வியனீ றுபரப் பியவித் தகனு
ரியலோ யெர்தென் னனிலங் கவிருந்
துயர்கா விரிநா றெமே வினரால். (எo)

வே று.

தூண்டிரும் பாக்கி யின்றோர் துரும்புதூ ணாக்கி யேமூன்
ருண்டிலோர் புதல்வ ருலெண் ணுயிரருஞ் சமணர் தம்மைக்
காண்டகு கழுவி லேற்றல் கண்டுநீ றணியா தந்தோ
மாண்டது கடவுள் வேறுண் டென்பரே மதியி லாரே. (எக)

கொல்லா ... மன்னன் கூனிமிர்த் தழலி னீரின்
வெல்லாவ ... டழுவி யிட்டு வெல்லருஞ் சமணர் தம்மைச்
... ல்லிடுள் ழுவில் வைத்த தொல்கதை கற்போர் கேட்போர்க்
கெல்லையில் செல்வ மொல்லை யெய்துதற் கைய மின்றே. (எஉ)

ஆகத்திருவிருத்தம் - கoஎசு.

நுகக.—மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்.

பூமகட்கு மணிமுடியா மதுரை யத்தண் புரத்தின்கண் முன்னொருகான் மன்னர்க் கென்றுரு, சேமமுறு படைத்தலைவ ருகும் வென்றித் தேசுடைய வுயர்கொற்றக் குலத்துட்டோன்றித், தூய்மைதரு சுந்தரனுக் கன்பு பூண்டு சுந்தரசா மந்தனெனு நாமம் பெற்றுக், காமுறுபே ராண்மையினோர் தோலா வீரன் கதிர்தன்பாற் கன்புசெய்து போது நாளில். (க)

அங்ஙலக மனுநெறியோ டாமற் காக்கு மடல்வீர மாறனெனு மரசன் றன்மேற், றேங்குபுகழ் வன்னியர்க டலைவ னைய சேதிபர்கோ னென்பானோர் திராதர் கோமா, னேங்குபெரும் பலபடையி னேறுங் கூடி யொருப்படுவா னெண்ணியவா றொற்றர் கேட்டுத், தாங்கரிய விளைவினெடும் போந்து வாய்ந்த தருமநெறிக் கவரியனைச் சார்ந்து சொன்னர். (உ)

முன்னமது கேட்டலுமே விளைவிற் கூடி முரணபெல் படையாள்வே மெனக்க ணித்துக், கொன்றுனைவேற் சுந்தரசா மந்த னென்னுங் கொடுந்தி றற்சே றுபதியை யழைத்துக் சொல்வான், செந்நெறிசேர் வடதிசையாள் திராதர் கோமான் சேதிபர்கோ னென்பானோர் பெரியோ னம்மேன், மின் றுபடை யொடும்படுவான் வருகின் றானும் விளம்புங்கா ரியமொன்று ளிளங்கக் கேண்மோ. (ங)

பல்படையைப் பல்படையாற் றள்ளல் வேண்டும் பார்புகழ்வீ ராபடை யோ மாண்ட தில்லை, யொல்லையினஞ் சரக்கறையிற் புக்கு வேண்டி மொன்

கனக மெடுத்திட்டுப் படையா லென்று, புல்லியரு ளொடுங்கிருக்கைச் சிற
ப்பு மிட்டுப் போவென்று விடைகொடுப்ப விளைவு கண்டு, சொல்லிவிவன்
றனக்கொப்பிங் கிவனே யென்று சுடர்மணிமா முடிச்செழியன் றுணித்தான்
சால. (அ)

அரியபெருஞ் சரக்கறையிற் காவ லோடு மடைத்தடைவிற் பெரும்ப
டைக ளாளத் தக்க, பொருள்பலவும் வகைவகைகைக் கொண்டு நல்ல போர்
வீரர் தமைத்தேடி வாரு மென்று, பரிவினெடுங் தன்னடைத்தோர்ப் போக்கி
நோக்கிப் பரிப்பவரார் கொடுபோந்து தனதில் லத்து, விரைவினெடும் புகுந்
தான்செங் கனகங் கண்டான் விதிர்விதிர்த்தான் சிவனடியார்க் கிவரா னெ
ண்ணி. (இ)

வேறு.

மிஞ்சிட வடைத்த கைப்பொருள் கொண்டே மெய்ப்பொரு டேவோன்
விரும்பிச், செஞ்சுடர் மகுடக் கோயிலுள் வேந்தன் செழும்பொரு டன்னெ
டுஞ் சென்று, பஞ்சின்மெல் லடியா ளங்கயற் கண்ணி பங்கனே யங்கையாற்
றொழுது, மிஞ்சுமிப் பொருளுன் னடியவர்க் கிவரான் விருப்புறு மூளக்கருத்
தெனக்கே. (ஈ)

நம்பனே யும்பர் தம்பதி பரவு நாதனே காத்தரு ளெனக்குன்
றம்பமே யல்லாற் பிறிதிலை யென்று சாற்றிமுன் போந்தடி யவரைக்
கம்பமா ருடலு மம்புசோர் விழியுங் கசிதரு நெஞ்சுமா யிறைஞ்சிச் [த்தே.
சம்புவே யென்ன வழுதுசெய் வித்தான் றனங்கள்வேண் டுபவெடுத் தளி

நட்பொடு மெல்ல மன்னன்பொன் மூழுது நாடொறு நாடொறு மெடுத்தாங்
குட்பய மின்றி மாதொடுங் கூடி யுவகைகூர்ந் தரனடி யவர்தங்
கட்பய மெய்தி யாவரா யினுமுட் கருத்தறிந் தமுதுசெய் வித்துத்
தட்பமார் மனத்தன் மூவிரு திங்க டம்முளத் தனமெலா மழித்தான். (அ)

அரசனுந் திங்க ளாறுசே றலுமே யடற்படைத் தலைவனே யழைத்துப்
பரிகர மெவள வாண்டனே யென்னப் பழுதுரா யாதவ னுரைப்பான்
றிருவரு ளதனுற் சொக்கநா யகனைச் சிந்தைசெய் துள்ளதை யன்றிப்
பொருபடை மன்னு வொருபடை யாண்ட தில்லையிது பொய்யல வின்றே. (ஆ)

வந்தனை யடியேன் கருத்தினை முடிப்பான் வழிபடு மடியவர்க் கெளிய
சுந்தர னுண்டு வேண்டிய பொழுது படையுமுண் டெனத்துணிந் துரைப்ப
வந்தமன் னவனு மென்கொலா மீதென் றகிசயித் தன்னினை விங்க
ணெந்தைநா யகனும் வருவனேற் காண்பே மின்றுபோய் காணுவா வென்றான்.

கருத்துடைச் சேனைத் தலைவகே ணுனைக் காலையி னின்படை மெய்க்காட்
டிருப்படைக் காண்பேம் போவெனப் போந்த வுத்தமன் புத்தியுட் சால [ணிப்
வருத்தமுற் றென்னு மெனத்தனக் கினிய வள்ளலுக் குரைசெய்வா னெண்
பொருத்தவா லயத்துச் சேர்ந்துபொற் கமலப் பொய்கையு ணண்ணினீ ராடி.

தீறனிக் தருள்சேர் கடவுளை யடைந்து நியதியெண் ணுன்கறஞ் செய்வாள், கூறனே யடியே னென்செய்கே னுனையாய் கொற்றவன் றனமெலா மெடுத்துன், வீறுடை யடியார் தங்கள்பா னிறைத்தே ஞானமெய்க் காட்டெனப் போக்தே, னுறுபூ மவுலி மாறனுர் திருமு னுன்படை காட்டுமா றென்கொல். (கஉ)

வே று.

பன்னிய பொருளு மில்லை படையுமோ வாண்ட தில்லை
தென்னன்மு னீயுண் டென்று செப்பினே னெப்பி லானே
மன்னவர் தண்ட மாசே யாற்றுவார் வழிசெய் யாயே
வின்னுயிர் செகுப்ப தல்லால் வேறிலை யெனப்ப னிக்தான். (கங)

வே று.

நெறியிலை சாத லாதெனக் கேட்ட நிருமல னிரங்கினீள் விசும்பி
லறிவுற வுளைப்பா னுறுபடைத் தலைவ வசைவிலா மனத்தொடு சென்னீ
குறைவற வேண்டும் படைகொடு நாளைக் கொற்றவன் காணயாம் வருவேங்
கிறமுறு படையின் றகுதிகண் டவந்து சேலியுங் தருவனு னமக்கே. (கச)

என்னுமத் திருவாக் கதிசய முறக்கேட் டினிமையி னெழுந்துகூத் தாடி
யுன்னருங் களிப்பிற் போந்ததன் னுழையி னுற்றதன் மனையவட் குளாப்பத்
தன்னுடை யச்சந் துண்ணெனத் தள்ளித் தலைவகே ணிலைமையை விடாது
நின்னுடைத் தருமங் கைதரு நாளை யுதவுவ னேசவெம் பெருமான். (கடு)

வெறிகமழ் குழலா ளுய்ந்தன மென்றே மெய்ப்பட வித்திற முளாப்பக்
கறைகெழு கெடுவேல் வீரனு மற்று மற்றைநாட் காலையி லெழுந்து
கிறமுறு படைக்காம் பல்கலன் பூண்டு சிறிதுசே வகரொடுங் கூடிப்
பிறையணி சடையான் றனையுளத் திருத்தி நடந்தனன் பெரியவாள் வாங்கி.()

தன்னுழை கடந்து மன்னவன் வாயிற் றலைப்படுங் காலிறை யருளாற்
பொன்னக ரமரர் முன்னிரு மருங்கும் பூமழை பொழிந்துகின் றூர்ப்பச்
சின்னமுஞ் சங்குந் தாளையுங் கொம்புஞ் செம்பொனின் காளமுங் குழலுந்
துன்னுவங் கியமுந் தம்முனெம் மருங்குந் தொகுபுவி செவிடுறக் கறங்க. ()

சீர்மணி தாளஞ் சச்சரி கஞ்சஞ் சிலம்பவின் றண்ணுமை தடாரி
பேரிகை கரடி மத்தளஞ் சல்லி பெரும்பறை திடிகடி முரசம்
பார்புக ழிட்கை யுடுக்கைகன் னியாளம் படகம்வண் டிமிலெதெண் டிமை
வார்படு படகம் பெருந்தகு ணிச்ச மெங்கணும் வானுற முழங்க. (கஅ)

வில்லொடி கணவாள் கேடகங் சுடகு வேன்மழுக் கடைத்தலைக் கழுக்கோ
ரெல்கதை பாரா வனேவனே யெறிகோல் சுரிகைபத் திரங்கொடுங் கணிச்சி
பல்வித முயலங் குந்தமொண் பிண்டி யாலம்வெஞ் சூலகீள் கழைக்கோல்
கொல்லெழுத் தண்டு முதலிய வளவில் கோடிபல் படைக்கலம் பிறங்க. (கக)

பொருந்துபூங் கொடிக ளாடைக ளாடப் பொருவருஞ் சாமரை யீரட்டித்
திருந்துபல் கவிகை நிழற்றவெம் மருங்குஞ் சேர்தரு தோகைகள் வீச
நெருங்கடை யாளர் துளங்கமட் பாம்பு நெளியநுண் ணேவான் முட்டப்
பெருங்கட லென்னப் படர்ந்தொலி மிக்கு நடந்தது பெரும்படைச் சாத்து.(1)

வே று.

இப்பெருங் கொற்றத் தானை யிரும்படைத் தலைவன் முன்ஞ ,
மெய்ப்படத் தோன்றக் கண்டு வேந்தனீ தென்கொ லென்று
செப்பரும் பயத்தி னோடுஞ் செல்லவாள் வல்ல வீர
னப்பொழு தடிவ ணங்கி நம்படை யஞ்சே லென்ரான். (உக)

ஓவென் மீள்வ னிற்ப னுன்மத்தர் போலே நோக்கி
யாடிவ ணனிவன் றூண்டி யாகா வென்ரு லிப்ப
னேடவி முலங்கற் றென்னு விடுபடை மெய்க்காட் டின்று
கூடிமுன் காண்பா யென்று கூறுவன் றேற வாங்கு. (உஉ)

ஓதரும் பரிவு கூர்ந்து காண்பதற் கொருப்பட் டந்த
மாதவச் செழியர் கோமான் மந்திரத் தலைவர் சூழத்
தீதறு பொலிவிற் போந்து சித்திர மண்ட பத்து
மீதுற வீற்றான் சால வியர்த்தலங் காரத் தோங்கி. (உங)

விசையெவெம் படையைத் தோன்ற வீரநீ காட்டி டென்னத்
திசைவரும் பரிக ரத்தைச் செல்லநில் வரநில் லென்று
வசையொடுஞ் செறுத்து காத்து வகைவகை தொறுநி றுத்தி
நசையுறக் காட்டி வானந் நானில மன்னன் காண. (உச)

வே று.

வங்கர் கலிங்கர் தெலுங்கர் நலங்கிளர் மாளவர் கேரளர்வெங்
கொங்க ரிலாடர்கள் பாகதர் மாகதர் சுச்சரர் பப்பரர்திண்
செங்கரு நாடர்கள் காடவர் வேடுவர் சிங்களர் கொங்கணர்மற்
றிங்கிவ ரிங்கிவ ரங்கவ ரங்கவ ருங்குவ ருங்குவரே. (உடு)

துன்னிய வெய்ய துருக்க ரிரக்கமில் சோனகர் சீனர்கண்மா
மன்ன ரிரட்டிய சொட்டியர் தொட்டியர் வத்தவர் கத்திரியர்
செந்தெறி யாரியர் கோசலர் போசலர் சேதிபர் யாதவர்மற்
றிந்நிரை யிந்நிரை யந்நிரை யுந்நிரை யுந்நிரையே. (உசு)

வே று.

இன்னன வகையிற் கூறி யினப்படை முற்றுங் காட்ட
மன்னனிவ் வீர னேப்போற் கண்டிலே மெனம கிழ்ந்து
கொன்னுற வழைத்து நாமங் கொந்தகப் பெருமா னென்றே
நன்னெறிப் பட்டங் கட்டி நல்கினன் பரிவுட் டங்கள். (உஎ)

இறையவ னழகு பொங்க விரும்பெரும் பரிமேற் கொண்டு
விறலுடைக் குதம் வாங்கி வெண்மதிக் கவிகை கீழன்
மறையகின் றுலாவக் கண்ட மன்னனங் குலாவு கின்ற
துறுபடைத் தலைவன் யார்கொல் வீரரீ யுரைத்தி யென்ன. (உஅ)

இனிமைகூர் செழியர் கோவே யாவரிங் கறிவார் சூழ்ந்த
மனமுடை யமைச்ச ரோடுங் கேட்டிரீ யுனக்கு மாற்ற
நினையினிங் கடிய னேற்சா நின்பெரும் பொருட னக்குப்
பனிமதிச் சடையர் காணிப் பரிகரங் கொளார்ந்தா ரென்றான். (உக)

நன்றெழில் வீர நீசென் றழையென நயந்து சென்றே
யின்றுயி ரளித்த சோவே யெழுந்தரு டென்னன் காண்பா
னுன்னினை விரும்பா நின்ற னென்றலு முவகை கூர்ந்து
வென்றிகொள் படையை நீக்கி வேந்தனை நணுகிச் சொல்வான். (உo)

மன்னகேள் புள்ளி சொல்லிற் களத்திடை மறுவொன் றுண்டு
முன்னிகழ் வடிவுஞ் சொல்லின் முடியில்லிற் றழும்பொன் றுண்டிங்
கென்னமு னெழுது நல்ல சேவக னுனக்கெ னேப்போ
லுன்னரு முலகத் தெய்தா னென்றன னுவகை கூர. (உக)

என்னவின் னுடலங் கம்பித் தெழுவதற் குன்னு கின்ற
துன்னரு மிருக ரங்க ளொருவழிக் கொள்ளா கின்ற
வுன்னையே போலு நல்ல வருளுடைச் சொக்கே யென்ன
கின்னையான் காணுந் தோறு நிழ்கின்ற துளத்தெ னக்கே. (உஉ)

கின்னெழிற் புரவி யேற்ற நீதியைக் கண்டா லுன்னை
யென்னதே டெழுது கின்றே னெனத்துகி லளிப்ப வாங்கித்
தன்னடி யாரை வேண்டிச் சடைமிசைப் புனைந்து கொண்டு
தென்னவ காண்டி யென்று செழும்பரி யுகைப்பன் காண. (உஉ)

வேறு.

அற்புறநி னைப்பவர கத்தினுளி ருப்பவன னைத்தையும டக்கு பவனீள்
கற்பனைக டப்பவன டர்குபுபி டித்துறுக கிப்படவு கைப்ப வடபால் [தார்
வெற்பின்முது கிற்றிசைமி சைக்கரிமு கத்தினின்மி கித்ததொழி யப்பி லம
சர்பமும்வெ ருக்கொளாக டித்ததும ருத்தைநிகர் தத்துகவ னத்து ரகமே. ()

வேறு.

பரிவொடு கண்ட மன்னன் பன்முறை யதிச யித்துப்
பொருபரி யுகைக்க வல்லா ரிப்படிப் புவிமீ தில்லை
யரிதரி தெனவி யப்ப வைத்துதா யையினுந் துண்டி
லைவிங் கொளித்தா னந்த வெங்கொடும் படையுட் புகுரு. (உஇ)

அவ்வயின் வருந்தித் தேடி மரசன்முன் வீரைவின் வக்தோர்
பொய்வழி யுரையாத் தூதன் புகலுவா னரச ரேறே

தெவ்வுறு படையான் மிக்க சேதிபர் கோமான் றன்னை
வெவ்வலிச் சிங்கங் கொன்ற தென்றனன் வேட்டைக் காட்டில். (கூக)

அத்திறங் கேட்ட வேந்த னென்கொலென் றருளை வாழ்த்திச்
சித்தான் பரிவு கூர்ந்து திகைத்தநி சயித்தி ருப்ப
வத்தலத் தமைச்ச ராலே ராதரத் தோடுங் கூடி
யுத்தர மற்றி ருந்தா ரும்பர்கோ னருளை யேத்தி. (கூஎ)

கொந்தகப் பெருமான் கேண்மோ கொடும்பகை போன திந்த
வெந்திறற் றந்தி ரத்தை வருத்தவேண் டுவதோ வில்லை
தந்தம திடத்துப் போகச் சாற்றுதி தாழா தின்று
சுந்தர னமக்குண் டாக வேண்டுமோ துணையிங் கென்றான். (கூஅ)

கிறுத்துதல் கரும மென்று நிரம்பிய படையை வாழ்த்திச்
சிறப்பொடும் போக வேவ வாங்கது சிலேத்தெ ழுந்தே
யிறைப்பொழு தின்க ணங்கண் மறைந்திட வெழுந்து துள்ளி
யறப்பெருந் தவத்தி னனு மூழ்கினு னனந் தத்துள். (கூக)

பொய்யிலாத் தெய்வச் சேனை பொலிவொடு மறையக் கண்ட
வையகத் தோருஞ் சொக்க னருளினை வியந்தார் வாழ்த்தித்
துய்யபே ரன்பன் முன்னிற் சுந்தரற் கன்பு பூண்டு
மெய்யொடு மடைந்தான் முளில் விண்ணவர் வியக்க வாங்கு. (சo)

அரசனு லயத்துச் சென்றுங் கடியவர் நினைவு தன்னிற்
பரிவொடுஞ் செல்லும் பத்தர் பத்தனை யல்லாற் றெய்வங்
கருதின்வே றுண்டோ வென்று களித்தடி திதித்தா னேத்திப்
பெரியவா சிகைமா ணிக்கக் கோவைகள் பிறவு நல்கி. (சக)

ஆகத்திருவிருத்தம் - ககஎ.

சo.—உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல்.



வளமை கீடிய மதுரையின் மன்னெரு தென்னன்
றளர்வில் செல்வமுஞ் சாற்றருஞ் சேனையு மோங்கி
யெளிய சொக்கனே யிறைஞ்சிமுச் சந்தியு மினிதா
வளவில் வெம்பகை கடிந்துல காளுநா டன்னில். (க)

தெரிய மூத்தழ னான்மறை வேதியர் தேத்துப்
பரிவு செய்திடா திகழ்ந்துயர் பரனையே வழுத்த
வரிய வேள்விக ளொழுக்கநல் கூரினு லொழிந்து
சுருதி யந்தணர் தாழ்ந்துபுன் ஜெழிலிடை யிழிந்தார். (உ)

வேறு.

ஈனமா நெறிக டம்மி லிழிந்தபி னினிய தேவர்
போனக வேள்வி போகப் போனது பொய்யா மாரி
பானலங் கழனி மேய நென்மூதற் பல்ல ளங்க
ளானவ்வ வினோவு போன போயின வறமுன் ஞன்கும். (சூ)

வாரிதி யுலகின் மிக்க மதுரைமண் டலத்து வாழுஞ்
சீரிய மனிதர் குன்றித் திசைதிசை போஞர் மன்னன்
வாரணம் புரவி குன்ரு மாதனங் கோத னங்க
ளோர்பொலி யாரா மங்கள் யாவையுங் குறைத்த மன்னே. (சு)

ஓங்கிய மன்னன் சால வுலேந்துல கேதங் கண்டே
யீங்கிதற் கேது வென்கொ லிலங்கவீ தறிவா னெங்கு
நீங்கருஞ் சொக்க னல்லா லிலேயென நினேந்து நெஞ்சத்
தாங்குய ரால யத்து ளணேந்தடி பணிந்து சொல்வான். (டு)

அய்யனே செய்ய கோவே யடியனே னின்னே யென்றும்
பொய்யற வணங்கி வாழ்த்தப் புவிதுய ருறுவ தென்னே
மெய்யுற வுணர்த்தல் வேண்டும் விளங்கவென் றுனைத்துப் போந்து
துய்யபே ரமளி யின்கட் டுயிலுங் காலே. . (சு)

உத்தம னெத்த லத்து முயிர்க்குயி ராகி நிற்கும்
பத்தர்கள் பத்தன் வந்து பகருவா னென்பா லன்பு
வைத்தவ னுத லாலே மாறனே தேற வின்று
சத்திய மாவு னக்குச் சாற்றுவன் புக்க வாறு. (எ)

வேறு.

மேவரு நான்மறை நமக்கு மெய்யதற்
கியாவர்நல் லவரவர் தமக்கி யாதலோ
மார்வுறு மேதினிக் கமர ராகிய
சார்வுறு மறையவர் தமையி கழ்ந்தனே. (அ)

ஆதலா னல்குர வெய்தி யாங்கவர்
சோதிசேர் மறைவழித் தொழின்ம றந்தனர்
சோதிசேர் மறைவழித் தொழின்ம றத்தலாற்
கூதிர்வான் பொழிமழை குன்றிற் றிம்பரே. (க)

நெறிதரு மறையவர் நெஞ்சம் வாழுமேன்
முறைதரு வையக முழுதும் வாழுமா
னெறிதரு மறையவர் நெஞ்சழ் வாடுமேன்
முறைதரு வையக முழுதும் வாடுமால். (கo)

பாமறை யந்தணர் தம்மைப் பார்த்திப
ராமவ ராகவே காஞங் கண்டிடு
ராமவ ராகவே காஞங் காண்பையேற்
பூமட மாமகள் போவ தில்லையே. (கசு)

நன்புஞ்ட யறத்தவர் நமக்கு நல்லவர்
தன்பமெய் தாதவர் தன்ப மெய்தலா
லின்புறு மண்டல மினிமை குன்றிய
தன்புடை யாயுனக் கறியக் கூறினேம். (கஉ)

வேறு.

இன்புற வழைத்த வர்க்கா மினிமைசெய் விளைவிற் சால
நன்புற நினக்கு மிக்க நலந்தரு செல்வ மூண்டாந்
தென்புவி நயக்க நீங்காச் செல்லலே நீக்க வற்றோர்
பொன்பொதி கிழியும் வாழத் தருகுவம் புதுமை கூர. (கஙூ)

அக்கிழி யிற்பொன் கோடி யழிப்பினுந் தொலையா தானம்
மிக்கபே ராணை யாலே வேண்டிய வெடுத்த னீத்துத்
தக்கவர் தமக்கு மிட்டுத் தருமமுஞ் செய்து நீயுன்
புக்கிலி லியாரும் வாழ வாழுதி புவிமீ தூழி. (கச)

வேறு.

அஞ்ச லஞ்சலென் றன்புடைத் தென்னவ
னெஞ்சில் வேண்டிய நல்கிடு நீவியைப்
பஞ்சின் மெல்லணைப் பான்முடிப் பான்மிசை
வஞ்ச மாசற வைத்து மறைந்தனன். (கஞ)

வேறு.

தனமுறுபொற் கிழிகண்டு துயி லுணர்ந்த தார்வேந்த
னெனையடிமை யுடையானை யல்லதுவே றிருநிலத்து
நினையிலெரு தேவுண்டோ நேசமுளா ரெனவியந்து
கனவுநிலை யுரைசெய்யக் கேட்டபெருங் களியமைச்சர். (கசு)

வேறு.

கனவிடைக் கண்ட செம்பொன் கண்டதின் கருத்துட் டங்கு
நினைவதற் கரிய வீச னல்கலா னீடு சிங்கா
தனமிசை வைத்துப் பூசித் தருளுநி தணிவ தில்லே
யினியுனக் குயர்ந்த செல்வ மியைவதற் கைய மின்றே. (கஎ)

ஒப்பிலா னுரைத்தல் போல வொண்பெருந் தனமெ டுத்துச்
செப்பரு மறையோர் தம்மைச் சிறப்பொடும் பூசை செய்து
மெய்ப்படுந் தலத்தி ருத்தி வேண்டிவ நல்கி டென்ன
வப்படிச் செய்வ லென்று செய்தன னரசர் கோமான். (கஅ)

நல்லவர் பரவுஞ் சொக்க நாயக னருளி னாலே
தொல்லையா ருதிக ளோங்கிச் சுருதியும் வழங்கி யெங்குஞ்
செல்லனல் குரவு நீங்கித் திங்கண்மும் மாரி பெய்து
பல்வித விகாவும் பொங்கி நிறைந்தது பாண்டி நாடு. (கக)

வே று.

கோடிபொன் னெடுப்பினுங் குறைவி லாததோ
ராடக நீவிகண் டதிச யத்தொடு
நாடவர் துதித்தனர் நாடி நாடொறும்
பாடினர் செந்தமிழ்ப் பனுவல் சான்றவர். (உ0)

வே று.

செய்தவ முயற்சி யாலே சிவனடி யார்க ணன்பும்
வைதிக நெறிக்க ணன்புங் கண்டுமண் டலத்தோ ரெல்லாங்
கைதவன் றனையு மந்தக் கைதவற் கன்பு பூண்ட
மெய்திகழ் சொக்க நாதன் றன்னையும் வியந்தார் சால. (உக)

ஆகத்திருவிருத்தம் - ககஉ.

சக.—மாமனுகவந்து வழக்குரைத்த திருவிளையாடல்.

தளர்வில் பல்புகழ் மதுரை யம்பதி தன்னின் முன்னொரு காலதீ
ளளவில் செல்வமு மூற்ற சுற்றமு மமைவி னோடிவி ளங்கிமற்
றுளம்வி ரும்பிய வாணி கஞ்செய்தொ ழுக்கம் வாய்மைசி றக்குமோர்
வளமை சேர்தன பால னென்றொரு வணிகன் மாசற வாழ்ந்தனன். (க)

செல்வ முற்றிய வண்மை முற்றிகழ் நீதி லொண்குல மோங்குவா
னல்வி னைத்தணி வால னித்தவொர் மைந்த னந்தவி லாமையா
லொல்லை யிற்றனு டன்பி றந்தவண் மைந்த னைத்தனு வப்பொடு
மெல்லை யற்றநி றப்பொ டும்மக வாவெ டுத்துவ ளர்த்தனன். (உ)

வளர்த்த நன்புதல் வன்வ யிற்றன்வ ளந்த ரும்பொருள் யாவையு
மளித்தி யைந்தன னத்தொ டும்புதல் வற்பெ றப்பெரு காசையா
லுளத்து நல்லன பேர நங்களு வர்தி செய்தியர் கங்கைநீர்
குளித்தி யாம்வரு வேமெ னத்தனி கூறி மாதொடு மேகினன். (ங)

வே று.

ஆங்கவன் போய பின்ன ரடுத்திறற் றூயத் தார்க
டாங்களைந் திறந்தா னென்று மனையொடு தனமுங் கைக்கொண்
டீங்குநீ யேடி யார்கொல் போவெனவிழுந்து கூறி
யோங்குமா தினையு மைந்தன் றன்னையு மொதுக்கி ஞரால். (ச)

ஆடைசோ ருளவு மீயா தகற்றிட வகன்ரு ளுள்ளம்
வாடிமுன் றுவர்ப்பி டித்து மறிப்பவு நில்லா ராகி
யாடகம் பலர்க்கு நல்கி யளவில்வா னிகங்கள் செய்து
காடரும் வலியைக் காட்டி யிருந்தனர் நடக்க மின்றி. (இ)

மங்கல நாணி ழந்த மடந்தையோர் மதிநி னைந்து
செங்கணீர் வார வாரச் சிறுவனே டிவ்வி டுக்க
ணங்கயற் கண்ணி பங்கன் றனேயலா லாற்று வார்க
ளிங்கொரு கேளி ரில்லே யென்றிறை கோயில் புக்காள். (ஈ)

மைத்திக ழளகஞ் சோர மைந்தனே நிலத்துப் போகட்
டத்தகேர் குவித்து முன்னின் றறநெறி வளர்க்குங் கோலே
சத்தியக் குன்றே மிக்க தயாப்பெருங் கடலே போற்றும்
பத்தர்கள் பத்த னேயான் பகர்வதொன் றுண்டு கேண்மோ. (உ)

வையகத் தோர்கள் காண மருகனே மகன்மை கொண்டு
செய்வன வடைவிற் செய்து செல்வமுள் ளனவு நல்கித்
தய்யவென் னுடன்பி றந்தான் போயினன் றூரத் தின்று
வெய்யதா யத்தார் தள்ளி மிகைகள்செய் கின்ரு ரன்றே. (ஊ)

பற்றலர் சொல்லும் வெய்ய படிற்றுரை பொறுக்க ஒல்லேன்
மற்றொரு கேளி ரில்லே மன்னவ ரூணை யில்லே
பெற்றதாய் தந்தை நீயே யென்றுபே ரவசத் தோடு
மற்றவர்க் குற்ற செல்வன் சங்கிதி யரற்றி வீழ்ந்தாள். (எ)

மற்றது கண்டி ரங்கி மாசிலா னணுகி மாதே
யுற்றகின் புதல்வ ரோடு மெழுந்துசென் றுலகோர் காணப்
பற்றலர் தம்மை நாடிப் பயப்படே றுவர்ப்பி டித்துச்
சற்றுமோ ரடியி டாமற் றடித்துவா தருவ மன்னுள். (ஏ0)

மன்றிடை முன்னேன் றந்த மாசறு பொருள்க ளெல்லா
மொன்றிய வணிக ரூடி யுற்றவர் மூற்றுங் காண
வின்றியாம் வந்து தோலா திகல்பட வழக்குப் பேசி
யொன்றுமே காமல் வாங்கித் தருகுவ முண்மை யீதால். (ஏஏ)

இன்னநீர்ந் துள்ளந் தேறி யேனென மறையக் கண்டு
தன்னுளே யஞ்ச யித்துத் தாங்கரு மவச நீங்கிப்
பின்னரொன் றுரையா ளாகி யெழுந்துபே ரருளே வாழ்த்திப்
பன்முறை வணங்கிப் போந்தாள் பழுதிலா வணிக மாது. (ஏ2)

தெரிவுறச் சென்று மன்றிற் போதுமி னென்னச் சீறி
வினாவொடுத் தடுப்பக் கண்டு மேவலர் சரல வைது

மருவிய புதல்வ னோடு மண்மிசை மறியத் தள்ளித்
தருமவா சனத்தி லேறச் சங்கரன் றரித்தா னில்லே. (கந)

குறைவற மாமன் கோலங் கொண்டுவெண் ணீறு சாத்தி
யுறுவையுந் தழையச் சுற்றி யணிமுடிச் சாத்துஞ் சாத்திச்
செறியமோ திரஞ்செ றித்த செழுமலர்க் கரங்கள் வீசி
முறைமையிற் றருஞ்சி றுக்கன் பின்வர முன்ன டந்தான். (கச)

அன்புடை யவள்கண் டைய கோவென வயிற்ற றைந்து
தன்பெரும் புழுக்கந் தீரத் தமையனைத் தழுவிக் கொண்டே
யென்பெருந் துணைநீ போக யானுமென் மகவு முற்ற
துன்பமோ தொலையா தென்ன வரற்றினுள் கண்ணீர் சோர. (கடி)

கருணையன் முனு மேனி கம்பித்துக் கண்ணீர் வார
வொருமரு மகனை யென்ற னுடன்பிறந் தவனே மண்மேல்
வெருவுற வொருவன் சொல்வ தேயென விம்மி விம்மிப்
பொருமினின் றழுதான் யாருங் கலுழமெய் பூண்டு கொண்டு. (கசு)

வஞ்சகர் தள்ள வீழ்ந்த மைந்தனை யெடுத்து மோந்து
பஞ்சவ னகரி தன்னுட் பழுதுசா பசர்வா ரில்லை
நெஞ்சின்மே லஞ்ச வேண்டா நீங்களிங் கியாம்வந் தேமென்
றஞ்சினேர் தம்மைத் தேற்றி யாற்றினன் போற்றி யாங்கு. (கஎ)

வணிகரு ரியரே வாரீர் வாணிக நன்றே சொல்லீர்
பணிசெடு விலைமா ணிக்கம் விற்றதோ பயனென் போதுங்
குணமுடை யளகைக் கோனீர் மருகனேர் குமர னுண்டே
வணியநீ றறியீ ரோவென் றவரவர்த் தழுவிக் கொண்டான். (கஅ)

கடம்பரே யுயர்ந்த பொன்னுக் காளுண்டோ காதல் வீதி
விடங்கரே யமரர் கோனூர் பணையமீட் டிலரோ மெல்ல
நடந்தீரீர் வைத்த முத்து விற்றதோ நான்முன் வைத்த
குடங்கள்போ யினவோ வென்று கூறியென் னென்முன் றேற. (கக)

ஆங்கவை யிருந்தோர் நல்ல வவதரத் தினைந்தான் மாம
னீங்குடன் பிறக்கிற் கெட்டே னிப்படி வேண்டு மென்று
தாங்கருந் தாயத் தாரை நிறுத்திநின் றனிவ ழக்கை
யோங்கிய தனபா லாசொ லென்றன ருவகை கூர்ந்து. (உo)

மனைகுடி யடிமை காணி மாடமா னிக்க முத்துக்
கனகவொண் டிழிறூ றாசு காசுசா தனங்கள் கஞ்ச
மினமுறு பணைய நாம மடையாள மெனைவயுந் தோன்றச்
சினமுறு தாயத் தாருஞ் சுற்றமுஞ் தெளியச் சொல்லி. (உக)

என்னுடன் பிறந்தாண் மைந்த னீங்கிவன் றனையெ டுத்து
முன்னமே பிள்ளை யாக வளர்த்தியான் முறைமை தன்னின்
மன்னிய செல்வ மெல்லாங் கொடுத்தனன் மகவி லாமற்
றென்னவன் பெரிய கீதி குன்றுமோ செப்பு மென்றான். (உஉ)

மன்றிடை யிருந்தோ ரெல்லா மாதுல னிவ்ன்ற வாறு
நன்றென வியந்து கண்டு ஞாதிக டங்குற் றத்தா
லொன்றுமங் குரையா ராய்விட் டொளித்தனர் தரும மாதன்
றன்றிரு நீதி நாட்டித் தண்டமுண் டாமென் றஞ்சி. (உங)

மாற்றவ ரொளிக்கக் கண்டென் மருமகன் றன்னைக் கொல்வான்
கூற்றென வந்த தாயக் கொடுமைகண் டார்க ளீங்க
ளேற்றலே செய்தோர் தம்மை யிறைதெறி முறைமை யோங்கச்
சாற்றரும் பெரிய தண்டங் கொள்ளுமின் சான்றோ ராயின். (உச)

தருமமோ வெனக்கம் பித்த சான்றவர் காணுந் தோறு
முருவநீ சொக்க னென்ன விளங்கினை யுளங்க டோறு
மருவலர் விட்டார் விட்ட வகைதொறும் பொருள்கள் கைக்கொண்
டிரியகின் மருகனேடும் போதிகின் னுழைக்க னென்றார். (உஞ)

மன்றுளே வழக்குச் சொல்ல வல்லவ னின்போ லில்லை
யென்றனர் வணிகன் போந்தாங் கிலங்குதன் மருகனேடு
நின்றதன் றங்கை யோடு நேசமார் கிளைஞ ரோடுங்
கன்றினர் விட்டுப் போன கனகமா ளிகையுட் புக்கான். (உசு)

பாங்கொரு பொருள்சோ ராமற் காட்டிவெம் பயம கற்றி
யாங்கவர் தமையி ருத்தி யவ்வயி னெவருங் காண
வோங்கிய புகழ்க்கு கல்ல சொக்கனு மெனவு ரைத்துத்
தாங்கரு முறுவ லோடு மறைந்தனன் றனிவி சும்பில். (உஎ)

இக்கணக் கிப்ப டிக்கார் வெல்லுவா ரிரங்கி நந்தஞ்
சொக்கனே யல்லா லுண்டோ தொழுபவர்க் கெளியா னென்று
மிக்கநீ கியையு மாட்டாக் கைந்தலை விரைந்து நோக்குந்
தக்கபே ரன்பை யுங்கண் டதிசயித் தார்கள் சான்றோர். (உஅ)

மண்மிசை வழக்கு வெல்வான் மாமன்மெய் புனைந்த தன்றி
யெண்மறை யுரைக்கும் வாயா விகல்வழக் குரைப்ப தேயொண்
கண்ணினீர் சோர வாய்விட் டழுவதே கடவு ளென்றுங்
கெண்ணரும் வணிகர் முற்று மேத்தினு ரருளா வாழ்த்தி. (உக)

அகத்திருவிருத்தம் - ககஉள.

ஈஉ.—அட்டமாசித்தி பகர்ந்த திருவிளையாடல்.

மல்லலஞ் சிறப்பி னோங்கும் வான்றொடுங் கயிலை யங்கண்
பல்வித மணிபி றங்கு பளிக்குமண் டபத்தி ருந்து
சொல்லரும் பல்க ணங்க ளிதிசெய்து விதியிற் கேட்ப
நல்வினைக் கதைக ளின்ற ளுயகன் முன்னோர் காளில். (க)

மூறைமையி னவிலுங் காலை முனைகெடு வேற்ற டக்கை
யறுமுகக் கடவுட் கின்பா லன்பொடு நல்கிச் சற்று
மறுவிலா வியக்க மாத ரறுவரு மகிழ்ந்து வந்து
நெறியொடு சிறந்த நல்கி நின்றடி தொழுது போற்றி. (உ)

கருணைமே னியனே தேவர் தேவனே கயிலை வேந்தே
யரியவை யெவையு நல்கு மட்டமா சித்தி தம்மை
யுளையொடு முளைத்தல் வேண்டு முணர்வுற வெங்கட் கென்னப்
பரமனு முவகை கூர்ந்து பகர்ந்தனன் றிருந்த வாங்கு. (ங)

வேறு.

இருந்தணி மாமுத லெட்டுச் சித்தியுந்
திருந்திய பொருளொடு செப்புங் காலையில்
விரும்பிய மடந்தையர் வினவ சத்தினுற்
பரம்பிய பொருள்களைப் பராமு கஞ்செய்தார். (ச)

அப்பொழு திறைவெருண் டவர்க டம்மையாஞ்
செப்பிய சித்தியைத் தெளியக் கேட்டிலீர்
மெய்ப்படு ஞானமுங் குறையு மேலுமக்
கொப்பொடு நவில்வதொன் றுண்டு கேண்மினே. (ஞ)

சிட்டர்வாழ் தென்னவ னுட்டிப் சீருடைப்
பட்டமங் கலமெனும் பதியொன் றுண்டதில்
விட்டகோ டியோசனை போந்து விண்மிசை
மூட்டுமோர் வடதரு வுண்டு முன்னரோ. (ட)

அங்கதி னீழலி லாறு மாதருந்
தூங்கதில் விசும்பிடைச் சுழன்றெ ழுந்துபோ
யோங்குரு வொழிந்துகல் லுருவ மாகியே
தாங்குத லறவிழு மெனச்ச பித்தனன். (ண)

குன்றிய மனத்தொடும் வணங்கிக் கோதையர்
மன்றுறை யிறைவனே மங்கை பங்கனே
யின்றிரும் பிழைபொறுத் தருளி யெங்கண்மே
லொன்றிய சாபமு மொழித்தி யென்றனர். (அ)

ஓதிய பருதிகேட் டெவகை கூர்ந்தியற்
போதமின் மாதரீர் புகன்ற நாட்டிடைச்
சோதிசே ரருளுடைச் சொக்க னென்றியா
மேதகு மதுரையி லிருப்ப மேம்பட. (கூ).

வே று.

செறிவொடு மாங்கு நீங்கள் சேருமின் சேர்ந்த வாற்றேழ்
முறைமையின் வெளிப்பட் டுங்கள் சாபமு நீக்கி முன்னி
னெறிபட வறிய வெட்டுச் சித்தியு நிகழ்த்து வேமென்
றிறையருள் புரியப் போந்தா ரிணைப்பொடு மினிமை கூர்ந்து. (கூ)

ஆங்கிளை யிறைவி யோடு மவ்வயி னெழுந்து வெற்பின்
பாங்குறு திருக்கோ யிற்கண் மேவினன் பாவை மாருந்
தூங்கதில் லாமல் வானிற் சுழன்றுசென் றிழிந்து வீழ்ந்து
நீங்கரு நிழலிற் கல்லாய் நின்றனர் நெடிது காலம். (கக)

வே று.

மன்னிய குருவடி வாகி வள்ளலும்
பின்னெரு ணாணினேற் றணுகப் பேதைய
ருன்னருஞ் சிலைவடி வொழிந்து காணுமுன்
பொன்னுயர் வடிவொடும் போதம் பெற்றனர். (கஉ)

மைப்படி கண்டனே மதுரை வள்ளலே
துப்பமர் மெய்யனே சொக்க நாதனே
யொப்பொடு கேட்பமென் றுள்ளம் பற்றியே
மெய்ப்படி சித்தியை விளம்பென் றேத்தினர். (கஙு)

மஞ்சமை குழலுமை மங்கை பங்கனு
மஞ்சலி ரப்படிச் செய்வம் யாமென
வெஞ்சலில் சொல்லொடு மெட்டுச் சித்தியும்
விஞ்சிய பொருளொடும் விரித்து சாத்தனன். (கச)

வே று.

அணிமா மகிமா கரிமா லகிமா
கணுகீ சத்துவம் வசித்துவ நன்குள
வீணைசேர் பிராத்திப் பிராகா மியமென்
குணமார் சித்திக ளெங்கக் கூறினன். (கஞ)

வே று.

தெரிவைய ரருளிச் செய்த சித்தியாற் சித்தி பெற்றுங்
குருவொடு மிடையு றின்றி யுலாவினர் திசைக டோறும்
பொருவில்கல் லுயிர்த்தெ ழுந்து போனது கண்டு மண்ணோர்
பரவயான் சொக்க னென்றே பரமனு மதுரை புக்கான். (கசு)

ஆகத்திருவிருத்தம் - கசஅங.

ஞக.—தண்ணீர்ப்பந்தர்வைத்த திருவிளையாடல்.

மருவு முன்னெரு காலமெய் யழகான் மன்மத னிவனெனச் சிறந்து
தருமம் வீரியர் தைரிய மூளனுய்த் தனதுயர் மரபினுக் கொத்த
திருவை வேட்டிடா தகிலமுந் தழைப்பத் தீதறு செய்யகோ லோச்சிப் [யன்.
பெருமை மிக்கதென் மதுரையில் வாழ்ந்தான் பிஞ்ஞகற் கன்புளோர் செழி

அன்னவ னுடனேர் தொன்னெறி வளவ னருங்குல மரபின்யான் பய
ந்த, கன்னியைக் கொடுத்தே யுறவுகொள் வேமென் றெண்ணியொண் கா
ரியத் தோகை, முன்னுற வேண்டும் பொருளோடு விடுப்ப மொய்ம்புடை
வழுதிகண் டுவந்து, மன்னிய வுலகத் தியாவரு மதிப்ப மறுபொரு ளெதிர்
செல விடுத்தான். (உ)

வேறு.

இனிமையுற வித்தகவி னடக்கு நாளி லெதிரிலா வுயர்வழுதிக் கினைய
னுய, சினமலியு மொருவயவன் படையி னேடுஞ் சென்னிமக டனைக்கொள்
வா னெண்ணி நீங்கி, மனவலியி னுடன்செல்லக் கண்ட சென்னி மற்றவன்ற
னுடனெதிர்க்க மாட்டா னுகி, யனகடைசேர் மடமகனைக் கொடுத்தான்
மிக்க வறிவுடைய னுயிருந்து மச்சங் கூர்ந்தே. (ஊ)

மன்னுபுகழ்க் கிள்ளிமரு மகனு மந்த மாறனுட்ன் கூடிமுனம் வெல்லற்
கொண்ணுத், தன்னுடைய பெரும்பகைவ னுய மிக்க தானையுடை வடபுடவி
யரசன்றன்மேற், றுன்னியவெங் கயமுதனுற் படையி னேடுந் தோலாது
சென்றவினை தொலைத்து மீண்ட, பின்னரள வில்லாத சேனை கூட்டி யிருந்
தனன்வெங் கிறங்கள்பல பிறங்கப் பேசி. (எ)

தருமநெறி கோடாத தமையன் றன்னைச் சமரிடைவென் றியாமதுரை
கொள்வ மென்றே, யிருநிலத்தோர் பரிவேத்தா வென்னும் புன்சொற் கினை
யாதோ னடலபய னேடுங் கூடிக், கரிபுரவி தெருங்குபெரும் படையி னேடு
ங் கடிமதில்சூழ் மாமதுரை மண்ட லத்து, விளைமருவும் வஞ்சிமிலைத் தணு
கக் கண்ட விமலனடி மறவாத வீர மாறன். (ஏ)

செம்பியன்றன் னெடும்பெரிய சேனை யோடுஞ் சிறம்பேசித் தான்வீர
னுவி ருக்கு, மெம்பிவரு கின்ருன்யா மெதிர்க்க மாட்டே மென்செய்கே மெ
வ்விடத்து முள்ளான் வல்லான், றும்பிவரை யினம்பரிக்கும் பெரிய கோயிற்
சொக்கனுக்கு விண்ணப்பஞ் செய்வே மென்று, கம்பமுறு மெய்யினெடும்
புளகத் தோடுங் காரியமுள் ளனசொல்லிப் பணிந்தான் போற்றி. (ஐ)

வேறு.

மற்றவன் கண்டஞ் சாது கன்னெறி மன்னு வொல்லே
யுற்றநின் படையி னேடு மோசனை யெதிர்சென் றேறி

வெற்றியி னணியாம் வென்றி தருகுவ மென்று விண்மேற்
கொற்றவன் றேற வங்கட் களிர்ந்ததோர் குளிர்ந்த வாக்கு. (எ)

இடரொழிந் திறைவாக் கென்றே யினிமையிற் போந்து கொச்சித்
தொடைமிலை யாது பண்டைச் சூழ்ந்ததன் ரூனே யோடு
மடைவுறக் காஞ்சி சூடி நின்றன னஞ்சா ஞெஞ்சத்
தடமலி மதுரை விட்டாங் கியோசனை யெதிரே சார்ந்து. (அ)

மாற்றலர் வெய்ய தானை மற்றது காணு மூன்னங்
காற்றென விசையிற் பாயும் புரவியுங் களிறுந் தேருங்
கூற்றன வீரர் தாமுங் குலவுற வாரி யென்ன
வாற்றரு மொலியி னேடும் பரந்ததாங் கவனி யேங்க. (கூ)

சென்றவன் கண்டு தேறித் திறத்தெதிர் நடந்து சீறி
யொன்றிய சிங்க நாதஞ் செய்துதன் னுடைத்தாம் வெய்ய
துன்றிய தானை யோடுஞ் சொக்கனை நினைந்து ளத்து
வென்றிகொண் ணாட்புச் செய்யத் தொடங்கினன் மிலைந்து தும்பை. (கஎ)

அங்கது காணு மூன்ன ரடற்பெருந் தானை மிக்க
வெங்கோடும் பரிவேத் தாவும் வெடிக்கவா னுறச்சி ரித்துத்
துங்கவேன் பாம னேடுந் தோன்றிவெம் பூசல் செய்தா
னிங்கெனை டெதிர்த்தற் கின்று வலியுனக் கேதோ வென்றே. (கக)

அணிபொலி தேருந் தேரு மலைந்தன வாளு மாளுந்
துணிவொடு நின்ற டர்ந்து பொருதனர் தூரகத் தேசடு
தணிவிலாத் தூரகஞ் சென்று தாக்கின தந்தி யோடங்
கிணையிலாத் தந்தி வந்து மூண்டன வெங்கு மெங்கும். (கஉ)

இங்கெறி யாகுங் காலை யிறைதிரு வருளால் வெம்மை
மன்னிய கோடை முற்றி வாயுலர்ந் துதக மின்றிச்
செந்நிற வினன்றீ யென்னத் தீக்கதிர் விரிப்ப வாற்ரு
தொன்னலர் படையி னேத்து வீழ்ந்ததவ் வுறுக ளத்து. (கங)

மேவருந் தலத்து மேவி வெஞ்சமர் செய்த பத்திக்
காவலன் சேனை தானுங் காலகீ தியினுல் வாடி
யாவிசேர் தண்ணீர் வேட்டங் காவிசோர்ந் தருங்க ளத்துப்
போர்வினை மாட்டா தாகி நின்றது பொலிவ ழிந்து. (கச)

கருணையன் கண்டி ரங்கிக் கடிதுதற் சேர்ந்த பத்தன்
பொருபடை நடவு சென்று பொருவருஞ் சயமுண் டாகத்
திருவுருக் கரந்து மற்றோர் சேவக னுருப்பு னேந்து
தருமநேர் விளங்க வைத்தான் றண்ணினீர்ப் பந்த ரோங்க. (கஞ)

தாதவிழ் கழுநீ ரேலஞ் சந்தன மூசோங் கோட்டங்
கேதகை யிலவங் கஞ்சண் பகமதி மதுரங் கேடில்
பாதிரி மூதற்கற் பூர மளவிய பரிம ளஞ்சேர்
சீதள வமுதை நல்கத் தெளிந்தது குடித்த சேனை. (கசு)

தெளிந்தவ ருயிர்ம ருந்தாய்த் தெள்ளிதாய் மணந்து கொய்தாய்க்
குளிர்ந்தநீ ரிவ்வி டத்தார் நல்குந ரெனக்கொண் டாடிக்
களிர்ந்தமர் செய்யக் கண்ட கேளலர் தானை பின்னும்
விளிர்ந்தொரு சாம முன்னின் மிலேந்தது மிலேந்து தும்பை. (கஎ)

வெந்திறல் வீரர் நின்று மடிந்தனர் மேல டர்ந்த
சிந்துரப் பட்ட யானை பட்டன திசைப ரந்து
வந்தவெந் துரக வெள்ளம் வற்றின மற்ற டர்ந்த
கொந்தவி ழலங்கல் வையங் குலேந்தன நலங்கு லேந்தே. (கஅ)

சேயவேற் றடக்கை வீரர் செங்குடர் பிடுங்கி யேறிப்
பாய்பருந் திட்ட நெட்டைப் பவளக்காற் பந்தர் நீழ
லாயசெங் குருதி யாற்றிற் குளித்தவி நயங்கள் காட்டிப்
பேயிருங் கணங்க டம்மிற் பிணங்கின கிணங்க டின்று. (கக)

வன்புறு கவந்த மாட மடிந்தசெங் கொடுங்க ளத்து
முன்புறப் போனர் போனு சொழிந்தவர் முளிந்து மாண்டார்
மின்பொலி வேற்ற டக்கை வீரனும் வீர மிக்க
தன்பரி வேத்தா வான தம்பியு நிற்பக் கண்டான். (உo)

இருவரு முகமு கம்பார்த் திளைத்துமு னிற்ப வாகைத்
திருமலி தொடையன் மார்பன் சிரித்துயர் களிப்பி னேடுஞ்
சுரரடி பரவுஞ் சொக்கன் கருணையைத் தொழுது வாழ்த்தி
யுரனுடை யோர்க டம்மைப் பிடித்தன னுறுதி கூர. (உக)

திருந்தல சுகப்ப டாமுன் றிண்டிறற் சேனை யுய்யப்
புரந்தர னயன்மா லாதி சயசய போற்றி யென்ன
வருந்திரு மேனி வேர்ப்ப வோடிமீண் டரிய தண்ணீர்
பரிந்தளித் தாளெ னிப்பப் பந்தருங் கண்டா ரில்லை. (உஉ)

எந்தைவல் லனயார் வல்லா ரெனமனத் ததிச யித்து
வெந்திறத் தவர்க டம்மை வெற்றிமா முரசத் தோடுங்
தந்திரத் தலைவ ரோடுஞ் சாற்றரு மமைச்ச ரோடுஞ்
சுந்தரன் றிருமுன் சென்று காட்டினன் ரெழுது வாழ்த்தி. (உங)

வே று.

துய்ய தண்ணீ ரளித்துச் சுவைபட
மைய நீர்த்தெனை வாழ்வித்த வள்ளலே

யைய னேயின் றிவரை யடியனேன்
செய்யு மாறுரை செய்யெனச் செப்பினன். (உச)

சீல மன்ன சிறந்தநின் காரிய
மேல வின்று முடித்தே மிவர்தமை
மேலு னக்கினி வேண்டுப செய்யெனச்
சால நல்லவன் சாற்றினன் றேற்றிட. (உஇ)

வே று.

மெய்ப்பட வுயர்திரு வாக்கு விண்மிசைச்
செப்பிட வடியவர் சிறத்து நல்லவன்
றுப்பமர் வடிவுடைச் சொக்கை யல்லதிங்
ஙிப்படி யாருள ரெனத்து தித்தனன். (உசு)

மூன்றுற நின்றதி சயித்து முத்தணி
பொன்னணி செம்மணி யிலங்கு பூணணி
பின்னரும் வேண்டிவ பிறங்க நல்கியே
தன்னுடைத் திருமனைத் தலத்துச் சார்ந்தனன். (உள)

வே று.

அருளுடைச் சுந்த ரற்கே யடிமைபூண் டதனு லர்த்தப்
பெருவளிச் சோழன் செய்த பிழைபொறுத் துவந்து காத்துப்
பொருவரும் புகழ்வி ளங்க வேண்டுப கொடுத்துப் போகத்
தரமொடும் விடுத்தா னுளோ னாங்கினிற் றனது தேத்து. (உஅ)

கயவனுந் தம்பி தன்னைக் காதினி காணத் தாழ்ந்த
நயமிலாத் தொழில்க டம்மி னிறுத்தினு னுனு னென்று
சயமுற மாலை யிட்டுத் தண்டிவர் தெரிம லைந்த
வயமுறு சேனை வெள்ளம் வற்றிடச் செற்ற மாறன். (உக)

பகையறக் கூபங் கண்டு பந்தருட் டண்ணீர் வைத்த
புகலருங் கருணை மேனிப் புண்ணியன் றனையு நாளுந்
தகவவன் றனக்கே யன்பு சார்ந்தென் னனையுங் கண்டாங்
ககமகிழ்ந் தேத்தி னார்க ளவனியோ ரதிச யித்தே. (கo)

ஆகத்திருவிருத்தம் - கஉகஉ.

சச.—இந்திரன்முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல்.

விண்ணகத் தலைவ னுய தேவர்கள் வேந்த னுக்கு
மண்ணகத் தலைவ னுய பாண்டிய மன்ன னுக்கு
மெண்ணறச் சிறிது ளத்துள் வெறுப்புள திமையோ ராலுங்
கண்ணுற வறியொ ணாது காரண மதனுக் கென்ன. (க)

முனிவர்கள் கேட்பான் வேட்டு மூந்திய வுலகத் தெல்லா
கினைவையு முணர வல்ல நிகரிலா மலயக் கோவே
மனமகிழ் வோடு மந்த மறைப்பொரு டன்னை யின்று
.விளையற விளம்பல் வேண்டும் விளங்கிட வெங்கட் கென்றார். (உ)

ஆங்கது சொல்ல ஞான வகத்தியன் பகர்வா னீதி
யோங்கிய முன்னோர் கால மொளிவளர் சோ ணாடு
நீங்கரும் வளமை குன்ற நிகரிலா வளவ னாடும்
பாங்குடை யறிவான் மிக்க பாண்டியன் பெரிய நாடும். (ஊ)

ணமில் வளங்க ணல்கு மிரும்புனன் மழைம றுத்துத்
தானமுந் தவமுங் குன்றி நென்முதற் ணனி யங்க
ளானவை வினவி லாம லாதவன் கதிராற் காய்ந்து
மானிட ரற்ற மூற்று வாடினர் வருத்தங் கூர்ந்து. (எ)

இந்நெறி யொழுக்கங் கண்டவ் விருநிலங் காக்கு மிக்க
பொன்முடிச் சேரன் சோழன் பாண்டியன் புகழ்வி ளங்க
முன்னுறத் தம்மிற் கூடி முறைமையின் வான நாட்டு
மன்னிய புரந்த ரன்பாற் சென்றனர் மழையை வேண்டி. (ஏ)

பைந்தமிழ்ப் பொறையன் ஙிள்ளி பாங்குதா ழாச னத்த
முந்துற விருப்பக் கண்ட மொய்ம்புடை நிம்ப மாறன்
சுந்தரன் றனெஙி னைந்து துதிசெயா தெதிர்சென் றேறி
யிந்திரன் பெரிய சிங்கா சனத்திடை யுடனி ருந்தான். (ஐ)

அரியபே ரவனி காக்கு மரசர்மூ வருந்தி ரண்டு
பரிவொடும் வருதற் கென்ன பாக்கியஞ் செய்தே மென்று
சுரர்பதி யதுகாட் டாமற் காரியம் வினவத் தோன்ற
வுரைசெய்வா ரவரின் முன்ன ரொளிவளர் சேரன் சோழன். (ஒ)

எங்கண்மா நிலங்க டம்மு ளெழிலிபெய் யாமல் யாரு
மங்குதல் கண்டி ரங்கி வந்தன மழையை வேண்டிச்
சங்குசெங் .மலஞ் சிந்தா மணிதரு சுரபி யுள்ள
பொங்கெழி லுடை னேயென் றீனைய புகழ்ந்து சொன்னார். (ஓ)

மற்றவர் புகழா முன்னர் வாசவ னினிமை கூர்ந்தாண்
டுற்றெழு மழைக்கு லத்தை யழைத்தில ரொளிசேர் நாடு
மூற்றுநீர் தாழா தெய்தி முழங்கியின் னருள்சு ரந்து
பொற்பமர் புனலைச் சாலப் பொழியுமி னெனமொ ழிந்தான். (ஙு)

வென்றிகொள் செழியன் குன்ற மேதகு விழுப்ப மிக்க
தன்றலை மானங் காத்துத் .தன்னுறு காரி யத்தை

யின்றுநா மொருவன் பாற்சூழ்ந் திரக்குமா றெங்ங னென்று
சென்றவ னுகையா னஞ்சி யிருந்தனன் றிறமை பூண்டு. (கo)

ஆங்கது கண்டு வானே ரதிபதி பொருமை யெய்தி
வாங்கரு நலங்கள் செய்து மற்றவர்க் கன்பு கூர்ந்து
தாங்குபொற் பூணு ரங்க டலமெலா மதிப்ப நல்க
வோங்கிய துதியின் வாங்கி யாங்கவ ருவந்தார் பூண்டு. (கக)

அலேவிலா நெஞ்ச மாற னடல்வலி யறிவா னெண்ணித்
தொலேவிலா விமையோ ராஞ்சு சுமக்கொணாக் கனமு டைத்தாய்
விலேயில தாயெ வர்க்கும் வேதனே செய்ய வற்ரு
யிலருபன் மணியாற் பொங்கி யிருப்பதோ ரார மீந்தான். (கஉ)

சகமகிழ் வெய்த வங்கட் டானது காணு முன்னர்
மிகவதி சயித்து வாங்கி மென்மலர் மாலே யென்னப்
பகையறப் பூண்டான் வென்றி யாயிர முகஞ்சேர் பாரத்
தொகுமணி தரும்பே ராரச் சொக்ஷனே யகத்துள் வைத்தே. (கங)

சேணுளார் மண்ணு ளார்கீழ்த் திசையுளா ரொருவ ராலும்
பூணுைறு மணிப்பே ராரம் பூண்டபே ராண்மை கண்டு
மாணுற வாழ்த்தி னர்கள் வாடிய முனிவர் வானேர்
நாணிய தேவர் கோனு நனிநயந் தகிச யித்தான். (கச)

நேர்வலி கண்டு கொண்டு நெஞ்சுறு வினேம றைத்துப்
பேரியன் மன்னு சாலப் பெரியையா யிருந்தாய் கூட
ஞரின்மும் மூலையாள் பெற்ற வுக்கிர குலதது நித்த
வீரனீ யென்னுந் தன்மை கண்டன மெனவி யந்தான். (கஞ)

வென்றியா லாரம் பூண்ட பாண்டிய னென்று மேன்மை
துன்றிய வழகான் மிகக சுந்தர மாற னென்று
நன்றியி னேங்கு நாம நானில மீது னக்கே
யின்றுமுன் னுவ ழங்கக் கடவவென் றிலங்கச் சொன்னன். (கசு)

வே று.

தென்ன மன்னனுங் கண்டவன் செய்திபோற்
பின்ன மற்ற வுறவாற் பெருமையா
லுன்னே யொப்பா ரிலேயென் றுயர்புற
மன்னு ளத்தொன்று வைத்துப் புகழ்ந்தனன். (சo)

வாய்ந்த கொற்ற மகவான் மழைக்குமுன்
சார்ந்த மூன்று முடிமன்னர் தம்மையுஞ்
சேர்ந்து கல்லன சொல்லிச் சிறந்தன
வீர்ந்து போக விடுத்தாங் கிருந்தனன். (கஅ)

மற்றை மன்னவர் மாசறு மீனவன்
வெற்றி கண்டு புகழவும் மீனவ
னுற்ற காலத் திதவுவ னுய்யவென்
சுற்ற மாகிய சுந்தர னென்றனன். (கசு)

பாரின் மன்னவர் தத்தம் பதியிடைச்
சாரு மன்பொடு சார்ந்தனர் சாருமூன்
சேர ஞட்டினுஞ் செம்பிய ஞட்டினு
நீர்கொண் மேக நிறையப் பொழிந்ததால். (உo)

வே று.

புன்மைதீர் சராச ரங்கள் பொலிவுடை யனவா யோங்கி
நென்முதற் ரூனி யங்க ளெங்கணு நிறைய மல்கி
மன்னிய மனித ரெல்லாம் வரவர மகிழ்ச்சி யெய்தி
கன்னய முடைய தத்தம் வேந்தனை நனிவி யந்தார். (உக)

*துங்கமா னனுஞ்சேய் துர்க்கை தும்புரு வாதி போதன்
சங்கமால் கின்ன ராதி சனகாதி கணேசன் வியாழங்
கங்கைமா விதுவென் றேத்துங் கடவுட்டென் கயிலை யென்னுஞ்
சிங்கமா தங்க ணீங்காத் திருப்பரங் குன்றைச் சார்ந்தான் (உஉ)

*தருமலி பரங்குன் றத்துச் சரவணப் பொய்கைப் பர்ரத்
தாசுறு பன்னம் வீழ்ந்த தப்புறின் மீனு மன்றிக்
கையுறிற் பறவை யாகுங் கையினன் னீரி னோர்கான்
மருவுமோர் பன்ன மீனின் பறவையின் வடிவா யிற்றே. (உங)

*ஒன்றுநீர் மிசையி ழுப்ப வான்மிசை யொன்றி ழுப்பக்
குன்றியாங் குழலுங் காலைக் குறுகிய சே னோர்ந்து
வென்றியின் விடாத தொன்றை விடுவிப்பான் முயன்ரு னின்ற
கன்றிய பிரம ராக்க தம்பிடித் ததுக றத்தே. (உச)

*அங்கது கொடுபோய்க் குன்ரூர் முழைஞ்சினு ளடைத்துப் போகத்
தங்கிய துயரா ரூது சரவண பவவென் றன்பிற்
றுங்கமந் திரத்தை நூல்கள் சொன்னநீ தியிற்றியா னித்தோர்
கங்குலும் பகலு மோதக் கண்டருள் சுரந்தா னன்றே. (உஇ)

*தலமகிழ் தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகன் சென்று
நலமுறு கனவிற் சொல்வா னற்றமிழ் முருக னம்பேர்
பலமிகு தமிழி னோர்ப் பாட்டாற்றுப் படையா நம்மை
யுலகமென் றெடுத்துப் பாடென் றுள்ளுறை கொடுத்தா னன்றே.(உசு)

* இவ்வடையாளமுள்ளசெய்யுட்கள் சிலபிரதிகளில் இல்லை.

வே று.

*உயர்வுற வுலக முவப்பவென் றெடுத்தாங் கொண்டமிழ்த் தண்டலை முவ்ப்ப
வியனுற வுரைப்பக் கேட்டலு மடைந்து வெற்பகந் திறக்கவேல் விட்டு
நயனெடு மெடுத்து வினைகடீர்த் தருளு நன்சுனை காட்டிநீ ராட்டி
யயிலுடை நம்மைக் கிழவனென் றனையென் முலையத் தடைந்தனன் காண.

வே று.

*இனிதோர்கவி குன்றமெறிந் தாயெ னப்பி
னென்றுமினி யாயழகி யாயென் னுங்கான்
மனமகிழ்ந்தீ தியார்பகர்வ ரவர்க்கு வேண்டும்
வரங்கொடுப்போ மதுதையிற்போ கென்னப் போந்து
கனமலிசங் கத்துரைப்பக் கேட்டி யாருங்
களிகூர்ந்தார் தமிழ்முருக னருளீ வாழ்த்திப்
பனுவறிரு முருகாற்றுப் படையென் றேற்றிற்
றெனைநயந்து பாண்டியனென் செய்தா னென்றூர். (உஅ)

வே று.

பாண்டியன் கந்தற் போற்றிப் பரமெனப் பரங்குன் றத்துப்
பூண்டபே ராரம் வைத்துப் போந்துய ராக யத்தின்
காண்டகா யகனே நின்ற னருளினு லடைந்தே னென்று
வேண்டியே துதிப்ப வாண்ட விமலனு மஞ்சே லென்றான். (உக)

வே று.

சித மண்ட லக்கு லத்து தித்த தீதின் மன்னவ
னேது மண்ட லத்தர் மாரி யின்றி யுள்ளம் வாடியே
கோதை மண்ட லத்தி னுங்கு ணம்பொ ருந்து சென்னித
னீதி மண்ட லத்தி னும்ப ரந்து போவர் நித்தலும். (ஙo)

மூண்டம் வெம்ப நெஞ்ச நோவ மூந்த வந்து தானியங்
கொண்டு வந்தி யாவ ருங்கு மெம்ப தீதி செய்யமுன்
கண்டு கண்டி ரங்கி நெஞ்ச மிஞ்ச நானு கைதவன்
பண்டை வெந்தி றத்தி னுலி ருந்த னன்ப கர்ந்திலன். (ஙஉ)

வே று.

பிறிவிலா வெறுப்பி வர்க்கிங் கிப்படிப் பிறங்கிற் றென்ன
வுறவுடை முனிவர் ஞான முனிவகே ளுணர வொண்ணு
மறையுரை பகர்ந்தா யந்த வரிசைமா மானி மாறன்
றிறமொடு பின்னென் செய்தான் செப்பெனச் செப்பு வான்முன். (ஙஉ)

வே று.

அந்த மன்னவ னடற்பெரு வேட்டைவேட் டொருகாற்
சந்து மேவிய வனாயினும் வனத்தினுஞ் சார்ந்து
சிந்தை யின்புறத் திண்டிறல் விலங்குகா ணும
னந்து வீரர்க டம்மொடு மெங்கணு மூலாவி. (ஙஙஎ)

தக்க வேங்கைக ளழைசெவிக் கயங்கள்கிங் கங்கண்
மிக்க மாக்கள்கான் மேதிகள் காடிகள் கலிக
டொக்க மானினம் பன்றிக டுவன்றிய சாரன்
மைக்கு லங்கள்சேர் மலயமாக் கிரியினே யடைந்தான். (நூசு)

வே று.

வன்பெரு ஞாளி விட்டும் வார்வலே விட்டும் விட்ட
தன்கொடுங் கணையால் வாளாற் சத்தியாற் பதைத்தெ ழுந்த
முன்பொரு மாக்க டம்மை முகத்திடை மனமுங் கண்ணு
மின்புற மலேந்தான் குன்ற மெங்கணுஞ் சூழ்ந்த திர்ந்து. (நூடு)

இத்தக வாற்சி றக்கு மெல்லேயி னிரவி யென்ன
வொத்தொளி மணிவி ரிக்கு முயர்ந்ததாள் வளைப்பு றத்துப்
பொய்த்திடா தென்றுஞ் சேரும் புட்கல முன்னு மின்னும்
வித்தக ரான்கு மேக வேந்தரை விளங்கக் கண்டான். (நூசு)

சொல்லரும் பரிவா லெந்தை சுந்தர னருளா லிந்தச்
செல்லுய ரரசர் தம்மைக் கண்டன மென்று தேறி
நல்லசே வகரான் மூன்று நாட்டரு மதிச யிப்ப
வொல்லேயி னவரை மெல்லப் பிடித்தன னுறுதி கூர்ந்து. (நூஎ)

பிடித்தலு நடக்கு வேட்டை வாய்த்ததின் றென்னப் பேரிச்
சடக்கெனப் பாய்ந்து கட்டித் தன்னுடை வீனெ ராலே
துடிப்பற விலங்கு பூட்டித் துணிந்திருஞ் சிறைவைத் தானவ்
விடப்பெயர் கட்டி நல்லு ரிருஞ்சிறை யென்ப ரின்றும். (நூஅ)

கண்டவர் விரைவிற் சென்று ககனநா யகனே யுன்றன்
கo. சூரன், சாதியொருமை; வினை பகை முடிக்கும்-போரையுடைய பகையைத் தொலைப்பான். வம்பு - புதுமை; மணமுமாம். மட்டு-தேன். தேன் - கட்டு; மட்டை அனைத்தற்கு விழும்வண்டுகள் உள்ளேயுற மலர்கள் தேனையவிழும். புனற்கு கயம் ஆடும் - நீரின்கண் யானைகள் முழுகி விளையாடாநிற்கும். கேகயம்-மயில். எம் பெருமக்கள் தமது - எம்முடைய பெரியோர்களது, உரை இலங்கும் மலர் கடம் மதுரை - உரைகள் விளங்குதற்கு இடமாகிய, பூக்களையுடைய சோலைகள் சூழ்ந்தமதுரையில்; பெருமக்கள் - சங்கப்புலவர்கள்; (ககூ) அ, கூ. உரை - செய்யுட்களுமாம்; ஆகுபெயர்.

கக. அயல் நோக்கி ஆர் மோகம் நந்துற - புறத்தேயுள்ள விடயங்களை நோக்குதலால் நிறைந்துள்ள ஆசையானதுகெட, அன்பின் நால் முனிவர் நந்துற - அன்பினையுடைய நான்கு முனிவர்கள் பெருக்கமுற, வன்பினுல் - வன்பிலேடு, மாகம் ஒன்றிய ஆய்மையால் - பெருமைபொருக்கிய நண்ணிய பொருள்களாலும், வாய்மையால் - உண்மைப்பொருள்களாலும், இலங்கிய—, ஆகமம் - ஆகம நூற்பொருள்களை, வந்து பகர் - வந்து உபதேசித்த, ஆலம் வாய் அமுதம் மன் - வடவாலமரத்தின்கீழே எழுந்தருளிய சிவபெருமானது, திரு - செல்வம், ஆலவாய் - ஆலவாயென்னும் திருப்படைவீடே; பாகம் அம் கயல் நோக்கியார் - அவருடைய பாகத்திலுள்ள அங்கயற்கண்ணம்மையினது, பரிவும் அங்கு - திருப்பமும் 'அத்தலத்தேதான். நான்முனிவர் - சனகர்முதலியோர். அமுதமன் - அமிர்தசேர்; மதுரோசர்; அமுதம் - முத்தி, அமிர்தம். பரிவும், உம்மை இறந்தது தழுவியது. 'கயனேத்தியார் பரிவும் அங்கு' என்றது, இத்தலம் சத்திபீடமென்பதைப் புலப்படுத்தியது.

அ - கக: (கட.) கo - கூ.

கஉ. அந்தகன் திசை-தென்திசை. மயிடன் - மஹிஷாசுரன்.

கஙூ. குடதிசை - மேற்திசை. கரியமால் - கரியமாணிக்கப் பெருமாள். 'கருமாணிக்கப்பெருமாள்' என்றும் வழங்கும்.

கஉ - கஙூ. "கன்னிசெங் கோட்டங் கரியோன் றிருவுறை,.....ருழ்கொள வீருந்தகூடலெம் பெருமான்" (கல். சுஉ.)

கச. செல்வியென்னும்பெயர், இக்காலத்துச் செல்லி, செல்லத்தம்மை யென்று வழங்கும்.

கடு. (க) கசு-"மேதினி தோன்று மூன்னஞ், செவ்வியின் முளைத்தெழுந்த திப்பிய விலிங்கம்", "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி.?" (தி.நூ.ரா. தே.) தருமமூர்த்தி: (அ) டு: "தருமராயகன்". மற்றைமாந்ரம - ஏழகருதற்கை.

கஉ - கடு. "கன்னிமால் காளியீசன் காக்குமா நகரி" என்பது, (டுங) கசு; "கன்னிதிரு மால்காளியீசன் காக்குங் கடிமதில்சூழ் மாமதுரை" என்பது, பயன்முதலியன; டு; பக்கம் - உஉசு; 'நான்மாடங்களாவன: கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்றுமாம்' என்பது, நச்சினார்க்கினியம்; (கலி. கூஉ.)

கசு. பூழி - திருநீறு; "பூழியான் பூணை" என்பது, கம்பர்பாடல். ஒரு தடம் - சிவதீர்த்தம். அதுவோ - அம்மட்டோ. இருமை - பெருமை; (ச) கஉ:"இருமைமும் மூலையிலொன்று". யாம் ஆர் - யாம் எத்தன்மையையுடையேம்; 'கூறுதற்கு வன்மையில் லேமென்றபடி.'

கஅ. புகழ் - திருவிளையாடல். ஆனை முற்று. அகலாத மும்மைவினை - சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம்.

நாற்பயன்.

க. திருவிளையாடற் பானு - திருவிளையாடலாகிய சூரியன்.

ச. உடற்குறை - குட்டநோய்; கவந்தமுமரம்.

சு. அத்தம் - பொருள்.

எ. ஊட்டுநாள்-அனுபவிப்பிக்கும் நாள். சேட்டாநாதன் - மகாதேவர்.

அ. சமர் அத்திரம் சத்திரம்.

கூ. ஏதம் - துன்பம். இனிமை - இன்பம்.

க.—திருவிளையாடல்.

உ. யானை - ஐராவதம்.

ச. மலர் - பூப்பு.

டு. மெத்தல் - நிரம்பல்.

சு. சுரவி - காமதேனு. கமலம் பதுமநிதி. சங்கு - சங்கநிதி.

அ. மன்று - பொதுமை. மாவேட்டை - மிருகவேட்டை.

கo. ஏண் - வலிமை. 'கடம்ப வனம்' என்றது, இத்தலத்தை.

கக. காவால் நெருங்கும்.

கஉ. ஒற்றி-உணர்த்து.. எண்மாடி-எட்டுத்திசைப்பக்கம். கண்வலி-கண்ணையுடையவலே; (உஉ) கசு: "வீர ராழிக்கண், பல்விதக்கண்கள்."

கச. கறை - இரத்தம். இலாகவம் - இலகுத்தன்மை; "மிகலாகவம்புரிந்து." (தி.நூ.மயிலே. சுச.)

கடு. நிற்பவும் கொன்றிட உள்ளம் கூடாது - கொல்லுதற்கு மனம் துணியவில்லே. உம்பர், அண்மைவினி.

கசு. விதிர்ப்பு - நடுக்கம்.

கள. கானம் - இசை. வடகூட தீரம் - வடமேற்குக் கரை. காணச் சிவலிங்கத்தைத் தவத்தாற் கண்டனம்.

கஅ. இனிமை - மகிழ்ச்சி. சங்காகம் வாங்கி - கவசத்தைக்கழற்றி. அந்தராயகன் - சுந்தரேசர்; அந்தம் - அழகு. ஆலித்தான் - முழங்கினன்.

கக. எண்கு - உழுவை.

உo. அருச்சிப்பான் - அருச்சிக்க. காட்டுக என்று. என்செய்குவல் - யாதுசெய்வேன்.

உக. ஆவி - தடாகம். ஈழக்கஞ்சம் - பொற்றுமனை. இலங்க அலர்வித்து வருவித்தான்.

உஉ. தேவதேவன் - மகாதேவர்.

உங. நோவதே - நோகின்றதே.

உடு. உம்பல் - யானை. அசை யானை - திக்கஜம். குளிர்விமானம்: (இ) ச - "தேளவிமானமீதால்".

உசு. சிந்தை வாழ்ந்து - மனமகிழ்ந்து; கo - "சேனையுந் தானும், வாழ்ந்து." அணியுற - அழகுமிக. சொக்கு - அழகையுடையவர். 'சுந்தரேசர்' என்பது, வடமொழியாதலின், 'சொக்கன்' என்னும் இத்திருநாமத்தையே பண்டைக்காலத்தில், பெரியோர்கள் பாராட்டிவந்தனர்; இது நூல்களிற் பரக்க காணப்படும்; "திரு

வாலவாய்ச், சொக்கன்", "தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச், சொக்கனே." (திருஞா. தேவாரம்.)

உடு - உசு.) "வேதியன் படைக்க மாலவன் காக்கப், பெருந்தோர் திரு வீருத் தான்பெரிது கிறத்தி,யமுதயில் வாழ்க்கைத் தேவர்கோ னிழிச்சிய, மதமலி யிருகான்கு பிடர்சுமந் தோங்கிச், செம்பொன்மணி குயிற்றிய சிகரக் கோயினு, ளமையாத் தண்ணளி யுமையுட னினைந்த, வாலவா யுறை தரு மூல காரணன்." கல். கூஉ,)

உஅ. திறலுடையவனைக் கொன்ற பாவம் - வீரகத்தி; உ: "மேதகு வீர மிக்க விருத்திரா சுரனைக் கொன்ற, வோதருமம் பழியால்." காஞ்சி - விளங்க அறியார்.

உகூ. ஆரா - தணியாத.

உகூ-ஙூ. "காருடற் பிறையெயிற் றரக்கனைக் கொன்று, வச்சிரத் தடக்கை வகைப்பகை சுமந்த, பழவுடற் காட்டுக் தீராப் பெரும்பழி, பனிமலை பயந்த மாதுடன் தீர்த்தருள், பெம்மான்." (கல். கூ.)

ஙக. வாரம் - நிழமை.

ஙஉ. (திருவிளை. தீர்த்த. ககூ.)

ஙஙூ. சித்திரைச் சித்திரைத்தினத்து - சித்திரைமாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில். ஒப்பிலழகன் - சுந்தரேசர்.

ஙகூ. நிறைவு - மகிழ்ச்சி; (உ) உ.

உ - ம் திருவிளையாடல்.

க. கினைகள் - யானைகள்.

உ. கொளுவுதல் - பொருந்துதல். முன்னைத்தவம்.

ங. தும்பை இபக் கடவுளே-தும்பைமலர்போன்ற வெண்மை மகிழம் பொருந்திய தெய்வயானையே. கோ - அரசன்; இந்திரன். புத்தியினிமை - மனமகிழ்ச்சி. கந்தம் - கழுத்து.

ச. இயம்பக் கேட்டருளாய். உபகாரம் - கையுறை; காணிக்கை.

ஙி. சுக்தரவடிவ, வினி; (ஙீ) ங.

ஙூ. தோன்றி நின்ற மத்திகம்.

எ. வாரணித் துகைத்தோன்.

ஙூ. பூழியன் - பாண்டியன். வனை- ஒருவகை ஆயுதம். தேவர் கோன், வினி. எற்றுண் - அடிக்கப்படுவாய்; (குடம்ப. இலீலா. உ.)

கo. அமைதியினூற் காட்டி யானையாகி உழல்வாயாச.

கஉ. பிறிது சாபம் - சாபத்தின் பரிகாரம்; கஙூ; இது, 'மறுசாபம்' எனவும் வழங்கும்; (இச) அ: "மறு பெருஞ்சாபமுங் கொடுத்தான்."

கஙூ. அருந்தவன்-சிவபெருமான்; "தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே." (புறநா. கட.) தரம் - தகுதி.

கச. உதரநெருப்பு - வயிற்றுத்தீ; ஓடாராக்கினி.

கள பழுது - சாபம்.

ஙூ - ம் திருவிளையாடல்.

க. மலயத்துவசன் - பொதியின் மலையின் உருவமெழுதிய கொடியையுடையவன்; (ச) க. இப்பாண்டியன் அகத்தியமுனிவர் அருளாற்பிறந்தவனுதலின், அவருக்கு இருப்பிடமாகவுள்ளதும் துவசம்போலே,உயர்ந்து தோன்றுவதுமாகிய பொதியின் மலையின் சம்பந்தமான பெயர் இவனுக்கு இட்டனரென்று அஷ்டமிப் பிரதக்ஷிணமான்மியம் தெரிவிக்கின்றது.

உ. எலம் - மயிர்ச்சாந்து. குழற்கா - கூந்தலாகியசோலை. பரிந்தான்- அன்புற்றான்.

ங. ஆதிமரபு, மரபின்பெயர்; சூரியவம்சமென்று கருதுதற்கும் இடமுண்டு. வடிவமங்கையென்பது அப்பெண்ணின்பெயர்; (கக) ங.

ச. முற்றுதல் - வளைதல்.

ஙி. ஆல், ஒடி.

எ. இணையிலான் - சிவபெருமான். ஏதம்-துன்பம். ஆநெம் - ஆருவாள்.

அ. மிகை - அதிகம்.

கூ. அவர் இயைந்த. தொல்லைத் தந்திரம் - பழமையாகியதூல்; வேதாகமங்கள்.

கஙூ. வாரித்தலம் - பூமி.

கஉ. முருத்தம் - முகூர்த்தம். அன்றினர் - விரோதித்தவர்கள்; அன்றினர் சிங்கம் - மலயத்துவசன். முடிதலை, கிரீடம்.

சு - ம் திருவிளையாடல்.

க. மலைக்கொடிமன்னன் - மலயத்துவச பாண்டியன்; "எருதோடு கலையோடு சிலையோடு மலையோட விப மோட நேர், விருதோடு பொருதோறு புலிநேமி கிரிகுழ வினையாடவே" என்னும் தக்கயாகபரணியும், 'பருவதத்தைக் கொடிக்கணெழுதும் பாண்டியன் முலபதி நிலாச்சையும்' என்னும் அதன் உனாப்பருதியும் இங்கே அறியற்பாலன.

கூ. வெஃகிட - புறங்கொடுக்க; வெறிக், விகாரம், திசைவிசயம் - திக்குவிசயம்.

ஙி. மதுரைமன்னன் - சோமசுந்தரக்கடவுள்; (சு) எ. தாள் வரை - மலையின் அடி; 'பாதசயிலம்' என் பர்வடமூலார். மதுரைமன்னன் இருந்தான்.

சு. கொம்மை - வட்டம்.

எ. துற்று - நெருங்கி. மிண்டுகள் - தருக்காற் சொல்லும் சொற்கள். சண்டவெங்கோபம் - மிக்க கோபம்.

அ. ஞாட்பு - போர்க்களம்.

கூ. கண்டது இல் - பார்த்ததில்லை.

கo. அஞ்சல் - அஞ்சற்க.

கக. வரை வில் - மலையாகிய வில். புரிகுழல், எழுவாய்.

கஉ. இருமை-பெருமை; (திருநாக. கசு.) மந்திரி, எழுவாய்; அடன்சொல்லியதை, (கூ) அ - ம் செய்யுளாலுணர்க.

கசு. முறுவல் செய்தவர், சிவபெருமான். முருளம் - அரும்பு [மான்.

கள. பயந்தவட்கு - தாய்க்கு.

கஅ. சுபகாலங்களிற் பூரணகும்பத்தின்மீது கருமம் பாணிகளைச் செலுவைத்தல் மரபு; "கிழக்பாற் றிசையின் மிசைவைத்தி, வெள்ளிக்கும்பத் தினங்கமுகின் பாளை போன்று விரிக்கள தால்." (கம்ப.பால.திருமணச்சு.)

உக. ஆலவட்டம - விசிறி. இரட்ட - மாறியசைய.

உஉ. குணலை - ஒருவகைக்கூத்து அது, பல்வரிக்கூத்தைச் சார்ந்தது சொன்னநாள், பங்குனி உத்தரம்.

உசு. துகிலும் குழையும் இலங்க. வாசிகை - கோத்தமாலை.

உச. மதிநெறி - சந்திரகுலம்.

உடு. நாரதாதிகள் கானத்தைப்பாட. மைந்தன் - முருகக்கடவுள்; இவர் திருமணச்சடங்கு நடத்தியதை, "மருளாரும் பவத்தொடரை மாற்றிய தென் னன்மகளாய் மவுலிசூடிப், பொருளாரும் புவிவிசயஞ் செய்தரசு செலுத்தியமும் மூலப்பூந் தேனைத், தெருளாருந் தமிழ்மதுரை நாதனம ணஞ் செயவிதிநூற் சடங்கு செய்தே, யருளாரும் கடம்பவனத் துறை குமர குருபரனே யகத்துள் வைப்பாம்." (கடப்ப. பாயிரம், டு.) என்னும் திருவிருத்தத்தாலுமுணர்க. இதுபற்றியே, 'சடங்குக்கந்தன்' என்பர்பின்னும்; (எ) கூ.

ஙடு. "நான்கெயிற் றொருத்தற் பிடர்ப்பொலி வரைப்பகை, யறுகால் குளிக்கு மதுத்தொடை யேந்த, மூட்டாட் செம்மலர் நான்முகத் தொருவ, னெண்ணெய் யிறைத்து மணவழ லோம்பப்,புயிவளர் துண்ட திருநெடுமாலோ, னிருகர மகிழ்ப்பி பெறுநீர் வார்ப்ப, வொற்றை யாழியன் முயலுடற் றுண்சுட, ரண்டம் விளர்ப்பப் பெருவிளக் கெடுப்ப, வளவரப் புலன் கொள் விஞ்சைய ரெண்மரும், வள்கோயிற் கருவியிற் பெரும்புகழ் வினாப்ப, முனிவர் செங்கரஞ் சென்னியாக, வருப்பசி முதலோர் முன்வாழ்த்தெடுப்ப, மும்மூலை யொருத்தியை மணத்துல காண்ட, கூடற் கிறைவன்." (கலி. கூ.)

உசு. "பெருநீர் வையைவளநீர்க் கூட, லுடலுயி ரென்ன வுறைதரு நாயகன், கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி, யையவாய்க் காப்புவிட்டணி பூணணிந்து, விரிசடை மறைத்து

மணிமுடி கவித்து, விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து, வழுதி யாகி முழுதுல கனிக்கும், பேரரு ளாளன்", "மதுரை மாநகர்ப் பூழிய ரூகிக், கதிர்முடி கவித்த விறைவன்." (கல். உ, உ.கி.)

உ.எ. எழுத்து-கையொப்பம். சோமசுந்தரக்கடவுள், பாண்டியராசாவாக வீற்றிருந்தபொழுது, 'சுந்தரமாறன்' என்று கைச்சாத்திட்டருளினர்.

உஅ. இருக்கு - வேதம். "மதிக்குலம் வாய்த்த மன்னவ ரூகி, மேதினி புரக்கும் விதியுடை நன்ரு, ணடவூர் நகர்செய் தபெவந் தடைக்கு, மருட் குறி நிறுவி யருச்சனை செய்த, தேவர் நாயகன் கூடல் வாழிறை." (கல். கஉ.)

ரு - ம் திருவிளையாடல்.

க. ஆகண்டலன் - இந்திரன்.

உ. சடங்கு - நித்தியகன்மம். அநந்தமாமுனிவர் - பதஞ்சலிமுனிவர்.

ரூ. ஏத் தரும் - மேன்மையைத் தரும்; துதித்தற்கரியவென்றுமாம்.

ச. கீபமாவனம் - கடம்பவனம். இருந்தது, அளவில்கால முண்டு. பணிந்து அளித்த.

ரு. சொக்கத்தாண்டவமென்பது, சாந்திக்கூத்தின்வகையினுள் ஒன்ரு ன சுத்தநிருத்தம்; சுந்தரதாண்டவ மென்றும் கூறப்படும். இது, நூற்றெட்டுக்கரணமுடைத்தென்பர்; (சிலப். பக்கம், சுச.)

எ. கஞ்சுகம் - சட்டை. இதஞ்செய் அசஞ்சலன். உளம் நிறைஞ்சு - மனமகிழ்ந்து.

சூ - ம் திருவிளையாடல்.

க. நன்கு - இன்பம்.

உ. உடு - நட்சத்திரம்.

ரூ. இவ்வரையென்றது, சோற்று மலையை.

ச. முதுமடைநூல்-முதிய பாகசாஸ்திரம். தெய்வவான் வழுதி, விளி.

ரு. தேவி, விளி.

எ. சொன்றி - சோறு. பூதம் அனைத்தது.

எ. எண்மை - எளிமை.

கூ. மிதவை - சோறு.

ஏ - ம் திருவிளையாடல்.

க. துய்த்தும் - உண்டும். குறள்-பூகம்; தனு - உடம்பு.

உ. அடக்கனை - மடைப்பள்ளி. அற - மிக. ஆவி - புகை.

ரூ. ஈறு - பூமியின்கீழெல்லை.

ரு. பரிதாப வெப்பம் - மிக்கவெப்பம். அமராமல் - அடங்காமல்.

சு. எழ - மிக. வேகவதியாறு-வையைநதி.

எ. சென்றநீர் - மிழக்கேசென்ற வெள்ளம். மண்டுறு நீர் - மிக்கு வரும்வெள்ளம்; மண் துறுநீர், மண்ணிலே ஊறுகின்றநீருமாம்.

அ. ஆரவம் - உண்ணவும். அயினி. சோறு.

கூ. கண்டது - செய்தது. பந்தரையும் நீராவியையுமுடைய வாவி.

கஅ. காவணம - பந்தர்.

கக. ஒலிட - முழங்க. "வனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாவையைத், திருப்பெரு வதுவை பொருந்தியே வந்நாட், சொன்றிப் பெருமலை தின்று ணனி தொலைத்த, காருடற் சிறநகைக் குறுந்தாட் பாரிட, மாற்ரு தலைந்த நீர் நசை யடக்க, மறிதிரைப் பெருநதி வரவழைத் தருளிய, கூடலம் பதியுறை குணப்பெருங் கடவுள்." (கல். கச.)

அ - ம் திருவிளையாடல்.

க. பாவசத்தைவிட்டுக் கேண்மின்.

உ. கதம்பக்கான் - கடம்பவனம். நாளில் - காலக்கிரமத்தில்; (கஉ) கக. மனத்தினைத் தன்னுடைனினைவின் ஆக்கினுள்.

ரூ. சதமுறை , பலமுறை; (ரூ.) ரூக. அதர்படும் - வழிப்படுகின்ற. தாய் அமங்கலி. உததி - கடல். திருநீளத்தடைத்து - அங்கேகரித்து; திருவுளம்பற்றி.

ச. பயம் - பிரயோசனம்.

ரு. மோனமாக இருந்தது, மூகச் சேடகம் - முகவாட்டம்.

கூ. எதம் - தின்பம்.

ஙா. சண்டம் - வேகம்.

ஙூ. அங்கிமூலை - அக்கினிமூலை. "மாமியாடப் புனரி யழைத்த,காமர் கூடற் கிறைவன்" (கீல். உக.)

கo. மனேகரம் - மகிழ்ச்சி.

கூ - ம் திருவிளையாடல்.

க. வழுத்தி - சொல்லி; "வழுத்தீர் மறிச் செங்கண்மால்" (அழகர்கல. எஎ). மாதா - தாய். புனரி - கடல்.

உ. பெருமையால் வந்த.

ஙூ. காதலன் - கணவன். நரலை - கடல். மடந்தையர் ஆடானென்பர்.

ச. யாய் - தாய். மன்றல் - கல்யாணம்.

ஞ. அவை - சபை. நம்ம - நம்முடைய; தனித்தன்மைப்பன்மை. கல்லோலம் - அலை. மாமடிகளென்பது மாமனுரென்னும் பொருளைத் தருவதொரு சொல்; (உ) கூ : "நின்பால் வந்தனன் மாமடி."; "ஊத்தைத் தலேநீத் துயிர்தொழிந்த வொருமா மடிக ளொருமுருட்டி, மோத்தைத் தலேபெற் றமைபாட மூரிக் கபாடந் திரமிலே" (தக்கீக. சசு); "மாமடிகளிடு சாபமும்." (மீனாட்சி. அம்புலி. சு.)

எ. உந்தை - உன்தந்தை.

அ. தடாதகை, எழுவாய்.

க. தெய்வத்தனு - திவ்யசரீரம்.

கo - ம் திருவிளையாடல்.

க.—(கக) ஞி.

ஙூ. உக்கிரப்பெருவழுதியார் சடையோடுபிறந்தனரென்பதை, "பஃறலேப்பாந்தட் சுமைதிருத் தோளிற், றரித்தல களிக்குந் திருத்தகு நாளி, னெடுநாட் டிருவயிற் றருகுட னீருத்த, நெடுஞ்சடை யுக்கிரற் பயந்தரு ணிமலன்"(கீல். எஅ) என்பதனாலும், "வேலோன் வீமலேடா தகைவயினுக் கிரனு ரென்றேர், நன்மகவாய்ச் சடையொடுமூற் பவிக்க" (கடம்ப. இலீலா. கo) என்பதனாலும் உணர்க.

ச. ஒலித்து - ஒலிப்பித்து. நெய்யாடல் - நெய்விழவு.

ஞி. உருவம் உக்கிரமானதுகொண்டு.

எ. முடிசூட்டியவர், சுந்தரமாறர்.

அ. சடிலம் - சடை. விதுகுமெய்ப் பெருவழுதி - சுந்தரமாறர்.

ஙக - ம் திருவிளையாடல்.

க. காலத்திற் கடப்பர்.

உ. வளை, செண்டு என்பன ஆயுதவிசேடங்கள். அறிவடகிரி - எல்லாராலும் அறியப்படும் மேரு.

ஙூ. 'வடிவணங்கு' என்பது பெயர்.

ச. அபிடேகச்சொக்கன் - சிரீடத்தையணிந்த சொக்கநாயகர்; அபிடேகம்-சிரீடம்; வைஷ்ணவஸம்பிரதாயத்திலும் இப்பெயர் இப்பொருளில் வழங்குகின்றது.

ஞி. இச்செய்யுள், "அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த, வப்பார் சடையப்பன்" (திருவா. திருவம்மானை. ஙக.) என்னும் திருவாக்கின் பொருளைத் தழுவியது.

கஉ - ம் திருவிளையாடல்.

க. வேலை-கடல், காலம், தொழில்.

உ. கொள்ளை - கடல்கொள்ளை.

ஙூ. எவரும் பிறப்பம். தம்பம் - பற்றுக்கோடு; "தம்பத்தனே நிந்தித்தொருவேள்விதொடங்குந், தக்கன்" (தஞ்துவ. பிள்ளை. சிற்றில். ஙு.)

ச. மேகங்கள் நான்குவகை; "மேக்கு நால்வகை மேகமுங் கீழ்விழ" (கம்ப. சுந்தர. ஊர்தேடி. கசஙு.)

ஞி. அணுக்கள் - உயிர்கள்.

சு. கொண்மூக்கள் - மேகங்கள். வள்ளுறை - பெரியதுளிகள்.

எ. கூடம் - வீட்டின் ஒருபகுதி, வஞ்சனை.

அ. நீர், முன்னிலேப்பன்மை. ஆகரம் - அன்பு.

க. கருவி - தொகுதி.

கo. புயல் - மேகம், நீர். ஆசை - திசை. சடைப்புரை - சடையின்உள் வெளி.

கஉ. போற்ற - பாதுகாத்தற்கு.

ஙூ. கொண்மூ, விகாரம்.

ஙூ - ம் திருவிளையாடல்.

உ. வென்றுகீள்கழல், ஆருங்கழலென்க. மனேகரம் - மகிழ்ச்சி.

ங. சற்பம்=சர்ப்பம்-பாம்பு. பொக்கணம் - ஒருவகைப்பை; "கத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கம்" (திருக்சிற். உசஉ.) எனவும், "சுட்ட வெண்பொடிப் பொக்கணங் தூக்கிய தோளும்" (திருவிளை. எல்லாம். ங.) எனவும் வரும்; பின், "பொக்கணச் சித்தன்" என்பர்; ககடி

ச. முத்திரை - அடையாளம்; சித்தவேடத்திற்குரியகுண்டலம், குஞ்சி ச்சடை - சிறுசடை.

ஞ. ஆழிமண்கடவாமல் - கடலானது மண்ணைக்கடவாமல். ஈழம் - பொன்.

எ. ஆதிநாதன் - நவசித்தர்களில் ஒருவர்; சிவபெருமானென்பது மற்றொருபொருள். தோதகம் - குறிப்பு.

அ. கரப்பெருங்குன்று - யானை. ஐய - சிறிய. அம்பலம், சிலேடை.

கூ. காந்தன் - தலைவன். குழப்பி - குழம்பச்செய்து.

கo. முறைசெய்வோர்-ஏவலாளர்.

கக. தக்கரம=தஸ்கரம் - கள்ளத்தன்மை.

கஉ. அனிலமார்மூலை - வாயுமூலை.

கங. வேத்திரம் - பிரம்பு. கஞ்சுகியர் - சட்டையிட்டோர்.

கச. பூண்தகும்நீற்று முண்டி - அணியத்தக்க திருநீற்றுருவாகிய திரிபுண்டரத்தையுடையாய்.

கஞி. அனுபமன்-ஒப்பில்லாதவன். நீத்து - வெறுத்து.

கஙு. மதித்தவன் - மதிக்கப்பெற்றவன். என்பாங்கு - என்னிடம்.

கஎ. என்ன - என்று அகத்தியமுனிவர் சொல்ல.

கசு - ம் திருவிளையாடல்.

க. ஆசையற்றமொழிந்தான். அறிவோமென்று அரசன்கருதி.

உ. ஆக்ஞைச்சித்தர் - எவ்வினும் எல்லாம் செய்விப்பவர்; இஃது, எல்லாம்வல்ல சித்தமூர்த்தியின் திருநாமம். தன்குற - தெளிய.

ச. சடக்கென,ஒலிக்குறிப்பு; சடக்கெனத் தின்னை இயைக்க; "சடக்கென, வாங்கயின்று." அ. கண்கொடு எவினன்.

ஙி. அழல் விழித்து - தீப்புறப்பட விழித்து. கண் - கணு, விழி. வேழம்-கரும்பு, யானை.

கூ. "நகிமதந் தறுதண் புகர்கொலை மறுத்த, கல்லிப மதனைக் கரும்பு கொள வைத்த, வாலவா யமர்ந்த நீல நிறை கண்டன்." (கல். ஙூ.)

எ. தந்து - நூல். நாளம் - தண்டி. ஏகாவலி - ஒற்றைவடமாகிய முத்த மாலை.

கூ. உளமழன்று. சித்தர்க்குவென்றி.

கக. சோமசுந்தரக்கடவுளின் ஆலயத்தை யாண்டும் பெரியகோயிலென்பர். பணி - திருவிளையாடல், ஆணையுமாம.

கரு - ம் திருவிளையாடல்.

க. இயல்வாணர் - புலவர்கள்.

உ. தவிசு - அசனம். கோணம் - சதுரம். பாசறி ஞானப்பபலகை; (பதி) உ. (ககு) அ. "

ஙூ. ஆய - ஆரிய. மீடி ஆசனம் - பெரிய ஆசனம. பரிவு - அன்பு.

ச. மண்டபத்தடை நடி - மண்டபத்தில் நடுவே; இடை, ஏழாமவேற்றுமையுருபு; இடைநடி - ஒருபொருட்பன்மொழியுமாம. தாங்குதல் கொடாது - தாமதியாது; (கஎ) ஞி.

ஞி. பயன்கள் நான்கு - அறமுதலியன. முத்தமிழ்க்கொத்து - முத்தமிழ்நூல்களின் தொகுதி; கூ, கo; (கச) எ. நற்றவன் - சிவபெருமான். செற்றம் - தணியாக்கோபம். சித்திரம் - வியப்பு.

கூ. செந்தமிழை - செந்தமிழ்ச்செய்யுட்களே; எ. உயர்ந்த, மூற்று.

எ. தொடர் - நட்பு. மலர்ந்து - மாறுபட்டி.

அ. இரங்கி வந்தனன்.

கூ. இருந்திர் - இருந்தனிர். போக்கலாவிருப்பின் - நீக்குதற்குரியதாக இருந்தால்.

கo. அதர்பட - வழிப்பட.

கக. கேவலனல்லன் - ஸாதாரண னல்லன்.

கஉ. பொருள் - அகப்பொருளிலக் கணம்; பொருள்நூல் - அப்பொருளில க்கணநூல். "அன்பினேந்திணை" என் பது, இறையனாரகப்பொருளின் முத ற்சூத்திரத்தின் முதற்குறிப்பு; "உல கியனிறத்தும் பொருண்மர பொடி ங்க, மாறனும் புலவரு மயங்குறு கா லை, முந்தறுத்து பெருமறை மூவேத்த ருள் வாக்கா, லன்பினேந் திணையெ ன் றறுபது சூத்திரங், கடலமு தெடு த்துக் கையில்வைத் ததுபோற், பர ப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவ ர்க்குத், தெளிதாக் கொடுத்த தென் றமிழ்க் கடவுள்.", "அருமறை விதியு முலகியல் வழக்குங், கருத்துறை பொ ருளும் விதிப்பட நினைந்து, வடசொ ன் மயக்கமும் வருவன புணர்த்தி, யைந்திணை வழுவா தகப்பொரு ளமு தினைக், குறுமுனி தேறவும் பெறுமு தற் புலவீக,ளேழெழு பெயருக் கோ தறப் பருகவும், புலநெறி வழக்கிற் புணரு கவர்க்கு, முற்றவம் பெருக் கு முதற்றே பதர்க்கு, நின்றறிந் துண ரத் தமிழ்ப்பெயர் கிறுத்தி, யெடுத் துப் பரப்பிய விமையவர் நாயகன்" (கல். ங., சுஙு.)

கச. ஒருகவிதைதொடா - ஒருசெ ய்யுள் தொடுத்து; தொடுத்தவர், சி வபெருமான்.

கஞ. கிறைந்திருந்தார் - மகிழ்ந்திரு ந்தார்.

கள. விடுவிப்பான் காரணமா-விடு வித்தற்பொருட்டு.

கசு. சோமசுந்தரக்கடவுள் புலவர் வடிவங்கொண்டு சங்கப்புலவருக்கு இடையே நெடுநாள் எழுந்தருளியி ருந்தபொழுது, அவர்கொண்டருளிய திருநாமம், மதுரைப்பேராலவாயா ரென்பது; (கஅ) அ.

கசூ - ம் திருவிளையாடல்.

க. விதிதலம் - நிலாமுற்றம்.

உ. மாதேவி-பாண்டியன்மனைவி. மாருதவசத்தால் - காற்றுவழியால்.

ச. இழி - துலிற்பொதி; ஆருபெ யர். ஆரியர் - சங்கப்புலவர். சீயம் - சிங்கம். தூக்கினன் - தொங்கக்கட் டினன்.

ஞ. சமாதி - சங்கற்பம்; (உசு) சஅ (உஅ) உக; (சஅ) உ.

சு. அதில் - அக்கவிகளில்; சாதி யொருமை. ஆவிநன்கு - மனமகிழ் ச்சி; "என்னுவிமலர்மேன்மிதித்தொ துங்குவாய்." (சீவக. கனக. சுஉ.)

எ. கீங்கஇல்லாமல் - நீங்காமல்.

அ. தந்தை - சிவமுனி. மெல்லச் சொல்லுவான்.

கo. 'கொங்குதேர் வாழ்க்கை' என்னுங்கவிதைவருமாறு: "கொங்கு தேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழி மோ, பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற், செறியெயிற் றரிவை கூந் தலி, னறியவு முளவோ நீ யறியும் பூ வே" (குறு. உ.); "பொதியப் பொ ருப்பன் மதியக் கருத்தினைக், கொங் குதேர் வாழ்க்கைச் செந்தமிழ்கூறிப், பொற்குவை தருமிக் கற்புடனுதவி, யென்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்குங், கள்ளவிழ் குழலேர் கரு ணையெம் பெருமான்." (கல். க.)

கக. கவிதை ஏடு - செய்யுள் எழு தப்பெற்ற ஏடு. வாய்மையுரியவர் - சங்கப்புலவர். கீவி - இழி. கொள், ஏவல்.

கஉ. நன்பு - நன்மை. புலவர்கள் வெளிப்படையாகப் புகழவில்லை.

கங. வேதியன் - தருமி.

கஞ. அரவம் - முழக்கம்.

கள. இதை - இக்கவியை. நீ கொ ண்டுவா.

கக. கற்றுச்சொல்வோர் - கற்றுச் சொல்லிகள். திருமுடிச்சாத்து-தலை க்கட்டு; (உங) சு: "தனிமுடிச்சாத் தஞ் சாத்தி". ஆழிகள் - மோதிரங் கள். தேத்து - இடத்து.

உo. பிழம்பு - திரட்சி.

உக. வாளா - சும்மா.

உ. கவிதைகளிரண்டும் வருமா று:—வெண்பா. "அங்கங் குலுங்க வரிவாளி னெய்தடவிப், பங்கம் பட விரண்டு கால்பரப்பிச் - சங்கதனைக், கிள்ளி ரெனவதுக்குங் கீரனே வென் கவியை, யாராயு முள்ளத் தவன்." "சங்கறுப்ப தெங்கள்குலந் தம்பிராற் கேதுகுலம், பங்கமுறச் சொன்னற் பழுதாமோ - சங்கை, யரிந்துண்டு வாழ்வோ மரனுரைப் போல, விரந்துண்டு வாழ்வ தில்லை."; 'சங்கரனுர்க் கேதுகுலம்' என்றும் பாடம். விளிந்து - நாணமுற்று.

உக. செய்யாவிடின், மேற் சிக்கு நாறுமே.

உச. ஒக்குமே - பொருந்துமா. செற்றி - நெருங்கி. அல் தரும். இயற்கை இலை.

உசு. அதகண்டு - அதுதெரிந்து. சடிலம் - சடை.

உஎ. எயனை - வீரைவாக.

உஅ. பேச்சைக்கண்டு - சொல்லை யறிந்து. இக்கலிவிட்டு வழக்கைக் காணுமென்க.

உக. சிற்புட்பகேசி - ஞானப்பூங் கோதை; இது, கோளத்திரிலுள்ள அம்பிகையின் திருநாமம்; "இஞ்ஞா வாசகேசி" என்பர்; கூ. கூப்பிடுகின் றவாறு தெளிக்கறிந் துலேயோ.

உக. நாரா - அச்சமற.

கூஉ. வாய்த்ததென்று வாழ்ந்தனன்.

கூகூ. மிக்க தேவியை. ஊழி - பல நாள்.

கூச. திருந்து திருக்கு உள் அத் தர் - திருந்திய வேதம் தியானிக்கின்ற மூலர். திருவளத்து - அழகிய நெற் றியி. திரா பொருளும் திருக்குளத்து - அலைகள் மோதுகின்ற பொற்றமரை யில். உளத்து பெருந்திருக்கு உள் ளான் - உள்ளத்திற் பெரியமாறுபாட் டையுடைய ரக்கர்.

கஎ - ம் திருவிளையாடல்.

கூ. ஓர் அந்தாதி - கயிலைபாதிகாள த்திபாதியந்தாதி.

ச. பழிச்சி - துதித்து.

இ. மேற்கூறிய அந்தாதியின் மு தல்வெண்பாவின் முதல், "சொல் லும் பொருளுமே" என்பதாதலின், 'சொல்லெனுமருந்தமிழ்' என்றார். தாங்குதல் கொடாது - தாமதியாமல். அடுத்து நின்று தடத்தினின்று இனி தெடுத்தானென்க.

சு. வன்னியென்றது நெற்றிவிழித் தியை. சான்றவர் - சங்கப்புலவர்.

எ. பூண - தொண்டுபூண. 'அங்கு' என்றது சங்கமண்டபத்தை. அறிஞர் - சங்கப்புலவர்.

கஅ - ம் திருவிளையாடல்.

க. போதம் - போதித்தல்.

கூ. தென்றல்வரை - பொதியில். சேர்ந்து அடியமென்று.

சு. பொற்ற - பொலிவுபெற்ற.

கூ. பரிசஞ்செய்து - நீண்டி.

கo. அன்றுழை - அவ்விடம். வாய் மையான் - சிவபெருமான்; எழுவாய்.

கஉ. பிறர்கண் அக்கரம் பொருத வன் - பிறரிடமுள்ள வித்தையைச் சுமையாதவன்; அக்கரம், ஆகுபெயர்.

கஙு. தமிழ்க்கு நஞ்சும் - செய்யுட்க ளும். இருளைக்கினன் - நக்கீரர்.

ககூ - ம் திருவிளையாடல்.

க. (உo) கூ: "ஆலவாயமுதே", (உஎ) க: "ஆலவா யமுத வாயான்" என்பவற்றின்றும். பொருட்சுத்திரத் திற்கு - இதையனுசுகப்பொருட்சூத் திரத்திற்கு ஒருகாலத்தில்.

ச. இயல்வாணர்விளி. உப்பூரிகுடி கிழார் என்பது உருத்திரசன்மனுருடைய தந்தையார் பெயர்.

சு. யாதொருசெய்யுள்-எந்த உரை யை; உரையும் செய்யுளென்றுவழங் கப்பெறும்; "இலக்கண மிலக்கிய முரையெனப் பெயர்பட், டிருக்குமெ ன்றெண்ணுக செய்யுளி னியல்பே" (இல. கொ. ஒழி. சரி.) என்றும் சூத்திரத்தாலும் அதன் உரையாலும உணர்க. உணடோ - உண்டாமோ.

கo. செட்டி - வணிகன், மூருக்க கடவுள்; (உஉ) கூ: "செட்டியுஞ் செ ட்டியா யுதித்தான்."

உ0 - ம் திருவிளையாடல்.

க. "தோழனுங்கபிலன்" என்பர் பின்னும்; ங. இதவியோன் - இன் பத்தைச்செய்பவன்; (உக) சு: "இ தவிய புல்லு மிட்டேம்."

உ. பாண்டியன் இடைக்காடனைத் தள்ளியது, கக. "உன்னுடை மதத் தாற் றள்ளி யோட்டியதென்னே" என் பதனுலும் திணியப்பெம். பொலாம ணிபோல்லாமணி - தனியிடாதம னை; சிவபெருமான்; "புகலே தகேறு னக்கன்பருள் யானென்பொ லாம ணியே." (திருவா. திருச்சத. க0); "என்பொலா மணிமன மிரங்கற் றென் பவே." (பிரபு. முனிவர். சு.)

ஙு. இதில், சொல் உமை, பொருள் சிவபெருமா னென்றதை, "என்னை யிகழ்ந்தனஞ்சொல் வடிவாய்கின் னிடம்பிரியா விமயப் பாவை, தன் னையுஞ்சாற் பொருளாள வுன்னையு மே யிகழ்ந்தனன்" (திருவிளை. இ டைக்காடன். க0.) என்பதனுலுமு னர்க.

ஙூ. மின் - உமாதேவியார். மேவ - சிவபெருமான் எழுந்தருள; "முன்னி டைக்காடன் பின்னெழ நடந்து." (கீலீ. எக.)

எ. எண்ணமொன்றிலாமல் - புத்தி பூர்வமின்றி.

அ. கவிமனர் - கவியரசர்; சங்கப் புலவர்.

கூ. கால் நடை.

க0. ஞெகில்=ஞெரித் - சிறிது; இது, மலேநாட்டிலழக்கு.

கக. அந்தாதியென்றது, சிவபெ நுமான்திருவந்தாதியினை; இது, கக-ம் திருமுறையிலுள்ளது. சொன்னவனு கிய கபிலன். என்னை - யாது.

கஉ. உனக்குப் பொதுமோ - உன க்கு இத்தன்மை உண்டாதல் தகு மோ.

கூ. கன்புலவன் - இடைக்காடர்.

கஙி. பன்னியதமிழ் - இடைக்கா டர்பாடியதமிழ்ப்பாடல்கள். ஓடைப் பருப்பதத்து எருத்தம்-யானைப்பிடர்.

உக - ம் திருவிளையாடல்.

உ. உழை - வீடி.

ங. நாவல்பயில் தென்புலம - நாவ லர்கிறிவு. நாம் அளித்த வேலை அற அச்சத்தைக்கொடுத்த கடல் வற்றுப் பாட. சென்று எறி.

ச. பரவை வரக் கண்டி.

சூ. சிவந்த-கோபித்த. அடிவடிம்பு அலம்ப-பாதத்தின் ஓரத்தைக்கழுவ.

அ. எத்தி - வலி, வேல்.

கூ. கினைக்குங்கண் - கினைக்குமிட த்த. தமிழ்ச்சங்கம், முதற்சங்கம் இடைச்சங்கம் இவற்றின் நிலையைய டையதாகும். கங்கைக்கரை - பொ ற்முமனாக்கரை; கங்காநதியின்கரை யுமாம். ஸ்ரீஹாலாஸ்யமாஹாத்மியம், கந-வது லீலை, சசு-ம் சுலோகமுத லியவற்றைப்பார்க்க.

உஉ - ம் திருவிளையாடல்.

க. ஆகமங்கனேத்திருவாய்மலர்த்த னன்.

உ. நனிவெகுண்டி.

ங. தந்திமத்தகப்பிள்ளை-விநாயகர்; மத்தகம்-தலே. திகிக்கை-துதித்தல், தும்பிக்கை. பௌவம் - கடல்.

சு. பலகை - பண்ணிருகைகள்.

எ. மூங்கையம்புதல்வன்-ஊமைப் பிள்ளை.

அ. கணநாதனெருவன் உட்புக. அத்தி - கடல். ஆகமமெடுத்து உல விடி. புத்தி - ஞானம்.

கூ. அதியமாயன் - வலேச்சாதிக்கு அரசன்; 'அதிபத்தர்' என்பதனுமு முனர்க; கo, கஅ. இவ்வரசனுடைய ஊரின்பெயர் விக்கிரமமென்று திரு வித்தரகோசமங்கைப் புராணம் தெரிவிக்கின்றது. காவல்கந்தி. செ ட்டி - முருகக்கடவுள்.

கக. பிறிவு - பிரிவு. வலேவாணர் - வலேஞர். பரதன் - வலேஞன்.

கஉ. மாமடி - மாமனுர்; வினி; (கூ) டு - ம் செய்யுட்குறிப்பைப் பார் க்க. மறைனூல் முறைதரு கயிறு - வேதமாகிய நூலால் முறையே உண் டாக்கப்பெற்ற கயிறு; வேதக்கயிறு.

கஉ. வாங்கு கயிறு - சூற்க்கேமறித்து வாங்கும் கயிறு. கண்கள் - வலையின் இடைவெளி. மணி - உருண்டைகள். "ஒரு சிறுகுடிப் பரதவனுஇப், பொன்றலைப் புணர்வலை கொடுங்கர மாத்தி, தெடுங்கடல் கலக்கு மொருமீன் படுத்த, நிறையரு ணுய கன்" (கல். கக.)

கஙி. மிடித்தனம் - வறுமையுற்றேம்; "இடைமிடித் தார்த்தமைத்தேடி." (திருவேங்கைக்கோவை, ஙக.)

கசு. சிலைத்து - முழங்கி.

கஅ. "அதியாய மங்கை யமர்ந் தான் றன்னே" (திருநா. தே. திருவதிகை.) என்றதிருவாக்கு, சிவபெருமான் அதியாயன் திருமகளே விரும்பி மணஞ்செய்தருளிய இவ்வருமைத்திருவிளையாடலைப் புலப்படுத்தி விளங்குதல் காண்க.

கஙு. இறைபணியே - சிவபெருமான் திருவிளையாடலே.

உ0. ஆதிமுனி, வினி.

உஉ. புரியா - புரிந்து. "எண்ணெணுத்தமப்பத்தர்" என்பர் பின்னும்; உங. மன்றற் பேதை - மங்களேசுவரி. திருவுத்தரகோசமங்கைப் புராணம், அத்தலத்தில் தவஞ் செய்த முனிவர்கள் ஆயிரவரென்றும் அவர்களுக்குக் காட்சிகொடுத்தருளியவருடைய திருநாமம் காட்சிகொடுத்தநாயகரென்றும் கூறுகின்றது; பார்ப்பதிதவம்புரிந்த அத்தியாயம் பார்க்க.

உங. பத்தர்தங்கண்-பத்தரிடத்து, உத்தர ஆகமகோசங்கள் - விடையாகிய ஆகமபுத்தகங்கள்.

உஙம் திருவிளையாடல்.

ச. சமாதி - சங்கற்பம்.

ஞ. திப்பு - பலழம்; தூய்மையுமாம்.

ஈ. கழையதண்டு - மூங்கிற்றண்டு. கலிங்கம் - ஆடை. முடிச்சாத்து - தலைப்பாகை. காதணிகளும் கண்டிகைகளும் தாழ.

ஊ. வனேத்தனன் - அகப்படுத்திக் கொண்டார்.

உ0. மாலை - மயக்கத்தை.

உச. வணைப்போம் - தடுப்போம்; "வள்ளனீங்கப்பெருஞ்வனேத்தேனென" (தீவக. குண. ஙூ.).

கஞி. தனம் - கொங்கை, பொன். "இதழியுந் தும்பையு மதியமுங் சரர்து, வனவிலை மாக்கள் வடிவெடுத்தருளி, முத்தமிழ் நான்மறை முனேத்தருள் வாக்கால், வீதி கூறி விதித்த முன் வரத்தாற், கருமுகில் விளர்ப்ப வறனீர் குளிப்பக், கண்புதை யாப்புத் தினியிருள் விடிய, வடிறெறும் பிணித்த பாவமும் புரைக், கண்டனீள் கதிப்பினர் கைகுவி பிடித்துக், குருகணி செறித்த தனிமுத னுயகன்." (கல். சக.)

கங. செட்டியார், வினி.

கள. பாலலோசனம்-நெற்றிக்கண்.

கஙு. அளகைக்கோன் - குபேரன்; கோனென்னும்பெயர் வணிகருள்வழங்கும். மழவுற - இளமையுற. மழவுறுதற்குக் குமரியாடவந்தன்ன; குமரி, நிலேமடை. இன்' - நல்லகுலம், மூங்கில். இச்செய்யுள், "வந்தவரவென்னே" (தீவக. சுர. உசு) என்னும் செய்யுளின் கருத்தைத் தழுவிவந்தது.

உ0. பரிசனம் - ஸ்பரிசம். தாங்குதல் கொடாது - பொறுமல்.

உக. 'அஞ்சி' என்றார், பழியஞ்சியாதலின்.

உஉ. 'உடையவனறிந்திடாத சரக்கிலே' என்பது ஒருபழமொழி.

உச. செச்சைக்கண்ணி - வெட்சிமாலே.

உசு - ம் திருவிளையாடல்.

க. காடுவெட்டியென்பது, இவ்வரசன்பெயர். தன் இலச்சினே - மீனமுத்திரை.

உ. ஆலயம் - இந்திரவிமானம்; அஃதி, அ - யானே, கச - கணநாதர், ஙஉ - சிங்கங்களால் தாங்கப்பெறுவது; "கரியெட்டுஞ் சினமடங்க னுலெட்டு மெட்டெட்டுக் கணமுந் தீங்க." (திருவிளை. இந்திரன். அங.)

ஈ. 'தென்னெடு பேராறும் வாரா வாறு நீங்குசெயக் கண்டனே' என்பதை, "வழுதி யன்றியும் வையையும்பகை யான தென்று வருந்தினன்" (தீருவிளை. விடை. கக.) என்பதி தழுவிவந்திருத்தல் காண்க.

ச. முரித்தி - இடித்து. இயந்திரத்தால் ஏற்றி. எயில் முரிவாய் - மதிலை இடித்த வாயில்.

ஞ. மேல்விதும்ப - உடல்நடுங்க.

ஈ. ஆராஅன்பு - தெவிட்டாத அன்பு. தடினி - ஆறு.

உ. ஏற்று இலச்சினை - இடபமுத்திரை.

கo. போத - மிக.

கக. வாய்மதில், வினைத்தொகை. சேவுறுகுறி - இடபமுத்திரை.

கஉ. முறைமை வாயில் - இந்த வரலாற்றை யுடையவாயில்.

உருடம் திருவிளையாடல்.

க. இன்னெறி - இனியநெறி; கல்லாகடை.

ச. காவல்லாற - காக்கப்படுதலையுடையபொன்னன்ற. யாரையுமறைத்து மைந்தனைக்காத்த அமைச்சர்க ளென்க; "முடிசூடுவான் மறைத்துக்காத்தவமைச்சர்." (கடம்ப. இலீலா. உஞ.)

ஞ. சூட்டுவான் - சூட்ட.

ஈ. உலகம் அதிர்வுறும் - உலகம் நடுங்கும்.

எ. புனை - காகபாதம்.

கூ. தப்பி மண்விழுந்தவைகள்.

கo. வலனுடைய என்பு வைரம், இறைச்சி பவழம், கருவிழி நீலம், கவம் புருடராகம், இரத்தம் மாணிக்கம், மயிர் வயிடூரியம், நிணம் கோமேதகம், பல் முத்தம், பித்து மாகத மென்க.

கக. மாணிக்கம் எழுவகை இலக்கணமுடைத்து; இவற்றை, "மாணிக் கத்தியல் வகுக்குங் காலைச், சமனெளி சூழ்ந்த வொருநான் கிடனும், நால்வகை வருணமு கவின்றுவிப் பெயரும், பன்னிரு குணமும் பதினறுகுற்றமு, மிருபத் தெண்வகையிலங்கிய நிறமு, மருவிய வீலும்பத்தி பாய்தலு, மிவையென மொழிய வியல்புணர்ந் தோரே." (நீல. ஊர்காண். கஅசு-கஅள. உரை) என்னுமேற்கோளாலும்தெளிக.

கஉ. சமனெளி - இலங்கைத்தீவிலுள்ள ஒருமலை; இதனை, "இலங்காதீவத்துச் சமனெளி யென்னுஞ், சிலம்பினை" (மணி. உஅ-ம் காதை, கoள-கoஅ.) என்பதனாலும், அம்மலையை நான்குநதிகள் சூழ்ந்துள்ளனவென்பதை, "குடமிச் செக்கர்ச் சமனெளிருந்த, நிலாநதி நான்கி னிகழ்ந்தனகுறியும்" (கல். சள.) என்பதனாலுமுணர்க.

கங. இதிற்கூறிய மாணிக்கத்தின் பன்னிருகுணங்களை, "தேய்க்கி னெருப்பிற் சேர்க்கி னங்கையிற், றூக்கிற் றகட்டிற் சுடர்வாய் வெயிலிற், குச்சையின் மத்தகக் குறியினே ரத்தி, னெய்த்துப் பார்வையி னேர்ந்து நிவந்தாங், கொத்த நற்குண மூடைய பன்னிரண்டும்." (கல். சள.) என்பதனாலுமறிக.

கச. மாணிக்கத்தின்குற்றம் பதினென்பதை, "கருஞ்சொய் தாதல் கீற்று வெகுளி, திருகன் முரணே செம்ம ணிறகன், மத்தகக் குழிவு தராச மீலச்சுமி, வெச்சம் பொரிவு புகைதல் புடாயஞ், சந்தைநெய்ப் பிலி யெனத் தருபதி னைறும்" (கல். சள.) என்பதனாலுமறிக.

கடி. அங்கியும் அகில்விழுதழலும். சாதுரங்கமுதலியவை மாணிக்கத்தின்வகை; இங்கே மாணிக்கத்திற்குப் பொதுவாகக்கூறிய இருபத்தெட்டு நிறங்களை, நால்வகைப்படுத்தி, சாதுரங்கத்திற்குப் பத்துநிறங்களும் குருவிந்தத்திற்கு எட்டும் சௌகந்திக்கு ஆறும் சோவாங்கத்திற்கு நான்குமாகக் கூறுவதுமுண்டு; "தாமரைகழுநீர்" (சில. நசசு - ம் பக்கம்.) என்னும் மேற்கோள் முதலியவற்றையும் "கதிர்நிலாபரப்பும்" (கல். சள.)

என்பதையும், "சாதுரங்கநிற்கும்" (திரு விளை. மாணிக்கம். ஈக.) என்னும் செய்யுள் முதலியவற்றையும்பார்க்க. மேற்கூறியவற்றில் ஒத்தும் ஒவ்வாதும் இருப்பனவுள.

கசு. தேங்கிடையளவே விலைகோள், ஒளிபரத்தலே பத்திபாய்தல். முத்தக்கள் தலசம் சலசமென 'இருவகைப்படும்; அது பகின்மூன்றிடத்தப் பிறக்குமென்பர், பாஸ்கோத்திரனிவர்; (திருவிளை. மாணிக்கம். ஙசு - ஙச). இங்கே, 'காவலாகனர்திண்டோள்' என்றவிடத்து, அதில், 'ஐவாய்மான்கை' என்பது கூறப்பட்டுள்ளது.

கள. "உடுத்திர ளனைய காட்சியுருட்சிமா ரின்மை கையா, லெடுத்திடிற் றிண்மை பார்வைக் கின்புறல் படிக மென்ன, வடுத்திடு குணமாறு" (திருவிளை. மாணிக்கம். ஙஅ.) என முத்தின்குணம் ஆறென்பர். வயிரம் பிறக்குமிடம் எட்டு.

கஅ. வயிரத்தின் குற்றம், கஉ; குணம், ஙு; "சாமைமலங் கீற்றுச் சப்படி பிளத்த, றுணைகரி விந்து காக பாத, மிருத்துக் கோடிக ளிலாதன மூரித, ரூரை மழுங்க றன்னே, டீரா றும் வயிரத் திழிபென மொழிப", "பலகை யெட்டுங் கோண மாறு, மிலகிய தாரையுஞ் சுத்தியுந் தாரமு, மைந்தது குணமென் றறைந்தனர் புலவ, ரிந்திர சாபத் திகலொளி பெறினே" (சில. ஊர்காண். கஅo-கஅங. விசேடவுரை.) என்னுமேற் கோள்களாலறியலாம்.

கக. ஆலுலக்கண் - பசுவின்கண். பூவைப்பூ - காயாம்பூ. நிலத்தின் ஒளி வகையை, "கோகுலக் கழுத்துக் குவளை சுரும்பு, ராகுலக் கடகளவி நிச் சாறு,.....காயா நெய்தல் கனத்தல் பத்தி, பாய்த லெனக்குண மும் பதினென் றுமே"(சில. ஊர்காண். ககo. விசேடவுரை.) என்னுமேற் கோளாலும் உணர்க.

உo. வீரை - ஒருவகைமரம். பவழத்தின் குற்றம் இன்னவென்பதை, "கருப்பத் துளையுங் கல்லிடை மூடங்களுங், திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்" (சில. ஊர்காண். ககுக - ககஅ.) என்பதனாலும், பச்சையின் குணங்களை, "நெய்த்தன் மயிற்கழுத் தொத்தல்பைம் பயிரிற், பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல், வத்திபாய்தல் பொன்வண் டின்வயி, றுறத்துத் தெளிதலொ டெட்டுங் குணமே" (சில. ஊர்காண். கஅச, கஅடு. விசேடவுரை) என்பதனாலுமுணர்க.

உக. பச்சையின்குற்றம் எட்டும், "கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்றுப், பொரிவு தராச மிறுகுதன் மாகதத், தெண்ணிய குற்ற மிவையென மொழிப" (சில. ஊர்காண். கஅச, கஅஞ. விசேடவுரை) என்பதனால் ஆராய்ந்தறியன.

உஉ. தோராவல்லி, தோரமல்லியெனவும் கனகதோராவல்லி, கனகபுஷ்பராகமெனவும் வழங்கும்.

உரு. நவம் - புதுமை, ஓன்பது. மறை பறை - வேதம் சோலுஞ்சுற.

உசு - ம் திருவிளையாடல்.

க. பவநிசி - பாவமாகிய இருள்.

உ. எண்ணி, நெட்டோலையைக் கட்டி விட்டனன்.

ரு. பதிகள் - ஊர்கள். என்று நெட்டோலையைக் கட்டிவிட்டனனென முன்னேகூட்டுக.

ச. எண்ணிரி - எட்டிமரம்; அவை பலவாறு வழங்கும்; அவற்றின்பெயர் கனி, சைனர்களுள் வழங்குவதாகிய, "பரங்குன் றிருவகம் பப்பாரம் பள்ளி, யருங்குன்றம் பேராந்தை யாலை - யிருங்குன்ற, மென்றெட்டு வெற்பு மெடுத்தியம்ப வல்லார்க்குச், சென்றெட்டி மோபிறவித் தீங்கு" என்னும்பழைய வெண்பாவாலும், "அஞ்சனங் கௌஞ்சங் கோவத் தனந்திரி கூடங் காஞ்சி, ருஞ்சர சைய மேம கூடமே விந்த மென்னு, மஞ்சிவர் வகைக ளெட்டும் வைகுறு மமணர்" (திருவிளை. யாலை. எ.) என்பதனாலும் முஞ்ஞாக; மதுரையைச் சூழ்ந்த எட்டி

மலைகளென்பாருமுளர். வாழ்ந்து - மகிழ்ந்து. சட்டென - விரைவாக.

இ. மன்று - பொதுவான இடம்; அசோகமரம் அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்களென்னுமிவர்கள் தங்கிய ஐந்திடங்கள்கூடியமன்றின்கண் நிற்பதாகச்சொல்லப்படுமாதலின், 'மன்றுநீ டசோகநீழல்' என்றார்; "சந்தியைந்துந் தம்மூடன் கூடி, வந்து தலைமயங்கிய வானபெரு மன்றத்துப், பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்" (சில. நாடுகாண். ககூ - உக.) என்பதனாலுணர்க.

ஈ. மொஞ்சகம்-மயிலிறகின் தொகுதி; மந்திரித்தற்குச் சைனர் கையிற் கொள்வது; "தழையுலாங்கையர்" (திருவிளை. விருத்த. க.).

அ. கீட்டு - தூரம். அதிர்வு - முழக்கம். 'முடிமணியெனக்களித்த' என்றதனால், இவன்காலத்து இரண்டு திருவிளையாடல்கள் நடந்தனவென்பது அறியப்படுகின்றது.

கஏ. அட்டாலை - மதின்மேல்மண்டபம். அது ஞாயிலென்னுங்கூறப்படும். கண்டான் - கேட்டறிந்தான்.

கக. முன்னர் உழைமஞ்சிதவழ் எயில் - கிழக்குமதில்; கஏ: "கீழ்பாலிஞ்சி" என்றார்; முன்னர் - முதலிலென்றுமாம்; உழை - மான்.

கஉ. தொப்பாரம் - வீரர்கள் தலையிலணியும் முடிவிசேடம்; இஃது இக்காலத்தில் ஆலயங்களிலே காணப்படும்.

கஙூ. எழ - மிக.

கச. அருவியோங்கல் - யானை. இலக்கு - லக்ஷ்யம்.

கசு. திருமாலும் பிரமனும் இந்திரனும் போற்ற, யானை ஆலயம்-யானைகளாற் சுமக்கப்படும் இந்திரவிமானம்.

கஎ. செல் - மேகம். அரிமுகமால் வாளி - நரசிங்காத்திரம். குளம்-நெற்றி. இலத்திவாய் - அபானம். உதப்பி - வயிற்றிற்சீரணியாமலிருக்குமுனைவு.

கஅ. அத்தி இலத்தி சொரிந்தது - யானையானது இலத்தியைச் சொரிந்தது.

உஏ. மானிடர் அடைய - மனிதர் எல்லாரும்.

உஉ. தலை பறி - தலைமயிரைப் பறித்துக்கொள்கின்ற.

உஙூ. கல் - மலை. [ரேசர்.

உச. வடிவுடைக்கடவுள் - சுந்தரர்.

உசு. கச்சம் - அளவு.

உஎ. பிறங்கு நின்றார். பிறங்கு நின்றார்.

உக. பருப்பத இபத்தை - மலை போன்ற யானையை. அவதானம் - தொழில் வரலாறு; திருவிளையாடல். காவலன் இருத்தினான்.

உஎ - ம் திருவிளையாடல்.

க. சாத்தவர்கள் - சென்றுசென்று வியாபாரம்செய்யும் வாணிகர்திரள்; இது, ஸார்த்தமென்னும் வடமொழியடியாகப் பிறந்ததென்பர். புராணஸார் - அசுவசாஸ்திரம். குதிரையிட்ட - குதிரைகளையளித்த; "இனப்பரியிட்டதன்றி" என்பர் பின்னும்; (ஙூ) இரு. திருவாதவூர் புராணத்தில், 'குதிரையிட்ட சருக்கம்' என்னும் பெயரும் இங்கே அறியற்பாலது.

ஙூ. மதுரகம் - இருப்பைமரம்; 'நெட்டிலையிருப்பை' என்னும் அகவல், "நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ, வாடா தாயிற் பீடைப்பிடியின், கோடேய்க் கும்மே வாடிலோ பைந்தலைப், பரதர் மனைதொறு முணங்குஞ், செந்தலை யிரவின் சேரேய்க் கும்மே." என்றது. இது தமிழ் நாவலர் சரிதையிற் கண்டது. இருப்பையும் மகிழும் அத்தலத்திற்குரிய விருக்ஷங்களென்று தெரிகின்றன; "கமழ்மதுக மகிழ்வாத புரத்து." (கடம்ப. இலீலா. உஎ.). அத்தலத்தில் ஸ்ரீமாணிக்கவாசகர்க்குச் சிவபெருமான் திருச்சிலம்பொலியைக் காட்டியருளினர்; "வாத வூரினில் வந்தினி தருளிப், பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" (திருவா. போற்றி. ஙூஉ - ஙூக.) என்பதனாலும், இங்ஙனம்,

உஅ - ம் திருவிளையாடல், கசை - ம் செய்யுளாதலுமுணர்க. வேதநாதரென்பது, அத்தலத்துச் சிவபெருமானுடைய திருநாமமாதலின், 'வேதநாயகனுார்' என்றார்; "வேதியர்" என்பர்மேலும்; ச. திருமால்வந்து பூசித்தபொழுது "வேதாமும்" என்றகருதி, சிவலிங்கப்பெருமானிடமிருந்து தோன்றினமையின், இத்திருநாமம் அமைந்ததென்று அத்தலத்து வடமொழிப்புராணம் தெரிவிக்கின்றது.

ச. ஆதியாகிய ஆதித்தன். சோமன் - சந்திரன். வாதாசன் - வாயுதேவன்.

ஙo. வலை - சங்கு.

சு. மானசங்கமென்பது, திருவாதவூரருடைய மூன்றையோரிலக்கமுள்ளதென்பதை; இந்நூல், உஅ - ம் திருவிளையாடலில் அ - ம் செய்யுளிலுள்ள, "இருநிலந்தின் மானபுர மென்னுங் கொடிமை பொருக்கவேலன்" என்பது ஆராயத்தக்கது. ஒரு கணநாதர், சிவபெருமான்கட்டளைப்படியே வந்து திருவாதவூரராக அவதரித்தனரென்பதை, "கணநாதர் தமிலொருவன் விடை, யிற் போந்து கமழ்மதுர மலிழ்வாத புரத்து வாழ்ந், தனராமாத் தியற்குலத்துட் டோன்றி" (கடம்ப. இலீலா. உஎ.) என்பதனாலுமுணர்க. இந்நூலில், (உஉ) அ: "இத்தகைமையிற்றிகழு மெல்லியினி லுட்புக விலங்கணநாத னொருவன்" என்றது இங்கே அறியற்பாலது. இச்சரித்திரவிளக்கம், திருவுத்தரகோசமங்கைப்புராணம், பாப்பதி தவம்புரிந்த அத்தியாயத்தாலுமுணர்க.

எ மூன்றனுருபு ஏதுப்பொருளையன. தன் ஆட்டை நன்மை மல்கிய தலைமை சேர்ந்தாட்டை - தன்னவன் பிரியாமை வேண்டுதல்; ஈண்டு, ஓர்; "தன்னவன் பிரியா வகை" என்பர், பின்னும்; கூ; பிரமராயனெனபது, பிரமாதிராயனெனவும் சிலசாசனங்களிற் காணப்படுகின்றது.

அ. எற்ற தாழ்வு கேட்டிருத்தல் - புகுந்துள்ள குறைகளை விசாரித்துப் பரிகரித்திருத்தல்.

கூ. செய்தி - நாற்படைச்செய்தி.

கச. கோடகம் - குதிரை.

கடி. துற்ற - நெருங்கின. கொளப்படும் - கொள்ளல்வேண்டும்; தேற்றவினை.

கசு. மறு மண்டலம் - வேற்றரசர் தேயங்கள். பங்கி - குதிரைச்சாலை. கட்டத்தரும், தேற்றவினை.

கஅ. அகம் - பாவம். வீற்தனவென்று பகர்ந்தனர். அறை - பொன்னறை. புராவிதுால் - அசுவசாஸ்திரங்கள்; சூரியனுலும், சாலிகோத்திராசாலும் அந்நூல்கள் செய்யப்பட்டுள்ளனவென்பர்.

கசு. மாற்றம் நன்று.

உo. புஞ்சம் - தொழுதி. கண்காணியின் - மேற்பார்வையுள்ளோனுல்; இப்பெயர், இப்பொருளில் தென்னுட்டில் வழங்குகின்றது.

உக. பரிக்கும் தெம்மையோர் - சுமத்தற்குரிய கல்லொழுக்கமுடையோர்; "பொன்பரித்தவரை" என்பர்பின்னும்; சக.

உசு. பெண்ணை அன திதிக்கை பிள்ளை - பனைபோன்ற திதிக்கையையுடைய பிள்ளை; விநாயகக்கடவுள்.

உச. ஆம் குமரன் - பெருமையையுடையவராகிய முருகக்கடவுள். ஓங்கும் அரண். கனி - மாங்கனி.

உசு. என்று ஆர் - சூரியன் பொருந்துகின்ற; சூரியனை ஒத்தவென்பதுமாம். இச்செய்யுளிலுள்ள நயங்கள் மிகப்பாராட்டற்பாலன.

உள. ஆய்த்தி டோரண்டத்தான் - அண்டங்களைப்பெற்றருளியவர்.

ஈo. மற்று மன்னர் - வேறு அரசர்கள். பல்லியம் - பலவாத்தியம்.

ஙக. காலை - சிவபெருமான் திருவடியை. காணை - திருக்காளப்பேர்; காளையார்கோயில். ஐராவதம், தனஞ்சிருந்த சாபந்தீரும்பொருட்டுச் சிவ

பெருமானை வழிபட்டதென்பது அத்தலபுராணவரலாறு; "மானமா மடப்பிடி வன்கையா லலகிடக், தானமார் கடகரி வழிபடுங் காணப்பேர்" (தீருஞா. தே.) என்பதனலுமுணர்க. ஐராவதத்தால் உண்டாக்கப்பெற்ற, மிகப் பெரிதான தடாகமொன்று, யானைமடுவென்னும் பெயருடன் இன்றும் அத்தலத்தே உள்ளது.

உஉ. பகல் - சூரியன். அந்தணன் - பிரமன். திருமான்மைந்தன் - மன்மதன். கோடிடைமாமுனி - கலிக்கோட்டுமுனிவர். பூமகள் - பூமிதேவி. பூழியன் - பாண்டியன். காரணவன் - சுந்தரேசுவரர். சோமன் - சோமேசுவரர். காஞ - காஞ்சியீசர்; அத்தலத்திற் சுந்தரேசுவரர், சோமேசுவரர், காஞ்சியீசரென்னு மூன்று சிவலிங்கப் பெருமான்களுடைய சந்நிதிகள் உள்ளன. விக்கிரமசோழன்மகள் சுகந்தகேசியை மணம்புரிந்த வரகுணபாண்டியர், அவளுடைய அழகின்மிகுதியைக்கண்டு அத்தலத்திற் சிவபெருமானுக்கு அர்ப்பணஞ்செய்ததனரென்பதும் அவளுடைய கூந்தலின் நறுமணம் எங்கும் பரவியதபற்றி அத்தலம் சுகந்தவனம் அல்லது கந்தவனமென்று பெயர்பெற்றதென்பதும் அத்தலபுராணவரலாறுகள்.

ஙூ. 'மொய்யார் பொய்கை' என்பது, திருப்பெருந்துறையிலுள்ள ஒரு தீர்த்தம்; "மொய்யார் தடம்பொய்கை புக்கு" (தீருவா. திருவெம். கக.) என்பதனலுமுணர்க. திருப்பெருந்துறையென்பது, பிருகத்தீர்த்தமென்று வடமொழியில்வழங்கும்; இத்தலம் இக்காரணப்பெயர்பெற்றதை, திருப்பெருந்துறைப்புராணத்துள்ள பெருந்துறைப்படலத்தாலுணர்க.

ஙூ. வஞ - சங்கு. நாகம் - புன்னை; நாகம் நித்திலம் காட்ட.

ஙூஇ. மூன்றுறுமறையவர் - மூன்றாற்றுவர்; இவர்கள் இத்தலத்திற் சிவபெருமானைப் பூசித்தல் முதலிய வழிபாட்டிற் குரியோர்; நில்லைமூவாயிரவனைப்போல. இறையினின் அமரராக்குமென்க.

ஙூக. சந்தை - வேதம்; சிவ்பெருமான் உபாத்தியாயர் வேடம்பூண்டே அத்தலத்தில் ஓரிடத்திற் சிலநாளிருந்து மேற்கூறிய மூன்றாற்றவர்களுடைய பிள்ளைகளுக்கு வேதத்தைக் கற்பித்தமையின், 'சந்தைபயிந்தனர்' என்றார்; "வேதாரணியத்து" என்பர் பின்னும்; ஙூ. ஓதவித்த இடம், பள்ளிக்கூடமென்று இன்றும் வழங்குகின்றது. தொந்திகொள் தந்தி - விநாயகர். குருந்தமரம் - இத்தலவிருக்ஷம்.

ஙூஅ. கலிசங்கம் - வித்தையின் தொகுதி; ஆடையின் தொகுதியென்பது மற்றொருபொருள். மறையுருவங்கம் - திருவாதவூரர்.

ஙூக. சிலும்ப - சிலிர்ப்ப.

சக. பாக்கியம் - புண்ணியம். அறுதியிட்டு - நிச்சயித்து.

சஉ. நீங்கள் போய் உரையும்.

சஙூ. ஒப்பார்போல - இராசாரியங்களை ஒழுங்குபடச்செய்யும் இயல்புடையவரைப்போல; "பெரிய செல்வரொப்பார்போல்", "மனமகிழ்ந்து விளைந்தொப்பார் போலச் சென்று" என்பர் பின்னும்; ஙூச, எக; "ஒவ்வாதார் தாமினைவ ரொப்பார்மற் றெனைவர்" (சீவக. கேம. கஙூஉ.) என்பதையும் அதனுரையையும் பார்க்க.

சஙி. காசு இல் நான்மறை. எட்டால் - அஷ்டாங்கயுத்தனத்தால். அஞ்சினால் - ஐந்து அங்கயுத்தனத்தால்.

சஙூ. நோக்குபதேசம் சக்ஷுர்தீக்ஷை.

சஅ. மூதலடியிரண்டும் நிரனிறை.

சக. சிவபாக்கியம் - சிவபுண்ணியம்; என - என்றுசொல்ல. பரங்கண்டவர் - திருவாதவூரர்.

இக. சபவடம் - ஜபமாலை. மரித்த - நினைத்த; இறந்தவென்றுமாம்; "மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" (தாயு. பரா. கஙூ).

இஉ. சாத்தல் - வேதம்; சிவ்யப்பிரபந்தமோதுதலைச் சாத்துமுறையென்

னும் வழக்கமும் இதனைவலியுறுத்து கின்றது.

டுசு. ஞானப்புதல்வர்கள் - ஞான புத்திரர்கள்; சிஷ்யர்கள்.

டுடுடு. குருந்தமரத்தின்கீழே சிவ பெருமான், தொளாயிரத்துத்தொண் ணூற்றொன்பது மாணாக்கர்களுடன் ஞானசாரியராக எழுந்தருளியிருந்த னரென்றுணர்க; திருவுத்தரகோ சமங்கைப்புராணத்தில், பார்ப்பதி தவம்புரிந்தஅத்தியாயத்திற் கூறப்பெ ற்றுள்ள, திருவாதவூரருடைய பண் டைவரலாறு இங்கே அறியற்பாலது. புதல்வர் - மாணாக்கர்.

டுஅ. நிகழ்வ-அம்மனேமுதலிய வி னையாட்டுக்கள். 'மெய்' என்பது, திரு வாசகத்தில், திருச்சதகத்தின்முதற் குறிப்பு.

டுக. ஊண் உறக்கமின்றி உடல் வருந்தி. கேட்டனை அல்ல.

சுக. தென்னவர் - தென்னாட்டி னர்.

சுஉ. பாசுரம் - ஓலைப்பாசுரம்.

சுஙூ. மன்னவற்பிழைத்தல்-இரா சத்துரோகம்.

சுஙி. தேமால் - தெய்வமாகிய திரு மால். தாமா - தாவுகின்ற குதிரை.

சுசு. வேந்தன் - பாண்டியன். உட லம் வருந்த. இதிலுள்ளவரலாறு, இங் கேகூறப்பட்டவண்ணம் திருப்பேரு நீதுறைப்பழையபுராணத்திள்ளது; இக்கதையிற் சிலபகுதி, திருப்பேருநீ துறைப் புதியபுராணம், பெருந்து றைப்படலத்தால் நன்குபுலப்படும்.

சுஎ. உணர்த்தி - துயிலுணர்த்தி.

சுஅ. உளம் அஞ்சேல். வேண்டுப இட்டு - வேண்டுவனவற்றைச் சேர் த்து. பை ஓலை - பசிய ஓலை, வினைக் கண் நில்லார். கட்டு ஓலை - கட்டினை யுடைய ஓலை.

சுகூ. கேளாது உணர்ந்துகொள் வாய். வையாளி - குதிரை நடத்தும் இடம்.

எ0. பாரத்தை ஆலயத்து விடு த்து. மெத்தன - மெல்ல.

எஉ. உயர்பு எவ்வளவுபோதிம் உயர்ந்த குதிரைகள் எவ்வளவு வரும். கூசல் - தாணமுறல்.

எச. வகை - குறுந்தெருக்கள்.

எசு. அணியல் - ஆபரணம். களா சி - காளாஞ்சி.

அக. தவிர்ந்து அமைச்சனுனாய்.

அஉ. இளைஞர்க்கு இனி யாருண் டென்றுசொல்ல. ஆர் வெறுப்பு ஆர் உவப்பு - ஆர் பகை ஆர் நட்பு.

அங. தனிசு - கடன்.

அச. மங்கலமுறைசெய்வோர் நற்குணமுடைய எவலாளர்; "நன் னெறிமுறை செய்வோர்" என்பர் மேலும்; அஅ.

அடி. கோடிக்க - அலங்கரிக்க. கலியாணன் - நல்லகுடையையுடைய வன்.

உஅ - ம் திருவிளையாடல்.

உ. வினைத்து - தடித்து; "வள்ள னீங்கப்பெறாய்வினைத்தெனை." (சீ வக. குண. ஙூ.)

அ. இரு, கில், ஈவல். மானபுரம் - மானமங்கலம்; இது, குடிப்பெயரா க்கூறியகமும் இழச்சிக்குறிப்பு.

கo. 'குழைத்தாய்' என்றது, கு ழைத்தபத்து. 'சோதியே சுடரே' என்றது அருட்பத்து.

கக. மிழலைநாடென்பது திருப்பெ ருந்துறையின் பக்கத்திலுள்ளது; அ திலுள்ள வேளாளர்களின்பெருமை மிழலைச்சதகத்தால் விளங்கும்.

கஉ. நரியாது - நரித்தன்மையில் லாமல்; "நரிப்பாய் நாயெனிருப்பே னே." (திருவா. கோயின்மூத்த. கூ).

கங. கோமாயு - நரி. துறை - பெருந்துறை; ஆளுடைநாயகரென் பது - ஸ்வாமிதிருநாமம்; திருவாத வூரை ஆட்கொண்டருளினமை பற்றி இவ்வூர் இவருக்குண்டாயிற்று; திருப் பெருந்துறையை ஆளுடையார் கோ யிலென்பதும் இதுபற்றியே.

கச. வாதையம்புரம் - வாதவூர்.

உo. சூதர் - கின்றேத்துவார்; மா கதர் - இருந்தேத்துவார்.

உக. சம்பு மா சமாதியாலே - சிவபெருமானது பெரிய சங்கற்பத்தாலே. சம்பு மா - கரியாகிய குதிரை.

உங. கீக்கு இல் நோக்கு அடியார் - ஒழிவில்லாமல் நோக்குதலையுடைய ஏவலாளர். மாறு - மிலாறு.

உச. வார வார - ஒழுக ஒழுக.

உசு. சூரம் - குளம்பு. இருமை - பெருமை; இரண்டுதன்மையுமாம்.

உள. இணங்கன் - நண்பன்; (கீம்ப. திட். மரா. கo0).

உஅ. நாயனார் - மாணிக்கவாசகர்.

உக. கறழ் - கடிவாளம். தார் - இண்ணிமாலே. பரிச்சாத்து - குதிரைத்திரள்.

ஈo. நெறுக்கென, ஒலிக்குறிப்பு. ககனம் - ஆகாயம்.

ஈக. தூறு - புழுதி. தண்டிவன - பொருந்துவன.

ஈங. தூலேகீடி - தலேச்சாத்து. குப்பாயம் - சட்டை.

ஈச. நெறி ஐந்தி - கதியைந்து. பரிவத்தனம் - சுற்றுதல்; "இடம்வலம் பரிவத்திப்ப"; என்பர் பின்னும்; ஞசு. கரவாளம் - கைக்கத்தி.

ஈஞ. சாத்தவர்கள் - குதிரைவாணிகர்கள்; "குதிரையைக் கொண்டு குடாநாடதன்மிசைச், சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்" (திரு.வா. சீர்த்தி. உள - உஅ).

ஈசு. குதிரை ஈடு - குதிரைகளைக் கொடுத்தல். சயசயவென்று.

ஈள. சங்கு - வளையல். அறிவும் நாணும். காட்சியாற் சூல்கொள்ளுதலே, "விரும்புசூல் கொள்வார் வீழ்வார்." என்பதனாலுமுணர்க; (ஞச) உசு.

ஈஅ. காண்டற்கு ஒட்டுமோ.

ஈக. அன்பர் - திருவாதவூரர்.

சo. தோரை - பீலிவிசிறி.

சஉ. தவ்வும் - தாவும்; "தவ்வு புனல்" என்பர்: (ஈo) ஈஉ.

சங. தாணு - சிவபெருமான், கட்டை.

சஉ - சஈ. இந்த இரண்டு செய்யுட்களின் கருத்தை, "அண்டமெலாமாதார மாகத் தாங்கு மானந்தத் தனிச்சோதி யண்டந் தாங்குஞ், சண்டமறைப் பரிதனக்கா தார மாகித் தரிக்கவொரு காலத்து மசைவி லாத, புண்டரிகத் தாளசையப் பாச நீக்குழ் புணைகரத்தாற் பரிபூண்ட பாசம் பற்றிக், கொண்டரச னெதிர்போந்து மன்னு வெங்கள் குதிரையேற் றஞ் சிறிது காண்டியென்றார்" (திருவிளை. நரிபரி. எசு.) என்பது, தழுவிவந்திருத்தல் காண்க.

சடு. வாசி - குதிரை, வீசேடம்.

சஅ. மின் - தடாதகைப்பிராட்டியார்.

சக. சுபதக்ரமம் - சுபத்தைக்கொடுக்கிறதடை. அணுமனியா - ஒலித்தி. மறை அயம் - வேதமாகியகுதிரை.

ஙo. மருத்தை - காற்றை.

ஙக. கஞ்சம் - வெண்கலம்.

ஙஉ. பரதச்சவுதம் - பரதநூல். பருமம் - குதிரைமுதுகிற்றவிசு.

ஙச. வெய்யோன் படியும் மால்வரை - அத்தமயகிரி.

ஙடு. மண்டலம் - வட்டம். வீதி - நேரோடல்.

ஙங. இடபமால் - இடபவடிவங்கொண்ட திருமால். என்று - எக்காலத்து.

ஙஇ. கடல் திடராயிற்று.

ஙக. பல்கால் தலேவர் யாரென்ன.

ஙக. கொக்கு - குதிரை.

ஙஉ. குதிரைச்செட்டி கூறுவான். கற்கைகள் - குதிரைகள்.

ஙஙு. பெருந்துறை - பெரியகடற்றுறை, ஒரு திருப்பதி. உலகம் - கோட்டான். குதிரை, வேதமுதலிய எழுத்திற்பிறந்தன என்பதை, "வெடிவாற் பைங்கட் குறுநரி யினத்தினே, யேழிடக் தோன்றி யினனூற் கையந்து, வீதி போகிய வாலுளைப் புரவி, யாக்கிய விஞ்சைப் பிறைமுடி யந்தணன்" (கல். அ) எனவும், "மிக்கசெழு மறைநாவிற் கமல நாதன் விழிப்புனலில் விண்ணோர்க ளெண்மர்

தம்பான், மைக்கடன்மேலேமிர்த்தி லங்கி மீதின் மல்குகருப் பையிலுலக வண்டந் தன்னிற், றெக்கவெழு பே தமெனு மிவற்றிற் றோன்றுந் தொன் மையவா யீரிரண்டு துணைத்தா ணை நிற்றி, யொக்கவெளுக் கும்பரிக ளுள வாய் வானீ லொண்புனலிற் செல்லு நெறி யுளவுமாகி." (தீருவாத. குதி கா. சுப) எனவும் வருவனவற்றை யுணர்க. மொத்தம் - தொகுதி; "பரி க்குமிப் பரிமா மொத்தம்." என்பர் பின்னும்; எ.

சுச. வாயதம் - காக்கை. வெருகு - பூனை. எனம் - பன்றி. நரய்முதலிய வற்றின் இயல்பையுடைய குதிரை கள் பொல்லா; மயூரமுதலியவற்றின் இயல்பையுடைய குதிரைகள் நல் லன. தீருவாதவூரர்புராணம், குதி ரையிட்சருக்கம், சுக, சுள - ம் பா டல்களைப்பார்க்க.

சுசு. ஷேபுராணம், ஷேசருக்கம், சுள - ம் பாடலைப்பார்க்க.

சுள. வாலதி - வால். மேட்டிமம் - ஆண்குறி. ஷேபுராணம், ஷேசருக் கம், சுக - ம் பாடலைப்பார்க்க.

சுசு. ஷேபுராணம், ஷேசருக்கம், சுச - ம் பாடலைப்பார்க்க.

எ0. ஷே புராணம், ஷே சருக்கம், சுசு, சுஙி - ம் பாடல்களைப்பார்க்க.

எக. மற்றும் நீங்கு இலே - வேறும் உள்ளனவாகிய நீங்குகள் இல்லே.

எஉ. கதிவெங்கால - நடைகளையி ரும்புகின்ற கால்களையுடையன. கந் துகம் - பந்து.

எசு. 'சம்புவாணை' என்பது சிலே டை.

எச. இதிற் குதிரைகளின் விலே கள் கூறப் பெற்றுள்ளன.

எஙி - எக. இவற்றுற் குதிரையின் பெருமைகள் கூறப்பெற்றுள்ளன.

எக. ஆடலாலேதான் தாமதமா யிற்று. 'ஓர்பொழுதும் நில்லாது' என் பது, சிலேடை.

அ0. நின்மை - நீமை; ஒதுவன வாகிய நன்மை நின்மை; "அடியவர் நன்மை நின்மை யறிபவன்." என் பர்: (சுஙி) கக; "நின்மையும் பாவ முஞ் சிதைத்து தேயுமே." (கம்ப. பயன், உ)

அக. 'சித்திரமா' என்பது சிலே டை.

அசு. இராவுத்தராயன் - குதிரைச் சேவகன்; இராவுத்தனென்பது, இ ராஜபுத்திரனென்னும் வடமொழிச் சிதைவென்பர்; அச: "இனிமைகூர் ந்திராவுத்தற்கு."; "கலாபத்தனிமயி லேறு பிராவுத்தனே." என்பது கந்த ரலங்காரம், ஙo.

அச. காறு - நாற்று. இச்செய் யுள், "நரியைக் குதிரைசெய் வானு நரகனைத் தேவுசெய் வானும், விரதங் கொண் டாடவல் லானும் விச்சின்றி காறுசெய் வானும்" (தீருநா. தே. திருவாரூர்) என்பதன் கருத்தைத் தழுவி வந்துள்ளது.

அசு. செண்டு - ஓராயுதம்; கொ ம்பு - அதன் முன்பாகம்.

அஅ. தூங்கஇல்லாமல் - தாமதியா மல்.

கo. திருமேனிக்கேடு-கவசம். கை வாளம் - கைக்கத்தி; "கரவாளம்" என்றுர் முன்னும்; சுச. அடிவடிம்பு - அடியின்விளிம்பு.

கக. ஆசையுடையன், சிலேடை.

கூசு. உழை - வீடு. செவ்வந்தி மாலே, சிலேடை.

உகூ - ம் திருவிளையாடல்.

க. கட்டுண்டேம். தொத்துவர் தொத்திக்கொள்வார்.

உ. முகமுகம்பார்த்து - ஒன்றன் முகத்தை ஒன்றுபார்த்து; (சுசு) உக. கயிற்றைமென்று. அங்கணம் - கல தாளை. சள்ளிடல் - நரியின் ஒலிக் குறிப்பு.

சு. தொண்டைவிடுவன - கூவுவன. உள்ள - உள்ளன.

டு. யாணர் மாக்கள் - புதியனவா ய்வந்த குதிரைகள்.

சு. மட்டித்து - கலந்து. இதவிய - இனிய. மொக்கணி குதிரைத்

கொள்ளுமுதலிய உணவுகட்டும்பை; "மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி, சொக்க நாகக் காட்டிய தொன்மையும்." (திருவா. கீர்த்தி. கூக-ஙூ.)

எ. மறி - ஆடு. சூகரம் - பன்றி.

அ. 'மின்னுமலிடிக்குமா' என்பது ஒருபழமொழி.

கூ. வரர் - சிறந்தவர்; தலைவர். அர - அரனே; இஃது இரக்கப்பொருளிலும்வரும்.

கஉ. 'கல்ல கல்யாணனன்றே' என்று இகழ்ந்தான், (உ) அதி: "என்னையின்றோர் கலியாண ரூகக் காண்மின்" என்றதை உட்கொண்டு.

கச. கொணர்ந்த மா - குதிரை.

கசு. சிவை - நரி. மந்தரை - குதிரைச்சாலை. இந்திரஞாலம் - இந்திரசாலம்; "இந்திர ஞாலங் காட்டிய வியல்பும்." (திருவா. கீர்த்தி. சங.)

கள. வாசிவாரியப் பெருமான் - குதிரைக்கு சேவகர்களின் தலைவன்; வாசிவாரியன் - குதிரைகளையத்தமித்துச் செலுத்துவோர். இண்ணிமை - வன்மை; தைரியம்.

கஅ. ஆரணமோதிற்று - நீ வேதமோதியது. கோரம் - கொடுமை. சிறையறை - சிறைச்சாலை.

ஙூ - ம் திருவிளையாடல்.

க. அறையகத்து - அரையில். 'இரும்புதருமனத்தேனே' என்பது திருவாசகத்தில், திருவேசறவின் முதற் குறிப்பு.

உ. 'பொய்யாவையையமாநதி' என்பது, "வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி." (சீல. புறஞ்சேரி. கஎ0.) என்பதைத்தழுவியது. முதுமாமங்கை - செம்மனச்செல்வி. முகில் நாயகன் - வருணன்.

ச. கால் கட்ட - வாய்க்கால்களின் தலைப்பிற்படலிட. பயம் - நீர், அச்சம்.

ஙி. வெள்ளமிருத்தவிடத்துப்பறை யறைவித்தல் மரபு. கும்பை - ஒலி. மனம் கன்றி. என்னுமோ.

கூ. கோல் - அளக்குங்கோல்; அறை - வரையறைசெய்த கோட்டம்; கோலால் அறுதிசெய்த இடமுமாம்; "குரம்புகொண் டடைப்பன் யானே கோலறை முழுது மென்ன" (திருவாத. மண்சுமந்த. ஙூ.)

அ. விதிரா - நடுங்கி

கூ. நாதமாகிய பறை; 'நாதப்பறையன்' என்பது, "நாதப்பறையினர்" (திருவா. அண்ணா. க.) என்பதைத்தழுவியது. இச்செய்யுளில், சிலசாதிப்பெயர்கள் தொனித்தல்காண்க; நஞ்சுண்டோனென்பது, கள்ளர்வகையில், ஒன்றன்பெயர். பிட்டு உதிர் - உதிர்ந்தபிட்டு. கொடுக்கு - தொங்கல்.

கக. அம்மே - அம்மையே. கொற்றூள் - மண்வேலைசெய்பவன்; "மண்ணகழ்ந் தெடுத்து வருபுலை வையகக், கூவஞ் சுமக்கக் கொற்றூ ளாகி." (கல். சக.); கொற்று - மண்வேலை யென்பதை, உரு: "கொற்றூள விவரி லீங்கோர் கூடைமண் சுமக்தாரில்லை." என்பதனாலுமுணர்க.

கச. அத்தித்திரக்கும்பொருள் - முடித்துவைத்திருக்கும்பொருள். கந்தித்து - மணம்வீசி. உண்டு-உள்ளது.

கஞி. வட்டமுறுபிட்டு - வட்டவடிவமாகக் கிண்ணத்தாற்கொட்டி அமைத்துவைத்திருக்கும் பிட்டு; கஅ: "கனவிய வட்டப் பிட்டுக் கைக்கொடு பிட்டுப் பிட்டு.". அம்மை, விளி.

கசு. உழப்பாது சுமத்திடும்.

ககூ. அம்மை, விளி.

உ0. என்ன - என்றுசொல்ல. உதிரா - பிட்டு. 'வித்துகெற்பிட்டு' என்றபாடத்திற்கு விதைநெல்லரிசியாவாக்கிய பிட்டென்று பொருள்கொள்க.

உஉ. கோலறையை. நல்லாள் - நன்மையையுடைய ஆட்கூலி. வாங்குதல் - கொள்ளுதல்.

உஞி. குழம்புதல் - கலங்குதல். கொட்டி அணைத்தி - மண்வெட்டியைத்தழுவிக்கொண்டி. இடை - இடத்தல்; ஓப்புமாம்.

உஎ. வடிவன் நீ - அழகுடையவ னெய நீ; உஅ: "மெல்லியவடிவனீ". கறுத்த - கோபித்த; தொருத்தல்.

உஅ. நயந்து அவரோடும்.

உக. பத்து-வந்து; நிசைச்சொல்; இது, 'வைத்து' என்பதுபோலப்பொருளின்றிப்பயிலுவதொருசொல்.

ஈ0. பகுந்து - பங்கிட்டு.

ஈக. சதமுறை - பல்முறை. அதர்ப்பட - வழிபட.

ஈஉ. தீரக்குறை - கையின்குறையை. கவ்வை - துன்பம்; ஒலியுமாம். தவ்வுதல் - தாவுதல்.

ஈஅ. கங்கைக்கையுயர்மண் - திருமுடியில் வைத்திருந்தமண்.

ஈக. திருவருளுக்கு உண்டோ - திருவருளுக்கு எல்லையுண்டோ.

சக. பிட்டுவாணிச்சி ஏக.

சஉ. புடைப்பு - அடியாலுண்டாகிய வீக்கம்.

சஅ. இவள்முகத்தால் - இவன் வழியால். விடுவித்தற்கு - சிறையினின்றும் நீக்குதற்கு. தன்வழி திரிதற்கு இவனை விடுவிடு.

சகு. மதுரைத்தெருவிற் பரியேறும். கொற்றகன் - படைத்தலைவன்.

சஅ. 'நமச்சிவாயவாழ்க' என்பது, திருவாசகத்திற் சிவபுராண அகவலின் முதற்குறிப்பு.

சகூ. நாயருத்திரர் - சற்சூத்திரர்.

ஙo. அன்ன, நெஞ்சறிசுட்டு. மாஅழகு. என்ன-என்று திருவாதவூரர் திகைக்க.

ஙக. சித்திரக்கோவை - திருச்சிற்றம்பலக்கோவையார்.

ஙஉ. மன்னன்-பாண்டியன்; எழுவாய். அம்மை - செம்மனச்செல்வி.

ஙசு. மேய்ந்து - வேய்ந்து. எறும் ஆனும்.

ஙச. உயர்துறக்கம் - சிவலோகம்.

ஙஙி. பறைதல் - சொல்லுதல். இறைவன் - சிவபெருமான்.

ஙசு. அவதானங்கள்-திருவிளையாடல்கள்.

ஊக - ம் திருவிளையாடல்.

க. பெருங்கிராமம் - ஐந்நூறுகுடிகள் நிறைந்தவூர்; (சூடா.இடப்பெயர். ஈக.).

உ. பாகவதப்பிரமசாரி-வைணவப் பிரமசாரி. புக்கில் - வீடு. உதகம்செய்ய - தாரைவார்க்க.

ஊ. மனம்குன்ற. கன்னி - எட்டுப் பிராயமுடையவள்; "அகவை யிரு நான்குடையாள் கன்னி" மாயூரப் புராணம்.). இடுகுறி-இடப்படும் நெற்றிக்குறி.

ச. வேதசூத்திரம் - வேதசம்பந்தமான சூத்திரங்கள்.

ஞ. சாறு-கலியாணம். நெறிதப்பாவாறு உதகம் அளித்து; உதகம் - தாரை. இனியபல - ஸ்திரீதனம். பந்தம் - உறவு, முறை.

கூ. தனு - வில், உடம்பு. மரல் அன - மரல்நாரையொத்த.

கக. படை, ஏவல்.

கஉ. அமுதுபடி - அரிசி. மேல் அமுதுசெய்யுமாறு ஓதுமெண்ண.

கஎ. பட்டஅணை-பட்டாலாகிய அணை. நோக்கு - கீண்ணில். அீன்னையில் புதல்வன் - தாயில்லாதபிள்ளை; பிறப்பில்லாதவர்.

ககூ. திருவினுள் - லக்ஷ்மி. வளர்த்திவைத்து தூங்கச்செய்தவைத்தி.

ஊஉ - ம் திருவிளையாடல்.

உ. அஃது - பரதநூல்.

ஊ. மிக்கசீர்த்தி, பாண்டியனுடையது. வளவன்கேட்டு. இகலி - மாறுபட்டு; ஙூ: "இகல்விட்டு" என்பதனால், சோழன் இப்பொழுது மாறுபட்டிருந்தமை வலியுறும்.

சு. உளம்பட - மனமெலிய.

எ. விளிவு - அவமானம்.

அ. விருது - எண்ணெண்கலையல்லானென்பது. புயங்காட்டம் - ஒரு வகைகாடனம். வாமத்தாள் - இடத்தாள்.

கூ. சென்னிசெற்றத்தால் - சோழன்மீதுள்ள கோபத்தால்.

கo. நின்றல்-நிற்றல்; மெலித்தல். கெட்டேன், ஐயோ.

கஉ. ஈசானகோணம் - வடகீழ்மூலை. அதிரவீசி ஆடினன் என்க; "அதிர வீசியாடுவாய்" (திருஞா.தே).

கச. பணை - வாத்தியம்; உடுக்கை. "மாறியாடக்கொடியிட்ட பெருமான்" என்பர்பின்னும்; உரு.

கள. பண்டி அருங்கூத்து - முன்பில்லாதகூத்து; பண்தரும் - இசையைத்தருகின்றவென்றுமாம்.

கஙு. வடிவுறுதிருக்கூத்து - சொக்கத்தாண்டவம்.

உo. முன், "தென்மதுரைமாநகர் சேர்திருச்சிற்றம்பலம்போற்றி" என்னூர்; (கட) கச. புரிவலித்து - கயிறு கட்டி.

உக. மாணிக்கத்தாள் - மாணிக்கக் காம்பு.

உஉ. இயற்பெருமான் - சொக்கநாயகர்; இயல் - அழகு.

ஙுஙூ- மீ திருவிளையாடல்.

க. ஆதவன் - சூரியன். படதரு - ஆலமரம்.

உ. எய்து - எய்தலால். தொங்கிஞான்ற - தொங்கிய; ஒருபொருட்பன்மொழி. பகழி - அம்பு.

ச. பறையும் அது - சொல்லிய அச்சொல். போது - வா.

கூ. உடல்கடுங்கி.

எ. ஏதம் ஒழி-துன்பம் ஒழிவாயாக. இங்கு எய்து-இங்கேவா. தருந்தகனம் - துன்மரணமாக இறந்தவர்க்குச் செய்தற்குத்தக்க தகனம்.

கூ. 'அஞ்சினவீசன்' என்பது, சொக்கநாயகர் பழிக்கு அஞ்சியதைப் புலப்படுத்தியது.

கo. விள்ளான் - சொல்லாளுமி.

கக. படர் - யதாதாதர். விரை - மலர் சந்தனம் முதலிய நறுமணம்.

கச. வற்றுன - வன்மையையுடையதான. ஆர்த்த தும்பு-கட்டியகயிறு.

கடி. அயம்=ஐயம் - ஸந்தேகம்.

கசு. உயர்த்ததூதன் - இருந்தவலுகிய பெரியதூதன். கூறும்-கூறுவான்.

கஅ. கீத்தை-இளியை. கோல் அம்பு. எய்ததை, உ - ம் செய்யுளாலும் உணர்க.

கக. பெரியதந்தை எழுவாய். அசன் - அசுடகாராசர்; இருமுகாராசருடைய புத்திரர்; தசுரதருடைய தந்தை. வடிவமங்கை - இந்துமதி.

உo. இந்துமதி-அசுமகாராசர் மனைவி; நாரதமுனிவர் வீணையிற்புனைந்திருந்த பூமாலை காற்றுல்வீழப்பெற்று இந்துமதி இறந்தனளென்பது, இரதுவம்சம், அ-ம் சருக்கத்திற் கூறப்பெற்றுள்ள கதை. இதனைத் தமிழ் இரதுவங்கிசம், இந்துமதி பிறப்பு கீங்குபடலம், சஉ-ம் செய்யுள் முதலியவற்றுலும், "கன்னுண் மதியக் குடையோன் குலோத்துங்க னுகலை வற்பிற், பொன்னுளயோத்தியி னுண்டாய பாவம புனைத்துமுண்டோ, வந்நாளும் பெண்பழி கொண்டது மாலை யென் றுரைத்ஞ்சொல்வா, ரிந்நாளும் பெண்பழி கொள்ளவிம் மாலை யெடுப்பட்டதே" (குலோத்துங்கசோழன்கோவை, களி.) என்னும் செய்யுளாலுமுணர்க. தேறுவால்-பசுவினுல்.

உஉ. மருப்பு இல் சோ-கொம்பில்லாதபசு.

உரு. முளைத்தனை - முளையிற்கட்டியகட்டி.

உச. நாம் - அச்சம்.

உசு. யாமினியில் - இரவில்.

உஎ. யாவையும் அறித்து ஆக்கவல்லான்-எல்லாப்பொருள்களையும் சங்கரித்துச் சிருட்டித்தருள வல்லமையுடையவர்.

உக. சோமசுந்தரக்கடவுள் பழிக்கஞ்சியதை, க: "தென்றமிழ்நாடி" என்னும் செய்யுளாலும் உணர்க.

ஙுஙூ - மீ திருவிளையாடல்.

க. அவமானவஞ்சம் - அவமானத்தைத்தரும் வஞ்சனைத்தொழில்; "அவமான வஞ்சம் பிறர்க்குரை யார்களல்லோர்" என்பர்பின்னும் (ஙுஙி) சo.

உ. கொட்டி - மண்வெட்டி.

இ. புண்ணில் ஈ மொய்ப்பீ. ஆரோ வென்னத் திரிந்தான்.

உ. கன்னி - கன்னியாகுமரியென்னும் ஆறு. கம்பிப்பன் - நடுங்குவன்.

எ. புறத்து ஈர்த்து - வெளியே இழுத்து.

ஊ. 'பட்டருணம் சுட்டாலுந்தீராது' என்பது ஒருபழமொழி.

கo. தானவைபவம் - தலவிசேடம்.

கக. இறையவன், எழுவாய்.

கஉ. பரிவுகூர்ந்து போக்குகின்றேம்.

கங. தானஞ்செய்யென்று சொல்லுதற்கு உன்கையிற் பொருளில்லை. கோவுக்கு - பசுவுக்கு.

கஙி. செறு - அடக்கு. நோக்கு - செய்.

கசு. அணுக்கட்கு - உயிர்களுக்கு.

ஈருடம் திருவிளையாடல்.

உ. எல் - ஒளி. கூடா - வஞ்சுசேர்ந்து.

ஙு. ஆங்காரித்து - அகங்காரங்கொண்டு.

ச. அங்கம் - போர். கெருடி - வில்வித்தைமுதலியவை பயிலும் கூடம். மைந்தர் - மாணாக்கர். சிரமம் - யுத்தப்பயிற்சி; "சிலைக்குரு விறற்குரு குலக்குமர ருக்குவரு சிரமமிலை காண்மி னென." (பார. வாரணவத. இச).

ஞி. நாயனீரே - தலைவரே. கெருடிகட்டி, நம்முளோரைக்கிச்சாதிப்பிக்கின்றனென இயைக்க.

ஈ. அடியார்க்குநல்லான் - சோமசுந்தரக் கடவுள். கன்றல் - வாடுதல். பணிக்கு - வில்வித்தை முதலியவற்றைக் கற்பிக்குந்தொழில்.

எ. அவன்றனை - ஆசிரியனை. வளம் - தனதுபெருமை.

அ. அருள் - தொடர்புபற்றுதேயாவரிடத்தும் தோன்றும் இரக்கம். இடம் - சமயம்.

கூ. மிண்டி - இடக்கரானமொழிகள்.

கo. மூல்லை - கற்பு. சொக்கன்தானே அறிகுவன் - சொக்கநாயகர் இயல்பாகவே அறிந்தருளுவார்; யாம் விண்ணப்பிக்கவேண்டுவதில்லை.

கக. தின்மை - தீயசெயல். பாடை - சபதம்.

கஙு. மற்று ஓரெகிரிலா.

கஙி. பத்திரம் - ஒருவகைக்கத்தி. ஓட்டி - சபதம்செய்து.

கசு. நாகமாபுரம் - மதுரை; "அ. தோரகாக்ஷ்ய புரஸ்யாதம்" (ரகு வம்சம், சு-ம் ஸர்க்கம், ஙக) எனவும், "உரகமாகரான் றென்னனிவன்" (இரகு. மாலை. கoச) எனவும் வருவனவற்றுள், 'உரகாக்ஷ்யபுரம்' எனவும், 'உரகமாகர்' எனவும் மதுரை கூறப்பட்டிருத்தல்காண்க.

கள. நெஞ்சுளோர் - தைரியமுடையோர். கஞ்சுவான் - வெண்கலத்தாற் செய்தவான்.

உஉ. சொட்டை - ஒருவகை ஆயுதம்.

உச. வென்றிகொள் மைந்தன் - ஆசிரியருடைய வெற்றியைத் தமதாகக் கொண்ட மாணாக்கன். சித்தவெற்றமையின், 'வன்றிறனுதர்' என்றார்.

உசு. எந்து - என்ன; நிசைச்சொல்; "அதெந்துவே யென்றரு ளாயே" (திருவா. அருட்பத்து, சு-கo).

உஎ. பொத்திய - மறைத்த. மெத்திய - நிரம்பிய.

ஙசு. 'உண்டென் றேத்தும் வெற்றிகொள் பணிக்கன்' என்றது, ஆஸ்திகனென்றபடி.

ஙசூ - ம் திருவிளையாடல்.

உ. கறுவி - கோபித்து.

ஙு. இங்காகம் திட்டிவிடுமென்பார், 'நஞ்சங் கண்படவிழித்து' என்றார்.

ஙி. பாவகப்பகுவாய் - நெருப்பைக் கக்குகின்ற பிளந்தவாய். உரத்தில் சேர்ந்தது - மார்பால் நகர்ந்தது; உரம் - வலியுமாம்.

எ. 'பெரியபாம் பணியுஞ் சொக்கப் பிஞ்ஞகா' என்றது, கருத்துடையடையணி.

அ. அதனைக்கடிப்ப - அப்பாணத்தைக்கடிப்ப.

கூ. அழல் - விடம்.

கக. ஆரா அமுதே - தெவிட்டாத அமுதமே.

கo-கக. விடத்தன்பத்தைப் போக்கவேண்டுமென்பதற்குக் கூறிய அடைகளும், 'கருணாகரனே' 'அருளாகரனே' என்றுகூறி யிருத்தலும் ஆராய்தற்பாலன.

கஉ. புழுகு - மலையெருக்கம்பூ. வன்பார்க்கு அரியாப்.

கங. தடினி - ஆறு. கோள் - விடம்.

கச. அமுத இந்து விந்துவை - அமிர்தமயமாகிய சந்திரனிடத்துள்ள துளியை.

கஎ. இங்கே சமணரை, 'ஈரா மிலாதேரர்' என்றதுபோல் "மானமில் சமணர்;" என்பர் பின்னும்; உடு காண - காணும்படி. கழறி - சபதங்கூறி.

கஅ. எள்ள - ஒப்ப; உவமவருபு. தேனு - பசு.

கக. விட்டல் - விடல்; விரித்தல் விகாரம். காலமேகம் - ஊழிக்காலத்துமேகம்.

உo. 'கொல்லொணாப் படையெவர்க்கும் வெல்லொணாது' என்பது ஒரு பழமொழி. எல்லாம் வல்ல நாயகன் - சோமசுந்தரக்கடவுள்; "சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு சேரி னெத்தொழிலும் வல்லதாம்" (ஞானதீலகரி, க.) என்பர்.

உஉ. மூசி - மூச்சுவிட்டுமோந்து.

உச. தார் - கிண்கிணிமாலை, தாடி - அலைதாடி. பிறங்கல் - மலை.

உடு. சந்தம் - இயல்பு.

உசு. காற்சிறைகொண்டி - காலிடங்கொண்டி. உப்பால் - முதுகு; "ஊழையுமுப்பக்கங்காண்பர்" (நீதிநூன், சுஉo.)

உஎ. தண்டலைமலை - சோலைமலை; அழகர்மலை.

உஅ. நீங்கரும்விடை - ஸ்திதியிலெழுந்தருளிய இடபமூர்த்தி.

ஈஎ - ம் திருவிளையாடல்.

க. ஞானமுற்றியவெற்றிகொள்கூற்றவர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். வெப்பும் - சுரம்.

உ. பன்னிரண்டுபெயர்களாவன: பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, கோழி, கொச்சைவயம், கழுமலமென்பன; காழியெனவும், கொச்சையெனவும் வழங்கும்.

ங. ஓதாமலுணர்ந்துயர்ந்த: இள. வரிசைகள் - பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துப்பந்தர்முதலியன.

சு. கஉ.

இ. 'சாதிமுறை யறியாத சமணர்' என்றது, கூட்டத்தினரென்பதைப் புலப்படுத்தியபடி; "குழுவுடைய மண்" என்பர் பின்னும்; ஙசு. உணருங்கால்-ஆராயுமிடத்து; உணர்தல் - ஆராய்தல். (ஈஅ) ஈ: "நத்தகடி வெழுத்துணர்வார்."

எ. மானி - மங்கையர்க்கரசியார். பறிதலையர் - சமணர். பழுதாமென்று ஓலைவிடுத்தாரென முன்னேகூட்டுக.

அ. சென்ற - வந்த.

கூ. நாள் - நக்ஷத்திரம்; திதியினும் நூறுமடங்குவலியுடைத்தாதல்பற்றி, நாள் முற்கூறப்பட்டது.

கஉ. மானமில்சமணர்: (ஙசு) உடு.

கஇ. கொடுங்குன்றம் - உக்கிரகிரி; பிரான்மலை. 'வானிற் பொலி' என்பது அப்பதிகத்தின் முதற்குறிப்பு.

கசு. நகரத்து ஏய்.

கஎ. பண்திகழ் கூகை, இகழ்ச்சி. பாழி - குகை.

கஅ. என்னும் - யாதாமோ. திருமுகம் - ஓலை.

கக. வைதிக யாளி - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

உங. சட்டியும் கீறும்.

உக - உங : "சதுரானனனுஞ் சக்ராயுதனுஞ் சந்த்ரா தபரும் மிந்த்ராதிபரும், மதுரா புரிவா தரிவா மெனமேல் வரவர், தனன்வை திகவாரணமே" (தக்க. கஅ.)

உஙி. (திநுநகர.) ச.

உச. ஒழிவிலர் - ஒழிவில்லாமல்.

உஅ. காதலம் - துன்புறுத்தம்.

உஉ. அவதரிப்ப - தங்க. அறிவான் - அறியும்பொருட்டு. மூட்டு - கேட்டுமூட்டு.

ஙூ. கட்டி - கல்லைக் கட்டிக்கொணடி. ஞான்றனர் - தொங்கினர்.

ஙச. அதிர்வு - நடுக்கம். 'இறந்தது' என்னும், துணிவுபற்றி.

ஙஉ. கையிற்கொண்டி-கையை உதறிக்கொண்டி. உணர்த்த-எழுப்ப.

சஉ. பாய் உடை-பாயாகியவுடை; "பாவுடையார் விடுத்ததலை" (திருவிளை. திருவால. க)

சஎ. அறமலி-தருமமலிந்த; ஆமிகவுமென்றுமாம.

ஞி. கரம் - கருமை.

ஞஉ. கழுமலம் - சோபி. 'பிரமபுரம்' என்றதை, திருச்சக்கரமாற்றென்றும் பதிகத்தின் முதற்குறிப்பு.

ஞங. செங்குரு - சிகாழி.

ஞஎ. நீறுக்கோயில் - வியூகிஸை.

ஞஅ. நின்வழுகளைக் கொணடே மாற்று.

சுஎ. 'பொருந்திலேர்' என்பதை, எமக்கும் பொருந்துவீரெனப் பிழைவுங்கூட்டுக. ஆம், அசைநிலை.

சுஉ. கையர் - வஞ்சகர். பையுள் - துன்பம்.

சுங. பிண்டி - அசோகமரம். தண்டு - பிரம்பு; "தண்டாலே பாணடியன் நன்னேப் பணிகொண்ட, புண்பாடல்பாடி" (திருவா. திருப்பூவல்லி. கசு). இச்செய்யுளும், "ஆலி வெத்து மாதிரம் வெத்து யந்திரம் வெத்தமை ந்தகைப், பீலி வெத்து பாயும் வெத்து பிண்டீயேற மண்டீயே (தக்க.கஎஞ்) என்பதும் ஒத்திருத்தல்காண்க.

சுச. கோச்சை - சோகாழி

எ0. வென் - முதுகு.

எச. பாழி - குகை. கதப்பு - கன்னம். குரத்தியர் - தவமுதுமகளிர்.

எஞ். வாசி - திருவாசிகை. கற்பகதரு - வாகனவிசேடம்.

ஙஅ - ம் திருவிளையாடல்.

க. மாறனுறுகாசினி-பாண்டிநாடு. கொச்சைமுனி - திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்.

உ. குன்றி - குன்ற. நாமென்னு முன்னிலையுளப்பாட்டுத்தன்மை உயர்வுதோன்ற முன்னிலைக்கண்வந்தது; "நாமமையாமத்தென் றேவுவந்து" (திருத்தில். சுசு); "நெருநணடங்கவோ நாமென்ன" (கபில. குறி. ரகஙி). தென்னனெனினின் மன்னனென ஒருசொல் வருவிக்க.

ங. இறை உண்டி - சிவபெருமான் உளர். அஞ்சல - அஞ்சற்க; வியங்கோளெதிர்மறை.

ச. 'பிவதவேள்வி' என்பது அந்திப்பிறைதன் மூன்றுடலிடுப; இது காலமேலவைப்பு. 'ஓம்' என்பது உடன்பாட்டை யுணர்த்தும் வடசொல்; "நூன்றுங் கற்முடியாற் கோமென் றுரைத்தருளி" (பாரதம். கருட்டி. சஅ).

ஞ. வினைக்கணில்லவர் - வினைகளிடதது இல்லாதவர்.

எ. ஐயம் இலசர்தேகமில்லை.

அ. கன்னி - கன்னிநாடு, கன்னியாகுமரி, அவ்வியமை.

கூ. செற்றம - பிறரைவருத்துதல். எற்றி - அறைந்து.

கக. வாரடா - வாடா; "வாரடாவுனக் கியாதுதானர்த்தம் மகளடுக்குமோ" (பாரதம், வேத்திர. கஉ).

கஉ. காக்கையேறப் பனம்பழம்வீழ்ந்தென்பது ஒருபழமொழி; இஃது காகதாலீயமென்னு நியாயம்.

கடி. எஞ்சு அழல் - குறையச்செல்கின்ற நெருப்பை.

கங. தம்மைமறித்து ஞானமிலாதோர் அடைந்த.

கஅ. என்னும் - யாதாலுமோ. எற்றரு - பிறரால் வெல்லுதற்கரிய.

கக. ஒழுங்கி-ஒழுங்குபடுத்தி. வகுத்த - விளக்கின. 'போகமார்த்தபூண்முலை' என்பது, திருகள்ளாற்றுத்திருப்பதிகத்தின் முதற்குறிப்பு.

உ0. 'தளிரிளவளர்' என்பது, திருகள்ளாற்றுக்குரிய வேறொருதிருப்பதிகத்தின் முதற்குறிப்பு' 'ஆதிமெய்' என்றது, தேவாரத்தை; வேதம்.

உக. வற்றற் கருப்பிலை - காய்ந்த கருப்பந்தோகை.

உஉ. அதிசயித்துச் செழுமலர்மாரிபெய்தார்.

உங. நீர் தெளித்து. அங்கித்தம் பிணை - அக்கினித்தம்பனவித்தை. வாது மும்முறை உண்டி.

உச. 'விளாவிஞேடும் பெரும்புனல்வையை' என்பது, வேகவதியென்னும் பெயர்ப்பொருளைப்புலப்படுத்தியது; இச: "தாங்கருந்திறலோடும் வரும்வெம்மை" என்பர் பின்னும். பத்திரம் - எடி.

உஞ. பறைதல் - சொல்லுதல். பாடை=பாஷை - சபதம்.

உசு. கடிமை இல் - விளக்கத்தன்மை இல்லாத. முடிய-முற்ற. 'ஆசை' என்றது, அவனை அஞ்சுவித்தற்பொருட்டு; இவர்கருத்து இன்னதென்பதை, சமண் செய்யுளாலுணர்க.

உள. உயிர்க்கழு - ஒருவகைக்கழுகளம் - கழுதது. செத்தி - சீவி.

ஊக. காத்திரம் - உடம்பு. உருத்திரசாதனம் - உருத்திராக்கம்.

ஊ0. தெவ்வு - பகை.

ஊஉ. கண்டி - உருத்திராக்கமாலே.

ஊங. கழுவேறுவோர் அதனைவாங்கித் தோளில்வைத்துச்செல்லுதல்மரபு.

ஊச. தூது - பஞ்சபாண்டவர்க்குச் சென்றதூது; உம்மை - அசைநிலே. இறைஞ்சுகழல். மேற்கொண்டு ஞானறு ஊதுங்கள்; ஊதுதல் - உடம்பு புடைத்தல். காளம் - ஒருவகைவாத்தியம், கழு.

ஊஞ. மீகை - அனவுகடந்தசெய்கை. கை - செயல். தூய்மை - கூர்மையையுடையவை.

ஊசு. எட்டில் நீட்டி.

ஊள. "வாழ்க வந்தணர்" என்பது திருப்பாசுரத்தின் முதற்குறிப்பு.

ஊக. எதிர்த்து எறியது.

எ0. பதடி - இன்பம்.

எங. இருந்தீராயீனீர்.

எஞ. கறவிய - கோபித்த.

எசு. எதிர்புகல்வதெது. மூட்டைப்பட்டினிவயிறு- கண்மூடுட்டு, கேட்டுமூட்டுக்களால் பட்டினியிருக்கும் வயிறு; முகம் - கழுவின்முகம்.

ஏள. பாறு - பருந்து. சிவை - கரி. கவடி - பலகறை.

ஏஅ. சாணகம் - சாணம். கன்று - பசுக்கன்று. விலாவொடி - விலாப்பக்கம் ஒடியும்படி சிரிக்கும்சிரிப்பு; "விலாவிற நக்கு" (மணி. ஈச - ம் காதை, ஈசு).

ஏக. தளம்புநெஞ்சு - தளரும்புகின்றமனம்.

ஙி0. சமணர்களுக்குச் சாக்கியரென்றும் ஒருபெயருண்டு.

ஙிக. சாமரம் - சாமரை, கழுமரம். இக்கவி, வஞ்சப்பழிப்பணி.

ஙிஉ. ஆசையாய்த் தூதிப்ப.

ஙிங. "வாரிதி யுருவா யாற்றின் வரும்பெருஞ் சலிலமுற்றும்" என்றார் முன்னும்; (எ.) அ. ஓசனை - யோசனை.

ஙிச. தடினி - ஆறு.

ஙிசு. "தேனுறை வண்ணி" என்பது திருவேடகப்பதிகத்தின் முதற்குறிப்பு. காப்பு - திருநீறு. சேடனூர் - திருவேடகம்; ஆதிசேடன்பூசித்ததலமாதலின், இஃது இப்பெயர்பெற்றது; கக - ம் பாடலிற்பார்க்க.

ஙிள. புக்கு - புகுந்து. கல்க - கான் கொடித்தற்கு. [லால்.

ஙிஙி. பனுவல் மூறுவல் தருவதல்

ஙி0. மெய் - உண்மைவழி.

ஙிஉ. தனியானை - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்; எழுவாய்.

கூச. பரிசனம் - ஸ்பரிசம்.

கூஙி. இகலா - (சைனரோடு) மாறு கொண்டு.

கூசு. சாத்தன் - ஐயனர்.

கூஎ. பாடித்த - பேசிய.

கூக. மண்டலமும், உம்மை - சோழமண்டலத்தையன்றியென இறந்த தழுவியது; (கூஎ) சு - ம் பாடல் பார்க்க.

ஊகூ - ம் திருவிளையாடல்.

க. கொந்தக்குலம் - கக்குலம்; இக்குலத்திற்பிறந்தோர் சேலை நிகளாதற்குரியவர்.

உ. சேதிபர்கோன் - பெயர்; [கூ - ம் செய்யுள்பார்க்க]. இராதர் - வேடர். கவுரியன் - பாண்டியன்.

ங. படை ஆள்வேம் - சேனைகளை வருவித்துப் பாதுகாப்பேம்.

சு. மாண்டதில்லை - மாட்சிமையுற்றதில்லை, சரக்கறை-பொன்னறை. படைஆள் - சேனைகளை ஆள்வாய். திருக்கைச்சிறப்பு - எனுதிமோதிரம். விரைவுகண்டு - (சௌந்தரசாமந்தன்) விரைந்துசெல்லுதலைக்கண்டு.

ஙி. விதிர் விதிர்த்தான் - விரைந்தான்; "மெய்தா னரும்பி விதிர்விதிர்த்து" (திருவா. திருச்சதகம், க).

எ. உம்பர்தம்பதி - இந்திரன். தம்பம் - ஆதாரம். கம்பம் - நடுக்கம்.

அ. அடியவர்தங்கண்-அடியவரிடத்து.

கூ. பரிகரம் - சேனை.

கo. வந்தேன அடியேன் - பணிதலையுடைய அடியேனது.

கஉ. நியதி - நியமம்.

கங. தண்டம் - தண்டனை. ஆரோ ஆற்றுவார் - ஆர் பொறுப்பார்.

கச. சாதலலாது தெறியிலை; பின், கூo. "இன்றுயிர்எனித்தகோவே" என்பது இதனைவலியுறுத்தும். அசைவுமெலிவு. தமக்குச் சன்மானமாகச் சேலையையும் அரசன்தருவன்.

கஙி. அச்சத்தைத் தள்ளியவள் மனைவி.

கசு. வீரன் நாம் அற்று.

கஅ. கியாளம் - ஒருவகைப்பறை.

கக. பாராவலை - வலைதடி.

உo. பூங்கொடி - அழகிய துவசம். தோரைகள் - மயிலிறகாற்செய்தவிசிறிகள். மட்பாம்பு - ஆதிசேடன். படைச்சாத்து - சேனைத்திரள்.

உக. சூழ்ந்த - ஆராய்ந்த.

ஙக. உடம்பில் தழும்புடையவீரர்கள் சிறந்தவர்களாதலின், இங்ஙனம் கூறினர்.

ஙஉ. கம்பித்து - நடுங்கி.

ஙஙி. தாரை - கதி.

ஙஅ. தந்திரம் - சேனை. தாழாது - தாமதியாமல்.

ஙக. சிலைத்து - முழங்கி.

சo - ம் திருவிளையாடல்.

க. எளிய - அடியார்க்கெளிய. மூச்சந்தி - காலை, உச்சி, மாலை.

உ. பரிவு - அன்பு. கல்குரவினுல் வேள்விகளும் ஒழுக்கமும் ஒழிந்து.

சு. மாதனம் - மிக்கபொருள். கோதனம் - பசு. ஆராமம் - சோலை.

ஙி. உலகு ஏதம் - உலகத்தின்துன்பம்.

கo. நெஞ்சம்வாழுமேல் - மனம் மகிழுமாயின்.

கங. கீக்கவற்று-கீக்கவல்லதாகிய. ஓழி - முடிப்பு.

கச. "கோடிபொன்னெடுப்பினுங் குறைவி லாததோ, ராடகநீவி" என்பாபின்னும்; உo. புக்கில் - வீடு.

கநி. நீவி - ஓழி.

கஎ. தணிவுஇல்லை - குறையாது.

கக. செல்லல் - துன்பம்.

உo. ஆடகநீவி - பொன்முடி.

சக - ம் திருவிளையாடல்.

உ. வண்மை முன்நிகழ் - கொடைமு, யலைகள் விளங்கப் பெற்ற. நந்த - பெருக.

சு. இறந்தானென்று நினைந்து.

ஙி. துவர்ப்பிடித்து - செம்மைஏற முள்ள ஆடையைப்பிடித்து; [கo - ம் பாடல்பார்க்க.]

எ. போகட்டு - விடத்தி. அத்தம் - கை.

அ. மிகை - வரம்புகடந்தசெய்கை
கூ. படிற்றுரை - பொய்யுரை.
க0. தருமமன்று - நியாயசபை.
கஈ. தருமவாசனம் - நியாயசபை.
கச. அறுவை - ஆடை. முடிச்சாத்து - தலைப்பாகை. கைவீசல், வருந்தாக்குறிப்பு. சிறுக்கன் - சிறுவன்.
கள. பஞ்சவன் - பாண்டியன்.
கஅ - கக. ஆங்குவந்தள்ள வணிகர் கணைநோக்கிச் சிவபெருமான்விளவல்: 'வணிகருரியர்' என்பது முதலியன, வணிகர்களுடைய பெயர்விசேடங்கள். பயன் என் போதும் - இலாபம் யாது வரும். பணையம் - ஈடு. 'என்' என்றது, தம்முடைய பழைய ஞாபகத்தைப்புலப்படுத்தியபடி.
உ0. அவதரம் - சமயம்.
உக. காணி - உரியநிலம். கஞ்சம்-வெண்கலம்.
உஉ. மகவிலாமற் கொடுத்தனன்.
உரு. அஞ்சி ஒளித்தனர்.
உச. வூற்று அலைசெய்தோர்தம்மை-எதிர்த்து வருத்தியவர்களை.
உஙி. தருமமோவென - இவர்கள் செயல் தருமமாவென்று சொல்ல. உளங்கடோறும் விளங்கினை. வகை - இடங்கள்.
உசு. கன்றினர் - பகைவர்.
உஅ. கணக்கு - வழக்கு. மாட்டாக்கைத்தலை - வன்மையில்லாதவித்தலை. சான்றோர் - நியாயசபைத்தலைவர்.

சுஉ - ம் திருவிளையாடல்.

உ. இன்பால் - இனியபாலை. இயக்கமாதர் - யக்ஷமகளிர்.
கூ. உமையொடு-பொருளொடு; ச. ஙி. மெய், சிலேடை. மேல்-இனி. ஒப்பு - பொருத்தம்.
சு. கோடியோசனைபோந்து - கொம்புகள் யோசனையளவுநீண்டு.
எ. தூங்கில் - ஓய்வில்லாமல்; "தூங்கில்லாமல் வானிற்கழன்று" என்பர்பின்னும்; கக. தாங்குதலற தடையற. விழும், எவல்.
ஙக. பகுதி - பகுப்பு; இயல்பு. இயற்போதம் - இயற்கையறிவு.
க0. இறை, எழுவாய். சாபானுக்கிரகத்தால், மூறையே இணைப்பும் இனிமையும் பெற்றனர்.
கஉ. வடிவும் அறிவும்.
கஙி. ஒப்பு - மனப்பொருத்தம்.
கச. சொல்லொடும்பொருளொடும்விரித்து.
ககு. உருவொடும் உலாவினர்.

சுசு - ம் திருவிளையாடல்.

ச. வினை - போர்.
ஙி. பரிவேத்தா-தமையனுக்குவிவாகமாகாமலிருக்கும்பொழுது விவாகம் செய்துகொண்டவன். வஞ்சி - பகை மேற்செல்வோர் அணியுமாலை.
சு. தும்பி - யானை.
எ. ஓசனை - யோசனை. அணி - சேனையைவகுப்பாயாக; எவல்.
அ. கொச்சித்தொடை - கொச்சிமாலை; இது, தன்மதிலைக் காத்தற்குரிய வீரன் அணிந்துகொள்ளுவது. காஞ்சி - காஞ்சிப்பூமாலை; இது, பகைவர்க்கு எதிரூன்றிநிற்போர்க்குரியது.
க0. ஞாட்பு - போர். தும்பைமிலைந்து.
கஉ. ஆளும்ஆளும் - வீரர்களும்வீரர்களும்.
கஙு. இனன் - சூரியன்.
கச. ஆவி - குளம், உயிர். மாட்டாதாஙி - வலியில்லாததாஙி.
ககு. உதிரம் - விலாமிச்சவேர்.
கள. உயிர்மருந்து - உயிரைக்கொக்குமருந்து; மிருதசஞ்சீவினி; "கொல்லு முயிரன்றே னீரு முயிரன்றே" (புறநா. கஅசு). விளிந்து - கெட்டு. முன்னின் - முன்பொருததுபோல.
கஅ. வையம் - தேர்.
உ0. கவந்தம் - தலையில்லாத உடம்பு. போஞ்ஞர்போஞர் - தப்பிப்போனவர்கள் பிழைத்தார்கள். முளிந்து - உலர்ந்து.
உக. முகமுகம் பார்த்து - ஒருவர் முகத்தை ஒருவர்பார்த்து; (உசு) க: "இனப்புரவி முகமுகம்பார்த்து".
உஉ. மனிதவுருவங்கொண்டதற்கேற்பநடித்தருளினரென்பார், 'அரு

ன்திரு மேனிவேர்ப்ப வோடிமீண்டு' என்றார்.

உக. வெற்றிமாமுரசம் - ஜயபேரி.

உச. 'வள்ளல்' என்றான், உயிரையும் அரசுரிமையையும் கொடுத்தது பற்றி.

உஅ. தரம் - தருதி.

உக. நான் நான் என்று - நான் போர்செய்வேன் நான் போர்செய்வே னென்று. மாலை-தும்பைமாலை. தண்டி - அலைத்து.

கூ0. கூபம் - இணறு.

சது - மீ திருவிளையாடல்.

க. வெறுப்பு - பகைமை; கூஉ: "பிறிவிலா வெறுப்பிவர்க்கெங் கிப்படிப் பிறங்கிற் றென்ன" என்பர்; (உஎ) அஉ: "ஆர்வெறுப்பாருவப்பே". கண்ணுற - கருத.

உ. மறைப்பொருள் - இரகசியச் செய்தி; கூஉ: "மறையுளாபகர்ந் தாய்" என்பர்.

கூ. ஒளி - தெய்வத்தன்மை.

ச. அற்றம் உற்று - சோர்வுற்று.

சு. பொறையன் - சேரன். இள்ளி-சோழன். நிம்பம் மாறன் - வேப்பமா லையையுடைய பாண்டியன். துதிசெ யாது - (இந்திரனைத்)துதியாமல். உடன் - இந்திரன்கூட.

எ. அது - அம்மஞ்ச்சியை.

கo. "மானிமாறன்", "மானம் வலிசேர்ந்தவாள் வழுதி" என்பர்பின்னும்; கூஉ, ஙஉ.

கக. அதகண்டி - குறையிரவாமை யைக்கண்டி. தலமெலாமதிப்ப - உல கத்தாரெல்லாரும் நன்மதிக்க, உல கமெல்லாம் இதற்கு வியாருமென் றுமதிக்க.

கஉ. வற்றாய் - வல்லதாய்.

கசு. ஆயிரமுகத்தையுடைய பே ராரம் - ஆதிசேடனுடைய ஆரம்.

கச. பேத்திசை - பாதாளம்.

கஙி. நேர்கண்டி - பிரத்தியக்ஷமா கக்கண்டி.

கக. மாசறு-இரத்தற் குற்றமற்ற. உற்ற - துன்பமுற்ற.

உஉ. விது என்று - சந்திரனும் சூரி யனும்.

உசு. பாரம் - கனை. அரசு - அர சமரம். பன்னம் - இலை. அப்பு உறி ன் - கீரிற் பொருந்தினுல்.

உஙி. மூழைஞ்சு - குகை.

உசு. தண்டமிழ்முருகன் - செந்த மிழ்ப்பரமாசாரியராகிய முருகர். நம் பேர் முருகனென்பது.

உஎ. தமிழ்த்தண்டலம் - தமிழ்நா டி. 'இழவனென்றனே' என்பதை திரு முருகாற்றுப்படையின் இறுதியில், "பழமுதிர்சோலைமலை இழவோனே" என்பதனுணர்க.

உஅ. 'குன்றமெறிந்தாய்' என்னுங் கவி வருமாறு: வெண்பா-"குன்றமெ றிந்தாய் குலகடலிற் சூர்தடிந்தாய், புன்மையில பூதப் பொருபடையாய் - என்றும், இனையா யழகியா யேறூர்ந் தா னேறே, உனையாயென் னுள்ளத் திறை".

உக. பரமென - அடியேனைக்காத் தருளுவது உம்முடையு பாரமென்று கூறி.

கo. சீதமண்டலக்குலம் - சந்திர குலம். கோதைமண்டலம்-சேரனுடி. சென்னிமண்டலம் - சோழனுடி.

கக. முண்டம்வெம்ப-தலையெரிய. பகர்ந்திலனுகி இருந்தனன்.

கூஉ. இவர்க்கு - இந்திரனுக்கும் பாண்டியனுக்கும்; 'வெறுப்பு' என் றதி,முதற்செய்யுளிற் கூறியதை. மா னிமாறன்-மானியாகிய பாண்டியன்.

கூஙி. வனை - பக்கமலை.

கூச. கயங்கள் - யானைகள். கான் மேகி - காட்டெருமை.

கூஙி. சத்தி - வேல். முகத்திடை மலேந்தான்.

கூசு. தாள்வரை - மலையடி; பாத சைலமென்பர் வடனூலார்.

கூஎ. பரிவால் - அன்போடு. செ-யர்அரசர் - மேகங்களின் உயர்ந்த அரசர். அவனா - மேகவேந்தனை.

கூஅ. சடக்கென - விரைவாக. தி டிப்பர் - அசைவற.

சo. வாணாசர்தம்மை - மேக அரசர்களே.

சஉ. வீரமாறன் - வீரத்தையுடையபாண்டியன்.

சஙூ. தனுமணி - வில்லிற்கட்டிய மணி. (கம்ப.1. மூலபல. உஉஅ)

சச. ஈல்லீ, இகழ்ச்சிக்குறிப்பு. 'புரந்தரன்' என்பதற்குப் பகைவருடைய ஊரினை அழிப்பவனென்பதுபொருள்.

சஞி. வாசி - விசேடம்.

சசு. 'உனக்காயிரங்கண்' என்றது இகழ்ச்சிக்குறிப்பு.

சஎ. வஜ்ர - ஒருவகை ஆயுதம்.

சஅ. கொன் - அச்சம். கோடக அமர் - குதிரைமேலேறிச்செய்யும் சண்டை. உருத்து - கோபித்து.

சஈ. பரிந்திருக்கும் - அன்புவைத்திருக்கப்பெற்ற; "அந்தத் தென்னவற் கன்பு பூண்ட, பொன்முடிச்சொக்க நாதன்" என்பர் பின்னும்; டுசு. தனித்துவென்றதை, சசு: "இருவரும் பொருவோம்", சஅ: "சிங்கமிரண்டோபோர் மூண்ட வென்ன" என்பவை வலியுறுத்துகின்றன.

டுo. மற்றவர் - மேன்மையில்லாதவர்.

டுக. சாபம் - துருவாசமுனிவரிட்டசாபம்.

டுஉ. இரவாமையால் மான்த்தையும், வென்றமையால் வலியையுமுடையாயென்பான், 'மானம்வலிசேர்ந்த வாள்வழுதி' என்றான்.

டுங. புணை - ஈடு.

டுச. ஒருவன் நாமுன்னென்றே நிப் புணைகின்றனென்க. 'வரும்பெயர்' என்றது, துவளாநாட்டாரை.

டுடு. 'கருணைவான்' என்பது மரபாதலின், 'அருண்மழை' என்றார்.

டுஅ. பூண்டி புடைத்து விலங்கிட வென்க.

சடு - ம் திருவிளையாடல்.

க. பதியிலார் - உருத்திரகணிகைமார்; "உருத்திரகணிகை மாராம், பதியிலார்". (பெரிய. தடுத்தாட். கூக) இறைவன் - திருப்பூவணமுடையார்

உ. பரமனுக்கு - சிவபெருமான் திருவுருவமைத்தற்கு. நாளும் புத்தி அழுங்குற.

ங. துனி-பொன்னனையாளுடையதுன்பம். கo.

ச. துய்த்து - உண்டு.

சு. நாசிகாபரணம் - மூக்கணி. குன்றி - குன்றுமணி. இமைப்பு - இமைமூடல். இன்மூக்கணியாகியமூத்தி, கண்ணெளியால் மேற்பார்க்குமையையும் வாயொளியாற் கீழ்ப்பார்ச்செம்மையையும்பெற்றுத் தோன்றினமையின், 'குன்றி' என்றும், வாயைப் புதைத்துக் கண்ணைமூடிக்கொண்டு இவள் அஞ்சலித்தபொழுது அதுமுத்தென்றும் நினைக்கப்பெற்றது; "இவண்மூக் கணிமுத் திதழொளியாற் பெற்ற, துவண்பதும ராகத்தொனி".

எ. காமனைக்கண்ணிலானென்பது உண்மையென்க; காமனுக்குக்கண்ணில்லையென்பது ஒருபழமொழி. எண்ணிலா என்னை-அழகுடையவர்கள் வரிசையிற்சேராத என்னை. நீரும் எண்ணற்கென்க; சித்தர் தன்னைவிரும்பியதாகக் கருதி இதகூறினள்.

அ. கொல் தரும் இருப்பு மூட்டி - கொல்லர்களால் செய்து தரப்பெற்ற இரும்பாலாகிய பொருள்கள்.

க. ஆசு-கவசம். சீரா - தலைச்சீரா. மருந்து - பச்சிலை.

கo. நாயஞரை-சோமாஸ்கந்தரை; "நாயகர்" என்பர்பின்னும்; கச.

கக. நாயனீரோ - தலைவரே.

சஉ. தபதியர் - ஸ்தபதியர்.

கஙி. கபோலம் - கன்னம்.

கசு. அங்குலிச்சுவடு-விரற்றழும்பு.

கள. வடிவமழகியதென ஒருசொல் வருவிக்க; கஙி-ம் செய்யுளைப்பார்க்க. அழகியபெருமானென்பது திருப்பூவணமுடைய நாயகரது திருநாமம்.

கஅ. பிரமாணம் - ஆஸ்திகபுத்தி.

சசு - ம் திருவிளையாடல்.

க. மிஞ்சி - மிகுத்து. ஆயிரம்பரிக்கு - ஆயிரம் சூதினாலீர்க்கு. பரி

யாள் - குதிரைவீரன். சந்தம் - சந்தஸ்.

உ. திசைவிசயம் - திக்குவிசயம். மூத்திசை - தெற்கல்லாதன. இயல் - இலக்கணம்.

ஈ. உற்றகாலத்து - ஆபத்துவந்தகாலத்தில்.

ஙி. அமையும் - போதும்.

சு. பூ - பூமி. உயர்ந்த் - மிக்க.

எ. அறை - பொன்னறை. நின்ற பொன் - எஞ்சியபொன். இரங்கல் - இரங்கற்ற ; லியங்கோள்.

கூ. சென்னி-சோழன். சங்கரன் - சுகத்தைச்செய்பவர்.

கக. புரவியாள் அவன் - புரவிவீரன் அச்சோழன். அடிமை - அடியேன். செம்பியன் - சோழன்.

கஉ. ஐய - கிறிய. புறம்புடைத்தீரஞ்சி - வெளியே தைரியமுடையவனுகப் புலப்படுத்தி.

கச. ஆலித்து - முழங்கி. உளையச் சேலைத்தலைமிசைமுடிந்துகொண்டி - அகாயவாணியை அடையின் தலைப்பில் முடிந்துகொண்டி ; இங்ஙனம்செய்தல் மரபு.

கசு. கீறிடா - திருகீறிட்டி. அணிந்தனன் - சேனையைவகுத்தனன். களம் - போர்க்களம். அப்பெரும்படை - சோழன்படை.

கஎ. வினை - போர்.

கஅ. மூலபலம் - மூலப்படை. ஓவ்வி - சோழன். 'எதிர்ந்தேன், என்னே ஆளுடையாய்' என்றது, பாண்டியன்வார்த்தை.

ககூ. பீலிமுடி - பீலித்தொகுதி. களம் - கழுத்து. கவடித்தாமம் - பலகறைமாலை. இருமருப்புத்தோடி - யானைக்கொம்பாற்செய்ததோடி. மயிற்கழுத்து - மயிற்கழுத்தாலாகியகோவை. வேங்கைவரித்தண்டை உத்தரீயம் - வேங்கைத்தோலாகிய, கோடகனையும் வாலையுமுடைய மேற்போர்வை ; தண்டை - வால். தந்தமணித்தொடை - யானைத்தந்தத்தாலாகிய மணிகளையுடைய மாலை. மார்பிற்பிறங்கவென்க; "மார்பிற் கிறுதந்த மணித்திரண்மாலை தாழ" (பெரிய. கண்ணப்ப. சுo). வாங்கி - கைக்கொண்டி.

உo. வேட்டுவப்பரியாள் - வேடராகிய குதிரைச்சேவகர். அபயா - சோழா.

உக. இடும்பையன்றனைமறைத்துதன்பத்தையுடைய பாண்டியனைப் புறத்தே தோன்றுமற்செய்து. செழியன்யான் என்ன - யானேபாண்டியனென்று. கால் - காற்று. கோரம் - சோழன்குதிரை.

உஉ. அசை - விருப்பம், திக்கு. வாசி - குதிரை.

உங. மேல்விட - மேலே குதிரையைச் செலுத்த.

உச. தாதகித் தெரியல்மார்பன் - ஆத்திமாலையையணிந்தமார்பையுடையசோழன். சிங்கநாதம் - சிங்கமூழக்கம்போன்றமூழக்கம்.

உஙி. இதழி - கொன்றை. சனவட்டம்-பாண்டியன்குதிரை. வீளிவுற - அவமானம் அதிகரிக்க; மேல்பால் - மேற்றிசையில். நாகம் - நாகருலகம்.

உசு. வருத்தமின்றித் தீரத்தேறினன் ; தீரம்-கரை. குசை-கடிவாளம்.

உஅ. குதிரை இராவுத்தன் - குதிரைத்தலைவன்.

உக. விளித்து - அழைத்தி. ஆலயத்து எய்தி, 'உயிரளித்தநாத' என்று விளித்துக்காட்டினனென இயைக்க.

ஈo. பூடணம் - ஆபரணம்.

ஈக. பிரமாணத்தோர் - ஆஸ்திகர். இச்செய்யுள், பாண்டியனதுவெற்றிக்கும், சோழனுடையகேட்டிற்கும் காரணங்கூறியது.

சுஎ - ம் கிருவிளையாடல்.

உ. சமாதி - சங்கற்பம்.

ஈ. படிமம் - ஒப்புவடிவம்.

சு. சுரர்பரன் - தேவர்கள்தலைவர்; மகாதேவர்.

கூ. குறியறிவு - குறித்தலையுடைய அறிவு.

எ. படைவீடு - அரசிருக்கை.

அ. நாகம் - பாம்பு.

ஈ. 'நேர்குன்றுத' என்பது, சிவ பெருமானுக்கு அடை.

ஈ0. தன்னுடைச்செலவு - நெளிந் துசெல்லுதல்.

ஈக. வாலம் - வால்.

ஈஉ. ஆரமம் - சோலை. கெருடி - ஆயுதப்பயிற்சிசெய்யுஞ்சாலை.

ஈச. மதிற்மிருக்கால் - மதிலின்மு டக்கத்தால்.

தஅ - ம் திருவிளையாடல்.

உ. உழை - மான்; வீமமாம்.

ஊ. முறைசெய்வோர்கள் - வேலே யாளர்.

எ. விம்மிமுறையிட்டார்.

அ. தீர்வை - பிராயச்சித்தம்.

ஊ. நிலம் - எள்.

ஈ0. அகமருடணங்களாகிய மந்தி ரங்கள் - ஒருவகைவேதமந்திரங்கள். தண்ணீர்வைத்து - தண்ணீர்ப்பந் தர்வைத்து. விதித்ததற்கு எழுவாய் அந்தணர், அமைச்சர், புரோகிதர்; அ - ம் பரட்டிற்காண்க.

ஈக. பிரமஹாயை - பிரமஹத்தி.

ஈஉ. குஞ்சி - தலைமயிர்.

ஈஊ. இப்பால் - மேலே.

ஈச. தூங்கிடாது - தாமதியாமல். ஏகாத்தீங்கு-தீங்காதபிரமஹத்தியை.

ஈடி. காயிறு - சூரியன். சந்தி - சந் தனமரம். தெவ் - பகை. வலம் - வெற்றி. 'அந்தமெய்' என்றது, சிவ பெருமானுடைய திருவாக்கை.

ஈள. பொன்னி - காவிரி. திருவி டைமருது - திருவிடைமருதூர்.

ஈஅ. 'ஓ்யோதின்மயமஹாலிங்கமூ ர்த்தி' என்பது அத்தலத்தில் ஸ்வாமி திருநாமமாதலின், 'சோதி' என்றார்.

ஈக. நொய்ய - கனமற்ற.

ஈக. பரிவு - அன்பு.

ஈஉ. வேரூர்வாயில் - மேற்குவா யில்; அது பாண்டியன்கோபுரமென் றும் இன்றும் வழங்கும். விமானப்புரி சை - கொடுமுடிமதில். அகரம் - அக் கிரகாரம்.

ஈஊ. பதக்கிணம் - பிரதக்ஷிணம். காய்க்கட்டம்-காய்மலம். அஹரிபாதி கொடுப்பலென்று நெஞ்சினுல் நினைக் தனன். பகுதி - பகுப்பு.

உடி. வரும்பிறவியின்கண் அடி மையாக.

உசு. தலையோடி - மண்டையோடு. இடக்க, வியங்கோள். கிலேந்தனன் - அத்தலையோட்டைக் சூடிக்கொண் டான்.

உள. விடுக்விடும், முன்னிலைப்ப ன்மை. வெள்ளாை - திருநீற்றால் வெ ண்ணிறமுடையாரை. பணிந்தான் - அக்கள்ளனைப்பணிந்தான்.

உஅ. படாம் - ஆடை.

உக. ஆவி - தடாகம்.

ஊஉ. சிவலோகம் உலகுக்கெல்லா ம் உயர்ந்துளதென்பதை, ஈள - ம் பா டலாலுமுணர்க.

ஊச. நின்றமர் - நின்னடியார். நி னைவு - கவலை.

ஊடி. கோடிகாயிறு - கோடிசூரியர் கள்.

ஊள. கண்ணுறில் - நினைத்தால்.

ஊஅ. மகிழ்ச்சியடைந்தோர் மங்க லப்பொருள்களாகிய பூவும்பொரியும் சிந்துதல் மரபு.

ஊஊ. உளம்கண்கிலைநந்தன - உள் ளமும் கண்களும் நிறைந்தன.

ச0. இராவில்வந்து. உதவியமறை யோன்றன்னை - இணற்றினின்றும் எ டுத்தமறையோனை. 'மறையோன் என்றது, கணவனை.

சக. பிரமஹத்தியாலே ஊண்முத லியவற்றை இழந்ததை, கூடம் செய் யுளாலுமுணர்க.

ஈஊ - ம் திருவிளையாடல்.

உ. பேசி - போர்செய்யவருதலை முன்னேதெரிவித்து; சூளுரைத்தென் றுமாம். கருநாடர் - கருநாடதேசத் தலைவர். வினை - போர்.

ங. ஆன்னிரை - பசுக்கூட்டங்கள். அதர்மறித்தும் - வழிமறித்தும்.

ச. அத்திஅன்றுஎய்தசேவகன் - அ ட்டாலேச்சேவகர்.

எ. "அற்றவர்க் குற்ற சிவனுறை இனற வாலவா யாவது மிதுவே" என்

பதி தேவாரம். நீயலாற் புகலுண் டோவென ஒருசொல் வருவிக்க.

கூ. பூதி - விபூதி.

க0. கேரியன் - சோழன்.

கஉ. தந்தையன் - தந்தை.

கஙூ. விடைதரப்பெற்றோம், ஒலேடை.

கச. சேனைத்தலைவர் மீட்டிட.

கஞ. இள்ளி - சோழன். விளிய - அவமானமுற.

கக. வாளி - அம்பு.

கஎ. துரகம் - குதிரை. இபம் - யானை.

கஅ. நோக்குவித்தை உடையோர் தம்வித்தைகாட்டுகையில் நெற்றியி லே கம்பொன்றை நிறுத்திக்காட்டு தல் இயல்பு. ஒத்து - ஒருவகைவாத்தி யம்.

கக. பூதசாலம் - பூதக்கூட்டம்.

உ0. வாங்கி - பின்வாங்கி.

உக. வில்லி - அட்டாலேச்சேவகர்.

உங. என்று வந்தித்தான் - எந்த நான் வந்தித்தானே.

ரூ0 - ம் நீருவிளையாடல்.

க. தூய்தகு-தூய்மைபொருந்திய. ஒருமனமுடையாரென்பார், 'காதல் கூர் கினேவின் மேவுங் காதலி' என் றார்; "கரத லிருவர் கருத்தொருமித் தாதரவு, பட்டதே யின்பம்" என்றார் ஔவையாரும்.

உ. பூசிதாதனம் - விபூதியும் உரு த்திராக்கமும். கோதை - மாலே.

ங. உணவு: உண்பன, தின்பன, கக்குவன, பருகுவன என நான்கு வகைப்படும்.

ஞ. செம்தி - செய்கை.

க. வருபோகத்து - பின்உண்டா கும் விளேவில்.

எ. வீறு - வேறொன்றற்கில்லாஅழ கு. பேறு - இலாபம்.

அ. களக்கம்=களங்கம் - குற்றம்; கலக்கமுமாம். ஒக்கல் - மேருமலே.

கூ. வாதை - துன்பம்.

க0. இறுத்தற்கு - கொடுத்தற்கு. இன்றுகாட்டிடு.

கக. இடும்பை - துன்பம். உயர்ந்த வாக்கு - அசரீரி.

கஉ. சூளாமணி - முடிமணி; 'சூத்தி ரர்த்தலேவன்' என்பர் பின்னும், கஎ; 'சூத்திர சூளாமணி' என்பதைப் பெ யராகவேகொண்டனர், பயகராலே யுபாயாசிரியர். வற்றாய் - வல்லமை யுடையதாய். கந்தம் - மணம்.

கஙூ. உலவாக்கோட்டை - எடுக்க எடுக்கக் குறையாத அரிசிக்கோட் டை. தண்டெலம் - அரிசி. விற்றுப் பொருளேயுண்டாக்கி. வேதஞ்சொல் யாண்டும் - நூறுவருடமும்; "வேத நூற்பிராயம்நூறு" (திருமாலே, கூ.) என்பதனேயுமுணர்க.

கச. மெய்விதிர்ப்பு - உடம்புநடுக் கம். செங்கைகவ்வியன் - செவ்விய திருக்கரத்தில் மானேயணிந்தவர்

கஞ. புகா - புகுந்து. உள்அரங்கில் - அரங்குள்ளில்; என்றது, அறையின் உள்ளேயுள்ள மற்றோர் அறையை; "எழினி வாங்கிய வீறமைப்பள்ளி". (முல்லேப்பாட்டு, கூச) '

கஎ. மினேவியோரிடம் சிவலோகத் தில் எறினனென்க.

ரூக - ம் நீருவிளையாடல்.

உ. கருநாடமன்னன்-கருநாடதே சத்தரசன்; "வடகக்கரு நாடர் கா வன், மானப்படை மன்னன்." என் பதி பூரித்திநாயனூர், புராணம், கக. கையர் - இழிமக்கள்.

ச. மிறை - நடுக்கம்; "அந்தம் மி லவா மிறைசெய்யவும்" என்பது ஷை புராணம், கஞ. பறிதலே - உரோமங் களேப் பறித்துக்கொள்ளும் தலே. ஷை புராணம், கஅ - ம் திருவிருத்தத் தைப்பார்க்க.

ஞ. "நட்டம் புரிவா ணிகற்றிரு மெய்ப்பூச் சின்று, மூட்டும் பரிசா யிஞ்நேயக் குங்கை மூட்டாது" என் பது ஷை புராணம், உ0.

சு. வட்டப்பாறை - சக்தனக்கல்; "வட்டக் கிகழ்பா றையின்வைத்து முழங்கை நேய்த்தார்" என்பது ஷை புராணம். உ0.

எ. சலம் - துன்பம். என்றுகொண்டு கொள்ர்ந்ததென முன்னேகூட்டுக. ஷை புராணம், உஉ - ம் திருவிருத்தத்தைப்பார்க்க.

ஈ. ஓடைக்குன்று - யானை. வில் - ஒளி.

கo. குணப்பெருங்குன்றை - மூர்த்திநாயனாரை.

கக. இழிச்சி - இறங்கி யருளச்செய்து; "வெங்கட்களிற்றின் மிசை கின்று மிழிச்சி" என்பது ஷை புராணம், ஈ௭.

கஉ. தந்திராவிதியின் - தூல்விதியால். முடி சடைமுடி-கிரீடம் சடைமுடியாக; ஷை புராணம், சக - ம் திருவிருத்தத்தைப்பார்க்க.

கஙு. யாவருமியையத்து. மூன்று - சடைமுடி, உருத்திராக்கம், திருநீறு.

கஙி. "மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்" என்பது, தீருத்தோணீடத்தோகை, ஈ.

ருஉ - ம் தீருவீளையாடல்.

உ. காலி - பசுக்கள்.

ஈ. களங்கனிக்கொத்து - களாப்பழக்கொத்து. வெண்பாசி - ஒருவகை மணி. பூதி - விபூதி. யாவும்-எல்லாம்; 'ஆவும்' எனப் பிரிப்பினும்பொருந்தும்; ஆ - பசு. வளைகெடுங்குழல் - வேய்ங்குழல்; வளை - மூங்கில். தெற்றி - பின்னி.

ஙி. மன்றுடி என்பது சிலேடை; சபையில் ஆடுபவனென்றும் எருமன்றத்தில் ஆடுபவனென்றும் பொருள்படும்; பசுமந்தையை எருமன்றமென்றல் மரபு. அதர் சொல் - வழியைச் சொல். காவனேத்து - சேர்க்கை ஒலியைச்செய்து; ஈன்றவன் ஆவினத்தைனப் பிரிப்பினும் பொருந்தும்.

ஊ. வன்புலவர் - சங்கப்புலவர், மதியாது காணுது உரைத்தீரே.

எ. கொச்சையலன் - இழிந்தவனல்லன்; "அறக்கிழவன் மனிதன்விரில்லாக் கொச்சை" என்பது ஜீன நீதி லகரி, ஈக. வீடமன் - விஷமன்.

ஊ. ஒன்றையும் மீட்டுரையார்.

கo. இல் - இல்லை.

கக. ஊர் பொதுவன் - ஊர்ப்போதுவில்உள்ளவன்; [பொது - சபை] இடையன். அண்டன் - தேவன், இடையன். சிற்றிடைச்சி - சிறிய இடையையுடைய உமாதேவியார், சிறிய இடைச்சாதிப்பெண். பசு - உயிர்கள், பசுக்கள். மூட்டாமல் - குறையாமல், மூட்டுதல் செய்யாமல். பாசம் - ஆணவமுதலிய மலங்கள், கயிறு. மன்றுடி-சபையில் ஆடுபவன், எருமன்றத்தில் ஆடுபவன். கால்மாறி-கால் மாறி ஆடுபவர், கால் மாறி நிற்கும் இடையன். இச்செய்யுளும், "பாசங்கிழமூவகைப்பசுக்களே, மாசின் முத்தியாம் வனத்தின் மேய்த்துடி, மீசன் மின்னேநேரிடைச்சி காதல, ஞசில் பால்வனத்தண்டர் காதலே"(திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, எக) என்பதும, ஒருவாறு ஒத்திருத்தல்காண்க.

கஉ. கோன் - அரசன், இடையன். பஞ்சு - பங்கிட்டு.

கஙு. இயற்சிவன் - சுந்தரேசர், இலக்கணத்தையுடையசிவன்; இயல் - அழகு, இலக்கணம்.

ருஙு - ம் தீருவிளையாடல்.

க. புல்வாய் - ஒருவகைமான். ஓர்கிலை - ஒரிடத்தில். பயந்த - பெற்ற. புனிற்றினமறியை - ஈன்றதணிமையையுடைய கன்றை.

உ. புல் நீர்ச் - புற்கள் கரிந்த. ஒளிநிற்பான் - ஒளித்துநிற்பவன். பட - இறக்க.

ஈ. பிரியாத-பகைமையினின்றும் நீங்காத.

ஙி. விதிமாற்றல் - புலி மான்கன்றுக்குப்பாலளிக்கச்செய்தல். சிவபெருமானுடைய ஆச்சரிய சக்தியைப் பிரமதேவர் ஸ்யந்தரை இங்கே கூறியிருத்தல்போல, (கo) கஙி - ம் செய்யுளிலும், (கூஉ) கக - ம் செய்யுளிலும் கூறியிருத்தல்காண்க. சிலைமலை வில்லான் - மலைகின்ற வில்லாக மேருவை வுடையவன்; சிலை-மலை. சசிபதி - இந்திரன்.

கூ. சிறந்துவீடிய. பொருள்களைப் பின்னுந்தேட.

எ. பச்சிமதிசை - மேற்றிசை. எல்லும் அல்லும் - பகலும் இரவும்.

கூ. படிமம் - திருவுருவம். தலத்தையும் படிமத்தையும் கண்டனன்.

கo. மணற்புரம் - மனலூர். அரசன் - பாண்டியன்.

கக. சித்திரைக் சித்திரைக்கு - சித்திரை மாதத்துள்ள சித்திரை நக்ஷத்திரத்தில்; (திருவிளை. இந்திரன்.கசு).

கச. மயன்நூல் - சிற்பநூல்களுள் ஒன்று. எல்லை அடைவாகநடந்தான்.

கடி. கழகம்-கல்விச்சாலை. நயப்பவிரும்ப.

கசு. கன்னி மால் காளி ஈசன் காக்குமா நகரி - மதுரை: (திருநகர. கஉ-கடி; பயன்முதலியன, டி.) எத்த வாழ்த்திட இருந்தென்க.

டுஅ - ம் திருவிளையாடல்.

க. நிம்பமாலை - வேப்பமாலை.

ச. மலயாநிலம் - தென்றல்.

டி. காளமும் வரவேணும் - இனங்தோறும் வரவேண்டும்; "வேணுமாகில்வேணும்" (பார. சூதுபோர். கசுடி). வீடித்தற்கு - தங்குதற்கு.

சு. பீடி ஒன்று இயவன் - பெருமைபொருந்திய வாத்தியத்தையுடையவன்; எழுவாய்.

எ. பதறு - பதறி. பெருமாள் - பெருமையையுடையவன்.

அ. விளரி - ஒருபண்.

கூ. பூசை - பூனை. சிச்சிலி - மீன்குத்திக்குருவி. பறவை-குயில், வண்டு முதலியவை. உச்சிமலைநீர் விழுக்காடு-அருவியின் வீழ்ச்சி. இச்செய்யுளின் பொருளை, "சிச்சிலி பூனை குடமுழக்கஞ் செம்மைத்தா, முச்சிமலை நீர்வி ழுக்கா டொண்பருந்து - பச்சைகிற, வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கானிழற்பறவை, யெய்துங்கா லோசை யியல்பு." (இசைமரபு.) என்பதனுடும் விளங்கவுணர்க; "வண்டின் முரியுங் கஞ்ச நாளமுஞ், சிரல்வா னிலையுங் கழையிலை வீழ்வது, மருவி யோசையு முழவின் முழக்கமும், வலம்புரிச்சத் தமும் வெருவின் புணர்ச்சியு, மின்னு மென் றிசைப்பப் பன்னிய விதியொடு" என்பது கல்லாடம், உடி.

கo. கீதநாதன் - பாணபத்திரர்; "கானநாதா" என்பர்பின்னும்; கஉ. ஏட்டை - இளைப்பு. உண்டோ - யாரேனும் உளரோ.

கக. பணி - ஆபரணம்.

கஉ. காயகன்-இசையில்வல்லவன்.

கங. சுத்த சாளர சங்கீதம் - சுத்தமும் சாளரமுமாகிய ஸங்கீதம்; சுத்தம் - இயல்பானநடையுள்ள இசை; சாளரம்-வேடுரூர்ராகத்தின் நடையைத்தழுவி இனிமையையுண்டாக்கும் இசை; இது காலகமெனவும் சாயாலகமெனவும் வழங்கும்; சo: "சுத்த சாளரசங்கீதம் பாடுதற்கு".

கச. முடிச்சுற்று-தலைச்சாத்து. குப்பாயம் - சட்டை. வீணையையும் தண்டையுடையயாழையும்; வீணைவேறு, யாழ்வேறு; "குழலும் வீணையும் யாழுமென் றிவையன குணழய." (கம்ப. சுந்தர. ஊர்தேடு. கீ). தக்கிரி - தீங்கு.

கடி. நமக்கு குன்று உற்றது - நமக்கு ஒரிடையூறு மலையாக வந்துவிட்டது. வல்லேம் அல்லேம் - வல்லமையுடையேமல்லேம்.

கள. இப்பகையினைக் கழித்தல்வேண்டும். இது பூண்டி. மாண்தக - மாட்சிமைபொருந்த.

கஅ. திருவுளத்தடைத்து - திருவுளங்கொண்டு.

கக. செடி - நாற்றம். துணி-துண்டம். சீரை - கந்தை.

உo. குறிஞ்சிலி-ஒருவகைமரம். விடத்தாங்காய் - விடத்தேமைமரத்தின் காய்.

உஉ. விலாவொடிப்ப - சிரித்தலால் விலாவை ஒடிக்க; (ஈஅ) சஅ: "கையர் விலாவொடி யாக்கி ஞாரல்". கறை - அழுக்கு. கொடுக்கு - ஆடைத் தொங்கல்; "பேதித் தறுதற் கச்சை புனைந் தநிலே விட்டான் பெருங்கொடுக்கு" என்றார் முன்னும் (கo) கூ.

உங. துறை - இசைத்துறை. கையாண்டி - ஒருவகை இசைப்பாட்டு.

உச. உரன் - வைரம்; "உரவித"; உக. ஊன்றுகட்டி-ஒருவகைக்கட்டு.

உடு. மொய்ம்பு - வலி.

உசு. மாலையங்குழல் - பூமாலை அணிந்தகூந்தல். பாணர்மாலையர் - விறலியர்; விறலியரை மாலையரென்றுவழங்கல் மரபு; (இள) ஙடு. மாலை எய்தி-மயக்கமுற்று. காட்சியாற் சூள்கொள்ளுதலே, "சொக்கனைக் கண்ட வீதி மங்கையர்.....,பொங்கிய பெருஞ் சூள் கொள்வார்" என்பதனுமுணர்க; (உஅ) ஙஎ.

உஎ. கூறி - விலைகூறி. சந்தைகள்-வேதங்கள்.

உஅ. இடை இடையும்படி. இருதனம் கொடுவந்தனர்; இடைதல்-மெலிதல்.

உக. உரவிது - வன்மையையுடையது. எரி விழும் - தலல்விழும்.

ஙக. தெற்றி - திண்ணை. மாறு - மலாறு; ஒப்புழாம்.

ஙஉ. சாதாரி- ஒருவகைப்பண்: இது, வடமொழியில் தேவகாந்தாரியென்று கூறப்படும்.

ஙங. இதிற்கூறிய இசைத்தொழில் பத்தினையும், "உள்ளாளம் விந்துவுடனுதை மொலியுருட்டுத், தள்ளாத தூக்கிகெடுத்த ரூன்படுத்தன் - மெள்ளக், கருதி நலிதல்கம் பித்தல் குடில, மொருபதிற் ரூன்றென் றுணை." என்னும் இசை மரபுவெண்பாவாலும் உணர்க.

ஙச. மஞ்சம் - கட்டில்.

ஙடு. கொத்து இசை - தொகுதியாகிய இசைகளில். பண்ணறை அடிமை - இசை அற்றவழுகிய அடிமை.

ஙசு. இறை - விடை, தலைவன். நாயன் - தலைவன்.

ஙஎ. பரிபவப்படுமூன் - அவமானப்படுமுன். புத்திரர் - மாணாக்கர்கள்.

ஙஅ. மடிதருவிகை - மடக்கிய சூடை. மிக்க அச்சமுண்டானபொழுது நெஞ்சம் துடிக்குமாதலால், அதனைப் பிறையறைதலென்றுகூறுதல் மரபு; "நீத்தரு மூளம்பறை யறைய" என்பர் பின்னும்; (இவ) உடு) "இருவர்மா மனமும் பறையறைத் தயர்வுட னடுங்க" (பார. இராச. உச).

ஙக. மூட்டு - வாத்தியங்கள்; சஙி. விட்ட - தங்கிய.

சசு. நீடு தும்பி எருத்தத்து - நீண்ட யானையின் பிடரியில்.

சஅ. பல்கால் அதிகயித்து. சென்னி - பாணபத்திரன்.

சக. கனத்திறை - விறகின்சுமையையுடைய சிவபெருமான். சொல்லதாம் பாணர்க்காகச் சென்றுவந்ததைச்சொல்லியருள. பனிப்புஅற - நடுக்கம்நீங்க. வாங்கி-விறகுகட்டை வாங்கிக்கொண்டு; வாங்கி என்றவென இயைக்க.

டுடு - ம் திருவிளையாடல்.

க. தான் அரசாய் இருப்பவும். அந்தரத்தில்.

உ. ஞானமுதல்வன் - சிவபெருமான். தீனம் - வறுமை. அருட்சிந்தனைசெய்வன்-திருவருணோக்கிப்பன்.

ங. ஈவான் - புலவர்களுக்கு ஈதற்கு; உசு, ஙங.

ச. பண்டாரம் - பொன்னறை.

டு. மூரிவாய் - கன்னவாயில்.

சு. வழக்கு - நீதி.

எ. எல்லாவுயிர்களும் சொல்லுகின்றசொற்களே அறிந்துகொள்பவராதலால், அவருக்குக் கழறிற்றறிவாரென்பது திருநாமமாயிற்று.

அ. "மதிமலிபுரிசை" என்னும் திருமுகப்பாசுரவகவல் வருமாறு:—"மதிமலி புரிசை மாடக் கூடற், பதிமிசை நிலவும் பாணிற வரிச்சிறை, யன்னம் பயில்பொழி லால வாயின், மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம், பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க், ரூரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்ந், குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச், செருமா வுகைக் குஞ் சேரலன் காண்க, பண்பால் யா

ழ்வல பாண பத்திரன், தனிபோ லென்பா, லன்பன் றன்பாற், காண்பது கருதிப் போந்தனன், மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.”

கக. வில்லவன் - சேரன். செல் - மேகம்.

கஉ. பசியும் வறுமையுமுடைமை யை, “ பரிவினல் குரவ ரேப்பப் பசியொரு புறத்த லேப்ப” கஅ. என்பதனு ளுமுணர்க. ‘ இசையுருவம்’ என்றது, அவருக்குள்ள ஸங்கீதப்பயிற்சியின் மிகுதி கூறியவாறு.

கங. நிறைவு - மகிழ்ச்சி.

கச. அந்த உழை இடை-தண்ணீர்ப்பந்தரிடத்தே.

கஙி. அரசன் உம்மைக்காண்பா னுசையாயிருந்தான். உரை - புகழ்.

கசு. விரைந்துவந்தமையால், மணிகள் சிந்தின. சேர்ந்துசென்ற மை, கூ0 - ம் பாடலாலும வலியுறுகின்றது. சொன்ன எல்லை - தண்ணீர்ப்பந்தர்; கஉ.

கஎ. பத்திரம் - திருமுகம். உன்றனக்கென்று தந்த திருமுகமென்க; உன்றனக்கு என்றும் நல்லசொக்கனென்பதுமாம்.

உ0. இருமை - பெருமை. ஈடுகொண்டு - மனம்கனிந்து. சூடினன்-தலை மேல்வைத்துக்கொண்டான்.

உக. திருமுகப்பாசுரத்தில், “ தன்போ லென்பா லன்பன்” என்றதனுல், தன்வயின்வைத்துள்ள பரிவு காணப்பட்டது.

உஉ. ஓடை - யானையின் நெற்றிப்பட்டம்.

உகூ. மெய்முழுதும் எண்ணெய் பெய்து. மாலேசூட்டித் தூசுசாத்தி.

உச. பெரும்பொருளறை - பெரிய பொன்னறை.

உஙி. கோதை - சேரர். ஆணை-கட்டளை.

உசு. அதுகண்டு - திருவாணைகூறியதைத் தெரிந்து. முன்வாடி. பின் தெளிந்து. விதரணம் - கொடை.

உள. என்னை - என்னைநோக்கி.

உஅ. பொறையிர்கோமான் - மலை நாட்டார் அரசர். நான்முகனுதியாக எறும்பு ஈறதாகவென்க; “அயன்முதலாகத் துன்னித், தப்பறவெறும்பீறாகத் தனுத்தொறு கிற்பேம் யாமே” என்பர்பின்னும்; (குக) சு. ‘ பிரஹ்மாதி பிபீலிகபரியந்தம்’ என்பது வடமொழிவழக்கு.

உக. இது - இழிகுலப்பாணன் என்பது. சொல்வது என்னை - சொல்வதுயாது. எம்பெருமக்கள் - எமது பெரியோராகிய தேவீர். அருந்தவன் ஆணையாலே - சோமசுந்தரக்கடவுள் ‘வரவிடுப்பதுவே’ என்றருளிச்செய்த கட்டளையால். நல்லாட்கூட்டி - நல்ல வீரர்களைச் சேர்த்து; “ஆட்கொலாஞ் செப்பினன்”; (சிவக. கனக. உ0).

ஊ0. வஞ்சிக்கொற்றவன் - சேரர். கோதைதன்பரிசனத்தால் - சேரருடைய ஸ்பரிசத்தால். பரிசித்ததை, உக-ம் செய்யுளாலுணர்க. பரிசனங்களோடும் - பரிவாரங்களோடும்.

ஊக. வரிசை - சன்மானம். தென்னன்கண்டி அதிசயிப்ப. தோஷாபீலியாற்செய்த விசிறி.

ஊஉ. சாமதிக்காது அன்றைத்தினமே அளித்த விரைவுதோன்ற, ‘காணுமுன்’ என்றார்.

ஊங. வழுவியோர்-தரித்திரர். என்றும் பொழிந்து நாளும் வாழ்த்து பாடியாருந்துதிப்ப இருந்தனன்.

(கூசு - ம் திருவிளையாடல்.

உ. ஊடி - வெறுத்து.

ஊ. பொய்ம்மை - மனம்வேறு வாக்குவேறு. முச்சந்தி - காலை, உச்சி, மாலை.

ச. யாமினி - இரவு. துப்பு - தூய்மை; நெஞ்சன் - பாணர்.

ஙி. காற்கால்விலங்கு. இல் - இடம். ஞான்றவென்ன - தொங்கினவென்ன.

சு. யான் இன்று அழியினும்விரதம் ஒழியேன். வல்லான்செயல் - சிவன் செயல்.

எ. புங்கவம் - இடபம். தென் - அழகு. மருத்து - காற்று. மழை கண்ம

ழையாதலின், மலையருவி அதற்கு உவமையாயிற்று.

அ. அம்பு - நீர். சிக்கனவு - உறுதி.

கூ. அருக்கன் - சூரியன்; அரக்கனென்றபாடத்திற்கு இராவணனென்றுகொள்க. கயம் - யானை. சயந்தரும் புகழ் - பிரதாபம். இச்செய்யுள், "அயன்றலே கொண்டுசெண் டாடல் பாடியநக்க னெயிறுப நித்தல் பாடிக்,கயந் தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக் காலனைக் காலாறு தைத்தல் பாடி, யியைந்தன மூப்புர மெய்தல் பாடி பேழை யடியோமை யாண்டு கொண்ட, நயந்தனைப் பாடிநின் முடி யடி நாதற்குச் சுண்ணமி டித்து நாமே" (திருவாசகம், திருப்பொற்சுண்ணம், உஅ) என்பதைத் தழுவியது.

கo. இயற்பலகை - சங்கப்பலகை. பாவலர்-சங்கப்புலவர். முன்வரக்கொடுத்தான், இப்பொழுது சென்றுஇட்டான்.

கள. வெய்யபாணர் - அழுக்காறுற்றபாணர்; ஏழுவாய்.

ஈள - ம் திருவிளையாடல்.

ஈ. அருவமாகிய நிசையானது உருக்கொண்டு உலாவுவதென. விறலியர்கள் அரசனிடம்சென்று பாடவர வேண்டியது மரபாதலின், 'சாதித் தருமமீதியினுல்' என்றார்.

ச. கைகுறைத்ததையை, சிலப். பக்கம் உஉ, கடு - ம் வரி முதலியவற்றுஞுமுணர்க.

டு. வலிசெயாது - பலாத்காரம்செய்யாமல். கறுத்து-கோபித்து. விளியவமானப்பட.

ணு. அகற்றியோர் - வேலேக்காரர்.

எ மூல்லேசேர்மாலே - மூல்லேப்பூ மாலேயையணிந்த; இம்மாலே கற்பிற்கு உரியது. இங்ஙிதம் - குறிப்பு.

அ. தரம் - தருதி. புகலின் நம்தோல்வியாய் இருக்கும்.

ரு. அதி - அக்கற்பு.

கo. எய்திய மாலே - வந்தவிறலி.

கக. மூல்லேத்தெரிவை - பத்திரம்மோவி. பேசி - சபதம்செய்து; மூன்பு எசிவந்துசென்றுமாம். கருகிட - கோபிக்கும்படி. கற்பிஞுலேயது.

கஈ. திப்பிலாமாது - வந்தவிறலி; 'துப்பின்மாது' என்பர்பின்னும்;கச.

கச. காகசுரம் - காகம்கத்துஞும் போலப்பாடுவது; அது ஈசைத்தொழிற்குற்றம் எட்டினுள் ஒன்று;இதனே, "பெருக்குரல் கட்டை கழுவல் விலங்க, லொருக்கி யொதுக்கம் புளைத்தல் - விருப்பிலாக், காலுளி காக சுரமென்று மிவ்வெட்டு, மாகா வெனச்சொன்னு ராய்ந்து" என்னும் இசைமரபு வெண்பாவால் உணர்க. 'மாறன்' என்பதற்கு மாறுதலேயுடையவனென்னும் பொருள்புலப்படக் கூறியிருத்தல் ஆராய்தற்பாலது.

கடி. வாரம் - பகுபாதம்; "ஓரங்கூர்ந்து' என்பர்பின்னும்; "வாரம் பட்டுழித் நியவு கல்லவாந், தீரக் காய்ந்துழி கல்லவுந் தீயவா, மோரும் வையத் நியற்கையன் றேவெனு, வீர வேனெங் கண்ணி விளம்பினுள்." (சீவக. குணமா. நஅ) என்னும் செய்யுள்ஈண்டு உணரற்பாலது. இராசா அணுமதிதருமம்-இராசாவுடைய அணுமதியே தருமம். மாதரமாக - இனிமையாக.

கசு. சொல் - புகழ். எல் - ஒளி.

கள. ஏறும், முன்னிலேப்பன்மை.

கஅ. எங்களென்றது கணவனையு முளப்படுத்தி.

உo. ஓரங்கூர்ந்து - பகுபாதம்மிகுந்து.

உக. கைதவம் - வஞ்சனே.

உஉ. என - என்று தன்றுட்கருதி. தமிழ்வாணர் - தமிழ்ப்புலவர்கள்.

உங. முகமும்பார்த்தனர் - ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்தனர்;"கண்மல்கு நீரார் முகமுகங்க ணோக்கினரே"; (சீவக கனக. உடுஉ).

உச. பரந்தவன் - சிவபெருமான். போதமில்மாது - வந்தவிறலி.

உடு. உளம்பறைஅறைய - நெஞ்சுநடுங்க.

உசு. பெருக்குரல்-வெடித்தகுரலாயவெள்ளோசை, கடத்தல்-ஒர்ஓசை

